UNIVERSAL LIBRARY
OU_208146
UNIVERSAL LIBRARY

**OSMANIA UNIVERSITY LIBRARY**

Call No. TM 894.8114 V29O. Accession No. TM 590

Author Varadarajan, M.

Title Ovaseithi. 1955.

This book should be returned on or before the date last marked below.

மூன்றாம் பதிப்பு : அக்டோபர் — 1955

உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூ. 2-8-0

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை — 14

# நன்றியுரை

ஒரு பாட்டு ; அதைக் குறித்துப் பல நாள் போராட்டம் ; இரண்டுநாள் இரவும் பகலும் ஏக்கம் ; மூன்றாம்நாள் மாலையில் வேலத்துமலையை அடுத்த அழகிய ஓடையில் உலவும்போது எதிர்பாராத விளக்கம் ; உள்ளத்தின் தெளிவால் பிறந்த பேருவகை—இவையே இந்நூலாக உருப் பெற்றன.

முதல்முதலாக என் கருத்தை வெளிப்படுத்தச் சென்னைப் பல்கலைக் கழகம் வாய்ப்பு நல்கியது ; பல்கலைக் கழகத்தார் 'ஆனரரி ரீடர்' என்னும் பதவி அளித்துச் சில ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் ஆற்றுமாறு கோரினர் ; பச்சையப்பன் கல்லூரியில் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. ஒரு நாள் (1944 அக்டோபர் 23உ) மூன்றுமணி நேரப் பேச்சில் இந்தப் பாட்டைப் பற்றி என் கருத்தை வெளிப்படுத்த முடிந்தது. இந்த வாய்ப்பு நல்கி, இவ்வாறு நூலை வெளியிட உரிமையும் அளித்த பல்கலைக் கழகத்தார்க்கு நன்றியுடையேன்.

மு. வ.

1. பாட்டும் பொருளும் ... 5
2. இலக்கியமும் வாழ்க்கையும் ... 74
3. புது விளக்கம் ... 109
4. ஓவச் செய்தி ... 149

# 1. பாட்டும் பொருளும்

## ஈர நெஞ்சம்

கணவனும் மனைவியும் கைக்குழந்தையுமாக அன்பு நிறைந்து வாழ்ந்துவந்த குடும்பம் அது. அறிவும் உணர்வும் வளர்ந்து பண்பட்ட அவர்கள் இருவரும், அன்போடு அறமும் அமைந்த இல்லறம் நடத்திவந்தனர். முகம் மலர்ந்து விருந்தினரை வரவேற்றலும், செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருத்தலும் அவர்களுக்கு வழக்கம் ஆயின. சுற்றத்தாரின் துன்பம் களைதலை அவர்கள் கடமையாகக் கொண்டனர். வறுமையால் வாடிவந்தவர்க்கு இல்லை என்று கூற மனம் இல்லாமல் இயன்றவரையில் உதவிவந்தனர். இத்தகைய அன்பும் அருளும் மிக்க வாழ்க்கையால், பிறர்க்கு உதவி உதவி நாளடைவில் பொருள் வளம் சுருங்குவ தாயிற்று. இனி வருவோர்க்கு என்ன செய்வது என்ற கவலை வளர்ந்தது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தில் இவ்வாறு வண்மையின் காரணமாக வறுமை உற்ற நல்ல குடும்பங்கள் பல. சில குடும்பங்களில், ‘முன்னோர் தேடிவைத்த செல்வத்தைச் சிதைத்தல் ஆகாது, வறியோர்க்கு ஈவதற்கும் அச்செல்வத்தைப் பயன்படுத்தல் ஆகாது, தாமே முயன்று பொருள் ஈட்டி இல்லாதவர்க்கு உதவல்வேண்டும்’ என்னும் கொள்கை நிலவியது. ‘உள்ளது சிதைப்போர் உளர் எனப் படார்’ (குறு. 283) என்று அவர்கள் உணர்ந்து வாழ்ந்தனர். அவர்களும், விருந்தோம்புவதற்கும் சுற்றம் தழுவுவதற்கும் இரவலர்க்கு ஈவதற்கும் பொருள் வேண்டும்

என்று கவலை கொண்டனர். இரக்க உணர்ச்சி மிக்கவர், சுற்றிலும் வறுமைத் துன்பத்தைக் கண்டபோதெல்லாம் வாடினர்; தம் நிலைமையை நினைந்து தம்மைத் தாமே நொந்து கொண்டனர்; யாதேனும் செய்ய வேண்டுமே என்று அலமந்தனர். அவர்களின் ஈரநெஞ்சமே கவலைக்குக் காரணமாக இருந்தது.

## வடநாட்டுப் பயணம்

நாட்டின் வறுமையைப் போக்குவதற்கு உழவு பெருந் துணையாய் இருந்தது. உழவின் துணையும் போதாத நிலையில் பொருள் ஈட்டும் வழிகளாக அக்காலத்தில் இருந்தவை இரண்டே. ஒன்று, மழைவளம் நிறைந்து அதனால் பொருள்வளம் மிகுதியாகப் பெற்ற பிற நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அங்கிருந்து பொருள் கொணர்வது. மற்றொன்று, பிற நாட்டிற்குச் சென்று வாணிபம் செய்து பொருள் ஈட்டித் திரும்புவது. முன்னது, அரசர் ஆணையிட நிகழ்வது; அரசரோ, காரணம் இன்றி ஆணையிடார்; எண்ணித் துணிவது அவர்தம் கருமம். பின்னதே மக்கள் தாமாக விரும்பிச் செய்யக்கூடிய முயற்சியாக இருந்தது. ஆதலின், தம்மைச் சுற்றியுள்ள மக்கள் வறுமையால் வாடும்போது தம்மால் இயன்ற அளவு அவர்கட்கு உதவிய காரணத்தால் பொருள்வளம் சுருங்கியபோதெல்லாம், குடும்பத் தலைவர்க்கு வாணிக முயற்சி முன்வந்து நிற்கும். சிலரோ பலரோ ஒருங்கு சேர்ந்து வடநாட்டிற்குச் சென்று பொருள் ஈட்டிவரத் துணிவர். இன்று வடநாட்டு மார்வாரிகள் பொருள் ஈட்டுவதற்காகத் தென்னாட்டை நாடி வருதலைபோல், அக்காலத்துத் தமிழரில் ஊக்கமுடையோர் வறண்ட பாலைபாகவும் கிட்கிந்தையாகவும் இருந்த வெப்பம் மிகுந்த ஆந்திரநாட்டைக் கடந்து வடக்கே சென்று கங்கை

யாற்றங்கரையில் வளம் மிக்க ஊர்களில் தங்கிப் பொருள் ஈட்டித் திரும்புவது வழக்கமாக இருந்தது.

வெப்பம் மிகுந்த அந்தப் பாலைவழியோ இடர் மிகுந்ததாக இருந்தது. மழைவளம் காணாது கதிரவன் கொடுமை மிகுந்தது பாலை ஆகையால் அவ்வழியே செல்லும் தமிழர் நீரும் நிழலும் காணாது மிக மிக வருந்தினர் ; இயற்கையின் அருள் இல்லாக் கொடுமைமட்டும் அல்லாமல், அந்தப் பாலைநிலத்தில் வாழ்ந்த மக்களுக்குப் பண்பு இல்லாக் கொடுமையும் இருந்தது. இருவகைக் கொடுமையும் செல்லும் தமிழரின் உயிருக்கும் உடைமைக்கும் பகையாக இருந்துவந்தன. சணக்கற்ற தமிழர் அக்கொடிய வழிகளில் பொருள் இழந்தனர் ; உயிரும் இழந்தனர். ஆறலை கள்வராய் அங்கு வாழ்ந்தோரின் கொடிய வாழ்க்கை தமிழகத்து வீடுதோறும் பேசப்பட்டு வந்தது. அதனால், வடநாட்டுப் பயணம் என்றதும் வாடும் உள்ளங்கள் தமிழ்நாட்டின் வீடுதோறும் இருந்துவந்தன.

## ஓவியக்கூடம்

இந்த நிலை அக்காலத்துப் புலவர் பெருமக்கள் பலருடைய உள்ளத்தை உருக்கியது ; உணர்வே உருவான அப்பெருமக்கள் தாம் தாம் உணர்ந்து உருகியதை எல்லாம் பாட்டாக வடித்துக் கொடுத்துள்ளனர். அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் சங்கத்தொகை நூல்களில் உள்ள பாலைப்பாட்டுக்கள் பல இதனை உணர்த்துவனவே. அகநானூறு என்னும் நூலில் பாதி பாலையே. பாலைப் பாட்டுக்கள் இருநூறு கொண்ட அந்நூல், இதனை விளக்குவதில் சிறந்து விளங்குகிறது. ஒற்றை எண்ணுள்ள பாட்டெல்லாம் பாலையாக அமைந்திருப்பதால், அகநானூற்றின் பாட்டுக்களை ஒன்று விட்டு

ஒன்றாகப் படித்து உணர்வது தனிக் கல்வியாகும். பண்டைத் தமிழகத்தில் பலரும் உணர்ந்த துன்ப உணர்வெல்லாம் அவற்றில் பாட்டுருவாய் வாழ்வதைக் காணலாம். அத்தனை பாட்டும் ஒரே நிகழ்ச்சியைத் தெரிவிப்பனவாக அமைந்திருப்பினும், ஒவ்வொன்றும் தனித் தனிச் சொல்லோவியமாக அமைந்துள்ளது. பாடிய புலவர்கள் பல்வேறு நாட்டவர் ; வேறுபட்ட காலத்தவர் ; வெவ்வேறு வாழ்க்கை யனுபவம் பெற்றவர் ; அவரவர் கண்ட குடும்பங்களும் சிறு சிறு வகையில் பலவாறு வேறுபட்ட குடும்பங்கள் ; ஆதலின் அவரவர் பெற்ற உணர்வுகளும் பல்வேறு வகைப்பட்டன ; அவ்வுணர்வுகள் பெற்றுள்ள சொல்வடிவுகளான பாட்டுக்களும் நுண்ணிய வேறுபாடுகள் உடையனவே. கதிரவன் ஒருவனே ; அவன் தோன்றி மறையும் உலகமும் இதுவே. ஆயினும் கதிரவனின் தோற்றத்தையும் மறைவையும் கண்டு மகிழ்ந்த உள்ளங்களின் உணர்வுகள் ஒரே தன்மையானவை என்று கூறுதல் இயலுமோ? அவற்றை வருணித்துப் பாடியுள்ள உலகப் பாட்டுக்கள் ஒரே வகையானவை என்று கூறுதல் இயலுமோ? காலம், இடம், வாய்ப்பு என்பவை வேறுபட வேறுபட, உணரும் உணர்வுகளும் வெவ்வேறு திறத்தனவாக இருத்தல் இயற்கை. ஆகலின், ஒரே நிலையைப்பற்றி அமைந்துள்ள அகப்பாட்டுக்களான சொல்லோவியங்களும், ஓவியக் கூடத்துப் பல்வேறு ஓவியங்கள் போலவே பல்வேறு வகையாய்க் கலைச்சுவை பயந்து வாழ்கின்றன.

### கலையும் வாழ்வும்

அவற்றுள் ஒரு பாட்டே இன்றைய ஆராய்ச்சிக்கு உரியது. அகநானூற்றின் ஐந்தாம் பாட்டு அது. நவில் தொறும் நயம் பயக்கும சிறந்த தமிழ்ப் பாட்டுக்களில் அது ஒன்று. அப்பாட்டு நயம் பயந்து வந்ததோடு, என் உள்ளத்

தில் ஒரு குறையையும் உணர்த்திவந்தது. நாளுக்குநாள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கலைச் செல்வமாக விளங்கி வந்த அப்பாட்டே, பொதுவாக வாழ்க்கையின் தூய நெறிக்கும் சிறப்பாகத் தமிழரின் அறநெறிக்கும் மாறு பட்ட கருத்து அமைந்ததாகத் தோன்றிவந்தது. இன்பம் நல்கிய அந்த அகப்பாட்டே 'அசுணம் கொல்பவர் கையே போன்று' துன்பமும் விளைப்பதாக மாறியது. வாழ்க்கையை மறந்து கலையுலகில் தனித்து நின்று உணரும் போது இன்பம் மிகுந்துவந்தது; ஆனால் வாழ்க்கையில் நின்று உண்மையை உணரும்போது உள்ளத்தைக் கலக்கிவந்தது. போராட்டம் நாளுக்குநாள் வளர்ந்து வந்தது. வாழ்க்கையைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல் பாட்டைப் படிக்கும்போது கலைச்சுவையை மட்டும் நுகர்ந்து இன்புறுவதில் தவறு என்ன என்று சில வேளையில் அமைந்ததும் உண்டு. கலை எல்லாம் வாழ்க்கையின் நன்மைக்குத் தானே, வாழ்க்கைக்கு ஒவ்வாத கலை எங்கிருந்தால் என்ன, எத்தகைய சிறப்புடையதாய் இருந்தால் என்ன என்று சில வேளையில் வெறுத்ததும் உண்டு. இதற்கென்றே கலைக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பை நூல்களின் துணைகொண்டும் அறிஞர்களின் அறிவுரை கொண்டும் ஆராயும் ஆராய்ச்சியில் மனம் ஈடுபட்டது.

"இந்த உலக உண்மைகளை விட்டுப் பாட்டுலகிற்கு என்று வேறுபட்ட தனி உண்மைகள் எந்த வகையிலும் இல்லை. பாட்டிற்கெனத் தனிப்பட்ட சட்டங்களோ வேறு உலகச் சிறப்பியல்புகளோ இல்லை. வாழ்க்கையில் எய்தும் அனுபவங்களைப் பெரிதும் ஒத்திருக்கின்றவைகளைக் கொண்டு அமைந்ததே பாட்டாகும். எவ்வாறு ஆராய்ந்து காணினும், ஒவ்வொரு பாட்டும் குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்ட அனுபவப் பகுதியாகவே இருத்தல் தெரிகிறது.

பொருத்தம் அற்ற பிற கூறுகள் குறுக்கிடும்போது, பாட்டு எளிதில் சிதைந்திடும் நொய்ம்மை உடையது. நடுத் தெருவிலோ மலைப்புறத்திலோ காணும் எளிய அனுபவங்களை விட மிக உயர்வாகவும் நுண்மையாகவும் ஒழுங்கு செய்யப் பட்டதே அது. அது நெகிழ்வுதாய் நுண்ணியதாய் அமைந் தது. மேலும், பிறர்க்கு உணர்த்தப்படுவதற்கு உரியது. பல் வேறு மனநிலைகளையுடைய மக்களுக்கும் அது மிகச் சிறு வேறு பாடுகள் உள்ள அனுபவங்களைத் தருவது. இவ்வாறு அனுப விக்குமாறு இருத்தலே பாட்டின் அமைப்பிற்குரிய இலக் கணங்களுள் ஒன்றாகும்......பாட்டுலக அனுபவத்தை வாழ்க் கையில் அதற்குரிய இடத்தி லிருந்து வேறுபடுத்தி, அதன் முடிவான பயன்களி லிருந்து பிரித்தல் கூடாது. அவ்வாறு செய்தல் அக்கொள்கையை உண்மையென நம்பி வலி யுறுத்துவோரின் கோணல் தன்மையையும் குறுகிய மனப் பான்மையையும் குறைபாட்டையும் காட்டுவ தாகும்"

(The world of poetry has in no sense any different reality from the rest of the world and it has no special laws and no other worldly peculiarities. It is made up of experiences of exactly the same kinds as those that come to us in other ways. Every poem, however, is a strictly limited piece of experience, a piece which breaks up more or less easily if alien elements intrude. It is more highly and more delicately organised than ordinary experiences of the street or of the hillside; it is fragile. Further it is communicable. It may be experienced by many different minds with only slight variations. That this should be possible is one of the conditions of its organisation...The separation of poetic experience from its place in life and its ulterior worths, involves a definite lop-sidedness, narrowness, and incompleteness in those who preach it sincerely)

என்று ஆங்கில அறிஞர் ரிச்சர்ட்ஸ் (I. A. Richards) என்பவர் கூறுவது நினைவிற்கு வந்தது (Principles of Literary Criticism, p. 78, 79).

இலக்கிய வளர்ச்சியை ஆராய்ந்தபோது, புலவர் சிலர் வாழ்க்கையைப் புறக்கணித்துக் கலைச் செல்வம் படைத்து நல்கியதும் தெரிந்தது ; மற்றும் சிலர் வாழ்க்கையோடு ஒட்ட ஒழுகும் அளவிற்கே கலையைக் கட்டுப்படுத்தி வளர்த்ததும் தெரிந்தது. இந்த இருவகைப் புலவரையும் கலைச் சிறப்புடையவர் என்றும் கலைத் தூய்மையுடையவர் என்றும் பாகுபடுத்தி உணர முடிந்தது. இருவகையாருள் விரும்பிப் போற்றத்தக்கவர் எவர் என்று அறியும் வேட்கை எழுந்தது. சுவைமட்டும் மிக்க கலை உடனடியாக இன்பம் பயந்து நாளைய வாழ்வில் மயங்கிடச் செய்வதும் புலனாயிற்று. தூய்மை மிக்க கலை இன்று பயக்கும் இன்பம் சிறிதெனினும் நாளை நின்று பயக்கும் நன்மையால் வாழ்வில் இன்பம் விளையச் செய்வதும் புலனாயிற்று. முன்னது பரத்தையரின் உறவு போலவும், பின்னது கற்புடை மனைவியின் துணை போலவும் வேறுபட்டு நிற்றலும் தெளிவாயிற்று.

## அனுபவ உணர்வு

அவ்வாறாயின், குறித்த இப்பாட்டு எவ்வகையைச் சார்ந்தது என்ற ஆராய்ச்சியில் நெடுங்காலம் கழிந்தது. வாழ்க்கையைப் புறக்கணித்துக் கலைச்சுவைமட்டுமே ஊட்டும் பாட்டாக இது தெரிந்தது ; எனினும், பாட்டின் சில பகுதிகளில் பொலிந்திருந்த தூய்மை, பாடிய புலவரின் தூய உணர்வைப் புலப்படுத்தியது. இத்தகைய தூய நெஞ்சத்தில் பரத்தைமை போன்ற கலையின்பத்தை நாடும் நாட்டம் இருத்தல் இயலாதே என்ற தயக்கம் இந்த ஆராய்ச்சியை

நீட்டித்தது. அறிவும் உணர்வும் மாறி மாறி ஒன்றை ஒன்று சிறைப்படுத்தி வருத்தின. ஒன்றன் விடுதலை மற்றொன்றற்குச் சிறையாக மாறிவந்தது.

வாழ்க்கை, கலை இந்த இரண்டையும் எவ்வாறு அளந்து காண்பது? கலையைக்கொண்டு வாழ்க்கையை அளந்து காணும் முயற்சி, கனவைக்கொண்டு நனவை அளப்பதாகத் தோல்வி உற்றது. ஆயின் வாழ்க்கையைக் கொண்டு கலையை அளந்துணரும் முயற்சியோ, நனவைக் கொண்டு கனவைச் சீர்தூக்குவதாக வெற்றி பெற்றது. பிறகு, வாழ்க்கைச் சான்றுகளைத் தேடலானேன். வளர்த்த பசுவை விற்கும்போது கவலையுறும் உழவன், குடியிருந்த வீட்டை விட்டு மாறும்போது வருந்தும் ஒருவன், மகளைப் புக்ககம் அனுப்பும்போது நைந்துருகும் தாய் முதலிய பலருடைய செயல்களும் முகக் குறிப்புக்களும் உறுதுணையாய் நின்றன. அவற்றைக்கொண்டு பாட்டை உணர முயன்றேன். இருண்டு கிடந்த உள்ளத்தின் கிழக்கு வெளுத்தது. கதிரவன் ஒளி மெல்ல மெல்லப் பரவி வந்தது. காணாதன எல்லாம் படிப்படியே கண்ணுக்குப் புலனாயின. பொருளிருந்தும் பயனில்லை, கண்ணிருந்தும் பயனில்லை, கதிரவன் ஒளி வேண்டும் என்று தெளிந்தேன். புலவர் பாடிய பாட்டு இருந்தும் பயனில்லை, சொற்பொருள் அறிவு இருந்தும் பயனில்லை, தெளிந்த வாழ்க்கை அனுபவம் வேண்டும் என்று உணர்ந்தேன்.

## பாட்டில் காண்பது

பாட்டில் விளக்கப்படுவது, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வடநாடு சென்று பொருள்தேடிக் கொணரத் துணிந்த குடும்பத் தலைவன் ஒருவன், மனைவியையும் கைக்குழந்தையையும் விட்டுப் பிரிய முடியாமல் கலங்கிய கலக்கமாகும்.

பொருள் தேடுவதற்காக வெளிநாட்டிற்குச் செல்ல எண்ணியதை அவன் குறிப்பாக மனைவிக்குத் தெரிவித்திருந்தான். ஒருநாள் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் செய்துமுடித்து, மனைவியிடம் விடைபெற வந்தான். மனைவியை அழைத்தான். அவள் வாய்திறந்து பேசாமல் மெல்ல மெல்ல வந்தாள். அவள் முகத்தில் இயல்பாக விளங்கிய அன்பு இல்லை. தலைவனுடைய அன்பை ஏற்றுக்கொள்ளாமல் மாறுபட்ட குறிப்பே அந்த முகத்தில் இருந்தது. அவள் உள்ளமோ அமைதி இழந்து கலங்கியது. அவள் நடந்துவந்தபோது அந்த நடையில் மனக்குழப்பம் தெரிந்தது. இயற்கையான நடையாக நடக்கவில்லை; கால் விரல்கள் நிலத்தைக் கீற நடந்துவந்தாள். கணவனை நெருங்கியதும் சிறிது புன்முறுவல் கொண்டாள். இளமையான கூரிய பற்கள் தோன்றுமாறு சிறிதளவே புன்முறுவல் இருந்தது. அந்தப் புன்முறுவல் உண்மையானது அன்று; பொய்யாக மேற்கொள்ளப்பட்டது என்பது உடனே தெரிந்தது. அவன் கருதியதை அவள் உணர்வதற்குமுன்னமே மாறுபட்டு நடந்தாள். இவ்வாறு பிரிவது அறம் அன்று என முன் ஒருநாள் கூறியதை நினைத்தாள். அதை இன்று திரும்பக் கூறுவதால் பயன் இல்லை எனவும் உணர்ந்தாள். அன்று கூறியதை நினைவுறுத்துவதாகவே அவள்செயல் இருந்தது; முகக் குறிப்பும் அவ்வாறே இருந்தது. "வறண்ட பாலை வழியைக் கடந்து பொருள் தேடப் பிரிந்து செல்வீரானால், அந்தச் செயல் அறம் அன்று" என்ற கருத்தைப் புலப்படுத்துவதுபோல் குறிப்பு இருந்தது; முகம் அதை எடுத்துரைப்பது போல் இருந்தது. ஓவியம் ஒரு நிலையாக நின்று உறுதிபெறப் புலப்படுத்தும் செய்திபோல் அந்த ஒரு கருத்தைத் தெளிவுற நினைந்து நின்றாள். கண்களில் நீர் அரும்பியது.

*கண்ணீர் கீழே விழாமல் கண்களிலேயே நிரம்பிக் கண் பார்வையை மறைத்தது. நீர் நிரம்பிய கண்களோடு தன் மார்பில் இருந்த மகனை நோக்கினாள். தன் கணவனை நோக்கவில்லை. அவனை நேர்நின்று நோக்க இயலவில்லை. குழந்தையின் தலையில் செங்கழுநீர்மாலை அழகு பெறச் சூட்டப்பட் டிருந்தது. அவள் தலைகுனிந்து மாலையை முகர்ந்தாள். அப்போது அவள் விட்ட பெருமூச்சின் வெப்பம் மலரை வாடச் செய்தது. மலர் வாடி அழகு இழந்ததைக் கண்டான் கணவன். "மலர் வாடுமாறு அவ்வளவு வெப்பம் இவளுடைய மூச்சில் இருக்குமாயின், உள்ளத்தின் பெருந்துயரம் எத்தகையது" என உணர்ந்து உருகினான். பிரிந்து செல்லும் முயற்சியைக் கைவிட்டான். "உடன் உள்ளபோதே இவ்வாறு வருந்துகின்றவள், பிரிந்து செல்வோமாயின் உயிர் வாழ்தல் அரிதே" என்று எண்ணித் தன் பயணத்தை நிறுத்திவிட்டான்.*

பாட்டு

*பாட்டு வருமாறு :-*

அளிநிலை பொறாஅது அமரிய முகத்தள்
விளிநிலை கொள்ளாள் தமியள் மென்மெல
நலம்மிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூர்எயிறு தோன்ற
வறிதுஅகத்து எழுந்த வாயல் முறுவலள்
கண்ணியது உணரா அளவை, ஒண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப

உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி அன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரல்முரம்பு ஆகிய பயம்இல் கானம்
இறப்ப எண்ணுதிர் ஆயின், அறத்தாறு
அன்றுஎன மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன ஆக என்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந்து ஒற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணிஉரு இழந்த அணிஅழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே; ஒண்தொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே.

(*அக.* 5)

## குறிப்புரை

*அகநானூற்றுக்குப் பழைய குறிப்புரை ஒன்று உண்டு. முதல் தொண்ணூறு செய்யுளுக்குமட்டுமே அந்த உரை உள்ளது. ஆயினும் அகநானூற்றைக் கற்பவர்க்கு அந்த உரை பெரிதும் பயன்படுவதாகும். அது, பல நுண்ணிய கருத்துக்களை விளக்கிச் செல்வது; உள்ளுறை இறைச்சி முதலிய பகுதிகளையும் நன்கு விளக்குவது. அகநானூற்றில் ஐந்தாம் பாட்டாகிய இந்த 'ஓவச் செய்தி'க்கும் அந்தப் பழைய உரையின் விளக்கம் உள்ளது. அது வருமாறு :—*

1. பொருது அமரிய - பொருமையாலே மேவின.

2. விளிநிலை - அழைக்கும் நிலை; கொள்ளான் என்றது, போக்கிற்கு உடன்படாது ஆற்றுளாய் நின்ற நிலையைப் பற்றி; தமியள் - நாண் முதலான குணங்கள் ஒழியத் தானே யாதல்.

3. அவ்வடியாலே நிலம் வடுக்கொள்ள என்க. இயல்பாக மெத்தென நடக்கும் அடி, இப்பொழுது நிலம் வடுக்கொள்ள நடந்து, அவசத்தால், நிலத்தைக் காலால் கீறி வடுப்படுத்தி என்றுமாம்.

5. வறிது - சிறிது. அகம் - இடம்.

6. கண்ணியது உணரா அளவை - நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே.

7. வினை - ஆள்வினை. அதனை நாம் தலைப்படுதல் செய்யாதகல நிலத்தைக் காலால்கீறி வடுப்படுத்தி என்றுமாம்;கருத்துடனே.

8. முதையற்காடு; அம் - சாரியை.

10. மோடு - உயரம்; ஈட்டுதல் - குவித்தல்.

11. உதிர்வன - உதிர்ந்து; படுதல் - உண்டாதல்.

12. மாய்த்தல் - தீட்டுதல்; மழுகுதல் - தேய்தல்; தோற்றி - தோற்றுவித்து.

13. பார்த்தி அன்ன - பதித்துவைத்தா லொத்த; குடுமி-தலை.

14. நிரைநிலை அதர - கல்லொழுங்குபட்ட நிலைமையை உடைய வழிகள்.

15. முரம்பு - வன்னிலம்.

17. தொன்றுபடு கிளவி - இயற்கைப் புணர்ச்சிக் காலத்துச் சொன்ன வார்த்தை.

18. அன்னவாக - அங்ஙனம் சொல்லிக் கழிக.

19. முன்னம் - குறிப்பு.

20. ஒன்று நினைந்து ஒற்றி - போக்கு உடம்படாமையை நினைந்து துணிந்து.

21. பாவை - கண்ணிற்பாவை; பனிநீர்-நடுக்கத்தைச் செய்கிற நீர்; நீர் நோக்கம் - நீரையுடைய பார்வை.

22. ஒடுக்கிய - அணைத்த.

23. பிணையல் - செங்கழுநீர்மாலை.
25. மணி - பவளம்; தோற்றம் - காட்சி.
26. கண்டே என்னும் ஏகாரம் ஈற்றசை. ஒண்டொடி என்பது தொடங்கி ஆற்றலாற் கூறினன். அதா காரணம் என்க.

## பழைய விளக்கம்

தலைவனும் தலைவியுமாக அவர்கள் வாழ்ந்துவந்த குடும்பம் இனிய பூஞ்சோலைபோல் இருந்துவந்தது. தென்றல் பெற்றுச் செழித்திட வேண்டிய அந்தப் பூஞ் சோலை காட்டுத் தீயால் சூழப்பெற்று வாடியது. வறுமை நாற்புறமும் கொழுந்துவிட்டு எரிந்து சுற்றத்தாரையும் பிறரையும் நலியச் செய்தது. இதைக் கண்டு கண்டு இருவர் உள்ளமும் நைந்தன. விருந்தோம்பவும் சுற்றம் தழுவவும் இரவலரைப் புரக்கவும் இயன்ற அளவு முயன்று வந்தனர். பொருள்வளம் சுருங்கிய பின்னர், உள்ளத் துயர் வளர்ந்தது. வெளிநாட்டிற்குச் சென்று பொருள் ஈட்டுதலே வழி என்று பல நாள் எண்ணிய எண்ணங்களின் பயனாகத் தலைவன் துணிவு பெற்றான். பொருள்வளம் பெற்றால் அல்லாமல், வறுமைத் தீயைத் தணிக்கமுடியாது என்று மனைவியிடம் எடுத்துரைத்தான். அவள் அந்தக் கருத்தை உணர்ந்து போற்றினாள்; விருந்தோம்புதலிலும் இரவலர்க்கு அளித்தலிலும் இன்பம் கண்டு பண்பட்ட அவளுடைய உள்ளம் கணவனுடைய நல்லெண்ணத்தைப் போற்றியது. ஆயினும் நாட்டிலிருந்தே தக்க முயற்சிகள் செய்து பொருள்வளம் பெறவேண்டும் என்று அவள் எண்ணினாள்; அதையே கணவனிடமும் வற்புறுத்தினாள். நாட்டிலிருந்து பொருள் ஈட்டும் வாய்ப்பு மிகக் குறைவாக இருத்தலால், அதற்காக வெளிநாட்டிற்குச் சென்று வாணிபம் செய்தலே கடமையென்று தலைவன் கருதினான். தலைவியின் உள்ளம் வெளிநாட்டிற்குச் செல்வதில் உள்ள

இடர்ப்பாடுகளை எண்ணத் தொடங்கியது. பாலை வழியில் உள்ள பலவகைத் துன்பங்களையும் பிறர்பால் பல நாளும் கேட்டுக் கேட்டுப் பழகியவள் அவள். ஆதலின் அவளுடைய மனக்கண்ணில் கொடிய பாலைவழியே வந்து நின்றது. நிழலும் நீரும் அறியாமல் கதிரவனுடைய கடுங் கதிர்களால் வெந்து தீய்ந்த காடு, காய்ந்துபோன ஓமை மரங்கள், அவற்றிற்கிடையே பாறைகளில் உதிர்ந்த நெல்லிக் காய்கள், விளையாடும் வட்டுக் காய்கள் போல் சேர்ந்துகிடக்கும் அவற்றின் தோற்றம், பதித்து வைத்தாற்போன்ற கூர்மையான கற்கள், தீட்டப்பட்டாற் போன்ற அவற்றின் தேய்ந்த கூரிய முனைகள், அவற்றால் நடப்பவரின் விரல் முனைகள் சிதையும்படியான வழிகள், பரல்கற்களை உடைய மேட்டு நிலங்கள் ஆகிய எல்லாவற்றையும் நினைந்தாள் :

> முளிந்த ஓமை முதையலங் காட்டுப்
> பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
> மோட்டிரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப
> உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
> மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
> பாத்தி அன்ன குடுமிக் கூர்ங்கல்
> விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
> பரல்முரம்பு ஆகிய பயம்இல் கானம்

என்ற அடிகளில், அவள் கற்பனை செய்து கண்ட பாலைவழியைப் புலவர் காட்டுகிறார்.

நாள் செல்லச் செல்ல அவர்களுடைய வாழ்க்கையின் அமைதி படிப்படியே குலைந்துவந்தது. வாழ்க்கைப் பூஞ் சோலை தென்றல் பெருதிருந்தாலும் கவலை இல்லை ; சுற்றிலும் எரியும் வறுமைத் தீயின் அனல் அந்தப் பூஞ்சோலையையும் தாக்கின் அவர்கள் என்ன செய்வர் ? மீண்டும் மீண்டும் நைந்து உருகத் தொடங்கினர்.

பயண முயற்சி

தலைவன் தலைவி இருவரும் வருந்தினர். ஆயினும் தலைவியைவிடத் தலைவனே பெரிதும் நைந்துருகலானான். காரணம், அவள் பழகிய உலகம் சிறியது; அவன் பழகிய உலகமோ பெரியது. அவள், வந்த விருந்தினருக்கு உதவிய பின் அமைதி உறுவாள்; தன் ஆருயிராய்த் தன் மார்மேலும் தோள்மேலும் விளையாடிக் கைக்கு அணிகலனாய்க் கண்ணுக்கு விருந்தாய் விளங்கிய குழந்தையால் கவலையை மறப்பாள்; பொருள்வளம் சுருங்கியதைப் பற்றிய எண்ணம் வரும்போதெல்லாம், பொருள்ஈட்டும் பேராசையால் கணவனுடைய வாழ்வைப் பலியாக்க இடம் தரலாகாது என்று தெளிவு பெறுவாள்; போதும் என்ற பொன்மனம் பெறுவாள்; பொருட்குறையைக் கணவனிடமும் சொல்லாமல் மறைப்பாள். இதுவே அவள்நிலை. ஆயின், அவன் பழகிய பரந்த உலகம் அவனுக்கு அமைதி நல்கவில்லை. தன் மகனோடும் மனைவியோடும் இருந்து வீட்டில் மகிழும் நேரத்தில் வறுமைத் தீயின் கொடுமையை மறந்திருப்பான்; வீட்டை விட்டு வெளியே சென்றதும், ஊரார் படும் துன்பங்களைக் கண்ணால் கண்டு கலங்குவான்; அவர்களின் வறுமைத் தொல்லையைப் போக்க ஏதேனும் செய்ய வேண்டும் என்று ஏங்குவான்; பிறர் வாடத் தான்மட்டும் மகிழும் வாழ்வும் தமிழனுக்குத் தகுமோ என்று புழுங்குவான்; ஒப்புரவை உயர்ந்த அறமெனப் போற்றிக் கூறிய சான்றோரின் கருத்தெல்லாம் நினைந்து நினைந்து உருகுவான்; தன்னைப் போன்ற இளைஞர் சிலர் வெளிநாட்டுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்துவருவதைப் பிறர் கூறக் கேட்டபோதெல்லாம் உள்ளம் துடிப்பான்; மனைவியைப் பிரிய மனம் இல்லாமையால் கடமையை மறத்தல் ஆண்மைக்கு இழுக்கு என்று தன்னையே நொந்துகொள்வான். மற்ற

வர்களோடு சேர்ந்து வாணிகம் செய்து விரைவில் திரும்பி வந்தபின் மனைவியின் துயரைத் தீர்த்தல் முடியும் என நம்பிக்கை கொள்வான்; இவ்வாறு அவன் மனம் படிப் படியே மாறிவந்தது. ஒருநாள் பொருள்வயிற் பிரியத் துணிவும் கொண்டான். ஆயினும், மனைவியிடம் கூறின் அவள் மீண்டும் தடுப்பாள் என உணர்ந்து, அவள் அறியாமலே தன் முயற்சிகளைச் செய்துவந்தான். அவ ளிடம் தெரிவிக்கவேண்டும் என இடையிடையே ஒவ் வொரு நாள் எண்ணினான். முயற்சியைத் தொடங்கிவிட்ட பின், அதை உடன்வருவார்க்கும் அறிவித்தபின், இனி எக் காரணத்தாலும் தயங்கிப் பின்வாங்குதல் கூடாது என உணர்ந்தான். மனைவியிடம் தெரிவித்தால் தன் முயற்சிக்குத் தடையாகவே நிற்பாள் என வருந்தினான். அதனால் குறித்த நாள் நெருங்கும் வரையில் பயணத்தைப் பற்றி அவளுக்கு ஒன்றும் உணர்த்தாமலே இருந்தான். ஆயினும் அவன் தலைவியிடம் செலுத்தத் தொடங்கிய புதிய பேரன்பு அவளுக்கு ஐயத்தை உண்டாக்கியது. தலைவனுடைய உள் ளத்தில் பிரிவுக் குறிப்பு ஏதேனும் இருக்குமோ என்று அவள் ஐயுற்றாள்.

புறப்படுவதற்கு உரிய நாள் நெருங்கியது. இளைஞர் சிலர் சேர்ந்து வாணிக முயற்சி மேற்கொண்டு பயணம் வைத்துள்ளனர் என்ற செய்தி ஊரில் பரவியது. புறப்படு வதற்கு முன்னாள் தலைவிக்கும் செய்தி எட்டியது. எட் டியதும், தன் கணவனும் அவர்களுடன் சேர்ந்து செல்லத் துணிந்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணித் துணுக்குற்றாள். கணவனுடைய பேச்சிலும் செயலிலும் சில நாளாகத் தான் கண்டுவந்த வேறுபாட்டிற்கு இதுதான் காரணமோ என அஞ்சினாள். அவ்வாறாயின், இனித் தடுப்பதற்கு வழி உளதோ எனக் கவலையுற்றாள். தலைவன்

அவளைக் காணவும் தயங்கினான்; கண்டு கூற வேண்டும் என்று எண்ணவும் தயங்கினான்; தன் மனைவியின் கண்ணெதிரே தோன்றும் வாய்ப்பையும் தவிர்க்க முயன்றான். அன்றெல்லாம் தலைவியும் அவனை நெருங்க மனம் இல்லாமல் விலகி நின்றாள். அடுத்துக் கேட்கவேண்டும் என்று ஒவ்வொரு வேளை துணிவு பிறக்கும்; அந்தத் துணிவு உடனே மறையும்; சோர்ந்து வருந்துவதே பயனாய் நிற்கும்.

## அன்று கண்டது

மறுநாள் காலையில் எல்லா ஏற்பாடுகளும் செய்துமுடித்த தலைவன் அவளிடம் சொல்லி விடைபெறுவதற்காக, அவளை அன்போடு அழைத்தான். அதற்குள் தோழிவாயிலாக உண்மை உணர்ந்திருந்தாள் தலைவி. தன்னிடம் சொல்லிவிட்டுப் பிரிவதற்காகவே கணவன் தன்னை அழைப்பதை அறிந்து கொண்டாள். அவன் தன்பால் காட்டும் பேரன்பை ஏற்காதவளாய் முகம் மாறுபட்டுத் தோன்றினாள். (அளிநிலை பொருதவளாய் அமரிய முகத்தவளாய்த் தோன்றினாள்.) கணவன் அழைத்த அழைப்பிற்கு அவள் உள்ளம் இசையவில்லை. (அவனுடைய விளிநிலை ஏற்காதவளாய்த் தோன்றினாள்.) அவனுடைய பயணத்திற்கு உடன்படாமல் பிரிவாற்றாதவளாய் வருந்தியதாலேயே அவ்வாறு மாறுபட்டாள் (அடி-1, 2). குழந்தையை ஏந்தி அணைத்தவாறே ஒருவகைத் தனிமையுணர்ச்சியோடு மெல்ல மெல்ல நடந்து வந்தாள். மெல்ல நடந்தும், முன்போல் அடி எடுத்துவைக்க வில்லை. அடி எடுத்து வைத்ததிலும் வேறுபாடு இருந்தது. மெல்லிய அழகிய பாதம் நிலத்தில் வடு ஏற்படுத்திட நடந்தாள். அழைத்த கணவனை நெருங்கிச் சென்றாள் (அடி - 2-4).

அப்போதும் மறுமொழி ஒன்றும் கூறவில்லை. கூரிய பல் தெரியுமாறு புன்முறுவல்மட்டும் தோன்றியது.

அதுவும் சிறிய அளவில் தோன்றி வாயினுள்ளே நின்றது. அந்தப் புன்முறுவல், மகிழ்ச்சியால் பிறந்த உண்மைச் சிரிப்பு அன்று. உள்ளத்தில் உள்ளதற்கு மாறுகப் புறத்தே நடிக்கும் போலி முறுவலாக இருந்தது (அடி - 4, 5).

இவ்வளவும் தலைவன் அப்போது கண்ட காட்சி. அவனுக்கு இது பெரிய திகைப்பை வளர்த்தது. " இதுகாறும் நாம் ஒன்றும் சொல்லாம லிருந்தோமே. இப்போதுதான் சொல்லி விடைபெற வந்தோம். நாம் கருதி வந்தது இவளுக்குத் தெரிந்திருக்காதே. பக்கத்து வீட்டுத் தோழியிடமும் நேற்றுத்தானே கூறினேம். அவள் இதற்குள் சொல்லியிருத்தல் முடியாதே. நாம் கருதியதை இவள் உணர்வதற்கு முன்பே இவ்வாறு வேறுபட்டுத் தோன்றுகின்றுளே " என்று எண்ணினன் (அடி - 6.)

## முகக் குறிப்பு

தன் அன்புநிலையை ஏற்றுக்கொள்ளாது மாறுபட்ட முகம், தான் அழைத்ததற்கு இசைந்து பதில் கூறுமை, தனிமை யுணர்ச்சியோடு மெல்ல நடந்து வந்த தன்மை, மெல்ல நடந்தும் நிலம் வடுப்படுமாறு அடி எடுத்து வைத்த காரணம், காரணம் இன்றிப் பொய்யான புன்முறுவல் காட்டுதல் ஆகிய இத்தனையும் கண்டதும், தன் பயணத்தைத் தடுக்க நினைப்பதாகவே தலைவன் உணர்ந்தான். ' வினை தலைப்படுதல் செல்லா நினைவே ' அவளுடைய உள்ளத்தில் இருப்பதாக உணர்ந்தான் (அடி - 7).

அவர்கள் இருவரும் இரண்டு ஆண்டுகளுக்குமுன் யாரும் அறியாமல் காதலராய்ப் பழகிய காலத்தில் - களவொழுக்கத்தின்போது - அவன் அவளிடம் அளித்த வாக்குறுதி ஒன்று உண்டு. " இனி உன்னை எக்காரணத்தாலும் யான் பிரியேன் ; பிரிதல் அறநெறி அன்று என்று

கொள்வேன்" என்று அவள் நம்பும்வகையில் வாக்குறுதி அளித்துள்ளான். அக்காலத்தில் அவன் கூறிய அந்த உறுதிமொழியை இப்போது நினைத்தவள்போல் தோன்றினாள் தலைவி. தலைவன் அவளுடைய முகத்தை உற்று நோக்கினான்; முகத்தில் ஒரு குறிப்பு இருந்தது. "அன்று திருமணத்துக்குமுன் கூறிய பழைய உறுதிமொழி என்ன ஆயிற்று? கொடிய பாலைவழியைக் கடந்து செல்ல எண்ணுவீராயின், அந்தப் பழஞ் சொல்லை அவ்வாறு சொல்லாகவே சொல்லிக் கழிக" என்று சொல்பவள்போல் முகக்குறிப்பைப் புலப்படுத்தினாள். வாயால் கூறவில்லை; முகத்தாலேயே எடுத்துரைத்தாள். (முன்னம் காட்டி முகத்தின் உரைத்தாள் - அடி - 19). இந்தக் குறிப்பை உணர்ந்தான் தலைவன்.

தலைவனும் அவளிடம் ஒன்றும் பேச வழி இல்லாமல் திகைத்தான். அவளும் மெல்ல நெருங்கி வந்தபின் ஓவியம் போல் நின்றாள். ஓவியம உணர்த்தும் செய்தி ஒன்று இருப்பதுபோல், அவளுடைய உள்ளத்தே ஒரு நினைவு இருந்தது. அந்த ஒன்றையே அவள் நினைந்தாள்; துணிந்து நினைந்தாள் (அடி - 20).

உடனே அவளுடைய கண்கள் கலங்கின; கண்ணீர் நிரம்பியது; கண்ணீர் கண்பாவையையும் மூடியது. துயரத்தால் எழுந்த கண்ணீர் ஆதலால், அது தண்ணென்று இருக்கவில்லை. நடுக்கத்தைச் செய்யும் நீராக (பனிநீராக) இருந்தது. துயரத்தால் தன்னை மீறி வந்த கண்ணீரை அடக்க முயன்றாள். அதனால் கண்ணீர் துளித் துளியாக விழுந்திடவில்லை. அடக்க முயன்ற முயற்சியால் கண்களிலேயே நிரம்பி நின்றது. கண்பாவையை மூடிநின்றது. அவ்வாறு அவள் கண்ணீரை அடக்கியதற்குக் காரணம், கணவன் வீட்டை விட்டுப் புறப்படும்போது கண்ணீர்

விட்டு அபசகுனம் ஆக்குதல் கூடாது என்பதே ஆகும். அதனால்தான் கண்ணீர் பாவை மாய்க்கும் பனிநீராக நின்றது (அடி - 21).

அவள் எடுத்துவந்த குழந்தையை மார்பில் அணைத்துக் கொண்டு, அவனுடைய தலையில் அணிந்திருந்த செங்கழுநீர் மாலையை முகர்ந்து பெருமூச்சு விட்டாள். உடனே அந்த மலரின் பவளம் போன்ற செந்நிறம் மாறியது; அழகு சிதைந்தது (அடி - 25). இதைக் கண்டதும் தலைவனுடைய மனம் மாறியது.

மலரின் நிறமும் அழகும் கெடுமளவிற்கு அவளுடைய பெருமூச்சின் வெப்பம் இருந்ததை எண்ணியதும், உள்ளத் துயர் எத்தகையது என உணர்ந்து உருகினான். 'நாம் இன்னும் பிரிந்து செல்லவில்லை; அதைப்பற்றி வாய்திறந்து சொல்லவும் இல்லை; உடன் இருக்கிறோம். இவ்வாறு இருக்கும்போதே இவ்வளவு துயருறுகிறவள், பிரிந்து சென்றபின் உயிர்வாழ்வது எவ்வாறு?' "பிரிந்தால் உயிர் வாழாள்" என்று எண்ணி உருகினான். செல்வதில்லை என்று துணிந்தான்; பயணத்தைக் கைவிட்டான் (அடி 27 - 28).

## பழைய உரையின் பெருமை

ஆராய்ச்சி பிறப்பதற்கு முன்னே, போராட்டம் எழுவதற்கு முன்னே, பல முறையும் பாட்டைப் படித்துச் சுவைத்துச் சுவைத்து இன்புற்ற பழைய பொருளும் கருத்தும் இவையே.

இவ்வாறு சுவைத்து இன்புறுவதற்கு உதவியாக இருந்த அந்தப் பழைய உரை சிறந்த நல்லுரையே ஆகும். அந்த உரையின் ஆசிரியர் உயர்ந்த இலக்கிய அனுபவமும் சிறந்த வாழ்க்கை அனுபவமும் நிறைந்தவர்;

நுண்ணிய புலமை வாய்ந்தவர். அவர் நிகண்டு கற்றுச் சொற்களுக்குப் பொருள் உணர்த்திச் சென்றவர் அல்லர்; பாடிய புலவரின் உள்ளத்து உணர்வை ஆராய்ந்து உணர்ந்தால்தான் பாட்டின் பொருட் பயன் நிரம்பும் என்னும் உண்மை தெளிந்தவர் அவர். ஆதலின் குறிப்புரை எழுதும்போது வாழ்க்கை அனுபவத்தையும் இலக்கிய அனுபவத்தையும் பிணைத்துப் புலமைநுட்பம் கொண்டு எழுதியுள்ளார். பாடிய புலவரின் உள்ளத்தை உணராமல், சொற்பொருள்மட்டும காணும் உரையாசிரியராக இருந்திருப்பின், பல நுண்ணிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தியிருத்தல் இயலாது. அவருடைய உரையை முழுதும் ஊன்றிக் கற்பார்க்கு நுண்பொருள் பல ஆங்காங்கே புலப்படும். இப்பாட்டிலும் பனிநீர் (அடி-21) என்பதற்கு வழக்கமான பொருளாகிய தண்ணிய நீர் என்று கூறிச் செல்லாமல், ஆழ்ந்த பொருள் கண்டு உணர்த்தியுள்ளார். உள்ளம் இன்புறும்போது கண்ணீர் தண்மை உறுதலும், உள்ளம் துன்புறுமபோது கண்ணீர் வெம்மை உறுதலும் வாழ்க்கை அனுபவத்தாலும் இலக்கியப் பயிற்சியாலும் கண்டு தெளிந்த புலமைச் சிறப்பால், தண்ணிய நீர் என்று பொருள் கூறுவதன் குற்றத்தை உணர்ந்தார். வாயால் கூறவொண்ணாத துயரத்தைத் தன்னுள் அடக்கி மெல்ல வந்து நின்ற தலைவியின் கண்ணீரில் தண்மை இருத்தற்கே இடமில்லை என்று தெளிந்தார். பனி என்ற சொல்லுக்கு நடுக்கம் என்ற பொருள் இருத்தலை எண்ணி, நடுக்கத்தைச் செய்யும் நீர் என்று விளக்கியுள்ளார். (இருவேறு பொருள் கூறத் தகும் என்று கருதும இடங்களில் இரு பொருளையும் கூறியுள்ளார். இந்த ஒரு பாட்டிலேயே அவ்வாறு இரண்டு இடங்களில் குறித்துள்ளார். அதனால் தாம் கொண்ட ஒன்றே பொருளெனப் போராடும் கண்மூடிப் பிடிவாதம்

இல்லாமல், பல பொருளையும் ஆராய்ந்து நடுநிலையில் நின்று உண்மை காணும் பெற்றியினர் என்பது தெரிகிறது.) தெளிவுபடுத்த வேண்டும் என்ற ஆர்வமும் உடையவ ராதலால், வினைச்சொற்களின் தோன்று எழுவாய்கள் புலப்பட உரை எழுதியுள்ளார். இந்தப் பாட்டிலேயே ஆறும் அடியில் 'கண்ணியது உணரா அளவை' என்ற பகுதியில் வரும் இரண்டு வினைச் சொற்களுக்கும் கருத்தா விளங்க, 'நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே' என்று தெளிவுற எழுதியுள்ளது இதற்குச் சான்றாகும். இவ்வாறு பலவகையாலும் தெளிவு, ஆழம், அருமை, நயம் முதலிய சிறப்பெல்லாம் வாய்ந்த உரையாக இருத்தலால், அகநானூற்றிற்கு இதுவே முதல் மணிவிளக்காக இருந்து உதவியது என்பதில் ஐயமில்லை. தமிழ்ப் பேரறிஞர்கள் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரும் கரந்தைக் கவியரசு திரு. ரா. வேங்கடாசலம் பிள்ளையும் இந்தப் பழைய உரையைப் போற்றியே பதவுரை விளக்கவுரைகள் எழுதியிருப் பதும் இதன் பெருமைக்குச் சான்றாகும்.

### பாட்டின் வரலாறு

பாட்டைப்பாடிய புலவர் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்பவர். அவர் இன்ன காலத்தவர் என்று துணிந்து கூறல் இயலாது. பண்டைத் தமிழகம் வரலாற்றைப் பற்றிக் கவலையுறாத நாடு; ஆதலின் வரலாற்றின் கண்கொண்டு புல வரைப் பற்றி ஆராய்வதற்கு ஒன்றும் இல்லை. ஆயினும் அவர் பாலைத்திணை பற்றிப் பாடுவதில் சிறப்புற்றவர் என் பதும், அரச மரபினைச் சார்ந்தவர் என்பதும் பெயராலேயே அறியப்படுகின்றன.

அந்தப் புலவர் தம் வாழ்நாளில் பெற்ற சில சிறந்த அனுபவங்களுக்குப் பாட்டுருவம் தந்து வாழவைத்துச்

சென்றார். அவர்காலத்திலோ அவர்காலத்திற்குப் பின்னரோ அந்தப் பாடல்கள் பிறரால் படிக்கப்பெற்றுப் போற்றப்படலாயின. ஆயினும் அவை ஒரு குடும்பச் சொத்தே போல் அவர் வாழ்ந்த வீட்டிலோ வேறு வீட்டிலோ தேங்கிக்கிடந்தன. தமிழகத்தில் சிற்சில மாறுதல்கள் ஏற்பட்டன; மூவேந்தர் ஆட்சி அசைக்க முடியாத ஆட்சி என்ற நெடுநாள் எண்ணமும் தளர்ந்தது. ஒருநாள் அவ்வூர்க்கு வந்தார் அறிஞர் ஒருவர். ஒரு திண்ணைமேல் இருந்தார். அவருடைய களைப்பு அறிந்து, அவரை விருந்தினராக ஏற்றுப் பசியையும் களைப்பையும் போக்கினார் அந்த வீட்டுத் தமிழர். உண்டு களைப்பாறியபின் அந்த அறிஞர் தாம் வந்த நோக்கத்தை எடுத்துரைத்தார். "இந்த ஊரில் யாரேனும் புலவர் வாழ்ந்தது உண்டோ?" என்றார். "ஆம். சில தலைமுறைகளுக்கு முன்பு பக்கத்துத் தெருவில் ஒரு புலவர் வாழ்ந்திருந்ததாகக் கேள்வி. புலவர் வீட்டார் என்று அந்தக் குடும்பத்தினரைச் சொல்வது உண்டு. அந்தக் குடும்பத்தில் இப்போது யாரும் கற்றுத் தேர்ந்தவர் இல்லை" என்றார் அந்த வீட்டார். "அவர் இருந்த வீட்டிலோ, உறவினர் வீட்டிலோ ஓலைச்சுவடிகள் கிடைக்குமோ? அவற்றை எல்லாம சிதலும் (செல்லும்) தீயும் நீரும் அழித்திடா வகையில் திரட்டிக் காக்கும் எண்ணம் உள்ளது. மதுரை உருத்திர சன்மர் என்பவர் இவ்வகையில் ஊக்கம் கொண்டு முயன்றுவருகிறார். அவர் இத்துறையில் தொண்டாற்ற முன்வந்ததற்குத் தூண்டுகோல் பாண்டியன் உக்கிரப்பெருவழுதியே. ஒருகால் சுவடிகளைத் தர அவர்கள் தயங்கினும் கவலை இல்லை. யான் இருந்து, அவற்றை அவர்களின் வீட்டுத் திண்ணையிலேயே பார்த்துப் பெயர்த்து எழுதிச் செல்வேன்" என்றார். ஊருக்குப் புதியவராக வந்த அறிஞர்க்கு உதவுவதில் ஆர்வம் கொண்டார் அந்த வீட்டார்.

அவர் செய்த நல்லுதவியால், புலவர் எழுதிவைத்திருந்த ஓலைச் சுவடிகள் அறிஞரின் கைக்கு எட்டின. இன்று இது பற்றிய வரலாறு வேறு ஒன்றும் அறியப்படவில்லை.

பாடியவர் : பாலைபாடிய பெருங்கடுங்கோ.

தொகுத்தவர் : மதுரை உப்பூரிகுடிகிழான் மகனார் உருத்திரசன்மர்.

தொகுப்பித்தவர் : பாண்டியன் உக்கிரப் பெருவழுதி.

இவ்வளவே இன்று இப்பாட்டின் வரலாற்று ஆராய்ச்சியாகக் கூறத்தக்கது.

## கருத்துக் குறிப்பு

இவ்வாறு தொகுத்து முடித்த பின், அந்த அறிஞரோ, அல்லது அவர்க்குப் பிற்காலத்தில் அந்தத் தொகை நூலைக் கற்ற வேறு அறிஞரோ, அந்தப் பாட்டுக்களைத் திரும்பத் திரும்பப் படித்து அவற்றின் கலைச் சுவையில் ஈடுபாடு உடையவர் ஆனார். தமக்குப் பின்வருவோர் அவற்றை எளிதில் கற்பதற்கு உதவியாக ஏதேனும் செய்யவேண்டும் என்று அவர் உள்ளம் தூண்டியது. இக்காலத்தைப் போல விரைந்து எழுதவும் எளிதில் பரப்பவும் வல்ல கருவிகள் வாய்த்திருப்பின் அவர் அகநானூற்றிற்கு விளக்கமான உரையே எழுதியிருப்பார். தம்மிடம் வந்து சேர்ந்த ஓலைச் சுவடியைப் பெயர்த்து எழுதவே பெருமுயற்சி தேவையாக இருந்தது. ஆதலின் உரைவிளக்கம் எழுதும் முயற்சி அவர்க்கு எட்டாததாக நின்றது. ஆர்வம் இருந்தும் வழி இல்லை என்று உணர்ந்தார். ஆயினும் பாட்டுக்களின் கருத்துக்களாகத் தாம் உணர்ந்தவற்றை அவற்றின் அடியில் குறித்துவிடின், பிற்காலத்தார் எளிதில் கற்கத் துணை செய்யும் என்று கண்டார். ஒவ்வொரு பாட்டிற்கும்

தாம் பாடுபட்டு உணர்ந்த கருத்தை எழுதினர். இருவகையாக மூவகையாகக் கருத்துத் தோன்றின் அவற்றையும் அங்கு எழுதினர். இதுவே அக்காலத்து இலக்கிய ஆராய்ச்சியாக அறிஞர் சேர்த்துவைத்த பகுதி எனலாம். இதையே திணைதுறைக் குறிப்பு என்றும் கிளவிக் குறிப்பு என்றும் பிற்காலத்தார் குறிப்பிட்டனர். இந்தப் பாட்டின் கீழ்க் குறிக்கப்பட்ட கருத்து, "பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது" என்பதாகும்.

## வழிகாட்டிய உதவி

பாட்டைக் கற்ற அறிஞர் சேர்த்த இந்தக் குறிப்பு, சில சொற்களால் ஆகிய சிறு குறிப்பே ஆயினும், இதுவே அதைக் கற்க முயல்வார்க்குச் செய்யப்பட்ட முதல் உதவியாகும். இதன் உதவியாலேயே பழைய உரையாசிரியர் பாட்டின் பொருள் விளங்குமாறு சிலசொற்களையும் தொடர்களையும் எடுத்துக் குறிப்புரை எழுதத் தொடங்கினர்.

கிளவிக் குறிப்பு எழுதிய காலம் முந்தியது; குறிப்புரை எழுதிய காலம் பிந்தியது. இந்த இருகாலத்திற்கும் இடையே இன்னும் பல மாறுதல்கள் நிகழ்ந்தன. மாறுதல்கள் அரசாட்சியில் மட்டும் அல்ல, இலக்கிய வளர்ச்சியின் போக்கிலும் நிகழ்ந்தன; இலக்கியத்திற்கு அடிப்படையான நாட்டு மக்களின் வாழ்க்கையிலும் நிகழ்ந்தன. வாழ்க்கையும் ஓரளவு மாறி, இலக்கியமும் அதற்கேற்ப மாறிய காலத்தில் வந்தவர் பழைய உரையாசிரியர்; ஆதலின் கிளவிக் குறிப்பு எழுதிய அறிஞர் புலவரின் உள்ளக் கருத்தை உணர்ந்தது போல், அவ்வளவு தெளிவாக உரையாசிரியர் உணரவில்லை. அதனால் அவர் எழுதியதில் ஒருபகுதி இன்றைய ஆராய்ச்சிக்குப் பொருந்திவர, மற்றொரு பகுதி பொருந்தவில்லை.

"பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது" என்று குறித்த அறிஞரின் கருத்தைக் குறைகூற இடம் இல்லை. மறுத்தற்கு உரிய அசையோ எழுத்தோ அதில் ஒன்றும் இல்லை. இப் பாட்டில் அமைந்துள்ள வாழ்க்கைப்படம் இன்னது என்று திட்பநுட்பம் செறியக் கூறுகிறது அவர் குறிப்பு. பாடிய புலவரின் உள்ளத்துணர்வை உணர முயல்வார்க்கு வழிகாட்டியாக அந்தக் குறிப்பு இன்றும் பயன்படுகிறது.

"இதோ இவ்வழியே சென்று நின்று இப்பக்கம் திரும்புக" என்று திசை உணர்த்திவிட்டு அங்கேயே நிற்கும வழிகாட்டிபோல் உதவுவது கிளவிக்குறிப்பு. குறிப்புரையோ அதைவிடச் சிறந்தது. "இவ்வழியில் தனியே செல்வதில் இடர்ப்பாடு உண்டு. யானே துணையாகச் சிறிது தூரம் உடன்வருவேன். பிறகு நீங்களே செல்லலாம" என்று உடன்வந்து உதவுவார்போல் அமைந்துள்ளது குறிப்புரை.

"இதுவே வழி" என்று ஓரிடத்தில் நின்றபடியே வழிகாட்டுதல் மிக எளிது. அவ்வாறு வழிகாட்டியவர் தவறு செய்வதற்கும் இடம் இல்லை. ஆனால் உடன் நடந்து வந்தவர் கொடிவழியே அழைத்துச் சென்று அவரும் அறியாமல் வழி தவறுவதும் உண்டு. அதுபற்றி அவர் செய்த நல்லுதவியை மறந்து குறைகூறிப் பழித்தல் குற்றம் ; அது நன்றி கொன்ற பெருங்குற்றம். ஆயின், அதற்காக அவருடன் சேர்ந்து நாமும் மயங்கி இடர்ப் பட்டுத் தடுமாறுதல் ஆகாது. அவர் செய்த உதவியைப் போற்றி நன்றி கூறிவிட்டு, அப்பால் வழி அறிந்து செல்ல முயல்வதே அறிவுடைமை.

## இலக்கியப் பண்பாடு

தமிழிலக்கியம் பழமையும் பண்பாடும் பெருமையும் உடையது. இன்றைய இலக்கியம் புதுமைக்கும் புதுமைய

தாய் வளர்ந்துவருவதேபோல், பழங்காலத்துச் சங்க இலக்கியம் பழமைக்கும் பழமையதாய்ப் பண்பட்டுவந்தது. இலக்கியக் கட்டுப்பாடு என்று பிறர் கருதக்கூடியவை எல்லாம், சங்க நூல்களில் இலக்கியப் பண்பாடு என்று போற்றத் தக்கனவாக உள்ளன.

இலக்கிய வகைகளில் சிறந்ததாகிய பாட்டு, இருவகையில் கட்டுப்படுவது. கற்றோர் சிலர் தம் செவியுணர்வால் அளந்தளந்து விரும்பிப் போற்றியும் வெறுத்து ஒதுக்கியும் வரையறுத்த ஓசையமைவு முதலியன சொல்லளவில் உள்ள கட்டுப்பாடு. உயர்ந்தோர் தம் வாழ்க்கையனுபவத்தால் உய்த்துணர்ந்து இவை தக்கன இவை தகாதன என்று வரையறுத்த அறம் பொருள் இன்ப அமைவுகளே பொருளளவில் உள்ள கட்டுப்பாடு. எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், யாப்பிலக்கணம் என்பன முன்னைய வகையைச் சார்ந்தவை. அகப்பொருள் புறப்பொருள் என்னும் பாகுபாடு உடைய பொருளிலக்கணம் பின்னைய வகையைச் சார்ந்தது.

சொல்லைப் பொறுத்த கட்டுப்பாடு, சிலருடைய விருப்பு வெறுப்பை ஒட்டி முதலில் அமைந்தது; காலப்போக்கில் கற்றவரோ மற்றவரோ மாறுதல் விரும்பின் அவரவர் செல்வாக்கை ஒட்டி மாற்றிக்கொள்ளக் கூடியது. பொருளைப் பொறுத்த கட்டுப்பாடு அத்தகையது அன்று; அது சிலருடைய விருப்பு வெறுப்பால் அமைந்த கட்டுப்பாடு அன்று; உலக வாழ்க்கையின் அடிப்படையில் என்றும் மாறாமல் மக்களினம் முழுமைக்கும் பொதுவாய் மனச்சான்று என்னும் அழியாப் பேருணர்வின் பேராற்றலால் காக்கப்படுவதால் என்றும் ஒரே தன்மையாய் விளங்கும் உண்மைகளை ஒட்டி அமைந்தது அது. ஆகவே கற்றவரோ மற்றவரோ எவ்வளவு செல்வாக்குப் பெறினும் விருப்பம் போல் மாற்றியமைக்க இயலாதது அது. எடுத்துக்காட்டாக,

தொல்காப்பியத்தில் கூறப்படும் செய்யுளிலக்கணம் இன்று அவ்வாறே கொள்ளப்படுவ தில்லை; மாறுதல் பெரும் பான்மையாக உள்ளது. ஆயின் தொல்காப்பியனார் வகுத்த அகப்பொருள் புறப்பொருள் உண்மைகளோ, திருவள்ளுவர் வகுத்த அறம் பொருள் இன்பங்களோ இன்றும் பெரும் பாலும் கொள்ளப்படுகின்றன; அவற்றிடையே மாறுதல் மிகச் சிறிதே. அந்த மாறுதலும் பெயர்களையும் வடிவு களையும் ஒட்டியதே அன்றி, அடிப்படைகளின் மாறுதல் அன்று. பழைய இலக்கியங்களில் உள்ள தினைப்புனம இல்லாமல் போகலாம்; வேங்கைமரம் இல்லாமல் போக லாம்; காதல் நிகழ்ச்சி இன்றும் மாறவில்லை. வேலும் வாளும் மறையலாம்; விஞ்ஞானக் குண்டும் விமானமும் தோன்ற லாம; ஆயினும் படையெடுப்பும போரும் இன்றும் மாரு நிகழ்ச்சிகளாக உள்ளன.

ஆகவே, இது மறுக்க முடியாத உண்மை யாகும். சொல்லின் கட்டுப்பாடு மக்களின் மனப்பான்மைக்கு ஏற்ப மாறக்கூடியது. ஆனால் பொருளின் கட்டுப்பாடு எத்தகைப் பெரும்புலவராலும் கடக்க முடியாதது. நாடு, மொழி என்ற வரையறையும் கடந்து உலக வாழ்க்கைக்கே பொதுவாக விளங்கக்கூடியது. அதனால்தான் சிறந்த இலக்கியமாக ஒரு நூல் ஒரு நாட்டில் ஒரு மொழியில் தோன்றின், அது எல்லா நாட்டினராலும எல்லா மொழியினராலும் போற்றக் கூடியதாகின்றது; அதை ‘உலகினுக்கே தந்து வான்புகழ் கொள்ளும்’ வாய்ப்பு அந்த நாட்டு மக்களுக்குக் கிடைக் கிறது. ஒரு மொழியின் செய்யுள் ஓசை மற்றொரு நாட்டார்க்கு இன்பம் பயப்பதில்லை; ஒரு மொழியே பேசும் மக்களுள்ளும், ஒரு காலத்தார்க்கு இன்பம் பயப்பது மற்றொரு காலத்தார்க்கு இன்பம் பயப்பதில்லை. ஓசைச் சிறப்பு, சொற்சிறப்பு முதலியவை இலக்கியத்தின் வாழ்வுக்கு

உடையும் அணியும் போன்றவை. பொருட்சிறப்பே உயிர் போன்றது. ஆதலின் இலக்கியம் ஆராய்வோர் ஒரு பாட்டின் ஓசையின்பத்திலும் சொல்லின்பத்திலும் மயங்கி நிற்காமல், அதன் கருத்தின்பத்தில் திளைக்க முயலுவதே சிறந்த கடமையாகும்.

"பாட்டின் அகத்தே வேறு என்ன உணர்வது என்று அறியாதபோது அதன் புற அமைப்பில் கருத்தைச் செலுத்துகிறோம்" (We pay attention to externals when we do not know what else to do with a poem— p. 24. Principles of Literary Criticism, I. A. Richards) என்று ரிச்சர்ட்ஸ் என்னும் அறிஞர் உணர்த்தும் உண்மையும் இங்குக் கருதத்தக்கது.

பொருளிலக்கணம்

பண்டைத் தமிழ்ச்சான்றோர் இந்த உண்மையைத் தெளிந்த பெருமக்கள். அதனாலேயே எழுத்திலக்கணம் சொல்லிலக்கணத்தைவிட விரிவுடைய பொருளிலக்கணம் கண்டு போற்றினர். தாம் இயற்றிய இலக்கியத்திலும் அகப்பொருள் புறப்பொருள் பற்றிய கருத்துக்களை அமைப்பதில் வரம்பு கடவாமல் நின்றனர். கட்டுப்பாடு குறைந்த—ஓசையின்பமும் குறைந்த – ஆசிரியப்பாவைக் கருவியாகக் கொண்டு பலரும் பாட்டெழுதினர். ஆயின், திணை துறை முதலாய வரையறைகளைப் போற்றுவதைக் கடமையாகக் கொண்டனர். உண்மையை ஆராயின், திணை, துறை, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் முதலியன இலக்கண நூல்களோ இலக்கிய நூல்களோ விதிக்கும் கட்டுப்பாடுகள் அல்ல ; வாழ்க்கை உணர்த்தும் வரையறைகளே அவை வாழ்க்கை அனுபவத்தால் வாழ்க்கையின் வரையறைகளைத் தெளிந்து, உணர்ந்த புதிய புதிய உணர்வு

களைப் பாடிய பாட்டுக்களின் தொகுதியே பண்டைத் தமிழ் இலக்கியம் ; சங்க இலக்கியம். ஆதலின், சங்க நூல்களைக் கற்பவர், வாழ்க்கையின் உண்மைகளை மறவாமல் ஆராய்ந்து காணவேண்டும். வாழ்க்கையைப் பற்றிய தெளிவு பெறாதவரும் சங்க இலக்கியத்தைக் கற்று அந்தத் தெளிவு பெற முடியும். வாழ்க்கையால் இலக்கியக்கல்வியும், இலக்கியக் கல்வியால் வாழ்க்கையும் திருந்தி வளம்பெறமுடியும் என்ற உண்மையை இங்குக் காணலாம். இதுமட்டும் அன்று ; ஒரேவகையான தூய உயர்ந்த அமைப்பு, சங்க இலக்கியம் முழுதும் ஊடுருவி நிற்பதால், ஒரு பாட்டைக் கற்பவர்க்கு ஏதேனும் ஐயம் எழுந்தால், மற்றப் பாட்டுக்களின் கருத்துக் கள் முன்வந்து துணைசெய்யும் ; ஐயம் போக்கும் ; உண்மை உணர்த்தும்.

ஆகவே, ஒரு பாட்டைக் கற்க, அதுபோன்ற பிற பாட்டுக்களின் துணையும் வேண்டும் ; வாழ்க்கை அனுபவமும் வேண்டும். வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு பாட்டைக் கற்றுணரும்போது ஒருவகையில்மட்டும் விழிப்பாக இருத்தல் வேண்டும். வாழ்க்கை, எல்லையற்று விரிந்து நிற்பது ; பலவகை உணர்வுகளுக்கும் உறைவிடமானது. பாட்டு, குறித்த எல்லை உடையது ; தெளிந்தெழுந்த உணர்வுகளுக்கு வடிவு கொடுப்பது. வாழ்க்கை, மிகப் பெரிய கடைத்தெருவைப் போன்றது; பாட்டு, வாழ்வாங்கு வாழ்பவரின் வீட்டைப் போன்றது. ஆகவே, எல்லையில் சுருங்கி யிருப்பினும், வாழ்க்கையைவிட ஒழுங்கும் அழகும் அமைதியும் உடையதே பாட்டாகும். நச்சினார்க்கினியர் அகப்பொருளிலக்கியத்தைப் பற்றிக் கூறும்கருத்து இங்குப் போற்றத்தக்க தாகும் :

" இஃது இல்லதெனப்படாது, உலகியலேயாம். உலகியல் இன்றேல், ஆகாயப்பூ நாறிற்று என்றவழி அது சூடக் கருதி

வாரும் இன்றி, மயங்கக் கூறினன் என்று உலகம் இழித்திடப் படுதலின் இதுவும் இழித்திடப்படும். இச் செய்யுள்வழக்கினை நாடகவழக்கு என மேற்கூறினர், எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது, உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தல் முதலாகப் புனைந்துரை வகையால் கூறும் நாடக இலக்கணம் போல யாதானும் ஒரோவழி ஒரு சாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுள் செய்தல் ஒப்புமை நோக்கி" (தொல். பொருள். அகத். 3-உரை.)

"புனைந்துரை வகையால் கூறுப என்றலின் புலவர் இல்லனவும் கூறுபவாலோ எனின், உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்கு உள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறம் எனக் கருதி அந்நல்லோருக்கு உள்ளனவற்றில் சிறிது இல்லனவும் கூறுதல் அன்றி, யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார் என்றற்கு அன்றே நாடகம் என்னுது வழக்கு என்பாராயிற்று என்பது...இப் புலனெறிவழக்கினை இல்லது இனியது புலவரால் நாட்டப்பட்டது என்னுமோ எனின், இல்லது என்று கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பம் செய்யாதாகலானும் உடன்கூறிய உலகியல் வழக்கத்தினை ஒழித்தல் வேண்டுமாகலானும் அது பொருந்தாது" (ஷை - 53 - உரை.)

## பாட்டின் குறையோ ?

பாட்டில் காணும் தலைவனும் தலைவியும் உலகில் காண்பதற்கு அரியராகவே விளங்குவர். எங்கெங்கோ ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு காலத்தில் சிறந்து விளங்கும் நற்பண்புகள் பலவும் ஒருசேரத் திரண்டிருப்பதுபோல் விளங்குபவர் பாட்டிடைத் தலைவனும் தலைவியும். தொல்காப்பியனார் கூறும் பண்புகளும் திருவள்ளுவர் எடுத்துரைக்கும் நல்லியல்புகளும் பாட்டின் தலைவன் தலைவியரிடத்தில்

இயல்பாக அமைந்திருக்கும். ஆகவே, வாழ்க்கையில் பெரும்பாலோரிடத்தில் காணும் குறைகள் அவர்களிடத்தில் அணுகுவதே இல்லை. வாழ்க்கையின் இழிந்த பகுதிகளையும் புலவர் ஒரு காரணம் பற்றிப் பாட விரும்பின், அக் காரணம் உயர்ந்த நோக்கம் பற்றியதாகவே இருக்கும்; நற்பகுதிகளின் சிறப்பைப் புலப்படுத்துவதாகவே இருக்கும். அப்போதும் அவற்றிற்காக இழிந்த மக்களையே படைத்துக் காட்டுவர். உயர்ந்த தலைவன் தலைவியரிடத்திலேயே இழிந்த பண்புகளைக் காட்டுதல் இல்லை.

இந்த வரம்பு கொண்டே, முன்னோர் அகப்பொருளை உயர்வுடைய ஐந்திணை என்றும், உயர்வற்ற கைக்கிளை பெருந்திணை என்றும் பாகுபாடு செய்தனர். குறை ஏதேனும் காணப்படின், கைக்கிளை பெருந்திணைப்பாட்டுக்களில் வரும் மக்களிடையே காணப்படுமே அன்றி, அன்பின் ஐந்திணைப்பாட்டுக்களில் வரும் தலைவன் தலைவியரிடையே காணப்படாது. கலித்தொகையில் கைக்கிளை பெருந்திணைப் பாட்டுக்களும் உள்ளன; அவற்றில் உயர்வற்ற மக்களைக் காணலாம். ஆயின், குறுந்தொகை நற்றிணை அகநானூறு ஆகிய தொகை நூல்களில் பண்பிற் சிறந்த தலைவன் தலைவியரையே காணமுடியும்; குறை உடையாரைக் காண இடம் இல்லை.

மேற்கூறியவாறு பாட்டிற்குப் பொருள் உணர்ந்தால், தலைவனும் தலைவியும் அவ்வளவு உயர்ந்த மக்களாகத் தோன்றவில்லை; தலைமக்களுக்கு இருக்கலாகாத குறைகள் அவர்களிடத்தில் இருக்கக் காண்கின்றோம். ஆதலின், உண்மையாகவே அவர்கள் குறை உடையவர்களா, அல்லது பாட்டின் பொருள்தான் குறை உடையதா, அல்லது பாட்டே குறை உடையதா என்று ஆராயும் கடப்பாடு நேர்கிறது.

பாட்டுக் குறை உடையது என்று கூறுவதற்கில்லை. குறை உடையதாயின், அது பாடிய புலவரின் குறை என்று அமையலாம்; அவ்வாறு அமைவதில் தவறு ஒன்றும் இல்லை. பெரும்புலவரும் ஒவ்வோரிடத்தில் வழுக்குதல் இயற்கை. முக்குண வயத்தால் முறை பிறழ்ந்தார் என்று விடலாம். ஆயின், இந்நூல், புலவர் ஒருவர் பாடிய நூல் அன்று. புலவர் பலர் பாடிய பற்பல பாட்டுக்களைப் பலவாறு முயன்று சேர்த்துச் சீர்தூக்கிச் சிறந்தன எடுத்துத் தொகுத்த தொகைநூல் இது. ஆதலின், அவ்வாறு குறை கூறுவதற்கு இடம் இல்லை.

இனி, பாட்டில் வரும் மக்கள் குறை உடையவர்கள் என்று அமைதி அடையவும் வழி இல்லை. அவர்கள் குறையுடைய மக்களாயின்,

> அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
> கடிவரை இலபுறத்து என்மனார் புலவர்
>
> (தொல். பொருள். அகத். 23)

என்னும் மரபினை உணர்ந்து, இப்பாட்டை அன்பின் ஐந்திணைப் பாட்டாக்கி அகநானூற்றில் சேர்க்காமல், கைக்கிளைப் பாட்டாகவோ பெருந்திணைப் பாட்டாகவோ கொண்டு பிறர் தொகுக்குமாறு விட்டிருப்பர்.

ஆதலின், பாட்டிற்குப் பொருளுணர்ந்த முறையே தவறு எனக் கருதவேண்டியுள்ளது.

முதலாவதாக :

மேற்கூறியவாறு கொண்ட பொருளால், தலைவன் தன் பயணத்தை இறுதிவரையில் தலைவிக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ அறிவிக்கவில்லை என்று தெரிகிறது. வெளிநாட்டிற்குப் புறப்படும்போதுதான், அவளிடம் சொல்லி விடைபெற அழைத்தான் என்றும் தெரிகிறது.

அவள் மாறுபட்ட முகத்தோடு மெல்ல நடந்து வந்து பொய்யான முறுவலோடு அணுகும்போது அவளுடைய முகக்குறிப்பைக் கண்ட தலைவன் என்ன எண்ணினான்? "'நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே' இவ்வாறு பயணத்தைத் தடுக்க நினைக்கிறாளே" என்று எண்ணினான் (அடி-6, 7 : குறிப்புரை). ஆகவே அந்த நேரம்வரையில் அவன் தன் பயணத்தைப் பற்றி அவளிடம் சொல்லவில்லை என்று அறிகிறோம்.

ஒத்த அன்பும் ஒத்த உரிமையும் உடையவராய்க் கருத்து ஒருமித்து வாழ்ந்துவரும் தலைவனும் தலைவியும் இவ்வாறு இருத்தல் முடியுமா? கணவனுக்குமட்டும் தொடர்பு உடைய ஊர்ச்செய்தியாகவோ நாட்டுச்செய்தி யாகவோ இருப்பினும் அன்பும் அறிவும் உள்ள மனைவிக்குச் சொல்லாமல் இருப்பது உலகில் காணோம். ஒருகால் மறதியால் அத்தகைய வெளிச்செய்தியைச் சொல்லத் தவறினும் குற்றம் இல்லை. ஆனால் குடும்பத் தொடர்பான ஒரு செய்தியை மனைவி அறியாமல் மறைப்பது உண்டோ? அதிலும், மனைவிக்குக் கவலை விளைக்கத் தக்க குடும்பச் செய்தியானால், அதை அவளுக்கு அறிவிக்காமல் மறைத்தல் வஞ்சம் அன்றோ? கணவனுடைய அன்புக்கும் உரிமை வாழ்க்கைக்கும் இழுக்கு அன்றோ? குடும்பச் செய்தியே அவ்வாறு எனின், வீட்டை விட்டுக் கணவன் பிரிந்து செல்லும் நிகழ்ச்சியைப் பற்றி இறுதிவரையில் ஒன்றுமே சொல்லாமலிருப்பின், அது பெருந்தவறு அன்றோ? ஒரு நாள் பிரிவோ, இருநாள் பிரிவோ, பக்கத்து ஊர்ப்பிரிவோ எனின், கூறாமல் மறப்பதும் குற்றம் அன்று; மறைப்பதும் பெரிய குற்றம் அன்று. ஆயின், பல திங்கள் பிரிந்திருக்க வேண்டியதை - தாய்நாட்டை விட்டு நூற்றுக்கணக்கான மைலுக்கு அப்பால் உள்ள நாட்டிற்குச் செல்லும் பிரிவை-

கூறுமல் மறப்பதும் மறைப்பதும் எத்தகைய குற்றம் என்பது? இடையூறு ஒன்றும் இன்றி அமைதியாகச் சென்று திரும்பும் பயணமாக இருப்பினும் எவ்வளவு காலப் பிரிவாயினும், எவ்வளவு தொலைவான பிரிவாயினும் கவலை இல்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வோர் இடமும் உயிர்க்கு ஊறு பயக்கும் கொடுமை மிக்க பாலைவழியைக் கடந்து செல்லும் பயணம் அது. நினைத்தாலும் நடுங்கச்செய்யும் கொடிய வழியில் (உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்கரும் கடத்திடை - அக. 29) செல்லும் பயணத்தைப் பற்றி இறுதிவரையில் வாழ்க்கைத் துணைவிக்குக் கூறுமலிருப்பது கற்பனைக்கு எட்டாத கொடுமையாகவே உள்ளது. செவி நுகரும் ஓசையின்பமும் மூளை அறியும் சொற்பொரு ளின்பமுமாகவே கொண்டு பாட்டைப் படித்து அமை வார்க்கு அந்தக் கொடுமை புலனாகாது. பாட்டினுள் புகுந்து புலவர் படைத்த மக்களைத் தாமும் கற்பனையில் படைத்துக் கண்டு அவர்களின் உள்ளமும் செயலும் உணர வல்ல வர்க்குத் தலைவனுடைய கொடுமை புலப்படும்.

மெல்ல நினைத்து ஏற்பாடுகள் செய்து புறப்படும் பயணமாக இல்லாமல், திடீரென எண்ணி உடனே புறப் படும் பயணமாக இருப்பின், தலைவிக்கு முன்னதாகத் தெரி விக்கும் வாய்ப்பு இல்லாமல் போகலாம். வெளிநாட்டுக்குச் சென்று பொருள் தேடப் புறப்படும் பயணம் என்பது பல நாள் முன்னதாக, பல வாரம் முன்னதாக எண்ணி ஏற்பாடு செய்து புறப்படுவது. வேறிடத்தில் தலைவன் ஒருவன் நெஞ்சிற்குக் கூறியதாக உள்ள கருத்து இங்கு உணரத் தக்கது: "நண்பரின் வறுமையையும் சுற்றத்தாரின் துன்பத்தையும் ஒருபக்கம் கண்டு, பகைவரின் மேம் பாட்டையும் ஒருபக்கம் பார்த்துக்கொண்டே, ஊரில் அமை தியாக வாழ யாரால் முடியும்? மனைவியை விட்டுப் பிரிய

முடியாதவர்களால், கடமை உணர்ச்சி இல்லாதவர்களால் தான், அது முடியும். என்றல் முடியாது, முடியாது என்று நள்ளிரவும் பகலும் இதையே திரும்பத் திரும்ப நினைந்து வருந்தினேன். என் உள்ளத்தில் இது ஒரு தீயாய் வளர்ந்தது; என் வலிமையைச் சுட்டு எரித்தது; கடமை பற்றிய முயற்சியே இதைத் தணித்தது; இந்த நெருப்பிற்கு மழையாய் அமைந்தது. அதனுல் பாலைவழியில் வருந்திக் கடந்து இங்கு வந்து சேரலானேன்" என்றான்:

நட்டோர் இன்மையும் கேளிர் துன்பமும்
ஒட்டாது உறையுநர் பெருக்கமும் காணூஉ
ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்ல
பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய
மென்முலை முற்றம் கடவா தோர்என
நள்ளென் கங்குலும் பகலும் இயைந்து இயைந்து
உள்ளம் பொத்திய உரம்சுடு கூர்எரி
ஆள்வினை மாரியின் அவியா நாளும்
கடறுஉழந்து இவணம் ஆக. (அக. 279)

ஆகையால் பொருள்வயிற் பிரிவு என்று கூறப்படும் இது திடீரென்று எண்ணிப் புறப்படும் பயணம் அன்று; பலநாள் இரவும் பகலும் எண்ணிச் செய்யும் முடிபாகும். பலநாள் எண்ணித் தொடங்கும் பயணம் ஆகையால், புறப்படும்போது சுற்றத்தார் பலரும் கூடிவந்து வழி விடுவதும் வழக்கமாக இருந்தது:

வேற்றுநாட்டு உறையுள் விருப்புறப் பேணிப்
பெறலருங் கேளிர் பின்வந்து விடுப்பப்
பொருளகப் படுத்த புகல்மலி நெஞ்சமொடு. (அக. 351)

ஆகவே, முன்னேற்பாடு உள்ள ஒரு முயற்சியை, தலைவியின் பெருங்கவலைக்குக் காரணமான ஒன்றை

அவளுக்குக் கூருமல் மறைத்து ஒழுகியது பெருந்தவறே ஆகும்.

இரண்டாவதாக :

தலைவி பயணத்தைத் தடுப்பாள், ஆதலின் அவளுக்கு இறுதிநேரம் வரையில் சொல்லாமலே இருக்கவேண்டும் என்று எண்ணி, அவ்வாறே சொல்லாம லிருக்கக்கூடிய அவ்வளவு கல்மனம் உடையவனுக இருந்தால், புறப்படும் போது அவள்கண்ணில் கலங்கிய கண்ணீரையும் மலர் வாடுமாறு விட்ட பெருமூச்சையும் கண்டு மனம் நெகிழ்ந்து பயணத்தைக் கைவிட்டிருக்க வேண்டியதில்லை. அல்லது துணைவியின் கண்ணீரையும் துயரப் பெருமூச்சையும் கண்டு பயணத்தை நிறுத்தும் அளவிற்கு நெகிழ்ந்த உள்ளம் உடையவனுக இருந்திருந்தால், பயண ஏற்பாட்டை அறிவிக்காமலே கல்நெஞ்சோடு பலநாள் கழித்திருக்க முடியாது.

தலைவன், தலைவியின் மனத்தை மெல்லமெல்ல மாற்றுவதற்காக, பிரிவைத் தாங்குமாறு வன்மையூட்ட முயன்றதாக வேறு பாட்டில் கூறப்பட் டுள்ளது. அங்குத் தலைவன் அடிப்படைக் காரணத்தை எடுத்துச்சொல்லி மாற்ற முயன்றுன். " அறம் குன்றுத நல்ல வாழ்க்கையும், மற்றவனுடைய வீட்டு வாயிலை அணுகாத செல்வமும் இரண்டும் பொருளால்தான் ஆகும் " என்று தலைவியின் கூந்தலைத் தடவினுன் :

அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும் புனையிழை என்றுநம்
இருளேர் ஐம்பால் நீவி யோரே. (அக. 155)

அறநெறியைக் கைவிடாமல் ஒழுகுவதும், அன்பிற் சிறந்த சுற்றத்தார் உற்ற துன்பத்தைப் போற்றித்

தாங்குவதும், முயற்சி இல்லாமல் நாளைக் கழிப்பவர்க்கு முடியாதன ; ஆகையால் கடமையைச் செய்ய விரும்பி முனையவேண்டும் என்ற எண்ணத்தோடு தலைவன் தலைவியை அணுகி, "இந்த முயற்சி உனக்குத் துயர் விளைக்கும் ; உண்மைதான் ; நீ துயருற்று வருந்துவதைச் சிலகாலம் எப்படியாது பொறுத்துக் கொள்ள வேண்டும்" என்று அவளுடைய கையைப் பற்றிக்கொண்டு சொன்னான் ; சொல்லிக்கொண்டே கைவளையலைத் திருத்தினான். இவ்வாறு மற்றொரு புலவர் பாடியுள்ளார் :

> அறந்தலைப் பிரியாது ஒழுகலும் சிறந்த
> கேளிர் கேடுபல ஊன்றலும் நாளும்
> வருந்தா உள்ளமொடு இருந்தோர்க்கு இல்எனச்
> செய்வினை புரிந்த நெஞ்சினர், "நறுநுதல்
> மையீர் ஓதி! அரும்படர் உழத்தல்
> சின்னாள் தாங்கல் வேண்டும்" என்றுநின்
> நன்மாண் எல்வளை திருத்தினராயின். (அக. 173)

இவ்வாறு தேற்றிச் செல்வதே இலக்கிய மரபாகவும் வாழ்க்கை அனுபவத்திற்கு இயைந்ததாகவும் இருத்தலால், தலைவியின் உள்ளத்தைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப் படாமல் தலைவன் பிரியத் துணிந்தான் என்று கொள்வது தவறாகிறது.

மேற்கண்ட பொருள் உண்மையாயின், தலைவன் பயணத்திற்கு ஏற்பாடு செய்யும் நாட்களில் கல்நெஞ்சம் உடையவனாக இருந்தான் என்றும், பிரியும் நேரத்தில்மட்டும் தலைவியின் கண்ணீரையும் வெய்துயிர்ப்பையும் எதிர்பாரா வகையில் கண்டு மனம் கசிந்து பயணத்தைக் கைவிட்டான் என்றும் கருதவேண்டியுள்ளது. இத்தகைய முரண்பட்ட பண்புகள் தலைமக்களிடம் காணப்படாதவை.

அகப்பொருள் பற்றிய மற்றப் பாட்டுக்கள் தலைவனைக் கல்நெஞ்சம் உடையவனாகக் காட்டவில்லை. பயணத்திற்கு ஏற்பாடு செய்தபோதும், ஏற்பாடு முடித்துப் பிரிந்து சென்ற பிறகும், வெளிநாட்டில் தங்கிப் பொருள் தேடிய போதும், பொருள் தேடித் திரும்பி வந்தபோதும் தலைவன் ஈரநெஞ்சம் உடையவனாய் உருகும் இயல்பினனாகவே இருந்தான் என்பது அறியப்படும்.

"நெஞ்சமே! நீ மேற்கொண்ட பொருள் முயற்சிக்குத் துணையாகத் தலைவியும் வருவாளோ? அவளைத் தனியே பிரித்துவிட்டு என்னைமட்டும் அழைத்துச் செல்வாயோ? சொல்" என்று தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறி வருந்தியது காண்கிறோம் :

ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி ; அவ்வினைக்கு
அம்மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ? உரைத்திசின் நெஞ்சே. (குறு. 63)

இதனால் பயணத்திற்கு ஏற்பாடு செய்தபோதும் தலைவன் கல்நெஞ்சம் உடையவனாக இருந்ததில்லை என்று அறிகிறோம்.

பாலைவழியின் கடுமையை நினைந்து தலைவன் கலங்கியதாகவோ, தயங்கியதாகவோ எந்தப் பாட்டிலும் கூறப்படவில்லை. அவ்வாறு கூறின், அது தலைவனுடைய ஆண்மைக்கு இழுக்கு ஆகும் என்றே புலவர் கருதித் தவிர்த்தனர். ஆயின், பாலையின் கடுமைக்கு அஞ்சாத தலைவன், தலைவியைப் பிரிவதற்கு அஞ்சிக் கலங்கியிருக்கிறான் ; தயங்கியிருக்கிறான். இவ்வாறு கூறும் பாட்டுக்கள் பற்பல உள்ளன.

" காட்டுநெறியில் கவர்த்த வழிகளை நம்பிக் கொள்ளை அடித்து வாழ்வதைத் தவிர, மழைவளத்தை எதிர்பார்த்து

வாழாத ஆறலை கள்வர்கள் அங்கே இருக்கிறார்களாம். இருந்தால் என்ன? உயர்ந்தோங்கிய யா மரத்தின் அரிய கவடுகளுக்கிடையே உயர்ந்த கிளையில் உள்ள தன் குஞ்சுகளுக்காகக் கழுகு உணவு தேடி எடுத்துச்செல்லுமாம். போரில் மாண்டோரின் கண்தசையை எடுத்துச்சென்று குஞ்சுகளுக்கு ஊட்டும்போது, தசை வழுக்கி வாய்தவறிக் கீழே விழுமாம். மிகுபசியால் வாடி வருந்தும் கிழநரி அதை உணவாகக் கொண்டு மகிழுமாம். அத்தகைய கொடிய பாலை வழியும் நமக்கு எளிய வழிதான். ஆனால், துணைவியைப் பிரிந்து செல்வதுதான் அரிதாக இருக்கிறது" என்று வருந்தினான் தலைவன் :

கானுயர் மருங்கின் கவலை அல்லது
வானம் வேண்டா வில்லேர் உழவர்
பெருநாள் வேட்டம் கிளைஎழ வாய்த்த
பொருகளத்து ஒழிந்த குருதிச் செவ்வாய்ப்
பொறித்த போலும் வாலிற எருத்தின்
அணிந்த போலும் செஞ்செவி எருவை
குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாஅத்து
அருங்கவட்டு உயர்சினைப் பிள்ளை ஊட்ட
விரைந்துவாய் வழுக்கிய கொழுங்கண் ஊன்தடி
கொல்பசி முதுநரி வல்சி ஆகும்
சுரன்நமக்கு எளிய மன்னே; நன்மனைப்
பன்மாண் தங்கிய சாயல் இன்மொழி
முருந்தேர் முறுவல் இளையோள்
பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே. (அக. 193)

"நெஞ்சே! வீட்டிலிருந்து துணைவியோடு இன்பமாய் வாழ்வதைவிடச் சிறந்தது ஒன்று இல்லை என்று உனக்குப் பன்முறையும் சொன்னேன். அன்பால் மொழிந்த என் சொல்லை நீ ஏற்றுக்கொள்ளவில்லை. பொருள் ஈட்ட

வேண்டும் என்று பொருளையே விரும்பும் மருள் அடைந்து விட்டாய். மருளிநெஞ்சே!" என்று தலைவன் தன் முயற்சியை எண்ணி எண்ணித் தன்னைத் தானே நொந்து கொண்டான் :

இன்புறு நுகர்ச்சியின் சிறந்ததொன்று இல்என
அன்பால் மொழிந்த என்மொழி கொள்ளாய்
பொருள்புரி வுண்ட மருளி நெஞ்சே. (அக. 361)

"நெஞ்சே! இன்பமும் துன்பமும் கூடி வாழ்தலும் பிரிந்து வருந்தலும் பகலும் இரவும்போல மாறி மாறி வரும்; வேறு வேறு தன்மையாய் இவை மாறி வருதல் உண்டு என உணர்ந்தால், நீ பொருளாசை காரணமாகக் கொடிய பாலை வழியில் செல்வதும் தகுமோ?" என்று உலகியல்பு ஆராய்ந்து காண்பவர்போல் நெஞ்சொடு கூறினன்.

இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
நன்பகல் அமையமும் இரவும் போல
வேறுவேறு இயல ஆகி மாறெதிர்ந்து
உளஎன உணர்ந்தனை ஆயின் ஒரூஉம்
இன்னா வெஞ்சுரம் நன்னசை துரப்பத்
துன்னலும் தகுமோ துணிவில் நெஞ்சே! (அக. 327)

"நெஞ்சே! நீ இப்போது மரநிழலும் இல்லாத பாலை வழியைக் கடந்துசென்று பொருள்தேடத் துணிந்துவிட்டாய். ஆனால், பாலைவழியைக் கடந்து சென்றவுடனே, துணைவியை நினைந்து, அவளுடைய நல்ல பண்புகளை நினைந்து நீ வருந்துவாய் அல்லயோ? வீட்டின் பந்தரை நாடி வருந்திவருபவர்க்கு உதவுவாளே, நம்மோடு இனிய மொழிகளைப்பேசி மகிழ்விப்பாளே என்றெல்லாம் அவளுடைய பண்புகளை நினைந்து நினைந்து பிறகு வருந்துவாய்" என்று உருகினன் :

மரநிழல் அற்ற இயவின் சுரன்இறந்து
உள்ளுவை அல்லையோ மற்றே உள்ளிய
விருந்துஒழிவு அறியாப் பெருந்தண் பந்தர்
வருந்தி வருநர் ஓம்பித்...
நம்மொடு நன்மொழி நவிலும்
பொம்மல் ஓதிப் புனையிழை குணனே. (அக. 353)

ஊரைவிட்டுப் புறப்பட்டபின், இடைவழியில் தலைவன் நின்று நின்று வருந்தி எண்ணும் எண்ணங்களாலும் அவனுடைய ஈரநெஞ்சம் புலப்படும். "முயற்சி மேற்கொண்ட ஆண்மை ஈர்க்க, காமம் தடுக்க, இருதலைக் கொள்ளியின் இடையே நின்று வருந்தும் எறும்புபோல் ஆனேம். உடலுக்கு உயிர் இயைந்தாற் போன்ற நட்பு உடையவள், அந்த உயிர் வாழ்தலைப் போன்ற காதல் உடையவள், சாதலைப் போன்ற பிரிவு அரிய நம் காதலி வருந்துவாள் அல்லளோ?" என்று எண்ணிக் கசிந்தான் :

ஆள்வினைக்கு எழுந்த அசைவில் உள்ளத்து
ஆண்மை வாங்கக் காமம் தட்பக்
கவைபடு நெஞ்சம் கட்கண் அகைய
இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றனம் ;
நோங்கொல் அளியள் தானே யாக்கைக்கு
உயிர்இயைந் தன்ன நட்பின் அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவரி யோளே. (அக. 339)

இடைவழியில் நின்று திரும்பிப் போய்த் துணைவியின் துயரைத் தீர்க்கவேண்டும் என்று நெஞ்சம் தூண்டியதும் உண்டு. அப்போது தலைவன், பொருள்தேடும் முயற்சியை மேற்கொண்ட அறிவிற்கும், துணைவியை நினைந்துருகும் நெஞ்சிற்கும் இடையே சிக்குண்டு வருந்துவதாகக்

கூறினான்: "என் உள்ளத்தை அன்பால் பிணித்த துணைவியிடம் திரும்பிச் செல்லவேண்டும், அவள் உற்ற துன்பத்தைத் தீர்க்கவேண்டும் என்று நெஞ்சு போராடுகிறது. எடுத்த கடமையை முடிக்காமல் அதற்கு இடையூறு செய்து கெடுத்தல் அறியாமைமட்டும் அன்று, இழிவையும் தருவது என்று அறிவு உறுதியோடு முன்வந்து, 'சிறிதும் விரைதல் வேண்டா; எண்ணிச் செய்க' என்று கூறுகிறது. இவற்றிற்கு இடையே யான் என்ன செய்வேன்? முன்னமே வருந்தி இளைத்த என் உடம்பு இப்போது இந்தப் போராட்டத்தில் சிக்குண்டு அழியுமோ? தேய்ந்த புரிகளை உடைய பழைய கயிறு ஒன்று ஆண்யானைகள் இரண்டு இருபக்கமும் பற்றி இழுக்க எளிதில் அறுபட்டு அழிவதுபோல் ஆகுமோ!" என்று வருந்திக் கூறினான்:

உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்கம் செல்வாம் என்னும்;
செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யா மையோடு இளிவுதலைத் தரும்என
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல் என்னும்; ஆயிடை
ஒளிறேந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்என் வருந்திய உடம்பே. (நற். 284)

தலைவன் கல்நெஞ்சம் உடையவனாய் இருந்தால் இத்தகைய போராட்டத்திற்கே இடம் இல்லை. வந்த வழியே திரும்பிச் செல்லவேண்டும் என்ற எண்ணமே பிறந்திருக்காது; தயங்கி வருந்தவேண்டிய நிலைமையும் நேர்ந்திருக்காது.

திரும்பத் திரும்ப நெஞ்சம் துணைவியையே நினைந்து நினைந்து வருந்தும்போது, அவன் நெஞ்சிற்குக் கூறுவதாக அமைந்துள்ள மற்றொரு பாட்டும் இதனைத் தெளிவாக்கு.

கிறது. "நெஞ்சே! புறப்பட்ட அன்றே நீ வீட்டிலேயே நின்றிடவும் இல்லை. புறப்பட்டு வந்தபிறகு மிக மிக வருந்துகிறாய். வந்துவிட்டபின், என்ன செய்வது? என்னோடு சேர்ந்து இந்த வறண்ட மலைகளைக் கடந்து வரவும் உன்னால் முடியவில்லை. தயங்கிப் பின் நிற்கிறாய்; என்னைத் தனியே விட்டுவிட்டுத் துணைவியிடம் திரும்பிச் செல்ல எண்ணுகிறாய். நிற்காமல் செல்க. உன் எண்ணம் கைகூடுவதாக. ஆனால் ஒரு வேண்டுகோள்: காதலியிடம் சென்று சேர்ந்தபின், விரைவில் என்னை மறக்கக்கூடும்; அவ்வாறு மறந்துவிடாதே. அவள் அங்கே பிரிவாற்றாமையால் வருந்தி வருந்தி மெலிந்திருப்பாள். இருந்த சில வளையலும் கையிலிருந்து கழன்றுபோகுமளவு வாடியிருப்பாள். முன்கை அவ்வளவு மெலிந்துவிட் டிருக்கும். அணிகலன்களையும் துறந்து, அழகு செய்துகொள்வதையும் மறந்து, பூ உதிர்ந்த கொடி போல் புல்லென்று இருப்பாள். மாலைவேளையில் தனித்து உட்கார்ந்துஏங்கிக்கொண் டிருப்பாள். சிறிய அகல்விளக்கின் சுடர்தான் அவளுக்குத் துணையாக இருக்கும். எங்கும் நடமாடாமல் அந்தச் சுடரே துணையாக உட்கார்ந்திருப்பாள்:"

அன்று அவண் ஒழிந்தன்றும் இலையே; வந்துநனி
வருந்தினை வாழிஎன் நெஞ்சே!...குன்றம்
எம்மொடு இறத்தலும் செல்லாய் பின்நின்று
ஒழியச் சூழ்ந்தனை ஆயின், தவிராது
செல்இனி; சிறக்கநின் உள்ளம்; வல்லே
மறவல் ஓம்புமதி எம்மே...
சில்வளை சொரிந்த மெல்இறை முன்கை
பூவீ கொடியின் புல்லெனப் போகி
அடர்செய் ஆய்அகல் சுடர்துணை யாக
இயங்காது வதிந்தநம் காதலி
உயங்குசாய் சிறுபுறம் முயங்கிய பின்னே. (அக. 19)

பொருள் தேடும் முயற்சி நிறைவேறியவுடனே, தலைவன் துணைவியின் துயரநிலையையே கசிந்த உள்ளத்தோடு நினைத்தான். "நாள்தோறும் ஆழி இழைத்து வருந்துவாள்; நாள்தோறும் பிரிந்திருக்கும் நாளை எண்ணி எழுதிய சுவரைப் பார்த்துப் பார்த்து அழுவாள்; படுக்கையில் கிடந்தவாறே அவள் அழும்போது, அந்தக் கண்களிலிருந்து குறுக்கிட்டு விழும் கண்ணீர்த்துளிகள் காதின் குழைகளில் தெறிக்கும்; மோவாயை முன்கைமேல் ஊன்றியவாறே அணைமேல் கிடந்து தோள்மெலிந்து வருந்தும் அவளுடைய துன்பத்தைக் களையும் மருந்து என்ன உள்ளது? ஒருகால், அவள் நினைக்கும்போதெல்லாம் பக்கத்தே பல்லி சொல்லும். அந்தப் பல்லியின் சொல்லே அவளுடைய துயரத்திற்கு மருந்துபோல் ஆகும். அதைக் கேட்கும்போதெல்லாம், நல்ல சகுனம் என்று தொழுதுகொண்டிருப்பாள். ஆனால் அந்தப் பல்லி அவளுடைய செவியில், மேற்கொண்ட பொருள்தேடும் முயற்சியை நான் நிறைவேற்றிய நற்செய்தியைச் சொல்லுமா?" என்று ஏங்கினான்:

பொருள்அகப் படுத்த புகல்மலி நெஞ்சமொடு
குறைவினை முடித்த நிறைவின் இயக்கம்
அறிவுறூஉங் கொல்லோ தானே...
செய்குறி ஆழி வைகல்தோறு எண்ணி
எழுதசுவர் நினைந்த அழுதுவார் மழைக்கண்
விலங்குவீழ் அரிப்பனி பொலங்குழைத் தெறிப்பத்
திருந்திழை முன்கை அணலசைத்து ஊன்றி
இருந்தணை மீது பொருந்துழிக் கிடக்கை
வருந்துதோள் பூசல் களையும் மருந்தென
உள்ளுதொறு படூஉம் பல்லி
புள்ளுத்தொழு துறைவி செவிமுத லானே. (அக. 351)

இதனால் தலைவனுடைய நெஞ்சின் அன்பு வெளிகாட்டிற்குச் சென்று பொருள் தேடி முடித்தபின்

னும் தலைவியை நினைந்து உருகியது என்பது விளங்கு கிறது.

பொருள் தேடி முடித்துத் திரும்பி வீட்டுக்கு வந்து சேர்ந்தபின், தலைவி அவனை நோக்கி, "வெளிநாட்டுக் குச் சென்று இவ்வளவு காலம் தங்கியிருந்தீரே! இவ்வளவு காலமும் என்னை மறந்திருக்க உம்மால் முடிந்ததே" என்றாள். ஒருநாளும் ஒருவேளையும் அவ்வாறு மறந் தறியாத தலைவன் அதைக் கேட்டதும், "பொருளில்லாக் காரணத்தால் எளியவர்க்கு உதவ முடியாத வாழ்க்கையைப் பிறர் எள்ளுவரே, எடுத்த முயற்சியில் முனைந்து செய்யாது தயங்கிப் பின்வாங்கினால் பிறர் பழிப்பரே என்று அந்த நிலையைப் பொறுக்க முடியாமல் சென்றேன்; பொருள் தேடிக் கொணரச்சென்றேன். நாணம் என்னைக் கட்டுப் படுத்தியது. அதனால் வெளிநாட்டில் தங்கியிருக்க நேர்ந்தது. மேற்கொண்டது உயர்ந்த கடமைதான். ஆனால் உண்மை யைச் சொல்கிறேன். கடமையைச் செய்வதற்காக உடம்பு தான் அங்கே இருந்தது. என் பேதை நெஞ்சம்மட்டும் உன்னையே எந்நேரமும் நினைந்து உன்னிடமே இருந்தது" என்றான்:

> எள்ளல் நோனாப் பொருள்தரல் விருப்பொடு
> நாணுத் தலையாக வைகி மாண்வினைக்கு
> உடம்புஆண்டு ஒழிந்தமை அல்லதை
> மடம்கெழு நெஞ்சம் நின்னுழை யதுவே. (அக. 29)

தோழி அதைப்பற்றிக் கேட்டபோதும், "எண்ணி னாயோ என்று கேட்கிறாயே! எண்ணமா அது? ஓயாமல் எண்ணினேன்; திரும்பத் திரும்ப நினைத்தேன்; நினைத்து நினைத்து மருண்டேன். என்ன உலகம் இது; என் ஆருயிர்த் துணைவியைப் பிரிந்து, உற்றாரைப் பிரிந்து, ஊரைப் பிரிந்து, அருமைத் தமிழகத்தையும் பிரிந்து தொலைநாட்டில் பொருள்

தேட வந்துவிட்டேனே என்று உலகத்தின் தன்மையை மருண்டு எண்ணினேன்" என்றான் :

> உள்ளினென் அல்லெனோ யானே ; உள்ளி
> நினைத்தனென் அல்லெனோ பெரிதே ; நினைத்து
> மருண்டனென் அல்லெனோ உலகத்துப் பண்பே. (நற். 99)

இவ்வாறு தயங்கித் தயங்கிப் பிரிந்து, பிரிந்த பின்னும் நினைந்து நினைந்து வருந்திய தலைவனுடைய நெஞ்சம் உயர்ந்த நெஞ்சமே ஆகும் ; அதுவே அவனுக்கு மக்கட் பண்பு உள்ளது என்று காட்டும் சான்றும் ஆகும். ஆகவே, புறப்படும்நேரம் வரையில் வாழ்க்கைத்துணைவிக்குக் கூறாமல் மறைத்துச் சில வாரங்களைக் கழித்திருக்க முடியாது. அவ்வாறு கற்பனை செய்வது வாழ்க்கையில் இல்லாதது மட்டும் அன்றி, வாழ்க்கையோடு இயையாததும் ஆகும்.

மூன்றாவதாக :

உள்ளத்தில் உள்ளதை மறைப்பதற்கு அறிவுவளர்ச்சி வேண்டும். குழந்தைகளின் உள்ளம் உடனுக்குடன் முகத்தில் புலனாகும். அறிவு வளர வளர, குழந்தைகள் தம் உள்ளத்து உணர்ச்சியை ஓரளவு மறைக்கக் கற்கின்றன ; வெளியார்முன்னும் புதியவர்முன்னும் உள்ளத்தை மறைத்து நடப்பதற்கு அறிவுவளர்ச்சி பெரிதும் வேண்டும். பரந்த உலகம் அறியாமல் சிற்றூரில் கல்வி கேள்வி சிறிதும் இன்றி வாழும் ஏழைமக்களும் ஏறக்குறையக்குழந்தைகளைப் போன்றவர்களே ; அவர்களின் உள்ளமெல்லாம் முகத்தில் தேங்கிநிற்கும். அவர்களே நகரங்களில் வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டு, தொழிற்சாலையில் சேர்ந்து உழைத்துப் பலரோடும் கலந்து பழகும் வாய்ப்புப் பெற்றபின் உள்ளத்து உணர்ச்சியை மறைத்து நடக்கவும கற்கின்றனர். வீடே உலகமாய்,சமையலறையே பள்ளிக்கூடமாய்,கல்வி கேள்வி

ஒன்றும் இன்றி வாழும் குடும்பப்பெண்டிரும் கிராமங்களில் ஒதுங்கி ஒடுங்கி நிற்கும் ஏழைமக்களைப் போன்றவர்களே. அந்தப் பெண்டிரின் விருப்பு வெறுப்புக்களும் உடனுக்குடன் முகத்தில் தேங்கிவிடும். அவர்களும் கல்வி கேள்வி பழக்கங்களால் உயரும்போது விருந்தினர்முன்னும் அயலார் முன்னும் உள்ளத்து உணர்ச்சியை ஒழுங்குபெறக் காத்து ஒருநிலையாய் மலர்ந்த முகத்தோடு வாழக் கற்கின்றனர். கணவனும் மனைவியும் பிணங்கி வாழும் நாட்களில் விருந்தினர் வரின், இருவரும் முகமலர்ந்து விருந்தோம்பத் தலைப்பட்டு, பிணக்குத் தீர்ந்து இணங்குதலும் அதனாலேயே. இந்த உண்மை உணர்ந்தே, அகப்பொருள் நூல்களில் தலைவன் தலைவிக்கு இடையே ஊடல் தீர்க்கும் வாயில்களை அமைக்கும் புலனெறிவழக்கத்தில், விருந்தும் ஒரு வாயிலாகக் கொள்ளப்பட் டிருக்கிறது.

ஆயின், அறிவு எவ்வளவு வளர்ச்சி பெறினும், பரந்த உலகத்துப் பழக்கம் எவ்வளவு மிகினும், உள்ளத்தை மறைக்க முடியாத இடம் என்றும் இருந்தே தீரும். குழந்தைகள் வளர்ந்தபின் அயலார்முன் உள்ளத்தை மறைத்து அடக்கக் கற்கலாம்; ஆயின் பெற்றோர்முன் அந்த முயற்சி வெற்றி பெறாது. காரணம், அயலாரிடம் பழகும் குழந்தைகள் அறிவுகொண்டு பழகுகின்றன; பெற்றோரிடம் பழகும்போது அறிவு அடங்கிநிற்க உணர்ச்சி மேம்படுகிறது; உள்ளமே முன்வந்து நிற்கிறது. மற்றவர்களின் வாழ்க்கையிலும் இவ்வாறு அன்பால் நெருங்கிப் பழகுவோரிடத்தில் உள்ளத்து உணர்ச்சியை மறைத்தல் இயலாது. கணவன் மனைவியாக வாழ்வோர் அறிவாற்றல்மிக்கவராக இருப்பினும், அரசியலாளர்போல் பரந்த உலகத்துப் பழக்கம் உடையவராயினும், பிறரிடம் உள்ளொன்று புறமொன்றாக நடிப்பதில் எவ்வளவு தேர்ந்தவராயினும், உண்மைக் காதலராயின்

தமக்குள் அவ்வாறு உள்ளும் புறமும் வேறுபட்டு நடக்க முடியாது. காரணம், காதலர் வாழும் குடும்ப வாழ்க்கையில் மூளைக்குத் தலைமை இல்லை; இதயத்திற்கே முதலிடம் உண்டு; அன்பான கணவனும் மனைவியும் வாழும் எல்லையில் உள்ளத்துணர்வு முன்செல்ல, அறிவு பின்நிற்கிறது.

ஆகவே, பாட்டில் காணும் தலைவன், தலைவியிடம் தன் உள்ளத்தை மறைத்துப் பயண ஏற்பாட்டைச் செய்திருக்க முடியாது. மறைக்க முயன்றிருப்பினும், அவன் நெஞ்சத்தை முகம் காட்டியிருக்கும். உவப்பினும் காயினும் முந்துறுவதாகிய அந்த முகத்தைக் கண்டு பழகிய தலைவியும் அதை உணராமல் இருந்திருக்க முடியாது. ஒத்த அன்புடையவராய் உயர்ந்த காதலராய் வாழும் அவர்களின் வாழ்க்கையில் ஒளிப்புக்கும் மறைப்புக்கும இடம் இருக்க முடியாது. ஆகவே தலைவன் பயண ஏற்பாட்டை மறைத்து ஒழுகினன் என்பதும பொருந்தாது; முந்தியநாள் வரையில் தலைவி அதை உணராம லிருந்தாள் என்பது அதைவிடப் பொருந்தாது. "நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே தலைவி இவ்வாறு பயணத்தை விரும்பாத குறிப்புடன் வருகிறாளே" (குறிப்புரை அடி - 6) என்று தலைவன் எண்ணுவதும் பொருந்தாது.

இதற்கு இலக்கியச் சான்றும் காணலாம்.

பொருள் தேடவேண்டும் என்று தலைவன் தொடங்கிய முயற்சி, பலநாள் இரவும் பகலுமாக எண்ணி எண்ணித் தொடங்கியதே ஆகும். பிரிவாற்றாமையால் துணைவி வருந்தி மெலியுமாறு விட்டுவிட்டு வெளிநாட்டுக்குச் செல்வது எவ்வாறு என்ற எண்ணமும் ஏக்கமும் பெரு நெருப்புப் போல் வளர்ந்தன. நள்ளிரவும் பகலுமாகப் பல நாளாக இந்த நெருப்பு அவனுடைய உள்ளத்தில் பற்றி உரமெல்லாம் அழித்தது:

நன்னென் கங்குலும் பகலும் இயைந்துஇயைந்து
உள்ளம் பொத்திய உரம்சுடு கூர்எரி. (அக. 279)

இவ்வாறு தலைவனுடைய உள்ளம் வேக, உரம் அழிய, வளர்ந்த தீ தலைவிக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியுமோ? நள்ளிரவில் உறக்கம் இன்றி அவன் விட்ட நெட்டுயிர்ப்பை அவள் அறியாமல் இருந்திருக்கமுடியுமோ? பகலெல்லாம் வாடித் தோன்றிய அவனுடைய முகமும் மெலிந்து சோர்ந்த உடலும் அவளுக்கு உண்மையை உணர்த்தாமல் இருந்திருக்க முடியுமோ?

இவற்றை எல்லாம் மறைக்க முயன்றாலும், மறைக்க முடியாதவாறு உண்மையை வெளிப்படுத்த வல்ல கனவில் வாய்வெருவுதலை அவன் எவ்வாறு மறைக்கமுடியும்? அவன் பிரிவைப் பற்றித் தெரிவிக்காமல் சிலநாள் கழித்தான். அதுபற்றிய கவலையால், தலைவியிடம் முன்னிலும் மிகுதி யாக அன்பு காட்டிப் பாராட்டத் தொடங்கினான். நாள் தோறும் இவ்வாறு பாராட்டுவதைப் பற்றித் தலைவிக்கு ஐயம் ஏற்பட்டது. என்ன காரணமோ என்று ஐயுற்று அவள் உண்மையை ஆராய்ந்தறிய முயன்றாள். தலைவன் உறங்கிக் கனாக் கண்டு வாய் பிதற்றியபோது அந்த உண்மை விளங்கியது. "பாலைவழியில் சென்று நான் பொருள் தேடித் திரும்பும் வரையில் அவ்வளவு காலமும் காதலி பிரிந்திருப்பாளோ? துன்பத்தால் சோர்ந்து வருந்தாமல் வீட்டிலிருந்து கடமைகளைச் செய்து ஆற்றியிருக்கஅவளால் முடியுமோ?" என்று அவன் அன்று கனவில் வாய் பிதற்றியதைக் கேட்டுத் தலைவி உணர்ந்தாளாம்:

புதுவது பன்னாளும் பாராட்ட யானும்
இதுஒன்று உடைத்தென எண்ணி அதுதேர,
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுள்
பாயல்கொண்டு என்தோள் கனவுவார் "ஆய்கோல்

'தொடிநிரை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
இடுமருப்பு யானை இலங்குதேர்க்கு ஓடும்
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருள் முற்றும் அளவு " என்றார்... (கலி. 24)

ஆகவே, தலைவன் தன் முயற்சியை அன்புடைத் துணைவி அறியாதவாறு மறைத்திருக்கமுடியாது என்பதும், அவ்வாறு மறைக்க முடிந்திருப்பின் அவர்களின் வாழ்க்கை அன்பற்ற போலி வாழ்க்கையே என்பதும், அத்தகைய இழிந்த வாழ்க்கை அன்பின்ஐந்திணைப் பாட்டுக்களில் இடம் பெறாது என்பதும் தெளிவாகின்றன.

நான்காவதாக :

பாட்டுக்குக் கூறப்படும் பொருளின்படி, தலைவனை விடத் தலைவி நுண்ணறிவு உடையவளாகத் தோன்றுகிறாள். " நாம் கருதியதை இவள் எப்படி உணர்ந்தாள் ?" என்று தலைவன் தெரியாமல் நினைக்கிறான். தலைவியோ பயண ஏற்பாட்டையும் விடைபெற விளிப்பதையும் எவ்வாறோ தெரிந்துகொண்டு பயணத்தைத் தடுக்கும் நினைவுடன் வந்து நிற்கிறாள்.

ஒன்று, பயணத்தைப் பற்றித் தலைவன் தோழிக்குத் (தலைவியோடு மிக நெருங்கிப் பழகும் ஒருத்திக்கு) அறிவித்திருக்கலாம். தோழியின் வாயிலாகத் தலைவி தெரிந்து கொண்டிருக்கலாம். தெரிந்துகொண்டிருப்பதால்தான் தலைவன் கூறுமுன்பே மாறுபட்ட முகத்தோடு வந்து நிற்கிறாள்.

அல்லது, தலைவன் வெளிநாட்டுக்குச் செல்வது வெளியே ஒருவர் இருவர்க்குத் தெரிந்து, பிறகு அது மெல்ல ஊரார்பேச்சு ஆகியிருக்கும். ஊரார்பேச்சு மெல்லத் தலைவிக்கு எட்டியிருத்தல் கூடும்.

இங்கே தோழிக்குத் தெரிந்திருந்தது என்றும், தோழியே தலைவிக்குச் சொன்னாள் என்றும் கொள்வதற்கு இடம் இல்லை. தோழிக்குத் தெரிந்திருந்தால், அவள் உடனே தலைவன்மனத்தை மாற்ற முயன்றிருக்கலாம்; அல்லது, தலைவிக்குச் சொல்லி, பொருள் தேடும் முயற்சி இன்றியமையாத கடமை என்பதை எடுத்துரைத்து அவளைத் தேற்றியிருக்கலாம். பழைய உரையின்படி, தோழி ஒருவகை முயற்சியும் செய்ததாகவே தெரியவில்லை. செய்திருந்தால் நிலைமை மாறியிருக்கும்.

தோழி அவ்வாறு தலைவிக்குக் காரணம் எடுத்துரைத்துத் தேற்றியதாகத் தொகைநூல்களில் சான்றுகள் உள்ளன. தலைவனுடைய பிரிவை அறிந்ததும், தலைவிக்கு அதைத் தெரிவித்தாள்; அவள் பிரிவை நினைத்துக் கலங்கி அழுவதைக் கண்டு அவளைத் தேற்றினாள். "அம்மா! நீ அழாதே. கடமையைச் செய்தலே ஆண்மக்களுக்கு உயிர். பெண்களுக்கோ ஆண்களே உயிர். இதை நமக்குச் சொன்னவரும் அவரே. ஆகையால், உன் உள்ளம் வருந்தும் என்று உணர்ந்து அவர் பயணத்தை நிறுத்தினும் நிறுத்துவார். நீ வருந்தி அழவேண்டா."

வினையே ஆடவர்க்கு உயிரே; வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்என
நமக்குஉரைத் தோரும் தாமே;
அழாஅல் தோழி: அழுங்குவர் செலவே (நற். 135)

என்று தலைவி விரும்பும் வகையில் சொல்லி, கடமையின் சிறப்பை எடுத்துரைத்து அவளுடைய மனத்தை மாற்ற முயன்றாள்.

இங்குத் தலைவியின் மனம் ஒரு சிறிதும் மாறாமல் 'வினைதலைப் படுதல் செல்லா நினைவு' (அடி - 7) இருப்ப

தாகக் கூறுவதாலும், எதிர்பாரா வகையில் உணர்ச்சி மிகுந்து தோன்றுவதாலும், தோழி தலையிட்டதாகச் சொல்வதற்கில்லை. ஆகவே, தோழி வாயிலாகச் செய்தி வரவில்லை எனலாம்.

அடுத்தாற்போல், செய்தி எட்டக்கூடிய வழி ஊராரின் பேச்சே ஆகும். ஊரார் வாயிலாகச் செய்தி எட்டியிருந்தால், பயணத்தை ஒத்திவைக்குமாறு சில நாட்களுக்கு முன்பே தலைவி அவனைத் தடுத்திருக்கலாம; பாலைவழியின் கொடுமையை எடுத்துக்கூறியோ வேறு காரணம் கூறியோ தடுத்திருக்கலாம். அவ்வாறு தடுக்க முயல்வது இயற்கை என்பதை இலக்கியம் எடுத்துரைக்கிறது.

"வேறு பிரிவாக இருப்பினும் கவலை இல்லை. இது பொருள் காரணமாக வெளிநாட்டிற்குச் செல்லும் பிரிவு அன்றோ? பிரிந்து வாழும்காலம் நீட்டிக்குமே" என்று இனியசொற்களால் தலைவி தடுக்க முயன்றதாக அகநானூற்றில் ஒரு பாட்டு உள்ளது :

> பொருள்வயின் செலினே
> நீட்டுவிர் அல்லிரோ நெடுந்தகை யீர்எனக்
> குழுநெடும் புலவி கூறி நம்மொடு
> நெருநலும் தீம்பல மொழிந்த, சிறுநல் லொருத்தி
>
> (அக. 239)

தலைவி தலைவனை நெகிழ்ந்த உள்ளத்தோடு வேண்டிக் கொள்வது ஒருவழி. மற்றொரு வழி உரிமையோடு போராடத் தொடங்குவது. "உன் பயணத்தைப் பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவேண்டா. செல்லாமல் இருக்கும் செய்தி உண்டு என்றால் என்னிடம் சொல்லுக. சென்றதும் விரைவில் திரும்பிவந்துவிடுவேன் என்று சொல்வதானல், அதை என்னிடம் சொல்லாதே. திரும்பி வரும்

வரையில் இங்கே துயர் பொறுத்து உயிரோடு வாழ வல்லவர் யாராவது இருப்பின், அவரிடம் சொல்லுக : ”

செல்லாமை உண்டேல் எனக்குஉரை ; மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை (குறள். 1151)

என்று பயணத்தைப் பற்றி அறிந்தபோதே தடுக்க முயன்றதும் உண்டு. இன்னும் தெளிவாக, “ நல்லது. இனி அவ்வாறே செல்க. ஆனால் ஒரு வேண்டுகோள். சென்று அந்த நாட்டில் செய்யும் கடமையில் முனைந்தபின், இங்கிருந்து அங்கு வருவாரிடம் ஒன்றும் கேட்கவேண்டா. ‘ அன்பில்லாமல் பிரிந்து வருந்துமாறு விட்டுவந்த என் துணைவியைப் பற்றி உமக்கு ஏதேனும் செய்தி தெரியுமா ?’ என்று வருவாரிடம் என்னைக் குறித்து ஒன்றும் கேட்க வேண்டா. கேட்டறிந்தால், உன் தலைமைச் சிறப்புக் கெடுமாறு, மேற்கண்ட கடமை முற்றுப்பெறாதபடி, அப்போது உனக்குப் பெருந்துயரம ஏற்படக்கூடும். அவர்கள் உனக்கு அத்தகைய அவலச் செய்தியை அறிவிக்க நேரும் :”

செல்இனி ; சென்றநீ செய்யும் வினைமுற்றி
அன்பற மாறியாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ என்று வருவாரை
என்திறம் யாதும் வினவல ; வினவின்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றாமல் ஆண்டுஓர்
அவலம் படுதலும் உண்டு (கலி. 19)

என்று, தலைவன் வெளிநாட்டிற்குப் பிரிந்தால் தான் உயிர் வாழ்தல் அரிது என்னும் நிலைமையைத் தெரிவித்துப் பயணத்தைத் தடுக்க முயன்றதாகவும் பழைய இலக்கியத்தால் அறிகிறோம்.

ஊரார்பேச்சின் வாயிலாகச் செய்தி அறிந்தோ, தோழி வாயிலாக அறிந்தோ, தலைவன் தன்னிடம் முன்னதாகவே

கூறக் கேட்டோ, தலைவி இவ்வாறு தடுக்க முயலுதல் அன்பும் உரிமையும் உள்ள வாழ்க்கைக்கு ஏற்றதே ஆகும். இத்தகைய உரிமை தலைவிக்கு வாழ்க்கையில் உண்டு என்பதைப் பாலைத்திணைப் பாட்டுக்கள் வாயிலாக அறிவதோடு அல்லாமல், மருதத் திணைப்பாட்டுக்கள் வாயிலாகவும் அறியலாம. எடுத்துக்காட்டு வருமாறு:

தலைவன் பரத்தையரிடம நட்புக் கொள்ளும்போது தலைவியை நினைந்து அஞ்சுவதாகக் கூறுவதே இலக்கிய மரபு. "செவியால் கேட்டாலும் அளவுகடந்து சினம கொள்வாளே! இதை அவள் கண்ணால் காண்பாளானால் என்ன ஆவாளோ?"

செவியின் கேட்பினும் சொல்இறந்து வெகுள்வோள்
கண்ணின் காணின் என்ஆகு வள்கொல்? (ஐங் - 84)

என்று, தலைவன் தவறி ஒழுகுவதைக் கண்டபோது அவள் சினம் கொள்வதாகக் கூறப்படுகிறது.

தலைவனும் தலைவியும் ஊடியிருக்கும்போது அவர்களின் ஊடலைத் (பிணக்கைத்) தீர்க்கத் தோழி முயல்வாள். தலைவி உரிமைகொண்டு தலைவனோடு போராடுவதால், தோழியால் எளிதில் ஊடலைத் தீர்க்கமுடிவ தில்லை. ஒருபால் தலைவனிடத்துச் சென்று கூறியும், ஒருபால் தோழியிடத்துச் சென்று வேண்டியும், இருவராலும் தனித்தனியே வெறுக்கப்பட்டும் தோழி அவர்களிடையே சிக்குண்டு வருந்துவாள். "பெரிய வேந்தர் இருவர் போர்செய்து போர்க்களத்தில் வெட்டி ஒழித்த புன்னைமரம் போல் நிற்கின்றேன் யான். இந்த இருவரின் மாறுபாடும் என்னோடு நீங்கும்போல் தெரிகிறது:"

இருபெரு வேந்தர் பொருதுகளத்து ஒழித்த
புன்னை விழுமம் போல
என்னொடு கழியும்இவ் விருவரது இகலே (நற் - 180)

என்று ஊடல் தீர்க்கும் வாயிலாக இருந்த தோழி வருந்துவ தாகக் கூறப்படுகிறது. நாட்டில் பெருவேந்தர் இருவர் வலிமை மிக்குச் செய்த போருடன் ஒப்பிட்டுக் கூறுமாறு, அவ்வளவு உரிமையுடன் தலைவி தலைவனோடு போராடுவது இயல்பு என்று இதனால் அறியலாம்.

இத்தகைய உரிமையைத் தலைவி இழந்து தலைவனைத் தடுக்க முயலாமல் வருந்தியதாகக் கூறுவது பொருந்துமா? அவள் அஞ்சித் தயங்கவேண்டிய அடிமை வாழ்வினள் அல்லள். ஆகவே பயணத்தைத் தடுக்கும் நினைவு (வினைதலைப் படுதல் செல்லா நினைவு) மட்டும் இருந்து பயன் என்ன? பிரிதல் தகாது என்று சொன்ன பழஞ்சொல்லை (அறத்தாறு அன்று என மொழிந்த தொன்றுபடு கிளவியை) நினைப்ப தால் மட்டும் பயன் என்ன? அதை முகக் குறிப்பால் புலப் படுத்துவது (முன்னம் காட்டி முகத்தின் உரைத்தல்) பய னற்ற வீண் முயற்சி ஆவதோடு, உரிமை இல்லாத அடிமை வாழ்வையே காட்டுகிறது. அதை நினைத்து ஓவியச் செய்தி போல் நிற்பதும், துயரம் தாங்க முடியாமல் கண்ணீர் விடு வதும் எதைக் காட்டுகின்றன? தடுக்க நினைப்பதும் பழஞ் சொல்லை நினைப்பதும் வீண் என்று சோர்ந்து வாடுவதையா? நினைத்தவாறு சொல்லவும் முடியவில்லையே என்று வருந் தும் வருத்தத்தையா? எவ்வாறாயினும் உரிமை இழந்த நிலையை அல்லது உரிமை குறைந்த நிலையை இவை காட்டு கின்றன அல்லவோ? உரிமை குறைந்தவர்களுக்குக் கைக்கிளை பெருந்திணைப் பாட்டுக்களே இடம் தரும்; அன்பின் ஐந் திணைப் பாட்டுக்களில் அவர்களுக்கு இடம் இல்லை அன்றோ?

ஐந்தாவதாக:

பழைய உரையின்படி பாட்டிற்குப் பொருள் கண் டால், வெளிநாட்டுப் பயணத்திற்குத் தலைவன் தயங்காமல்

முனைந்து நின்றதாகவும் தலைவியே உடன்படாமல் தடை செய்ததாகவும் உணரக் கிடக்கிறது. சங்கப்பாட்டுக்களின் சான்று இதற்கு மாருக உள்ளது. இல்வாழ்க்கையில் பிறர்க்கு உதவியாக வாழ்ந்து சிறப்புறுதல் வேண்டுமென்று தலைவன் தலைவி இருவரும் இசைந்து விரும்பியதாக, அப் பாட்டுக்கள் உணர்த்துகின்றன. வாழ்க்கைப் பொறுப்பு உணர்ந்த தலைவி அவனுடைய பொருள்முயற்சிக்கு இசைந்து நின்றுள் என்றும், சிறுபான்மையே தயங்கினுள் என்றும், துணிய மனம் இன்றித் தலைவன் தயங்கித் தயங்கி நின்றதே பெரும்பான்மை என்றும் அப்பாட்டுக்கள் அறிவிக்கின்றன. ஆகவே, இப் பாட்டிற்குக் கொள்ளும பொருள், புலனெறிவழக்கிற்கு (இலக்கிய வழக்கிற்கு) மாருக உள்ளது. பொருள் தேடும் முயற்சியில் இருவர்க்கு உடன்பாடு இருந்தும் வெளிநாட்டுப் பயணத்தை நினைந்து இருவருமே தயங்குவதாக மற்றப் பாட்டுக்கள் உணர்த்த, இப் பாட்டுமட்டும், தலைவனிடம் முழு உடன்பாடும் துணிவும் கூறித் தலைவியிடம் முழுத் தயக்கமும் தடையும் காட்டுவது பொருந்தாது.

இல்லறக் கடமைகளில் தலைவனுக்கு உரிய பங்கு தலைவிக்கும் உண்டு ; அவனைவிட மிகுதியான பொறுப்பும் உண்டு. விருந்தோம்புவது தலைவியின் கடமை என்றே கூறத்தக்கது. தலைவன் அவளுடைய சிறந்த பண்புகளை நினைந்து உருகும்போதும, "விருந்து ஓயாத வீட்டின் பெரிய குளிர்ந்த பந்தரிலே வெளியூரி விருந்து வருந்திவந்து சேரும் விருந்தினரை ஓம்பி மகிழ்கிற என் துணைவி" என்று நினைத்தல் உண்டு :

விருந்தொழி வறியாப் பெருந்தண் பந்தர்
வருந்தி வருநர் ஓம்பி...... ..
மகிழணி முறுவல்......... (அக. 353)

இந்த மரபு உணர்ந்தே இளங்கோவடிகளும் கம்பரும் தம் தம் காவியத்தில் தலைவியின் உயர்ந்த பண்புகளில் ஒன்றாக விருந்தோம்பி மகிழும் உள்ளத்தை விளங்கச் செய்திருக்கின் றனர். இளங்கோவடிகள் கண்ட காவியத் தலைவி, கணவன் பிரிவால் தான் இழந்த பேறுகளை நினைந்தபோது,

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை

என்று வருந்தினாள்.

கம்பர் தம் காவியத் தலைவி கணவனைப் பிரிந்து பகைவர்நாட்டில் சிறைப்பட்டு வருந்தியபோதும் இல்லறத் தின் சிறந்த பொறுப்பாகிய விருந்தோம்புதலை நினைந்து, தன் கணவரின் தனிமையையும் நினைந்து,

விருந்து கண்டபோது என்னுறுமோ என்றுவிம்மும்

என்று உருகியதாகப் பாடியுள்ளார்.

இவ்வாறு பிறர்க்கு உதவி வாழும் வாழ்க்கையில் பொறுப்பும் ஆர்வமும் மிகுந்தவளாகக் கூறப்படும் தலைவி, தன் கணவனுடைய நன்முயற்சிக்குக் காரணம் இன்றித் தடையாக நிற்கமாட்டாள். அவன் பொருள்முயற்சியைச் சிறப்பித்துக் கூறும் காரணங்களை எல்லாம் அவளுடைய உள்ளம் ஏற்றுக்கொள்ளும். ஆகவே காரணம் இல்லாப் பிடிவாதத்தால் அறிவிலிபோல் தலைவி தடுத்துநிற்பதாகக் கூறமுடியாது.

ஆண்கள் நல்ல செயல்களை முனைந்து செய்யும் மனம் உடையவர்கள்; ஆகையால் பொருள்தேடவேண்டும் என்று பிரிந்து செல்வார்கள் ; அது இயற்கையான பண்பாகும் :

செயல்படு மனத்தர் செய்பொருட்கு
அகல்வர் ஆடவர் அது அதன் பண்பே (நற். 24)

என்று தோழிக்கு எடுத்துக்கூறும் அளவிற்கு ஆண்களின் இயற்கைப் பண்பை உணர்ந்தவள் தலைவி. தலைவன் பிரிந்து

சென்றபிறகும், அவனுடைய நெஞ்சில் இருந்த குறிக்கோளை மறவாதவள் அவள்.

"தோழீ! அறம் தவறாத நல்வாழ்க்கையும் மற்றொருவன் வாயிலில் சென்று இரந்து கேட்காத செல்வ நிலையும் ஆகிய இரண்டு பேறுகளும் பொருளால் கை கூடும் என்று என் கூந்தலைத் தடவிச் சென்றவர், தாம் எடுத்த பொருள்முயற்சியை முடிப்பாராக; அதுவரையில் பிரிவால் நாம் வருந்தித் துன்புறுவதாக இருந்தபோதிலும், அவர் கடமையை முடித்துத் திரும்புவாராக:"

அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும் புனையிழை என்றநம்
இருளேர் ஐம்பால் நீவி யோரே
நோய்நாம் உழக்குவம் ஆயினும் தாம்தம்
செய்வினை முடிக்க தோழி! (அக. 155)

என்று தலைவி தோழிக்குக் கூறியதாக உள்ள பாட்டிலும் அவளுடைய திருந்திய எண்ணம் விளங்கி நிற்கிறது; தான் துன்புறுவதைப் பொருட்படுத்தாமல், தலைவன் மேற்கொண்ட பொருள்முயற்சி நிறைவேற வேண்டும் என்ற ஆர்வம் விளங்குகிறது.

ஆகவே, தலைவி பிரிவை எண்ணி வருந்தும் துயரத்தில் கண்மூடிப் பிடிவாதம் இருப்பதாகவும் தடுக்க முயலும் முயற்சி இருப்பதாகவும் பொருள் உணர்வது பொருந்தாது.

ஆறவதாக:

உயர்ந்த இல்வாழ்க்கை இவ்வாறு இருத்தல் வேண்டும் என்று திருவள்ளுவர் முதலான உலகச் சான்றோர் பலரும் எடுத்துரைத்துள்ளனர். கணவனுடைய வாழ்க்கைக்குத் துணையாக விளங்குதலே மனைவியின் கடமை; ஒப்புரவைக்

குறிக்கோளாகக் கொண்டு, தன்னலம் இன்றி வாழ்தலே கணவன் கடமை; குடும்பத் தலைவன் பலர்க்கும் நல்ல துணையாக விளங்கல் வேண்டும்; அவனுடைய வாழ்க்கைத் துணைவி, மனைக்குத் தக்க மாண்பு உடையவளாக வாழ வேண்டும்; தன் கணவனுடைய வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்; தன்னையும் காத்துத் தன் கணவனையும் போற்றவேண்டும். குடும்பப் பெயரைக் காத்தல் வேண்டும்; புகழ் விளங்குமாறு வாழ வேண்டும்; கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து, பழி அஞ்சி, பகுத்துண்டு, மக்களைக் காத்து, விருந்தோம்பி, அன்பையும் அறத்தையும் போற்றி வாழ வேண்டும்; இவ்வாறெல்லாம் கூறப்படும் அறிவுரைகளின் அடிப்படையில் விளங்கும் உண்மை என்ன? கணவன் மனைவி இருவர்க்கும் தன்னலம் போகவேண்டும்; பொதுநலம் பெருக வேண்டும்; மனைவி கணவனுக்காகவும் குடும்பத்திற்காகவும் தன்னலம் இழக்கவேண்டும்; கணவன் மனைவிக்காகவும் நாட்டிற்காகவும் தன்னலம் இழக்கவேண்டும்; இவ்வாறு தன்னலம் இழத்தலே இல்வாழ்க்கையின் அடிப்படையாக உள்ளது.

இந்தப் பாட்டிற்குப் பழைய உரைப்படி பொருள் கொண்டால், இல்வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோள் இல்லாமற் போகிறது. தலைவன் துணைவியின் உள்ளத்தைப் பொருட்படுத்தாதது போலவே, அவளும் அவனுடைய புகழைப் பொருட்படுத்தாதவளாகத் தோன்றுகிறாள். வாழ்க்கைத்துணைவிக்குப் பொருந்தாத தன்மை இது.

பொருள் இல்லாதவரின் இல்வாழ்க்கை இரந்துண்ணும் வாழ்க்கையைவிட இழிவானது :

இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிது (நற். 283)

என்று தலைவன் தெரிந்தான். "யாரேனும் நாடி வந்து 'ஈ' என்று இரந்து கேட்குமாறு வாழும் வாழ்க்கை துன்ப மானது; இரந்தவர்க்கு ஏதேனும் உதவி செய்து அவர் களின் முக மகிழ்ச்சியைக் கண்டால்தான் அந்தத் துன்பம் தீர்கிறது:"

இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணு மளவு (குறள். 224)

என்று அவன் எண்ணி உணர்ந்தான்; இந்தக் குறையைப் போக்கி அமைதியாக வாழவேண்டுமானுல் பொருள் வளம் வேண்டும் என்று துணிந்து பொருள் தேடும் முயற்சியில் ஈடுபட்டான். அதைச் சிறிதும் கருதாமல், பிரிந்து செல்வது அறத்தாறு அன்று என்ற பழஞ்சொல்லை நினைத்து முகக்குறிப்பால் காட்டி ஓவியம்போல் நின்று முயற்சியைத் தடுப்பாளாயின், அது தலைவிக்குப் பெரிய இழுக்கு ஆகு மன்றோ?

வாழ்க்கையில் நன்மையிலும் தீமையிலும் இன்பத்தி லும் துன்பத்திலும் எவ்வகையிலும் தலைவனுடைய கருத் திற்கு மாறுபடாமல் ஒத்துழைத்து நடப்பவள் இப்போது மட்டும் இவ்வாறு நடத்தல் தகுமோ? வாழ்க்கையில் பெரும போராட்டத்தை விளைக்கக் கூடியது வறுமை என்னும் ஒன்று. அத்தகைய கொடிய வறுமை வந்துற்ற போதும, தலைவி சிறிதும் வருந்தாமல் முகம் கோணுமல் கடமையில் சோர்வுருமல் இல்லறம் நடத்திச் செல்வதாக மற்றச் சங்கப் பாட்டுக்கள் உணர்த்த, இப்பாட்டுமட்டும் முரண்பட்டு நிற்கக் காரணம் என்ன?

வறுமையின் கொடுமையையும எதிர்த்து, தலைவி தலைவனோடு ஒத்துழைத்து அன்பான வாழ்க்கை நடத்துவ தாகக் கூறும் இலக்கியச் சான்று ஒன்று: தாய்வீட்டின்

வளமான வாழ்க்கையில் கவலை ஒன்றும் இன்றிக் கொழுமையான நல்லுணவு உண்டு வளர்ந்துவந்தாள் ஒருத்தி. காதலனை மணந்து இல்வாழ்க்கை வாழத் தொடங்கினாள். அங்குப் பொருள்வளம் படிப்படியாகச் சுருங்கி வறுமை வந்துற்றது. அறுசுவை உணவு உண்ணும் நிலைமை போய், சுவை குறைந்த உணவும் வேளைக்குக் கிடைக்காத நிலைமை வந்தது; சில வேளை பட்டினி கிடக்க வேண்டியும் நேர்ந்தது. ஆயினும் அவள் தன் கடமையைச் சோர்வுறாமல் செய்து, கணவனையும் பேணி, வறுமையை நினைந்து வாழ்க்கையை வெறுக்காமல் ஒழுகிவந்தாள். அப்போது ஒருநாள் அவளைக் காணவேண்டும் என்று தாய் வந்தாள். வந்தவள், மகள் வறுமைக்கு இடையே வாடி மெலிந்திருத்தலையும், அந்நிலையிலும் வாழ்க்கையை வெறுக்காமலிருத்தலையும், தாய்வீட்டு வளத்தை நினைந்து ஏங்காத மனநிறைவையும் கண்டு உள்ளம் உருகினாள். "என் அருமை மகள் பிறந்த வீட்டில் வாழ்ந்த வாழ்வு என்ன! இங்கு அவள் இருக்கும் நிலைமை என்ன! தேன்கலந்த பாலைப் பொற்கலத்திலே ஒரு கையிலே ஏந்தி, மற்றொரு கையில் மெல்லிய நுனி உடைய சிறிய கோலைக் காட்டிப் 'பாலைக் குடி' என்று சொல்லிக் குடிக்கச்செய்யவேண்டியிருந்தது. அதற்கும் தப்பி ஓடுவாள்; கால் சிலம்பு ஒலிக்க, முதிய செவிலித்தாயர் தொடர்ந்து ஓடிப் பிடிக்க முடியாமல் நிற்க, தெருப்பந்தல் வரையில் ஓடுவாள்; அழைத்தால் வரமாட்டாள்; சிறு பெண்ணாய் இவ்வாறு விளையாடி வளர்ந்தவள், இப்போது அறிவையும ஒழுக்கத்தையும் எங்கே கற்றுணர்ந்தாளோ, தெரியவில்லை. தன் கணவனுடைய குடும்பம் வறுமையுற்று வருந்தும் போதும், பெற்றளித்த தந்தைவீட்டு வளமான உணவை நினைத்து ஏங்கவில்லை. வெள்ளம் வறண்டபின் சிறிதாய் ஓடும் ஆற்றுநீர் போல, ஒவ்வொரு வேளை பட்டினி கிடந்து

உண்ணும் அளவிற்கு வன்மையும் பெற்றுவிட்டாளே" என்று தாய் கூறினள்:

பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்என் றோக்குபு பிழைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல் செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுஉணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்குஅறல் போலப்
பொழுதுமறுத்து உண்ணும் சிறுமதுகையளே. (நற். 110)

இவ்வாறு கணவனுடைய பொருள்வளப்பத்திற்கு ஏற்ப வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொள்ளக் கூடியவளே வாழ்க்கைத்துணைவி என்று போற்றத் தக்கவள். இத் தகைய மனைவி, இல்லறம் நடத்த இன்றியமையாத பொருள் முயற்சியில் கணவன் ஈடுபடும்போது கண்மூடிப் பிடிவாதம் செய்தல் உண்டோ?

"நீ செல்லாமை உண்டானல் எனக்குச் சொல். சென்று விரைந்து மீள்வது பற்றிச் சொல்வதானல், என்னிடம் சொல்லாதே. மீளும்வரையில் உயிருடன் வாழவல்லவர்க்குச் சொல்லுக" (குறள்-1151) என்றும், "சென்ற நாட்டில் கடமையைச்செய்துகொண்டிருக்கும்போது இங்கிருந்து வருவாரை அணுகி என் செய்தி ஒன்றும் கேளாதே. கேட்டால், உன் முயற்சி கெடுமளவிற்குப் பெரிய அவலச் செய்தியை அவர்கள் கூறநேரும்" (கலி. 19) என்றும் தலைவி கூறு

வனவாக இருப்பனவும், தொடக்கத்தில் தலைவன் மெல்லத் தெரிவித்தபோது கூறியனவே; பிரிந்தால் எவ்வாறு ஆற்றியிருப்பேன் என்ற ஏக்கத்தால் கூறியனவே அன்றிப் பயணத்தைத் தடுத்திடும் நோக்கத்தால் கூறியன அல்ல. அவ்வாறே, தலைவன் நெகிழ்ந்து உருகி, "நான் செல்ல மாட்டேன்! தலைவியைத் துயருறச் செய்துவிட்டுத் தேடும் பொருளா பெரிது?" என்று கூறி நிற்பனவும், அடியோடு பொருள் முயற்சியைத் துறந்த துணிவால் கூறியன அல்ல; அவளுடைய உள்ளத்தைத் தேற்றிவிட்டுத் தன் உள்ளத்தையும் தேற்றிக்கொண்டு பிரிவதற்காக இனிச் சிறிது காலம் பொறுத்துத் தங்குதலாக முடிவனவே:

> செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
> வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும்
>
> (தொல். பொருள். கற்பு. 44)

(தலைவன் செல்லக் கருதிய செலவை இடையிலே நிறுத்தி விடுதல் செல்லாமல் நிற்பது அன்று; தலைவியை ஆற்றியிருக்கச் செய்து பிரிவதற்காக நிற்பதே ஆகும்) என்று தொல்காப்பியனார் எழுதியதே உண்மையாகும். ஆகவே, தலைவன் தலைவி இருவரும் தயங்கும் தயக்கம் எல்லாம் மனத்தைத் தேற்றும் முயற்சியே அல்லாமல், பொருள் முயற்சியைக் கைவிடும் நோக்கம் உடையன அல்ல. காரணம், இருவரும் தன்னலம் அற்றவர்; இல்வாழ்க்கைக்கு ஏற்ற உயர்ந்த நோக்கங்கள் கொண்டவர்; இல்லறத்தில் பொறுப்பும் ஆர்வமும் உடையவர்; அதன் பொருட்டுப் பொருள்தேடும் நன்முயற்சி வேண்டும் என்று கருத்து ஒருமித்து உணர்ந்தவர். ஆதலின் பயணத்திற்கு ஆயத்தமாகி வீட்டை விட்டுப் புறப்படும் நிலையில், கண்ணீர் சொரியின் அபசகுனம் ஆகுமாறு பயணம் கூடிவிட்ட நிலையில், தடுக்கும் நினை

வுக்கே இடம் இருத்தல் முடியாது. பாட்டின் பழைய பொருளின்படி பொருள் முயற்சியைத் தடுக்கும் நினைவும், அறம் அன்று என்று கூறிய பழஞ்சொல்லை முகக்குறிப்பால் நினைவூட்டும் முயற்சியும் (வினை தலைப்படுதல் செல்லா நினைவு, அறத்தாறு அன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி, முன்னம் காட்டி முகத்தின் உரைத்தல்) தலைவியின் உயர்ந்த பண்புகளுக்குக் குறையே ஆகும்.

இலக்கியம் இந்த உண்மையை எங்கும் தெளிவுபடுத்தியே செல்கிறது. தலைவனுடைய பயணத்தைத் தடுத்துப் பொருள் முயற்சியைக் கைவிடச் செய்யவேண்டும் என்ற எண்ணம் தலைவிக்கு இல்லை; ஆனால் தலைவனுடைய பிரிவை அறிந்ததுமுதல், பிரிந்தவன் திரும்பி வரும்வரையில் பிரிவாற்றாத் துயர்மட்டும் அவளுக்கு உண்டு. ஒரு சான்று: தலைவன் பிரிந்து சென்று பலநாள் ஆனபின், தலைவி நினைந்து நினைந்து வருந்தி மெலிந்துவிட்டாள். அப்போது அவளை நோக்கித் தோழி கூறினாள்: "அவரைப் பற்றியே மிக மிக நினைந்து வருந்தி அதனால் உயிரே நீங்குவதானாலும், நம் துயரைமட்டும் பிறர்க்குத் தெரியாமல் மறைக்க வேண்டும் அம்மா. நம் துயரைப் பகைவர் காணின் பழித்துத் தூற்ற இடம் உண்டு; அதைக் கேட்கத் தலைவர் நாணுவார். அதற்கு இடம் தரலாகாது" என்று தலைவனுடைய புகழும் குடும்பப் பெயரும் கெடாமல் காக்கவேண்டிய பொறுப்பை நினைவூட்டித் தேற்ற முயன்றாள். இத்தகைய தமிழ்நாட்டு மரபுகளை நினைவில் கொண்டே,

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் (திருக்குறள் - 56)

புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை (ஷை - 59)

என்று திருவள்ளுவரும் எடுத்தோதியுள்ளார். தகை சான்ற சொல் காத்தலும் புகழ் புரிதலும் ஆகிய கடமைகளை நினைந்தே மனைவி பிரிவாற்றாமையைப் பொறுத்து உயிர் வாழ்வது தமிழகத்தின் நெறியாக இருந்துவந்தது. நாடும் குடும்பமும் வாழும்வகையில் தேவையாக இருந்த பொருள் முயற்சிக்கு இடையூறு செய்யும் அறியாமை தமிழ் மகளிர்க்கு இருந்ததில்லை.

மற்றொரு வகையிலும் இலக்கியம் அவர்களின் உள்ளத்தைத் தெளிவிக்கிறது. "பொருள் முயற்சிக்கு இடையூறு இல்லாத வகையில் இந்தத் துயரையும் நீக்கியிருக்கலாமே" என்று தலைவி எண்ணி ஏங்கினாள். "பாலை வழியில் பிரிந்துசெல்லத் துணிந்தவர் என்னையும் தம்முடன் அழைத்துச் சென்றிருக்கலாம். நீயும் என்னுடன் வருவாயோ என்று ஒரு சொல் கேட்டிருக்கலாமே" என்று வருந்தினாள் :

எம்மொடு வருதியோ பொம்மல் ஓதியெனக்
கூறின்றும் உடையரோ மற்றே... (நற் - 274)

பாலைவழியின் கொடுமையும் அப்போது தலைவிக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. தலைவனுடைய பிரிவே நெஞ்சைச் சுடும் கொடுமை உடையதாகத் தோன்றியது. "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு?" என்று கம்பரின் காவியத் தலைவி தன் கணவனைக் கேட்டதும் இந்த மனநிலையால் ஆகும்.

"ஆறலைகள்வரின் அம்பு தைக்கத் துடிதுடித்து வீழ்ந்து உள்ளே வறட்சியுற்றுப் புலர்ந்து வாடிய நாக்கிற்குத் தண்ணீர் கிடைக்காத பாலைக்காடு அது. நாவை நனைத்திடத் தண்ணீர் பெறமுடியாத பொல்லாத் துயரத்தை, கண்ணீர் நனைத்துப் போக்கும் கடுமையான வழி அது.

ஆதலின், அவ்வழியில் நீ என்னுடன் வரலாகாது" என்றான் தலைவன்; "அப்படியா? என் தன்மை இன்னது என்று அறியாதவர்போல் பேசுவது ஏனோ? இது உமக்குத் தகுமோ? உம் துன்பத்திற்குத் துணையாக இருத்தலே என் கடமை. ஆதலின், என்பால் கொண்ட அன்பை மாற்றாமல், அந்தக் கொடிய வழியில் என்னையும் உம்மோடு அழைத்துச் செல்ல வேண்டும்; அதைவிட எனக்கு இன்பம் வேறு உண்டோ?" என்றாள் தலைவி :

வரைஓங்கு அருஞ்சுரத்து ஆரிடைச் செல்வோர்
சுரைஅம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடும் நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடுஎன்றால்,
என்நீர் அறியாதீர் போல இவைகூறல்
நின்நீர அல்ல நெடுந்தகாய்! எம்மையும்
அன்புறச் சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அதுஅல்லது
இன்பமும் உண்டோ எமக்கு? (கலி. 6)

இவ்வாறு துன்பத்திற்குத் துணையாதலே இன்பம் என்று உணர்ந்து வாழ்க்கைக்குத் துணையாய் உரிமையும் விளக்கமும் பெற்றது தலைவியின் மனம்; அந்த நல்ல மனம் பயணத்திற்குரிய ஏற்பாடுகளை முடித்துப் புறப்படும் நேரத்தில் பயணத்தைத் தடுக்க நினைத்தது என்றும், பழஞ் சொல்லை முகக்குறிப்பால் காட்டியது என்றும் பொருள் கூறுதல் பொருந்துமோ?

**ஏழாவதாக :**

தலைவன் அழைத்தது கேட்டு மெல்ல மெல்ல வந்த தலைவி, அவனை நெருங்கி வந்ததும், கூரிய பல் தெரியுமாறு

சிறிதளவே மலரும் புன்சிரிப்புக் கொண்டது ஏன்? அது பொய்ச்சிரிப்பாக (வாயல் முறுவலாக) இருந்தது ஏன்? முகக் குறிப்பு, குரல் கொடாமை, நடந்த முறை, விட்ட கண்ணீர் முதலிய பலவற்றாலும் தன் எண்ணம் (வினைதலைப் படுதல் செல்லா நினைவு) புலப்படுமாறு நடந்துகொண்டவள், பொய்ச்சிரிப்பு மட்டும் கொண்டது ஏன்?

இவ்வாறு பொய்யாகப் புன்முறுவல் கொள்வதானால், ஒன்று, அப்போது அவளுடைய உள்ளத்தில் ஏதேனும் போராட்டம் இருந்திருக்க வேண்டும்; அதை அவள் தலைவனுக்கு வெளிப்படுத்தாமல் மறைத்திருக்க வேண்டும்; அல்லது, தலைவனிடம் வழக்கமாக உள்ளம் திறந்து பழகும் காதலியாக இல்லாமல் அவனுக்கு அஞ்சி ஒழுகும் அடிமையாக இருந்திருக்க வேண்டும்.

அன்பான பெற்றோரிடம் சிறு பையன் பொய்முறுவல் கொள்வதானால், ஒன்று, பெற்றோர் அறியாமல் அவன் எதையோ திருடி வைத்து அதை மறைக்க முயன்று தோல்வி அடைவதாக இருக்க வேண்டும்; அல்லது, அவன் அவர்களின் அன்பிற்குரிய மகனாக இல்லாமல் அந்த வீட்டில் வேலைசெய்து வயிறு வளர்க்கும் ஒரு பையனாக இருக்க வேண்டும்.

நண்பன் ஒருவன் மற்றொருவனிடம் பொய்யான புன்முறுவல் காட்டுவதானால், ஒன்று, அவன் நண்பனுக்குத் தெரியாமல் ஏதோ துன்பத்தை மறைக்க முயன்று தோல்வி அடைவதாக இருக்கவேண்டும்; அல்லது, அந்த நண்பர்க்குள் உரிமையான அன்பு இல்லாமல் பெருமை சிறுமை வேறுபாடு இருக்கவேண்டும்.

இந்தப் பாட்டில் தலைவியின் 'வாயல் முறுவ'லுக்குக் காரணம் என்ன? அவளுடைய உள்ளத்தில் போராட்டம் இருந்ததாக உரை தெரிவிக்கவில்லை. பயணத்திற்கு அவள்

உள்ளம் உடன்பட வில்லை. உள்ளம் உடனே முகத்தில் புலப்பட்டது ; மாறுபட்ட முகம் (அமரிய முகம்) ஆனது ; தலைவனுடைய அழைப்புக்கு மறுமொழி ஒன்றும் சொல்லா மல் குரல் அடங்கியது ; தனிமையுணர்ச்சி வெளியானது ; நிலம் வடுக்கொள்ளும்படியாக நடையில் வேறுபாடு வந்தது; மனத்தில் இருந்த எண்ணம் முகக்குறிப்பால் முற்றிலும் புலப்பட்டது ; கண்ணீரும் அந்த உள்ளத் துயரைத் தெரியப் படுத்தியது. இவ்வாறு உள்ளம் பலவகையாலும் வெளிப் பட்டதால், தலைவன் அறியாத உள்ளப் போராட்டம் ஒன்று தலைவியிடம் இருந்திருக்க முடியாது. ஆகவே முதல் காரணம் பொருந்தவில்லை.

இரண்டாம் காரணம் கொள்வதற்கே இடம் இல்லை. தலைவனுக்கு அஞ்சி நடக்கும் அடிமையாயின், தலைவன் செய்யும் தவறுகளை எடுத்துச் சொல்லி எதிர்க்க முடியாத அச்சத்தால் புன்முறுவல் தோன்றியிருக்கக் கூடும். உரிமை அற்ற வேலையாட்கள் இவ்வாறு ஆற்றலுடையோரிடம் எதிர்ப்புச் செய்ய முடியாமல் புன்முறுவல் காட்டி அடங்கு வது இயற்கை. இந்தப் பாட்டில் காண்பவள் அடிமையும் அல்லள் ; வேலையாளும் அல்லள் ! ஒத்த உரிமையுடன் வாழும் தலைவியாகையால், வாயல்முறுவல் காட்டக் காரணம் இல்லை.

ஆதலின், ஒன்று, பாட்டில் குறை காண வேண்டும் ; அல்லது, பாட்டிற்கு வேறுபொருள் காண வேண்டும்.

# 2. இலக்கியமும் வாழ்க்கையும்

## பாட்டை உணர்தல்

ஒரு பாட்டை உணர்தல் என்பது அதன் சொற்களைப் பிரித்துப் பதப் பொருளோ பொழிப்புப் பொருளோ காணும் அளவில் நிற்பது அன்று; அதைப் பாடிய புலவரின் உணர்வைப் படிப்பவரும் பெறுதலே பாட்டை உணர்தலாகும். அதைப் பாடியபோது புலவர் உணர்ந்த முழு உணர்வும் படிப்பவர்க்கு வருதல் அருமையே; ஆயினும் ஏறக்குறைய அந்த உணர்வைப் பெறுதலே பாட்டின் பயனாகும்.

பாடிய புலவர் வாழ்ந்த காலம் வேறு; இடம் வேறு. படிப்பவர் வாழும் காலமும் வேறு; இடமும் வேறு. ஆகவே புலவரின் உணர்வைப் பெற முயல்வோர், கற்பனைச் சிறகுகொண்டு பறந்து அவர் வாழ்ந்த காலத்தையும் இடத்தையும் அடைதல் வேண்டும். இவ்வாறு கூறவே, புலவர்காலத்து வரலாற்று அறிவும் அந்த நாட்டு நிலநூல் அறிவும் இருந்தால் போதும் என்று கொள்ளலாகாது. அவரும் இவரும் பிறந்த ஆண்டும் இறந்த ஆண்டும் அந்தந்த அரசர் நிகழ்த்திய போர்களும் பெற்ற வெற்றிகளும் ஆகியவற்றை அறியும் வரலாற்று அறிவு பயன் குறைந்தது; உண்மை அறிவிற்கு ஓரளவு சுமையும் ஆகும். அதுபோலவே அந்த நாட்டு வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்கும் குறித்தறிந்து அங்கே ஓங்கிநிற்கும் மலைகளின் உயரமும் ஓடிப் பாயும் ஆறுகளின் நீளமும்

இன்ன பிறவும் அறியும் நிலநூல் அறிவும் பயன் குறைந்தது. அக்காலத்து மக்களின் வாழ்க்கை எவ்வாறு அமைந்திருந்தது, அவர்கள் அன்றாட வாழ்க்கையில் விரும்பினவும் வெறுத்தனவும் யாவை, அவர்களின் அடிப்படை எண்ணங்கள் எவ்வாறு இருந்தன, எவ்வாறு மாறின, அவர்களின் வாழ்க்கைக் குறிக்கோளும் அதை அடைவதற்காக அவர்கள் வகுத்துக்கொண்ட நெறிகளும் யாவை, அதற்கு நேர்ந்த இடையூறுகளும் அவற்றால் விளைந்த போராட்டங்களும் எத்தகையன என்று இவ்வாறெல்லாம் ஆராய்ந்தறிதலே இலக்கியக் கல்விக்குத் துணைசெய்யும் வரலாற்று அறிவு ஆகும் அவ்வாறே அந்த நாட்டு மலையும் ஆறும் காடும் வயலும் கடலும், மரம் செடி கொடிகளும், பறவை விலங்குகளும மக்களின் வாழ்க்கைக்கு எவ்வெவ்வாறு பயன் பட்டன, அவர்களின் உணர்ச்சிகளை எவ்வெவ்வாறு பண் படுத்தக் காரணமாக இருந்தன, ஞாயிறும் திங்களும் காற்றும் மழையும் மக்களின் வாழ்க்கைப் போக்கை அமைக்க எவ்வெவ்வாறு துணை செய்தன என்று இவ்வாறெல்லாம் ஆராய்ந்தறிதலே இலக்கியக் கல்விக்குத் துணை செய்யும் நிலநூல் அறிவு ஆகும். இத்தகைய வரலாற்று அறிவையும் நிலநூல் அறிவையும் வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் போதிய அளவிற்குத் தமிழ்முன்னோர் வளர்த்திருந்தனர். அதனால்தான் இக்காலத்து உள்ளவை போன்ற வரலாறும் பூகோளமும் அவர்கள் வளர்த்துப் போற்றவில்லை. தொல் காப்பியனார் எழுதிய பொருளிலக்கணம வாழ்க்கைக்கும் இலக்கியக் கல்விக்கும் வேண்டிய வரலாற்று அறிவையும் நிலநூல் அறிவையும் எடுத்துரைத்து விளக்குதல் காணலாம். முதல்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என்றும், திணை துறை என்றும் பாகுபடுத்தி அவர் கூறுவன எல்லாம் இத்தகைய நற்பகுதிகளே ஆகும். அக்காலத்து

இலக்கியங்களைக் கற்றறிவதாலும் இவற்றைப் பற்றிய தெளிவைப் பெறலாம்.

## கற்பனைச் சிறகு

இந்த அறிவு பெற்றபின், புலவர் வாழ்ந்த காலத்திற்கும் நாட்டிற்கும் கற்பனைச் சிறகு கொண்டு பறந்துசென்று சேர்தல் எளிதாகும். சேர்ந்தபின் புலவரின் அனுபவத்தை உணர்ந்து பாட்டின் பயன் பெறுதல் எளிதாகும். அமெரிக்காவை நேரில் காணுதவர் எத்தனை நூல்களைக் கற்ருலும் எத்தனை படங்களைக் கண்டாலும் பயன் குறைவே. ஒருமுறை விமானம் ஏறிப் பறந்துசென்று சிலநாள் தங்கியிருப்பின், எளிதில் கண்டு வரலாம். புலவரின் பாட்டனுபவத்தைப் பெறுதற்கும் கற்பனைப் பயணம் வேண்டும்.

இவ்வாறு புலவரின் அனுபவத்தை உணர்வதில் ஒரு வகையில் வழுக்கிவிழாதவாறு காத்துக்கொள்ள வேண்டும். பாட்டுலகத்திற்குச் செல்லும்போது இன்றைய வாழ்க்கை நிலையிலிருந்து எட்டிப்பார்த்தல் கூடாது; வேண்டுமானல் பாட்டுலகில் நின்றுகொண்டு இன்றைய வாழ்க்கையை எட்டிக் காணலாம். அதாவது, பாட்டுலகத்தோடு இன்றைய உலகத்தை ஒப்பிட்டுக் காணினும் காணலாம். ஆயின் இன்றைய வாழ்க்கையைக் கொண்டு பாட்டுலகை அளந்து வரையறுத்தல் கூடாது. அவ்வாறு செய்யின், புலவரின் அனுபவம் உணர இயலாமற் போகும். பாட்டின் உண்மைக் கருத்தும் விளங்காமற் போகும்.

இதனுல், பாட்டிற்கும் வாழ்க்கைக்கும் பெரிய வேறுபாடு இருப்பதாகக் கொள்ளலாகாது. வாழ்க்கையின் அடிப்படைஉண்மைகளே பாட்டில் உணர்வுருவாய் விளங்குகின்றன. அந்த அடிப்படை உண்மைகள் எல்லாக் காலத்திற்கும் பொது; எல்லா நாட்டிற்கும் பொது. காலம்

கடந்து இடம் கடந்து அந்த உண்மைகள் வாழவல்லவை; அதனால் எந்தக் காலத்துப் பாட்டும் எந்த நாட்டின் பாட்டும், அந்த உண்மைகளை உணர்த்துவனவாயின், எல்லாக் காலத்து மக்களும் அவற்றை உணர இடம் உண்டு. ஆனால் உண்மைகள்மட்டும் தனியே பாட்டில் அமைவதில்லை; உணர்வுவடிவம் பெற்று அவை பாட்டில் அமையும்போது, மக்களின் எண்ணம் சொல் செயல்களோடும் அவற்றிற்குக் காரணமான புறப்பகுதிகளோடும் பின்னிக்கொள்கின்றன. பின்னிக்கொண்டுள்ள இந்தப் பகுதிகள் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு வேறுபட்டு நிற்பதால், இந்த வேறுபாட்டைக் கடப்பதற்குக் கற்பனைச் சிறகு வேண்டும்; இந்த வாழ்வை விட்டு, பாட்டு எழுந்த காலத்தில் அந்நாட்டு மக்கள் வாழ்ந்த வாழ்க்கைக்குப் பறந்து செல்ல வேண்டும்.

## அக்கால நிலைமை

அக்காலத்தில் கணவனும் மனைவியுமாக இருந்து, செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் வாழ்க்கை சிறப்புடையதாக விளங்கியது. கணவனும் மனைவியும் வாழ்க்கைக் கல்வியைக் கற்பதற்கு விருந்தோம்பல் ஒரு நன்னூலாக இன்றியமையாததாக இருந்தது; அதுவே அக்காலத்துச் சமூக அமைப்பிற்கு உரிய நற்றுணையாகவும இருந்தது. விருந்து என்பது புதுமை. ஒரு காரணம் பற்றி ஊர்க்குப் புதியவராய் வந்த வெளியார்க்கு உணவு முதலியன தந்து காக்கும் உணவுவிடுதிகள் அந்நாளில் இல்லை. பண்டமாற்று நிலவிய காலம் ஆதலின், பழகாத ஒருவரிடம் சென்று காசு முதலியன கொடுத்து வேண்டிய உதவி பெறும் வாய்ப்பும் அந்நாளில் இல்லை. உணவுக்குத் தேவையான அரிசி முதலியவற்றை ஊர் ஊராய் உடன்கொண்டு

செல்லுதல் துன்பம் தரும் சுமையாக இருந்தது. போக்குவரவுக்கு உரிய பொறிகளும் நலன்களும் குறைந்து பெரும்பாலோர்க்குக் கால்நடையே பெருவழக்காக இருந்த அக்காலத்தில், பெருஞ் சுமையைத் தாங்கி நெடுந்தொலைவு நடந்துசெல்வது துன்பத்திலும் துன்பமாக இருந்திருக்கும். ஆதலின், உணவுப் பொருளை மூட்டை கட்டிச் செல்லுதல் இயலாத ஒன்றாக இருந்தது. அரசர்க்கும் பெருஞ் செல்வர்க்கும் ஊர்திகள் பல இருந்தமையாலும், ஏவல் செய்ய அடிமைகள் பலர் இருந்தமையாலும், அவர்களே அவ்வாறு உணவுப்பொருளை உடன்கொண்டு சென்றிருத்தல் கூடும். மற்றவர்கள், செல்லும் ஊரை நம்பியே நடந்து சென்றிருப்பர். அத்தகைய சமூகத்தில் விருந்தோம்பல் ஒருதனி அறமாய் விளங்கியது; குடும்பத்தார்க்கு நாட்டின் உறவையும் அறிவையும் வளர்த்துத் தந்தது; நாட்டு மக்களுக்குள் உட்பிணைப்பையும் அன்பையும் வளர்த்துப் போற்றியது. விருந்தோம்பும் நல்லறத்தால், புது முகங்களைக் கண்டு முக மலர்ந்தும், புது மொழிகள் கேட்டு இன்சொல் வளர்த்தும், பசித்துன்பம் போக்கி இன்புற்றும், நாட்டுச் செய்திகளைக் கேட்டு அறிவு பெற்றும் வாழும் பேறு அக்காலத்தவர்க்கு இருந்தது. அதனால் வாழ்க்கைக்கு அடிப்படையான அன்பையும் அறிவையும் வளர்க்கும் வாயிலாக விருந்தோம்புதல் விளங்கியது.

இன்று வாழ்க்கைநிலை மாறிவிட்டது. இன்று மக்கள் வெளியூர்க்குச் செல்லும்போது அவ்விடத்தில் உணவு முதலியவற்றை விலை கொடுத்துப் பெறுவதற்கு வழி உள்ளது; அதற்காக அவர்கள் தம் சட்டைப் பையிலோ ஆடை முடிச்சிலோ சில வெள்ளிக் காசுகளையோ காகித நோட்டுகளையோ எடுத்துச் சென்றால் போதும். ஆதலின் அவர்கள் செல்லுமிடங்களில் புதிய குடும்பங்களின்

உதவியை நாடுவதும் இல்லை; அக் குடும்பத்தார் அவர்களை முகமலர்ந்து வரவேற்று இன்சொல்கூறி விருந்தோம்புதலும் இல்லை. இதுவே இன்றைய நிலை. கொடிய வறுமையால் வாடும் ஏழைமக்கள் சிலர்மட்டும் நாட்டுப்புறங்களில் பழைய முறைப்படி வீடுகளைத் தேடிச் செல்கின்றனர்; அவர்கள் பிச்சை எடுப்பவரைப் போன்றவரே அன்றி, விருந்தினர் அல்லர்; மானம் இழந்து வாழுமாறு உலகத்தாரால் தாழ் நிலைக்குத் தள்ளப்பட்டவரே அன்றி, முகமலர்ந்து வரவேற் கப்படும் சிறப்பினர் அல்லர்; வீட்டு வாயிலில் நின்று இரக் கும் அளவினரே அன்றி, வீட்டாரின் மதிப்பும் உதவியும் பெறுபவர் அல்லர்.

## விருந்தோம்பல்

ஆகவே, திருவள்ளுவர் போற்றிய விருந்தோம்பல் இன்று மறைந்துபோன ஒன்று எனக் கூறல் வேண்டும்; அதற்கு மாறான புதிய விருந்தோம்பல் முறைஒன்று இன்று சமூகத்தில் வளர்ந்து செல்வாக்குப் பெற்றுள்ளது. நன்கு அறிமுகமானவர்க்கும் பசி அறியாதவர்க்கும் ஆடம்பரமான வகையில் பேருணவு படைக்கும் வழக்கம இப்போது விருந்து என்று பெயர் பெறுகின்றது. இது, தன்னலமின்றி நிகழ்ந்துவந்த பழைய விருந்தோம்பலுக்கு மாறானது. இந்தப் புதிய முறைக்குத் தன்னலமே அடிப்படை. ஒருவர் செய்தஉதவியைப் பாராட்டியோ, செய்யக்கூடிய உதவியை எதிர்பார்த்தோ, அல்லது அவரால் கிடைக்கும் பெயர் புகழ் கருதியோ அவர்க்கு விருந்து வைப்பது இன்றைய வழக்கம். எளிய மக்களுக்கு - செல்வமும் செல்வாக்கும் இல்லாத வர்க்கு - இத்தகைய விருந்தில் இடம் இல்லை என்பதாலேயே இதன் உண்மை வடிவம் விளங்குகிறது அன்றோ? ஒருகால் எளியவர்க்கு இந்த விருந்தில் எவ்வாறோ கண்மறைவாகத்

தப்பித் தவறி இடம் கிடைப்பினும், அவர் விருந்தோம்புவா ரிடமிருந்து இன்சொல்லும் நன்முகமும் பெறமுடியாது. திருமணம் முதலிய குடும்பச் சடங்குகளையோ, சமயச் சார்பான திருநாட்களையோ, நாட்டின் விழாக்களையோ முன்னிட்டு நடைபெறும் விருந்துகளும் குறித்த ஒரு நாள் அல்லது சிலநாள்மட்டுமே நிகழும். திருவள்ளுவர் கூறு வதுபோல், வருவிருந்து வைகலும் (நாள்தோறும்) ஓம்புதல் இன்று இல்லை. விருந்து என்று குறித்த நாள் கழிந்த மறுநாள் அங்குக் காக்கையும் நாடாது; ஈர்ங்கை விதிராக் கயமையும் அங்குக் காணலாம். சாவா மருந்தே அன்றி எளிய கஞ்சி யும் அங்கு மறுநாள் பெறுதல் அரிது. ஆதலின் பரந்த உணர்வு பெறவேண்டும் என்று பண்டைக்காலத்தில் இல் வாழ்வாரிடம் அமைந்திருந்த விருந்தோம்புதல் இன்று இல்லை என்பதை அறிந்து, பழம் பாட்டுக்களைப் பழைய சமூக அமைப்புக் கொண்டு உணர முற்படவேண்டும்.

## சுற்றம் தழுவல்

விருந்தோம்புதலுக்கு அடுத்த நிலையில் சுற்றம் தழுவு தல் என்பது குடும்பத்தாரின் கடமையாக அக்காலத்தில் போற்றப்பட்டு வந்தது. குடும்பத் தலைவன் சுற்றத்தாரின் துன்பத்தைக் காணப் பொறுக்காத ஈரநெஞ்சு உடையவனாக இருந்தான்.

சுற்றத்தார் என்பவர் யார்? இங்கும் இக்கால முறைப் படி பொருள் காணின் தவறுபடும். சாதி முறையால் வரையறுக்கப்பட்டவராய், பெரும்பாலும் உள்ளன்பு இல் லாதவராய், திருமணம் முதலிய நிகழ்ச்சிகளில் தவிர ஏனைக் காலங்களில் எட்டிப்பாராதவராய், திருமணம் முதலிய காலங்களிலும் கலகமும் குழப்பமும் விளைத்தலே நோக்க மாக உடையவராய், பொறாமை மிகுந்தவராய் உள்ளவரை

இக்காலத்தினர் சுற்றத்தார் என்பர். அக்காலத்தில் சுற்றத்தார் என்று கூறபட்டவர் உள்ளன்பு உடையவர்; ஊராரில் பலவகையாலும் ஒரு குடும்பத்திற்கு நெருங்கிய தொடர்பு உடையவர். எடுத்துக்காட்டாக உழவனுக்கு அக்காலத்தில் பெற்றோருடன் பிறந்து வளர்ந்த பிற குடும்பத்தினரும் சுற்றமே; அவர்போல் குடும்ப வாழ்க்கைக்குத் துணை செய்யும் பிற தொழிலாளரான கொல்லர் தச்சர் முதலானவரும சுற்றமே. தன்னிடம் உள்ளதைப் பெற்று இல்லதைத் தந்து உதவும் பண்டமாற்று வாணிகரும் சுற்றமே; இவ்வாறே ஊரில் ஒரு பகுதி சுற்றம் என அடங்கும். இதுவே பண்டைக்கால அமைப்பு. இந்த அமைப்புத் தகர்ந்து நூற்றாண்டுகள் பல கழிந்த பின்னரும், இன்னும் நாட்டுப்புறங்களில் பெயரளவில் இந்த முறை இருந்து வருகிறது. ஒருவகைத் தொழிலாளர் மற்றொருவகைத் தொழிலாளரை மாமன் மைத்துனன் அண்ணன் தம்பி அத்தை மருமி தமக்கை தங்கை முதலான முறை கொண்டாடி முறைச் சொல் வைத்து வழங்கி வருவதை இன்னும் காணலாம். இவர்களைச் சுற்றத்தார் என்று இன்று உறவுகொள்ளாவிடினும், உண்மையான உள்ளன்பு கொண்டு ஒருவர்க்கொருவர் உதவி செய்துவருவது இன்னும் உள்ளது. இதுவே சுற்றம் தழுவுதல் என்னும் அறமாகக் கருதத்தக்கது.

## பொருள் தேடல்

இத்தகைய விருந்தினரையும் சுற்றத்தாரையும் போற்றி உதவி செய்வது குடும்பத்தார்க்குச் சிறந்த கடமையாக இருந்துவந்தது. அதே நிலையில் முன்னோர் தேடிவைத்த பொருளைச் செலவு செய்யாமல், தன் முயற்சியால் பொருள் தேடிச் செலவு செய்தல் குடும்பத் தலைவனுக்கு உரிய கடமையாக இருந்தது. விருந்தோம்பியும் சுற்றம் தழுவி

யும் பொருளைப் பயன்படுத்தி இன்புறும் தலைவனும தலைவி யும், பொருள்வளம் சுருங்கியபின், யார்க்கும் முன்போல் உதவி செய்யமுடியாத நிலை வந்தபோது வாடினர்; இவ்வாழ்க்கையில் பெருங்குறை நேர்ந்தது என உணர்ந்து வருந்தினர்.

உள்ளூரிலிருந்தே பெரும் பொருள் தேடும் வகை அக் காலத்தில் அருகியிருந்தது; பண்டமாற்றே நாடு முழுதும் நிலவிய காரணத்தால் அவரவர்களின் வாழ்க்கையை நடத் தப் போதிய உணவும் உடையும் பிறவும் கிடைத்து வந்தன; மழை இல்லாமை முதலிய காரணங்களால் பஞ்சம் வந்த போது, அவைகளும் கிடைத்தல் அரிதாயிற்று. வெளி நாட்டுக்குச் சென்று வாணிகம் செய்து பொருள் தேடுவதே பிறரைக் காத்து உதவும் வழியாக இருந்தது. அந்த முயற்சி முதியார்க்கும் மெலிந்தார்க்கும் இயலாதது; ஆகவே ஊக்கமும் உரமும் உடைய இளைஞர்க்கே அது கடமையாக அமைந்தது. பகைவரைப் பொருது தொலைக்க வேலும வாளும ஏந்தித் தமிழ்நாட்டு வீரராய் எழுந்த இளைஞர்களே பொருள் இல்லாத வறுமையைத் தொலைப்பதற்கும் ஊக்கம கொண்டு புறப்படவேண்டியிருந்தது. முன்னதை நாட்டின் தொண்டு என உணர்ந்து முன்நின்றது போலவே, இதையும் ஊர்த் தொண்டு எனத் துணிந்து முயற்சி மேற் கொண் டனர்.

## கவலைக்கு வித்து

போர்க்களத்திற்குச் சென்று பொருது புண்பட்டுச் சாவதில் ஒரு மகிழ்ச்சியாவது உண்டு; புரந்தார் கண் நீர் மல்க - நாடாளும் தலைவன் இரக்கத்தோடு எதிர் நின்று கண்டு கண்ணீர் சொரிய - சாகும் பேறு உண்டு. ஆனல் வெளிநாட்டு வாணிக முயற்சியில் முனைந்து வீட்டை விட்டு

நாட்டை விட்டுப் பிரிந்து செல்வார்க்கு அந்த வாய்ப்பும் இல்லை. பொருள் தேடி முடித்து இடையூறு இல்லாமல் திரும்பிவந்து வீட்டை அடைந்தால்தான் மகிழ்ச்சி உண்டு. அதுவரையில், கணவனுக்கு மனைவியைப் பற்றிய ஓயாத கவலை, மனைவிக்குக் கணவனுயிரைப் பற்றிய ஓயாத கவலை, இடையூறுகளை நினைந்துவருந்தும் துயரம் ஆகிய இவற்றிற்கு இடையே நாட்களையும் வாரங்களையும் எண்ணி எண்ணி ஏங்கும் துன்பம் மிகப் பெரியது. ஆயினும் எவ்வாறோ மனைவியும் கணவனுக்கு விடைகொடுத்து அனுப்பி வந்தாள்; கணவனும் ஆருயிர்த் துணைவியைப் பிரிந்து நாடு கடந்து சென்றான். இவ்வாறு இருவரும் இசைவதற்குக் காரணமாக இருந்த மனநிலை என்ன? அதுதான், 'ஈத்துவக்கும் இன்பம்' என்று திருவள்ளுவர் போற்றிக்கூறிய இன்பத்தை விரும்பிய நிலை. இல்லாதவர்க்குப் பொருள் கொடுத்து உதவி மகிழும் இன்பத்தைத் தலைவன் விரும்பினான்; தலைவனுடைய விருப்பம் நிறைவேற வேண்டும் என்று தலைவியும் விரும்பினாள்.

தலைவன் பிரிந்து செல்லும் காரணத்தைத் தலைவி நினைந்து கூறியதாகப் பாட்டு ஒன்று உள்ளது:

குடும்பம் வறுமை உற்றது. கணவனும் மனைவியும் நல்கூர்ந்தனர். அறநெறியில் நின்று பிறர்க்கு உதவியாக வாழ்ந்தவர்கள் அவர்கள். ஆதலின், தாம் உண்ணவும் உடுக்கவும் நுகரவும் முடியாமல் பொருள்வளம் குறைந்ததே என்று அவர்கள் கவலைப்படவில்லை. செய்யத்தக்க ஒப்புரவான கடமைகளைச் செய்ய முடியவில்லையே என்ற கவலையுற்றனர். 'நயனுடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர செய்யாது அமைகலா வாறு' என்று திருவள்ளுவர் நல்லவர்களின் வறுமையைப் பற்றிக் கூறியுள்ளவாறே, அவர்களும் கவலையுற்றனர். தம்மை விரும்பி வாழ்வோர்க்கு உதவி

செய்து அவர்களைக் காத்தலால் வரும் மகிழ்ச்சி ஒன்று; தாம் விரும்பும் சுற்றத்தாரோடு கூடி இனிமையாய்க் கலந்து மகிழும் மகிழ்ச்சி மற்றொன்று; இந்த இரண்டு மகிழ்ச்சியும் இழக்க நேர்ந்ததே என்று தலைவன் வருந்தினான் என்றும், அதனால் பொருளைத் தேட வேண்டும் என்று ஓயாமல் நினைந்தான் என்றும் அவனுடைய துணைவியே கூறினாள் :

> தம்நயந்து உறைவோர்த் தாங்கித் தாம்நயந்து
> இன்னமர் கேளிரொடு ஏமுறக் கெழீஇ
> நகுதல் ஆற்றார் நல்கூர்ந் தோர்என
> மிகுபொருள் நினையும் நெஞ்சமொடு... (அக. 151)

இதனால் குடும்பத் தலைவனும் தலைவியும் கொண்டிருந்த உயர்ந்த குறிக்கோள் தெளிவாகிறது. விருந்தினர்க்கும் சுற்றத்தார்க்கும் உதவி செய்து பொருள்வளம் குறைதலைக் கண்டனரே அல்லாமல், உணவும் உடையும் கிடைக்காத வறுமையால் வாடவில்லை. பொருள்வளம் பெருக்கி மேலும் அவர்களுக்கு உதவவேண்டும் என்று விரும்பினரே அல்லாமல், தாம் பொருள் சேர்த்துச் செல்வராக வேண்டும் என்று நாடவில்லை. பிறர்க்கு உதவி செய்து அவர்களின் முகமலர்ச்சியைக் கண்டு மகிழ எண்ணினரே அல்லாமல், தன்னலம் வளர்ந்து மகிழ எண்ணவில்லை.

பயண முறை

இவ்வாறு தலைவன் தலைவியரின் வாழ்க்கையின் நோக்கங்களையும் அவைபற்றிய எண்ணம் சொல் செயல்களையும் கற்பனை செய்து உணர்தலோடு, அவர்கள் வாழ்ந்த காலத்துப் பயணம் எத்தகையது என்று அறிந்து உணர்தலும் வேண்டும்.

அக்காலத்துப் பயண முறையைக் கற்பனைச் சிறகு கொண்டு பறந்துசென்று காணுதல் மிக்க அருமைப்பாடு உடையது; இன்று மாடமாளிகைகளில் வாழ்வோர் கற்கால மக்கள் குகைகளில் வாழ்ந்த வாழ்வைக் கற்பனையில் காணுதல்போல், இன்று மிக நுண்ணிய சுவை வேறுபாடுகளை உணர்ந்தோர் அன்று மக்கள் வேட்டையாடிய விலங்குகளை உடனே தோலுரித்துப் பச்சையாகத் தின்றதைக் கற்பனையில் காணுதல்போல், இன்று வழவழப்பான தாளில் கூரிய பேனாவைக் கொண்டு எழுதுவோர் முற்காலத்து மக்கள் பனை ஓலையில் இரும்பாணி கொண்டு எழுதியதைக் கற்பனையில் காணுதல்போல், பழங்காலத்துப் பயண முறையைக் கற்பனை செய்து காணுதலும் எளிதில் இயலாத தாகும். அறிவின் துணைகொண்டு இவ்வாறு இருந்திருக்கும் என்று எண்ணிவிடுதல் வேறு; உணர்வால் உணர்ந்து அனுபவித்தல் வேறு. முன்னது மிக எளியது; பின்னது மிக அரியது. கோவலன் கொலையுண்டதை அறிந்ததும் கண்ணகி மதுரைத் தெருக்களில் அரற்றிச் சென்றாள் என்று நூலைப் படித்து அறிந்துகொள்வது எளியது; அந்தக் காட்சியைக் கற்பனை செய்து கண்ணகியின் சீற்றத்தையும் துயரத்தையும் உள்ளத்தில் உணர்வது மிக அரியது. அத்தகைய அரிய முயற்சி செய்து பழங்காலப் பாலைவழியின் பயணத்தை உணர்ந்தால்தான் இந்தப் பாட்டைக் கற்று உணரமுடியும்.

இன்று ரயில் உண்டு, மோட்டார் உண்டு, விமானம் உண்டு; தபால் உண்டு, தந்தி உண்டு, தொலைபேசி உண்டு; வானொலி உண்டு, செய்தித்தாள் உண்டு; பண்பட்ட நெடுஞ் சாலைகள் உண்டு; போலீஸ் காவல் உண்டு; போக்கு வரவு மிகுதியும் உண்டு; பலர் துணை உண்டு; விரைவில் சேரவும் கடிதின் மீளவும் வசதி உண்டு; ஊறு நேரின் அறிவிக்கவும்

களைந்திடவும் வாய்ப்பு உண்டு. இத்தனையும் இல்லாத பழங் காலத்துப் பயணத்தைக் கற்பனை செய்து காணுதல் எளி தாகுமோ ?

## பாலை வழி

முன்னே, பழங்காலத்துப் பாலை வழி எத்தகையது என்று உணர்தல் வேண்டும். அவ்வழியில் மழை இல் லாமல் வறண்ட காரணத்தால் சுனைகளில் நீர் இல்லை; பாறைகளோ கதிரவன் காய்தலால் வெப்பம் மிக்கு அனல் கக்கும்; மூங்கில்களி லிருந்து உதிரும் நெல் அந்தப் பாறை யின்மேல் பட்டதும் பொரிந்துவிடும்; மரங்கள் இலை எல் லாம் இழந்து வெறுங்கிளைகளும் கொம்புகளுமாய்ப் பட்ட மரங்கள்போல் நிற்கும்; அதனால் நிற்க நிழல் இல்லை. நிழல் தரும் மரங்களே இல்லாத நிலையில் யானைகள் உணவுக்கு என்ன செய்யும்? நீரற்ற சுனைகளில் உலர்ந்துபோன பாசி இருக்குமோ என்று துழவித் தேடித் தின்னும்; ஆழ்ந்த சுனைகளின் அடியில் நீர் இருத்தல் கூடும் என்று நம்பி முழந்தாள் இட்டு ஊன்றித் துதிக்கையால் துழவிப் பார்த்து நீர் காணாமல் பெருமூச்சுவிடும்; கானலை நீர்என்று மயங்கி ஓடிஓடி இளைத்து, நீர் அற்ற ஆற்றில் இயங்காது கிடக்கும் ஓடம்போல், வழி ஓரத்தே சோர்ந்து கிடக்கும்; வழியெல் லாம் கானலுக்கு இடையே மின்மினிபோல் பரல்கற்கள் இமைக்கும்; இயற்கை இவ்வாறு கொடுமைசெய்து கெடுத்த பாலைவழியில் வழிபறிக்கும் கள்வராய் வாழும் கூட்டத்தார் செய்யும் கொடுமைக்கும் அளவு இல்லை. இரக்கம் அறியாத அவர்கள், பிரியும் வழிகளில் மறைந்திருந்து வழிப்போக்கர் மேல் அம்புஎய்து கொன்று அவர்களிடம் உள்ள பொருளைப் பறிப்பர்; கொல்லப்பட்டவரின் பிணங்கள் அழுகிக் கிடக் கும்; அந்தப் பிணங்களின் கண்களைக் கழுகுகள் கொத்தி

எடுத்துத் தம் குஞ்சுகளுக்குக் கொண்டுபோய் ஊட்டும்; பொருள் கொண்டுபோகாத வழிப்போக்கரே ஆயினும், ஆறலைகள்வர் அவர்களைக் கொல்லாமல் விடுவதில்லை; தம் அம்புகளின் கூர்மையைக் காண்பதற்காகவாவது அவர்கள் மேல் அம்பு எறிந்து கொன்று அவர்களைக் கழுகுக்கு விருந்தாகச் செய்வர்; சிலர், அவர்களின் உடம்புகள் எவ்வாறு துள்ளும் என்று பார்த்தறிவதற்காக அம்பு எய்து கொன்று வீழ்த்துவர்; அவ்வாறு வீழ்ந்து துடித்துச் சாகும் வழிப்போக்கர் நாவறட்சியைப்போக்கத் தண்ணீரும்கிடைக்காமல் துயருறும் வழி அது; தண்ணீரால் நாவை நனைக்க விரும்பித் துடிக்கும் அவர்கள் கண்ணீரால் நனைக்கப் பெற்றுச் சாகும் கொடுமை உடையது அந்த வழி.

கதிர்கதம் கற்ற ஏகல் நெறியிடை. (அக. 177)

அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
நிழல்தேய்ந்து உலறிய மரத்த அறைகாய்பு
அறுநீர்ப் பைஞ்சுனை ஆம்அறப் புலர்தலின்
உகுநெல் பொறியும் வெம்மைய. (ஷை - 1)

மரநிழல் அற்ற இயவின்... சுரன். (ஷை - 353)

விளங்குபகல் உதவிய பல்கதிர் ஞாயிறு
வளங்கெழு மாமலை பயம்கெடத் தெறுதலின்
அருவி ஆன்ற பெருவரை மருங்கின
சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயம் காணாது
பாசி தின்ற பைங்கண் யானை
ஓய்பசிப் பிடியொடு ஒருதிறன் ஒடுங்கும். (ஷை. 91)

படிமுழம் ஊன்றிய நெடுகல் யானை
கைதோய்த்து உயிர்க்கும் வறுஞ்சுனை. (ஷை - 119)

கொம்மை வாடிய இயவுள் யானை
நீர்மருங்கு அறியாது தேர்மருங்கு ஓடி
அறுநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும். (ஷை - 29)

உருவில் பேஎய் ஊராத் தேரொடு
நிலம்படு மின்மினி போலப் பலவுடன்
இலங்கு பரல் இமைக்கும். (அக - 67)

அம்புதொடை அமைதி காண்மார் வம்பலர்
கலன்இலர் ஆயினும் கொன்றுபுள் ஊட்டும்
கல்லா இளையர். (நற் - 375)

கொள்ளும் பொருள்இலர் ஆயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வவ்வலின்
(கலி. 4)

வரைஓங்கு அருஞ்சுரத்து ஆரிடைச் செல்வோர்
சுரைஅம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற் றருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு. (கலி. 6)

இவற்றில் ஓர் அளவு உயர்வுநவிற்சியும் இருத்தல்கூடும். உணர்ச்சி மிகுந்த நிலையில் தலைவியோ பிறரோ கூறும் சொற்களாக அமைந்தவற்றில் உயர்வுநவிற்சிக்கு இடம் இருத்தல் இயற்கையே. ஆயினும இவற்றில் காணும்உயர்வு நவிற்சி உள்ளதை மிகுத்துக் கூறுதலே அன்றி இல்லதைப் புனைந்துகூறும் பொய் அன்று. இவற்றின் உயர்வுநவிற்சி ஓர் அளவானதே அன்றி அளவுகடந்தது அன்று என உணர்ந்து பாலைவழியைக் கற்பனை செய்து காணவேண்டும.

## இடையூறுகள்

இக்காலத்தில் வடநாட்டிற்குச் செல்லவோ, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனு, ஜப்பான் முதலான வெளிநாடுகளுக்குச் செல்லவோ முயல்வோர் எவரும் இவ்வாறு அஞ்சத்தக்க பயணம் செய்யவேண்டிய தில்லை. மக்கள் தொகை பெருகி, வளமற்றபகுதிகளிலும் ஊர்கள் ஏற்பட்டு, நல்லசாலைகளும்

அரசாங்கக் காவலும் அமைந்துள்ளமையால், பயணத்தில் இடையூறு என்பது கற்பனைக்கு எட்டாததாகிவிட்டது. நாவறட்சியை நினைக்கத் தண்ணீர் இல்லாத வழிப்பயணம் இந்நாளில் இல்லை. வழியெல்லாம் சிற்றுண்டிக்கடைகளும் உணவுவிடுதிகளும் அமைந்துள்ள காலம் இது. செல்லும் வண்டியிலேயே வேண்டிய வசதி எல்லாம் பெற்று மகிழும் காலம் இது. மாட்டுவண்டிகளில் காட்டுவழிகளில் செல்ல வேண்டிய சில இடங்களிலும் பயணம் நாள் கணக்காக, வாரக் கணக்காக நீட்டிப்பதில்லை; சில மணிநேரத்தில் கடந்து செல்லக்கூடிய வழிகளாகவே இருத்தலால், நீரும் நிழலும் உணவும் தேடி அலையும் தொல்லை இன்று இல்லை. ஆறலைகள்வர் ஒரு கூட்டமாய் ஒளிந்துவாழ இடம் இல்லாத படி இன்றைய உலகம் முன்னேறிவிட்டது. ஒருகால் எந்தக் காரணத்தாலாவது குறிப்பிட்ட ஒருவழி இடையூறு உள்ளதாக மாறின், அதை விட்டு வேறு வழியில் செல்லும் வாய்ப்பும் இன்று உள்ளது. ஆகவே, பயண முறையைக் கற்பனைசெய்து காணும்போது, இன்று இல்லாத இடையூறு களைப் படைத்துக் காணல்வேண்டும். இவ்வளவு இடையூறு களைக் கொண்ட வழியில் உயிரைக் காக்க வழி இன்றித் துணிந்து செல்லும் தலைவனைப் பற்றித் தலைவி எவ்வளவு கவலைப்பட் டிருப்பாள் என்று உணர வேண்டும். இது பய ணத்தின் இடையூறுகளைப் பற்றிய பகுதி.

இனி இரண்டாவதாகப் போக்குவரவுக் கருவிகள் பற்றிக் காணவேண்டும். பாட்டுலகிற்குப் பறக்கும்போது, இன்றைய வாழ்க்கையில் காணும் பல நலன்களை மறக்க வேண்டியுள்ளது. அன்று வடநாட்டிற்குச் செல்வோர் பெருஞ்செல்வராயின், அரசாங்கத்தைச் சார்ந்தவராயின், ஏவலாளர் சூழ யானைமீதும் தேர்மீதும் ஏறிச்செல்லமுடியும். ஆனல் பொருள்வளம் சுருங்கிய காரணத்தால் பொருள்

தேடிவரச் செல்வோர்க்கு அந்த ஊர்திகள் இல்லை. ஆகையால், அவர்கள் காலால் நடந்தே வழியெல்லாம் கடக்க வேண்டும். ஆகவே, சென்று சேரப் பல வாரம் ஆகும்; மீண்டு வரவும் பல வாரம் ஆகும். இத்தகைய நெடுநாள் வழிப்பயணத்தால் எவ்வளவு கவலை நேரும்? சிலமணி நேரத்தில் ரயிலிலும் மோட்டாரிலும், நூற்றுக் கணக்கான மைல்கள் கடந்து செல்லக்கூடிய இக்காலத்தில், சிலமணி நேரத்தில் விமானத்தில் ஆயிரக்கணக்கான மைல்கள் பறந்து செல்லக்கூடிய இக்காலத்தில், வடநாட்டுப் பயணம் தொல்லையாகத் தோன்றுது. ஆயின், சிலநாட்கள் அல்ல, சில வாரங்கள் தொடர்ந்து நடந்து செல்லவேண்டிய பயணம் எத்தகையதாக இருந்திருக்கும்? அத்தகைய பயணத்தை மேற்கொண்டு பிரிந்து செல்லும் தலைவனைக் குறித்துத் தலைவியின் மனம் எவ்வளவு வருந்தியிருக்கும் என்பதை உணரவேண்டும்.

## செய்தி அறிவிப்பு

மூன்றுவதாக, செய்தி அறியும் வகையில் இருந்த நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தக் கற்பனை அரியதில் அரியதாகும். ஆடை நாகரிகத்தில் வளர்ந்த மனிதன், ஆடையற்றவர்களாய்க் காட்டிலும் மலையிலும் திரிந்த மக்களின் வாழ்வைப் பற்றிக் கற்பனை செய்து காண்பது போன்றது இது. இன்று, செய்தி அறிவிக்கும் கருவிகளுக்கும் அளவில்லை; அவற்றின் முற்போக்கோ சொல்லொணுதது. அன்று, மக்கள், மக்கள் வாயிலாகவே சொல்லியனுப்பும் செய்தி தவிர வேறொரு கருவியும் இல்லாதிருந்தது. அன்று, காவிரிப்பூம்பட்டினத்தைவிட்டு மனைவியோடு மதுரையை நோக்கிச் சென்ற கோவலன் தன் பெற்ருேர்க்குச் செய்தி அறிவிக்கக் கோசிகன் என்பவனுடைய

உதவியை நாடவேண்டியதாக இருந்தது; அந்தச் செய்தியும் சில மைல் கடந்து செல்லவும் நாள்கணக்காக ஆயிற்று. காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து காஞ்சிநகர்க்கு வந்தவரோ, மதுரையிலிருந்து ஆர்க்காட்டிற்கு வந்தவரோ, தாம் வந்து சேர்ந்த நற்செய்தியைத் தம் குடும்பத்தார்க்கு அறிவிப்பதாயின் எளிதில் முடிந்திருக்குமா? அதற்காக, காஞ்சியிலிருந்தும் ஆர்க்காட்டிலிருந்தும் தென்னாட்டுக்குச் செல்வார் எவரேனும் உண்டோ என்று தேடித் தேடிக் காத்திருக்க வேண்டும். அவர்கள் வாயிலாக வாய்மொழியாகச் சொல்லியோ அல்லது ஓலையில் எழுதியோ செய்தி அனுப்பவேண்டும். அவ்வளவு பாடுபட்டு அனுப்பிய செய்தியும் சென்று சேரப் பல நாட்கள் ஆகும். செய்தி கொண்டு செல்வோரின் பயணத்திற்கு யாதொரு வகையிலும் ஊறு ஏற்படாமலிருந்து, அவர்களும் மறந்திடாமல் இருந்தால்தான், ஒரு திங்கள் கழித்தாவது செய்தி போய்ச் சேரும். தமிழ்நாட்டின் அகத்திலேயே இந்த நிலைமை இருந்தால், பல நூறு மைல்கள் நடந்து, பாலைவழிக் கொடுமைக்கெல்லாம் தப்பி, பல நாடுகளையும் அரசுகளையும் கடந்து செல்வோர் யாரிடம் செய்தி சொல்லி அனுப்பமுடியும்? அச்செய்தி எத்தனை திங்கள் கழித்து வந்து சேரும்? அதுவரையில் கணவரைப் பிரிந்த மனைவியரும், மக்களைப் பிரிந்த தாயரும் என்ன என்ன எண்ணி ஏங்கித் துயருறுவர்? இந்த நிலைமை இருந்த காலத்தில் பெற்றோரும் துணைவியரும் இத்தகைய பிரிவுக்கு எளிதில் இசைந்திருக்க முடியுமோ?

இன்றைய நிலையை ஒப்பிட்டுக் காணலாம். இன்று இரவு சென்னையிலிருந்து மெயில்வண்டியில் கல்கத்தாவிற்குப் புறப்படுவோர், நாளைப் பகலே வால்டேரைக் கடந்து செல்லும்போது ரயிலில் இருந்தவாறே முக்காலணா அட்டை ஒன்று வாங்கி அதில் தம் பயணத்தைப் பற்றிச்

சென்னையில் உள்ளவரின் முகவரிக்கு எழுதி, ஏதேனும் ஒரு தபால்பெட்டியில் போட்டுவிடலாம். அது மறுநாளே சென்னையார்க்குச் சேரும் ; அவர்கள் தம்மவர் நலமாகப் பயணம் செய்து செல்வதை அறிந்து மகிழ்வர். நாளை மறுநாள் அந்த மெயில்வண்டி கல்கத்தாவிற்குப் போய்ச் சேர்ந்ததும், மறுபடியும் ஒரு முக்காலணா செலவுசெய்து எந்தத் தபால்பெட்டியிலாவது கடிதம் எழுதிப் போட்டு விட்டால் போதும். இரண்டு நாளில் சென்னைக் குடும்பத்தார் அதைத் தம் கையில் பெற்றுப் படித்து நலமாகப் போய்ச் சேர்ந்ததை அறிந்து மகிழ்வர். இது வறியவரின் பயண நிலை. செல்வர் அவ்வாறு செய்யார் ; கல்கத்தாவில் இறங்கியதும் சென்னைக்கு அவசரத் தந்தி ஒன்று கொடுப்பர் ; அது அன்றே சென்னையார்க்குப் போய்ச் சேரும். அவர் கல்கத்தாவிலும் இவர்கள் சென்னையிலும் கவலை இன்றிப் படுக்கை விரித்து ஒருவர் மற்றொருவரை நினைந்து மகிழ்ந்தவாறே உறங்குவர். அதனினும் சிறப்பாக, தொலைபேசி வாயிலாக நேராகத் தொடர்புபெற்றுக்கொண்டு பக்கத்து அறைகளிலிருந்து பேசுவதுபோல, இரு சாராரும் பயணத்தைப் பற்றியும் வழியில் தட்ப வெப்ப நிலை பற்றியும், பயணக் களைப்பைப் பற்றியும், இரவு உண்ட உணவு எப்படி இருந்தது என்பதைப் பற்றியும் சிறிதுநேரம் அளவளாவிக்கொண்டிருக்கலாம். விமானத்தில் பறக்கும் பயணத்தைப்பற்றிக் கூறவேண்டியதே இல்லை. சென்னையில் சிற்றுண்டி உண்டு பிரிந்தவர், நண்பகலில் டில்லிக்குப் போய்ச் சேர்ந்ததும் தொலைபேசியில் பேசிவிட்டுப் பிறகு பகலுணவு கொள்ள முடியும். இத்தகைய பயணத்தில் கல்கத்தாவிற்கோ டில்லிக்கோ பிரிந்து சென்ற கணவனைப் பற்றி மனைவி கவலைப்படக் காரணம் உண்டோ ? வளை கழல மெலியும் துயரம் உண்டோ? மெய்யெலாம் பசலை ஊருமாறு

நினைந்து சோர்தல் உண்டோ? பூ உதிர்ந்த கொம்பு போல் வாடிக் கண்ணீர் விடும் துன்பம் உண்டோ? பல்லி சொல்லு வதைக் கேட்டு நடுங்கும் நடுக்கம் உண்டோ? கணவன் பேசும் தொலைபேசியின் மணியொலியைக் கேட்டோ, சேர்ந்த செய்தி தெரிவிக்கும் தந்தியைக் கொணர்வோன் கதவைத் தட்டும் ஒலியைக் கேட்டோ, அல்லது ஏழையாயின் சிலநாள் கழித்துத் தபால்காரன் கடிதத்தை ஏந்தி வாசற் படியில் விளிக்கும் குரல் கேட்டோ மகிழும் மனநிலைதான் இன்று உள்ளது.

போய்ச் சேர்ந்த செய்திமட்டும் அன்று; தலைவலி வந்ததா, வழியில் வெய்யில் குறைவா மிகுதியா, மழை பெய்ததா என்பன முதலான வேண்டாத செய்திகளையும் இன்று உடனுக்குடன் அறிவித்தல் கூடும். ஏதேனும் உடலுக்கு நோய் ஏற்பட்டாலும் மயங்கி விழுந்தாலும் உடனிருப்போர் பார்த்துச் சட்டைப்பைக் குறிப்பு முதலிய வற்றாலும், விமான நிலையத்தார் கேட்டு எழுதிய முகவரிக் குறிப்பு முதலியவற்றாலும் உடனே அவர்நிலையைக் குடும் பத்தார்க்குத் தெரிவிக்க முடியும். இவ்வாறு சிறு சிறு மாறுதலையும் உடனுக்குடன் அறிவிக்க இன்று வசதி இருப்பதால், குடும்பத்தார் சிறிதும் கவலைப்படுவதில்லை. பழங்காலத்தில் சென்றவர் திரும்பிவரும் வரையில் செய்தியை எதிர்பார்ப்பதில் பயனே இல்லை. அவர் வழி யில் கொலையுண்டோ நோய்வாய்ப்பட்டோ மறைந்தாலும் அறிவிப்பார் இல்லை. நலமாக இருப்பதற்கும் மாண்டு மறைந்ததற்கும் வேறுபாடு இல்லாத - ஒன்றும் தெரியாத - இருளே குடும்பத்தாரின் மனத்தில் இருக்கும். ஆதலின் சென்றவர் கொடிய வழியைக் கடந்து நலமாகவே இருப் பினும், "அவர்உயிர்க்கு என்ன ஊறு நேர்ந்ததோ, இப் பிறப்பில் மீண்டும் காண்போமோ" என்று எண்ணுதல

எண்ணி ஏங்குவதைத் தவிர அக்காலத்தினர்க்கு வேறு ஆறுதல் இல்லை.

ஆகவே, மூன்றாவதாகிய செய்தி அறிவிக்கும் துறையில் இரு காலத்திற்கும் உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு போன்றது. இவ்வளவு பெரிய வேறுபாட்டைக் கடந்து காண்பது அரிய முயற்சியே. எவ்வாறேனும் இதயம் கொண்டு உணர்ந்து கற்பனையில் கண்டால்தான், அன்றைய பாலைத்திணைப் பாட்டு விளங்கும்.

## 'எங்கு உள்ளாரோ ?'

கதிரவன் மலை சார்ந்து மறைந்த மாலைநேரத்தில் விளக்கேற்றிய பிறகு தலைவி தலைவனை நினைந்து வருந்துவதாகக் கூறும் பாட்டு ஒன்று; அதில் பெரிய துயரம் ஒன்றும் புலவரால் புனைந்து கூறப்படவில்லை; அதற்குக் காரணங்களும் பலபடக் கூறப்படுவதில்லை; சொற்களும் துயரத்தைப் படம்பிடித்துக் காட்டுவனவாக இல்லை. "அவர் எங்கே இருக்கிறாரோ ?" என்று அந்த அளவிலேயே தலைவி கலங்கி வருந்துவதாகக் கூறப்படுகிறது :

> அகன்சுடர் கல்சேர்பு மறைய மனைவயின்
> ஒண்தொடி மகளிர் வெண்திரிக் கொளாஅலின்...
> புலம்பொடு வந்த புன்கண் மாலை
> யாண்டுஉளர் கொல்எனக் கலிழ்வோள். (அக. 47)

அக்காலத்துப் பயண முறையில் இருந்த மூன்று பெரிய வேறுபாடுகளையும் கற்பனை செய்து காணாதவர் இந்தப் பாட்டின் உணர்வை எவ்வாறு பெற முடியும்? "யாண்டு உளர்கொல் ?" என்ற இரு சொல்லில் துயரம் ஒன்றும் காணோமே என்று பாட்டைக் குறைகூறத்தான் தோன்றும். பாட்டுப் பிறந்த காலமும் இடமும் நிலையும்

உணராத குறையே அன்றிப் பாட்டின் குறை ஆகுமோ? ஓர் அரண்மனை மாடியில் வாளேந்திய வீரன் ஒருவனை எழுதிய அழகிய ஓவியத்தின் கீழே "இருப்பதா, இறப்பதா? அதுதான் கேள்வி" (To be, or not to be, - that is the question) என்று குறித்திருந்தால், அதன் வரலாறு அறியாமல் பார்ப்பவர்க்கு ஏதேனும் விளங்குமா? எவ்வளவு நேரம் உற்றுப் பார்த்தாலும் ஓவியத்தைப் பாராட்டத் தோன்றாது. ஆராய்ச்சிக்கு உரிய பொறுமைப் பண்பு இல்லாதவர்க்கு உடனே குறை சொல்லவே தோன்றும். ஆயின், "இருப்பதா, இறப்பதா? அதுதான் கேள்வி" என்னும் அந்தத் தொடர் இலக்கியத்துள் அமைந்துள்ள இடம் தெரிந்து, ஹாம்லெத் என்ற ஆங்கில நாடகம் தெரிந்து, அதன் ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் பெருமையும் தெரிந்திருந்தால், அந்த ஓவியத்தை விட்டுச் செல்ல எளிதில் மனம் வராது; ஓவியக்கலைநுட்பம் சிறிதே அறிந்தவரும் "இது உலகிலே மிகச் சிறந்த ஓவியமாக வாழ வல்லது" என்று அப்போது வாய்விட்டுக் கூறி மகிழ்வர். "யாண்டு உளர்கொல்" என்று இந்தப் பாட்டோவியத்தில் வரும் தொடரையும் உணர்ந்து உருக வேண்டுமானல், அந்தப் பாட்டுப் பிறந்த சூழ்நிலையை உணர்ந்தால்தான் முடியும். இல்லையேல், "என்னவோ உணர்ச்சி அற்ற சொற்கள், இதுவும் ஒரு பாட்டா?" என்று இகழவே தோன்றும். அக்காலத்துப் பயணமுறையில் இருந்த இடர்ப்பாடுகளை உணர்ந்து, வெளிநாட்டுக்குச் சென்ற தலைவனைப் பற்றிச் சில திங்களாக ஒன்றுமே அறியமுடியாத நிலைமையையும் உணர்ந்தால், அவளுடைய துயரம் "எங்கே இருக்கின்றாரோ" என்ற இரு சொல்லளவில் ததும்பி நிற்பதையும உணரமுடியும்; நுண்கலை என்றால் இத்தகையதுதான் என்று வியக்கவும் முடியும்.

அவ்வாறே, " என் நுண்ணிய அழகெல்லாம் கெட்டாலும் கெடுக. என் காதலர் எப்போதும் துன்பம் இல்லாமல் இருக்கவேண்டும் :"

> ஆய்நலம் தொலையினும் தொலைக ; என்றும்
> நோய்இலர் ஆகநம் காதலர். (அக. 115)

என்று பிரிந்து சென்ற காதலரைப் பற்றித் தலைவி கசிந்து கூறும் கருத்தும் எளிய சொற்களால் அமைந்திருப்பினும் எளிதில் விளங்கிவிடாது. தலைவியின் அழகு கெடுவதற்கும் தலைவனுடைய துன்பத்திற்கும் என்ன தொடர்பு என்று விளங்கிப் பாட்டும் பயன்தரவேண்டுமானால், மேற்கூறிய பயணமுறை பற்றிய வரலாற்றை அறிந்தே ஆகவேண்டும்.

## வீடும் நாடும்

மக்களின் அறிவையும் உணர்வையும் வளர்த்துப் பண்படுத்துவன வீடும் உலகமு மாகும். இவ்வகையில் வீடும் உலகமும் அன்று பெற்றிருந்த ஆற்றலுக்கும் இன்று பெற்றுள்ள ஆற்றலுக்கும் வேற்றுமை உள்ளது. இதையும் ஆராய்ந்து அறிய வேண்டும்.

பண்டைக்காலத்தில் ஒருவன் வீட்டுவாழ்வில் பெரும் பொழுது கழித்தான். அவன் உலக வாழ்வில் கழித்த நேரம் சிறிதே. அவன் கண்டுவந்த உலகம் : தன் வீட்டிற்கு வந்த விருந்தினர், தன் வாழ்வுக்குத் துணையான சுற்றத்தார், ஊர்ப் பொதுவேலைகளை நடத்திய ஊர்மன்றத்தார் ஆகிய இவர்களே. சில ஆண்டுகளுக்கு ஒருமுறை பொருள் காரணமாகவோ கல்வி காரணமாகவோ வெளிநாட்டுக்குச் சென்றபோதும், போர் காரணமாக வேந்தனின் படையில் சேர்ந்து நாட்டுத்தொண்டு செய்தபோதும், ஓரளவு பரந்த உலகத்தில் பழகும் வாய்ப்புப் பெற்றான். இவ்வாறு காணும் பரந்த உலகம் சில நாட்களின் அளவினதே. அப்

போது வீட்டைவிட்டு வெளியே செல்வதால் அவன் மனம் முன்னிலும் பன்மடங்கு வீட்டு வாழ்க்கையை நாடுவதா யிற்று. எடுத்த கடமை முடிந்ததும் வீட்டை நாடி விரைந்து மீண்டான். இந்நிலைமை அவனுடைய உணர்வை வளர்த்துப் பெருக்கிவந்தது. அவனுடைய துணைவிக்கோ, உலகத்தின் தொடர்பு இதைவிடக் குறைவு. விருந்தோம்பும் அளவிற் கும் சுற்றம் தழுவும் அளவிற்குமே அவள் உலகைக் காண முடிந்தது. தெய்வமும் தொழாமல் கணவனைத் தொழுது எழுந்த அவளுக்கு வீட்டு வாழ்வே ஏறக்குறைய முழுவாழ் வாய் விளங்கியது. அதன் பயனாக அவள் உணர்வே உரு வாக வாழ்ந்தாள்.

இக்காலத்தில் முற்போக்கான ஒருவன் வீட்டு வாழ்வில் உள்ளம் செலுத்தும காலம் மிகக் குறைந்துவிட்டது; உலக வாழ்வில் செலுத்தும் காலமே பெரிதாகிவிட்டது. நாட்டுப் புறங்களில் சிற்றூர்களில் வாழ்வோர் வீட்டுவாழ்வில் சில மணி நேரமேனும் கழிக்க இடம் உள்ளது. நகரங்களில் வாழ்வோர் பலரும் வீட்டிற்குத் திரும்பும்போதே களைத்துத் திரும்புகின்றனர்; உண்டு உறங்கி விழித்தெழுவதற்கே வீட்டைப் பயன்படுத்துகின்றனர்; காலையில் எழுந்ததும் எஞ்சிய சிறிது நேரத்திலும் உலகமே அவர்களின் உள்ளத் தைக் கொள்கிறது; வானொலி என்றும், செய்தித்தாள் என்றும், தபால் என்றும் பல பெயரும் வடிவும் கொண்டு உலகம் அவர்களின் உள்ளத்தில் இடம் பெறுகிறது.

## உலகம் சுருங்கியது

அன்று குடும்ப எல்லை விரிவுடையதாக இருந்தது; செய்யும் கடமைகள் பலவும் குடும்ப எல்லைக்குள் இருந்து செய்யவேண்டிய கடமைகளாகவே இருந்தன. உலகமோ, அன்று எல்லை காண முடியாததாக இருந்தது; எவர்க்கும்

எளிதில் எட்டாததாக இருந்தது. ஆதலின் மக்கள் குடும்ப வாழ்வில் நிலைத்துநின்று உலகை எட்டிப்பார்த்து வந்தனர்.

இன்று, உலகம் சுருங்கிச் சுருங்கி எல்லார்க்கும் எட்டுவ தாகிவிட்டது. குடும்பத்தினுள்ளும் உலகமே நுழைந்து இடமெல்லாம் கொண்டுள்ளது. உலகம் வேறு, குடும்பம் வேறு என்று எல்லை வரையறுத்தலும் அரிதாகிவிட்டது. போக்குவரவுக் கருவிகளும் செய்தித்தாள்களும் வானொலி முதலியனவும் உலகத்தை மிகச் சுருக்கிவிட்டன; உலகத்தை எல்லோர்க்கும் எட்டுமநிலையில் அமைத்துவிட்டன. வீட்டில் ஒரு மூலையில் இருந்தவாறே, பல்லாயிரக்கணக்கான மைல் களுக்கு அப்பாலிருந்து பேசுவோரின் பேச்சை அந்த நொடியிலே கேட்க முடிகிறது; நெடுந்தொலைவில் நிகழும் நிகழ்ச்சியை நிகழும் நேரத்திலேயே காணவும் முடிந்திருக் கிறது. பரந்த பெரிய உலகின் மூலைமுடுக்குகளின் செய்தி எல்லாம் அன்றன்றைக்கே வீட்டினுள் இருந்தவாறே தெளி வாகவும் பிழையின்றியும் செய்தித்தாள்களைக் கையிலேந்திக் கற்று அறிய முடிகிறது. இவற்றால், வீட்டின் எல்லையில் உடல் இருந்தாலும், உலகச் சூழலில் உள்ளம் வாழ நேர் கிறது. இவ்வாறு அறிவியல்முன்னேற்றம், வீட்டுமனத்தை விரிவுபடுத்தி உலகத்தோடு பிணைத்துவிட்டது.

## உள்ளத்தின் குழைவு

இதன் பயனாக விளைந்தது என்ன? பழங்காலத்தில் ஒரு வன் கண்டறிந்தனவும் கேட்டறிந்தனவும் சிலருடைய இன் பமும் துன்பமுமே. இக்காலத்தில் ஒருவன் காண்பனவும் கேட்பனவும் மிக மிகப் பலருடைய இன்பமும் துன்பமு மாகும். சிலருடைய வாழ்க்கையைமட்டும் கண்டு அவர் களின் இன்ப துன்பங்களை உணர்ந்த காலத்தில் மனம் பண் படும் வாய்ப்பு மிகுதியாக இருந்தது; அறிவு வளரும் வாய்ப்

புக் குறைவாக இருந்தது. உள்ளொன்று புறமொன்றாக நடிக்கத் தெரியாத நிலை இருந்தது. இன்பம் உணர்ந்து அமைதிபெற வாய்ப்பு இருந்தது. துன்பம் உணர்ந்து அன்பும் இரக்கமும் வளர்க்க வாய்ப்பு இருந்தது. ஆயின், மிகப் பலருடைய வாழ்க்கையை அறிந்து அவர்களின் இன்ப துன்பங்களை உணரும் இக்காலத்தில், மனம் பண்படும் வாய்ப்புக் குறைந்துவிட்டது; அறிவு வளரும் வாய்ப்பு மிகுந்துவிட்டது. உள்ளொன்று புறமொன்றாக நடிப்பதில் தேர்ச்சி பெற முடிகிறது. எவ்வளவு இன்ப நலன்கள் பெறினும் அமைதி கிடைத்தல் அரிதாகிறது; பிறர் துன்பம் கண்டு உருகும் தன்மை குறைகிறது. சுருங்கக் கூறின், அக்காலத்தில் பெரும்பாலோரின் மனம், குழையும் தளிர் போல் மென்மையுற்று உணர்வுருவாக இருந்தது. இக் காலத்தில் அது மிகச் சிறுபான்மையோரின் தன்மையாகி விட்டது; பெரும்பாலோரின் மனம் உரமான சாழ்போல் வன்மையுற்று மரத்துவிட்டது.

யாரோ ஒருவர் மரம் ஏறி வீழ்ந்து இறந்தார் என்றால் அதைக் கேட்டதும கண்கலங்கி உருகும் தன்மை பெரும பாலோர்க்கு இருந்தது. பூகம்பமோ வெள்ளமோ ஏற்பட்டு ஒரு மாகாணத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்களை அழித்தது என்றால், அதைச் செய்தித்தாளில் படித்தபடியே தேநீர் அருந்திச் சிற்றுண்டி சுவைக்கும் மனப்பான்மையே இன்று பெரும்பாலோர்க்கு உள்ளது. அது மக்களின் குறை அன்று; காலத்தின் போக்கால் நேர்ந்த தடுக்க முடியாத மாறுதல் ஆகும். அன்று ஊரார் சிலர் - சுற்றத் தார் சிலர் - வறுமை உற்று வாடுவதைக் கேட்டு 'நள்ளென் கங்குலும் பகலும் இயைந்து இயைந்து உள்ளம் பொத்திய உரம சுடு கூர்எரி'க்கு ஆளாகி வருந்த நேர்ந்தது; ஊக்க முள்ள இளைஞர் சிலர் அவர்களுக்காக இரங்கி வெளி

நாட்டுக்குச் சென்று பொருள்தேடும் முயற்சியில் ஈடுபட நேர்ந்தது. இன்று சென்னை போன்ற நகரின் நெடுந்தெருக்களில் கணக்கற்ற ஏழைமக்கள் தெருவே வீடாக, மண்ணே பாயாக, சாய்க்கடை மேடையே தலையணையாக, உண்ணல் உறங்கல் குளித்தல் உடுத்தல் முதல் மகப்பேறு குழந்தை வளர்ப்புவரையில் எல்லாம் நிகழ்த்தி வாழும் வறுமையைக் கண்ணாரக் கண்டும், அதே வழியில் மெல்ல நடந்தோ மோட்டாரில் விரைந்தோ செல்கின்றனர்; ஆடம்பரப் பொருள்களை வாங்குவதிலும், உயர்ந்த உணவுவிடுதிகளில் நுழைந்து நுட்பமாகச் சுவைத்து உண்பதிலும், ஆடல் பாடல் கேளிக்கைகளில் அளவின்றி மயங்குவதிலும் கவலையில்லாமல் ஈடுபட்டு அமைதியாக வீட்டுக்குத் திரும்பி அத்தனையும் மறந்து விடுகின்றனர். இத்தகைய வேறுபட்ட நிலையைக் கடந்து சென்று பழம்பாட்டைப் படித்துணர்ந்தால்தான், ஒரு சிலர் துன்பத்தைத் தீர்க்கக் குடும்பத்தை விட்டுப் பிரியும் தலைவனுடைய மனநிலையும் அதைத் தடுக்கத் தயங்கும் தலைவியின் மனநிலையும் தெளிவாக விளங்கும்.

## நகரமும் கிராமமும்

காலப்போக்காலும் அறிவியல் முற்போக்காலும் நேர்ந்துள்ள இந்த மாறுதலை நம்புவதற்கும சிலர் தயங்கக்கூடும். அவர்கள் கண்ணால் கண்டு உணருமாறு தக்க சான்றுகள் இன்றும் உள்ளன. அறிவியல் முற்போக்கால் பெரிய மாறுதல்கள் அடைந்தவை நகரங்களே; கிராமங்கள் அடைந்த மாறுதல்கள் குறைவே. ஆகவே, இன்றுள்ள அமைப்பிலும் உலகப் பிணைப்பு நகரங்களில்மிகுதி; கிராமங்களில் குறைவு. அதனால் நகரமக்கள் உணர்வு குறைந்து அறிவு வளர்ந்தவராக உள்ளனர்; கிராமத்தார் உணர்வுமிகுந்தவர்களாக உள்ளனர். ஈரநெஞ்சம் நகர மக்களிடையே காண்பதற்கு

அரிதாக உள்ளது. கிராமத்தார் பலர்க்கு ஈரநெஞ்சம் இயல்பாக உள்ளது. எடுத்துக்காட்டாக, சென்னைத் தெருவில் ஒரு பிணம் போவதாக வைத்துக்கொள்வோம்; அல்லது, ஒரு வீட்டில் அழுகுரல் கேட்பதாக வைத்துக்கொள்வோம். நிகழ்ந்தது என்ன, யாருக்கு, என்ன காரணம்பற்றி என்று அந்தத் தெருவழியே போவார் கேட்டு உருகுவது அரிது. ஒவ்வொருவரும் பரபரப்போடு தம் தம் கடமையை நினைந்து கொண்டு மனத்திலோ முகத்திலோ ஒரு மாறுதலும் இன்றி, வழியில் ஒன்றும் நிகழாத நிலை போலவே நடந்து சென்றுகொண் டிருப்பர்; கிராமத்தில் ஒரு வீட்டில் அழுகுரல் கேட்பதாயின், ஊரார் பெரும்பாலோர் உடனே அந்த வீட்டெதிரே கூடிவிடுவர்; அவர்களின் முகத்தில் எல்லாம் கவலை தேங்கும். சென்னையில் டிராம் வண்டியில் சிக்குண்டு ஒருவர் மாண்டார் என்றால், அதை அரைகுறையாகப் பார்த்தவாறே, அல்லது கேட்டும் கேளாதவாறே, பலரும நகர்ந்துகொண் டிருப்பர்; கிராமத்தில் ஒரு குழந்தை திண்ணைமே லிருந்து விழுந்து பல் உடைந்தது என்றால், அக்கம்பக்கத்தார் அனைவரும் வந்து குழந்தை விழுந்த காரணம் கேட்டு, பெற்றோருக்கு ஆறுதலோ, அறிவுரையோ கூறி, குழந்தையையும் தட்டிக்கொடுத்து, அதன் உடைந்த பல்லையும் பார்த்துச்செல்வர். காரணம் என்ன? நகர மக்களின் மனத்தில் பரந்த உலகம் குடிபுகுந்து உணர்ச்சிக்கு உரிய இடத்தைக் குறைத்துவிட்டது; கிராமத்தாரின் மனத்தில் இன்னும் உலகம் அவ்வளவு குடிபுகவில்லை. நகரத்தார்க்குப் பிறர் துன்பம் கேட்டுக் கேட்டு மனம் மரத்து விட்டது; துன்ப நிகழ்ச்சிகள் அன்றாடச் செய்திகளாய்ப் பழகிவிட்டன. கிராமத்தாரின் மனம் இன்னும் காழ்வுறாமல் குழைவு உடையதாகவே உள்ளது. இந்த வேறுபாடு இன்றும் மறுக்கவும் மறக்கவும் முடியாத சான்றாக

உள்ளது. இது நகர வாழ்விற்கும் கிராம வாழ்விற்கும் உள்ள வேறுபாடு. பழங்கால வாழ்வுக்கும் இக்கால வாழ்வுக்கும் உள்ள வேறுபாடு இதனினும் பெரிதாகும்.

## தாயும் மகளும்

இத்தகைய மாறுதல்கள் குடும்பத்திற்கு வெளியே மட்டும் அல்ல, குடும்பத்திற்குள்ளும் நிகழ்ந்துவருகின்றன. பெற்ற தாய், முதல் முறையாகத் தன் மகளைப் புக்ககத்திற்கு அனுப்பும்போது கண்ணீர் சொரிந்து கலங்கும் காட்சி மேற்குநாடுகள் அறியாத தொன்று. காரணம் என்ன? இந்த நாட்டில் பெற்ற தாய்க்கும் மகளுக்கும் உள்ள முதிர்ந்த அன்பும் நெருங்கிய பழக்கமும் வெளியுலகை அறியாத வீட்டு வாழ்வும் அதனால் பெற்றுள்ள குழந்தை மனமும் அத்தகையவை; மேற்கு நாட்டுக் குடும்பங்களில் உள்ள தாயரும் மக்களும் இந்நிலையில் இல்லை. வயது வந்தவுடன் ஆண்மக்களைப் போல் பெண்மக்களும் தம் தம் வாழ்வை உரிமையுடன் நடத்தத் தொடங்குகின்றனர்; பெற்றோரும் ஆண்மக்களைப் போலவே பெண்மக்களையும் கட்டுப்படுத்தாமல் நடத்துகின்றனர். அன்றியும், திருமணத்திற்கு முன்னரும், பள்ளிக்கூட வாழ்விலோ, கல்லூரி வாழ்விலோ, பெற்றோரின் தொடர்பு குறைந்த நிலையிலேயே மக்கள் வளர்கின்றனர். ஆதலின், நெஞ்சக் கலப்பும் நெகிழ்வும் குறைந்துள்ள தாயார், மக்களின் பிரிவால் கலங்கிக் கண்ணீர் சொரிவ தில்லை.

மேற்குநாட்டைப் பின்பற்றிய கல்விமுறையும் பழக்க வழக்கங்களும் இந்த நாட்டிலும் நகரங்களில் சில குடும்பங்களில் பரவியுள்ளன. பெண்மக்களைக் கல்விநிலையங்களை ஒட்டிய உணவுவிடுதிகளில் தங்கிப் படிக்கச்செய்யும் குடும்பங்கள் பல இப்போது உள்ளன. அத்தகைய குடும்பங்களில்

பெண்கள் புக்ககம் செல்லும்போது கலங்கிக் கண்ணீர் விடும் காட்சி இல்லை; அது நாகரிகக் குறைவாகவும் நாட்டுப் புறத்துப் பழக்கமாகவும் கருதப்படுகிறது. வருங்காலத்தில் படிப்படியாக மாறி மாறி ஏறக்குறைய எல்லாக் குடும்பத்திலும் கண்ணீர்விட்டுக் கலங்காத தாயரும் பெண்மக்களுமே காணப்படுவர். அப்போது அக்காலத்தினர் சங்கப் பாட்டுக்களில் வரும் தாயரின் கண்ணீரை உண்மை என்று நம்புவரோ! "பெற்ற மகளாயினும் என்ன? உற்ற காதலனோடு செல்வதில் தீங்கு என்ன! அதற்காக ஏன் கலங்கவேண்டும்! மகளுடம்பிற்கு நோய் இல்லை, பெருந்துன்பம் இல்லை, இடர் ஒன்றும் இல்லை, இவ்வாறு இருக்கும்போது இந்தத் தாய் கண்ணீர்விடக் காரணம் என்ன? இது பொய்யான கற்பனை" எனக் கழிப்பர். ஆயினும் பாட்டில் கூறப்படுவது பொய்யாகிவிடாது. அக்கால நிலை இன்னது என்று உணர வல்லார்க்குத் தாயின் கலக்கம் உண்மையே என்பது தெளிவாகும்.

## ஊர் முதலியவற்றைப் பிரிதல்

சிறுவனாக இருந்தது முதல் வெளியூர்க்குச் சென்றறியாமல் தன் சிற்றூரிலேயே இருந்து அங்கேயே கல்வியும் கற்றுத் தொழிலும் ஆற்றி வாழ்வு நடத்திவந்த ஒருவன், அந்தச் சிற்றூரைவிட்டு வேறு ஊர்க்குச் சென்று வாழ நேர்ந்ததாக வைத்துக்கொள்வோம். அப்போது அவன் கலங்காமல் பிரிய முடியுமோ? கண்ணீர் விட்டுக் கலங்கியே பிரிவான். பறம்புமலையை விட்டுப் பிரியும் கபிலர், "நீர் வார் கண்ணேம் தொழுது நிற்பழிச்சிச் சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே" என்று கலங்கியதுபோல், அவனும் அந்தச் சிற்றூரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கண்ணீர் சொரிந்து செல்வான். சென்னையில் பிறந்து

வளர்ந்து வாழும் ஒருவனுக்கு இந்த மனநிலை வராது. அவன் சென்னையை விட்டுப் பிரிந்து செல்ல நேரினும் இவ்வாறு கண்ணீர்விட்டுக் கலங்காமல், ஒரு சந்தையிலிருந்து மற்றொரு சந்தைக்குச் செல்வதுபோல் பிரிவான். முன்னவன் உணர்வு வேறு; பின்னவன் உணர்வு வேறு. காலம் செல்லச் செல்ல, சிற்றூர்மக்களும் அடிக்கடி வெளியூர்க்குச் சென்று சென்று பழகிவிட்டால், பிறந்த ஊர்க்காகக் கண்ணீர் விடும் நெகிழ்ச்சி பழங்கதையாய்ப் போகும்.

சிற்றூரில் சொந்த வீடு என்று ஒன்று உடையவராய் அதில் நெடுங்காலம் வாழ்ந்து, பின்னர் வந்த வறுமை காரணமாக அதை விற்க நேர்ந்தால், அந்தக் குடும்பத்தார் கலங்குவர்; குடும்பத் தலைவி கண்ணீர் விடுவாள். ஆயின், சொந்த வீடு என ஒன்று இருந்தறியாமல், காலமெல்லாம் வாடகைவீடுகளில் மாறிமாறிக் குடியிருந்து வாழ்ந்தவர்க்கு அந்த மனநிலை வருமோ? சொந்தவீடு என ஒன்று இல்லாமல் வாழ்ந்த வாழ்வில் வீட்டை விட்டுப் பிரியும்போது கலங்கும் கலக்கமும் பழங்கதையாய்ப் போகும்.

ஒரு சிற்றூரில் ஒரு குடும்பத்தார் ஒரு பசுவை வளர்த்துப் பால் கறந்து பயன்பெற்று முடிந்தபிறகு, அதை விற்க நேர்ந்தால் எவ்வளவு வருந்துவர்? குடும்பத் தலைவனைவிட தலைவியே மிகுதியாகக் கண்ணீர்விட்டு வருந்துவாள். பெற்றோரைப் போலவே பழைய உணர்வுடன் பண்பட்ட மகள் ஒருத்தி இருப்பின், அவள் அந்தப் பசுவின் பிரிவால் பல நாள் வருந்தி மெலிதலும் உண்டு. ஆயின், பெரிய நகரங்களில், பசுவைப் பற்றிக் கவலையின்றிக் காசு கொடுத்துப் பால் பெறுவோரும் வாணிகத்திற்காகப் பசுவை வளர்த்துப் பால் கறந்து விற்போருமாக உள்ள குடும்பங்களில் ஒருவரும் இவ்வாறு கலங்கி வருந்துவதில்லை. அவர்களுக்கு இது விளங்காத கதையாகும்.

## ஆழ்ந்த உணர்வு

இவற்ருல் விளங்கும் உண்மை என்ன? ஆழ்ந்த உணர்வு என்பது பரந்து சென்று பல பொருளை அறிந்து நாடும் மனத்தில் வளர்வது அன்று; குவிந்து நின்று ஒரு சில பொருளோடு அமைதியுறும் மனமே ஆழ்ந்த உணர்வின் வாழ்மனை. பழங்காலத்து வாழ்க்கை, மனம் பரந்து பல பொருளை நாடுவதற்கு இடம் இல்லாதது; ஆழ்ந்த உணர்வை வளர்த்தது. இக்காலத்து நகர வாழ்க்கை அதற்கு நேர்மாருனது; பரந்த உணர்வை வளர்ப்பது. ஆழ்ந்த உணர்வு பரந்து நில்லாததுபோல், பரந்த உணர்வு ஆழ்ந்து நிற்பது இல்லை. ஆழமும் அகலமும் உணர்வுக்கு ஒருங்கே அமைவது இல்லை. ஆழமுள்ள இடத்தில் அகலம் காண்பது அரிது. அகலம் உள்ள இடத்தில் ஆழம் காண்பதும் அரிதே. விதிவிலக்காக இரண்டும் ஒருங்கே அமைவது மிகச் சிறுபான்மையே.

## புதிய அமைப்பு

பழைய அமைப்பு மாறிப் புதிய சமூக அமைப்பு வந்துள்ளது. ஒருவகை நாகரிகம் மாறி மற்ருெருவகை நாகரிகம் உருக்கொள்கிறது. உணர்வைப் பெருக்கும் வீட்டு வாழ்வு சுருங்கி, அறிவைப் பெருக்கும் உலக வாழ்வு மிகுகிறது. இந்த நிலையில் எது சிறந்தது என்று ஆராய்தலோ இருந்ததைக் காக்கும் பொருட்டு வருவதைத் தடுத்தலோ பயனில்லாத முயற்சிகளாகும். வாழ்க்கையை யந்திரமாக்கும் கடிகாரத்தைக் கூரைமேல் எறியவேண்டும் என்று ஏங்குவதாக ஆங்கிலநாட்டு அறிஞர் ஸ்டீவென்ஸன் (R. L. Stevenson) போல் கூறிமகிழலாம். எண்ணுவதைத் தவிரச் செயலில் மாறுதல் ஒன்றும் செய்திட முடியாது. பழமைப் பண்பாட்டை மறவாமல் போற்றிப் புதிய அமைப்பில்

வாழக் கற்றால் போதும்; அதற்கே பழங்காலத்துப் பாட்டு நல்ல துணையாய் உதவும்.

பெரிய தோப்பு ஒன்று அழிந்து, அதன் பெருமரங்களால் தூணும் கழியும் பலகையும் உருவாகி, அழகிய அரண்மனை அமைகிறது. அரண்மனை அமையும்போது காண்பவரின் நிலையே நம் நிலை. அரண்மனையைத் தோப்பு என்று நாம் கூறுவோமாயின், அது தவறே அன்றோ? அதுபோலவே, இக்காலத்துக் குடும்பத்தினர் பழங்காலத்து உணர்வுமிக்க காதல் வாழ்க்கை வாழ்கின்றனர் என்று கூறுதலும் தவறே ஆகும். தோப்பைக் காணாமல் அரண்மனையைமட்டும் கண்ட சிலர், தோப்பு இருந்ததில்லை என்று கூறுதலும் தவறே. அதுபோலவே, இக்காலத்து உணர்வு குறைந்த குடும்ப வாழ்க்கையைக் கண்டவர், பழம் பாட்டில் காணும் காதல் வாழ்வு வெறுங் கற்பனை எனக் கூறுவதும் தவறே ஆகும்.

## கற்பனை வகை

கற்பனை இருவகைப்படும்; அவை உண்மைக் கற்பனை, வெறுங் கற்பனை என்பன. உள்ளத்தையே சிறப்பித்து உயர்வுநவிற்சியும் அளவாகக் கூட்டிக் கூறுவது உண்மைக் கற்பனை. இல்லதைப் புனைந்து உயர்வுநவிற்சி வரம்பு கடந்து சேர்த்துக் கூறுவது வெறுங் கற்பனை. 'மலரும் முல்லையும், ஒலிக்கும் ஆயன் குழலும் மாலைக்காலம் இது என்று உணர்த்தாவிட்டால் வருந்தமாட்டேனே' என்று காதலி நெக்குருகி வருந்துவதாகக் கூறுவது சுவை குறைந்த உண்மைக் கற்பனை. திங்களின் தண்ணிலவைப் பார்த்து 'வெயிலாய் எரிக்கிறதே' என்றும், சந்தனம் பூசும் தோழியரைக் கண்டு 'செந்தழலைப் பூசுவது என்னோ' என்றும் காதலி கதறுவதாகக் கூறுவது சுவை மிக்க

வெறுங் கற்பனை. பிரிவாற்றாமையால் நைந்துருகும் தலைவி, 'இருந்த மாநிலம் செல்லரித்திடவும்' எழாமல் சோர்ந்து கிடந்தாள் எனக் கூறுவது உண்மைக் கற்பனை. 'யானைப் படை வந்திறங்கிக் குடித்த காரணத்தால் பேராறு வற்றி நீரற்றுக் கடலை நோக்கி ஓடுதலும் நின்றது' எனக் கூறுவது வெறுங் கற்பனை.

கலையுலகால் பயன் காண விரும்புவோர் உண்மைக் கற்பனையும் வெறுங் கற்பனையும் பகுத்துணர்ந்து, உண்மைக் கற்பனை சுவை குறைந்த தாயினும் அதையே போற்றி உணரல் வேண்டும். இன்றேல் கலை பண்பாட்டுக்கு உரிய சிறந்த கருவி ஆகாமல், பொழுது போக்கிற்கு மட்டும் உரிய இழிந்த கள் ஆகும். சுவை குறைந்ததே ஆயினும் நறு நெய்யால் — நல்லாவின் நெய்யால் — செய்த சிற்றுண்டியா என்று ஆராய்ந்து போற்றி, பிற நெய்யால் செய்தது சுவை மிக்கதே ஆயினும் தீயது எனத் தொடாமல் ஒதுக்கும் திறன் வாய்ச்சுவை அளவில்மட்டும் கொண்டவர், அதனி னும் சிறந்த செவிச்சுவை யாகிய பாட்டுக் கலையில் பகுத் துணர்ந்து போற்றும விருப்பது நன்றன்று. செவியிற் சுவை உணரா வாயுணர்வின் மக்களாய் வாழ்வது நாகரிகமும் அன்று.

## வாழ்க்கை — பாட்டு

சங்கப் பாட்டுக்கள் உண்மைக் கற்பனை அமைந்தவை என்பது மேற்கூறியவாறு பழங்கால வாழ்க்கை நிலையை ஆராய்ந்து உணர்ந்தால் எளிதில் விளங்கும்.

பாட்டைக் கற்றுப் பயன் காண்போர் மற்றொன்றும் கருதல் வேண்டும். பாட்டில் காணும் பழங்காலப் பண் பாட்டைப் பெற முயலவேண்டுமே அல்லாமல், பழங்கால வாழ்க்கைநிலையே திரும்ப வர வேண்டும் என்று ஏங்குதல்

கூடாது. தோப்பின் பெரும் பகுதியை அழித்துவிட்டு அரண்மனையின் பெரும்பகுதியை அமைத்துள்ள நிலையில், முன்போல் தோப்பே வேண்டும் என ஏங்குவதால் பய னில்லை; தோப்பால் பெற்று வந்த தண்ணிழலை எவ்வாறே னும் பெறவேண்டும் என முயல்வதே கடமை.

அரண்மனை அமைத்த பிறகும், தோப்பின் அரும் பயன் கண்ட சிலர் மரநிழல் நன்மை தருவதை மறவாது நாடுவர் அல்லரோ? அவர்கள் அந்நிலையில் என்ன செய் வர்? அரண்மனையைச் சுற்றி நிழல் தரும் மரங்களையும் அழகு தரும் பூங்கொடிகளையும் வைத்து வளர்த்து, வேண்டும்போது அந்த நிழலில் அமர்ந்து அழகைப் பருகி உடலும் உள்ளமும் குளிரப் பெறுவர். அதுபோலவே, புதிய அமைப்பின்கீழ் வாழ்வோர் தூய நெஞ்சால் பெறும் இன்ப அமைதியை மறவாமல் போற்றி, அதன் பொருட்டுப் பேரெல்லையான உலகக் குழப்பத்திலிருந்து ஒதுங்கி வாழும் சிற்றெல்லையைத் தாமே அமைத்துக் கொள்ளல் வேண்டும்; வீட்டின் எல்லைக்குள் உள்ளம் கலந்து பழகும் காதல் துணையைத் தேடி வாழ்ந்து உணர்வைப் பண்படுத்திக்கொள்ள வேண்டும். அறிவும் உணர்வும் ஆகிய இரண்டும் வேண்டும் என்று தாமே தெளிந்து, ஒருபுறம் உலக வாழ்க்கை அறிவை வளர்க்க மற்றொரு புறம் காதல்வாழ்க்கை உணர்வைப் பண் படுத்த வாழவேண்டும். அவ்வாறு அமைந்து திருந்திய நல் வாழ்க்கையின் அனுபவத்தால் உயர்ந்த பாட்டு உணரப்படு வது எளிதாகும்.

★

# 3. புது விளக்கம்

## அவன் நெஞ்சம்

இனி, பழங்கால வாழ்க்கையை உணர்ந்து இப்பாட்டு என்ன கூறுகிறது என்று காணின், உண்மைப் பொருள் உணர்தல் எளிதாகும்.

இல்வாழ்க்கைக்கு உரிய பொருள்வளம் சுருங்கியது. விருந்தினர்க்கும் சுற்றத்தார்க்கும் உதவி மகிழும் வாய்ப்புக் குறைந்ததே என்று தலைவனும் தலைவியும் வருந்தினர்.

திடீரென்று ஒருநாள் காலையில் தலைவன் வீட்டை விட்டுப் புறப்பட முயலவில்லை. அவன் வெளிநாட்டிற்குச் சென்று வாணிகம் செய்தலைக் குறித்துச் சிலநாள் தனக்குள் எண்ணி எண்ணிக் கலங்கினான். "பொருள் தேடுவதற்காக நான் வீட்டையும் நாட்டையும் விட்டுச் சென்றால், திரும்பிவர எத்தனை திங்கள் ஆகும்? அதுவரையில் அவள் என்னைப் பிரிந்து எவ்வாறு ஆற்றியிருப்பாள்? அவள் வருந்திவருந்தி ஊணும் உறக்கமும் குறைந்து மெலிவாளே! இவ்வாறு அவளைத் துயருறச் செய்துவிட்டு வடநாட்டிற்குச் சென்று பொருள் தேடவும் வேண்டுமோ? என்ன வாழ்க்கை இது! என்ன உலகம் இது! இல்வாழ்க்கையில் ஒன்றி இருந்து வாழ்வதற்கு என்று அமைந்த நாங்கள் இந்தப் பொருள் முயற்சியால் பிரிந்து வருந்துவதா? நமக்காக வகுக்கப்பெற்ற பொருளைத் தேடப்போய், பொருள் முயற்சிக்காக நம் வாழ்க்கையைப் பலியிடுவதா? என்னைத் தவிர வாழ்க்கை அறியாத ஒருத்தியைக் கலங்கி வருந்த விட்டுவிட்டு, நான் தனியே போய்ப் பொருள்

தேடி மகிழ்வதா? இவள் இங்கே வருந்துவதை நினைத்துக் கொண்டால் அங்கே பொருள் முயற்சியில் ஈடுபடவும் மனம் இருக்காதே. இவள் இனிது இருந்தால்தானே இல் வாழ்க்கை! இல்வாழ்க்கை இருந்தால்தானே விருந்தோம்பல், சுற்றம் தழுவல், எல்லாம்! இவற்றிற்காகத்தானே பொருள் தேடும் முயற்சி! ஆம்! எல்லாவற்றிற்கும் அடிப்படையான இவள் வருந்திக் கெடுமாறு விட்டுவிட்டு நாம் தேடும் பொருள் எதற்காக? எந்த வாழ்க்கைக்காக? இவளிடமே சொல்லிவிடலாம்; சொல்லிக் கேட்கலாம். எப்படியாவது சில திங்கள் பொறுத்துக்கொண் டிருக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். ஆனால் செல்லும் பாலைவழி பொல்லாதது என்று அறிவாளாதலால் இசையமாட்டாள்; அத்தகைய கொடிய வழியில் போய் வாழ்க்கைக்கு இடர் தேடிக்கொள் வதைவிட எளிய வாழ்க்கையே மேற்கொண்டு இயன்றவரை யில் பிறர்க்கு உதவியாக வாழலாமே என்று கூறித் தடுப்பாள். இவள் எண்ணுவதுபோல் அந்தப் பாலைவழி பொல்லாத வழி, இடர் மிகுந்த வழி என்றே எல்லோரும் கூறுகின் றனர். உண்மையாக இருக்கலாம். இருந்தாலும் என்ன? அந்த இடர்களைக் கண்டு அஞ்சுவதா? அவற்றை நினைத்து நல்ல முயற்சியைக் கைவிடுவதா? அந்த இடர்கள் என்னை என்ன செய்யும்? தமிழ்நாட்டு அறிவும் வீரமும் என் இரத் தத்தில் ஊறியிருக்கும்போது எந்த இடர் என்னை என்ன செய்யும்? என்னவோ வெப்பமாம், கொடிய வெப்பமாம்! நிழல் இல்லையாம், நீரும் இல்லையாம்! அந்தக் கொடுமையைக் கடந்து செல்லத் தயங்கி, உள்ளூரில் இந்த வறுமைத் தீ சுற்றத்தாரை எல்லாம் பற்றி எரிப்பதைக் கண்ணால் பார்த் திருப்பதா? அதைவிட இந்த நிலை கொடியது அன்றோ? ஆறலைகள்வர் பொல்லாதவராம். பதைக்கப் பதைக்கக் கொன்று பொருள் பறிப்பாராம். அறநெறியில் வளர்ந்து

உயிர் தாங்கியுள்ள நான் அத்தகைய பாவிகளைக் கண்டு அஞ்சுவதா? அந்த அச்சத்தால் விருந்தோம்பப் பொருள் வளம் இல்லாமல் தயங்குவதா? முயற்சிக்கு உரிய ஊக்கமும் உரமும் என்னிடம் இருந்தும், என்னை நாடி வந்தவர்க்கு உதவி இல்லை என்று மறுப்பதா? அந்தக் கள்வருக்கு அஞ்சி நான் ஒரு கள்வன் ஆவதா? அஞ்சேன், தயங்கேன். எனக்கு அஞ்சாமை உள்ளது, துணிவு உள்ளது. ஆனால் இவளைத் தேற்றுவார் யார்? என்ன கூறினும் அந்த வழியில் என்னை அனுப்ப இசைய மாட்டாளே. இவள் நெஞ்சம் இளகிய நெஞ்சம். என்ன உறுதி கூறினும் கலங்குவாள். என் அறிவும் திறமும் இவளுக்குத் தெரியும். என் வீரத்தில் இவளுக்கு உள்ள நம்பிக்கை வேறு யாருக்கு உள்ளது? ஆயினும் கலங்குவாள். தான் பெற்ற குழந்தையைக் காப்பதுபோல் என்னைக் காக்கிறாள்; அந்தத் தாய்மனம் இவளைக் கோழை ஆக்குகிறது. இவளைத் தேற்றுவதற்கு நான் என்ன செய்வேன்? தேற்ற வழி இருந்தால் நானேயே பிரிந்து செல்வேன். பாலை வழியைக் கடப்பது எனக்கு எளிது; ஆனால் இவளைப் பிரிவது எப்படி? (அக. 193). இவள் எப்படியாவது மனம் இசைந்தால் நான் பொருள் முயற்சியை விரைவில் முடித்து வெற்றியோடு திரும்புவது திண்ணம். ஆனால் என்ன செய்வேன்?" என்று சிலநாள் தனக்குள் கலங்கினான்.

## அவள் நெஞ்சம்

இவ்வாறு இரவும் பகலும் தலைவன் தன்னுள் கலங்கி வாடுவதை (அக. 279) அவனுடைய சோர்வையும் முகக் குறிப்பையும் கண்டு தலைவி அறிந்துகொண்டாள். "என்ன காரணமோ தெரியவில்லை. எனக்குத் தெரியாமல் ஏதோ மறைத்து வருந்துகிறீர்" என்று மெல்லக் கூறிக் கேட்டாள்.

இனித் தன் எண்ணத்தை மறைக்க வழி அறியாமல் மெல்லச் சொன்னான் தலைவன். அவளுடைய கூந்தலைத் தடவியவாறே தன் அன்பான வேண்டுகோளைத் தெரிவித்தான் (அக. 155). கைவளையலைத் திருத்தியவாறே அவள் முகத்தைப் பார்த்து, "நான் பிரிந்து செல்லும் காரணம் உனக்குத் தெரியும். நம் வாழ்க்கை இழிந்த தன்னல வாழ்க்கையாக இருக்காமல் பிறர்க்கு உதவி மகிழும் நல்வாழ்க்கையாக இருக்க வேண்டும் அன்றோ? அதனால் சிலநாள் எப்படியாவது நீ பொறுத்துக்கொண் டிருந்தால் போதும்" என்றான் (அக. 173).

## புதிய அமைப்பு

தலைவி, அவனுடைய கருத்தை அறிந்தபின் சிலநாள் எண்ணி எண்ணிப் பெருமூச்சு விட்டாள். பக்கத்து வீட்டாரும், அவ்வப்போது வீட்டிற்கு வந்து சென்ற விருந்தினரும், பிறரும் அந்தப் பாலை வழியின் கொடுமையைப் பற்றிச் சொன்னவற்றை எல்லாம் நினைத்துக்கொண்டாள். அவளுடைய உள்ளத் துயரை உணர்ந்த தலைவனும் அதைவிட்டு வேறு பேச முயன்றான். எனினும் அவளுடைய கவலை குறையவில்லை. அவள் அதை மறந்தவள்போல் தன் கடமைகளைச் செய்யத் தொடங்கினாள்; ஆனால் தலைவன் பிரிவைப் பற்றியே ஓயாமல் நினைந்து நினைந்து வருந்தினாள். "இதை ஏன் கூறினேன்?" என்று தலைவனும் தன்னையே நொந்து கொண்டான்.

சில நாள் கழித்துத் தலைவியின் உள்ளம் ஒருவாறு ஆறுதல் அடைந்தது. "எளிய வாழ்வே போதும். வாழ்க்கைக்கு இடையூறான பயணத்தை மேற்கொண்டு பொருள் திரட்டிப் பெருவாழ்வு வாழ்வதைவிட, வீட்டில் இருந்து இயன்றவரையில் பிறர்க்கு உதவிசெய்து வாழலாம்.

இதையே இவரிடம் சொல்லிப் பயணத்தைத் தடுக்க வேண்டும்" என்று ஒரு முடிவுக்கு வந்தாள். ஆயினும் தலைவன் சொன்ன காரணங்களை நினைந்தாள். "உண்மைதான். நம்மைச் சார்ந்தோர் துன்புற, நாமமட்டும் இன்புறுவது முடியுமா? இவருடைய எண்ணம் நல்லெண்ணம்தான். வறுமையுற்றோரின் துன்பத்தைத் தீர்க்காமல் முயற்சியைக் கைவிட்டு இருப்பது இவரால் முடியாது. எல்லாவற்றிற்கும் இந்த ஆண்டில் வந்த பஞ்சமே காரணம். பஞ்சம் இல்லை என்றால், போதிய மழை பெய்து விளைந்திருந்தால், இந்த வறுமையே வந்திருக்காது. சுற்றத்தாரும் இவ்வளவு வருந்தவேண்டி யிருக்காது. இவரும் பிரிந்து வெளிநாட்டுக்குச் செல்ல எண்ணியிருக்கமாட்டார்" என்று தனக்குள் காரணங்களை எண்ணிப் பார்த்தாள். ஒருநாள் தலைவனிடம் தானே பேசத் தொடங்கி, "வறுமை வந்தாலும வேறு என்ன வந்தாலும் பிரியாமல் வாழ்வதே வேண்டும். என்னைத் தனியே விட்டுத் துறந்து நீர்மட்டும் பாலைவழியில் பிரிந்து செல்வது அறநெறி ஆகாது" என்றாள். மீண்டும் தானே, "வறியவர்க்கு உதவி செய்தல் நம் கடமை என்பதை நான் மறக்கவில்லை. ஆயினும் அதன்பொருட்டுக் கொடிய பாலைவழியில் சென்று உயிர் வாழ்க்கைக்கே இடையூறு தேடலாகாது. இங்கிருந்தே எளிய வாழ்வு வாழ்ந்தாவது நம்மைச் சார்ந்தவர்க்கு இயன்ற உதவி செய்வோம்" என்றாள். தலைவன் எல்லாவற்றையும் கேட்டபின், "உன்னைச் துயருறச் செய்துவிட்டு நான் பிரிந்து செல்வேனா?" (அக. 75) என்று கூறித் தேற்றினான். "இனி இவர் பிரிந்து செல்லமாட்டார்" என்று தலைவி தன்னுள் எண்ணித் தன் கவலை தீர்ந்து இருந்தாள். (குறு. 43.)

தலைவனின் முயற்சியையும் தலைவியின் கவலையையும் அறிந்த தோழி ஒருநாள் அவன் இருக்கும் வேளை பார்த்து

வீட்டிற்கு வந்து, "ஐய! உன்னை விரும்பி வாழும் காதலி இருக்கிறாள். அவள் பெற்றெடுத்த மகன் இருக்கிறான். அவனுடைய குழந்தைச் சிரிப்பைப் பார்த்துக்கொண்டு இங்கே வாழ்வதைவிட, நீ நாட்டைவிட்டுச் சென்று தேடும் செல்வம் சிறந்ததோ?" என்று கேட்டு ஒருவாறு குடும்பத்தில் அமைதி நிலவச் செய்தாள் (ஐங். 309).

இன்னும் சிலநாள் கழிந்ததும், சுற்றத்தாரின் துன்பத்தைக் காணக் காணத் தலைவனுடைய நெஞ்சம் முன்போல் நெகிழத் தொடங்கியது. வீட்டைவிட்டுப் பிரிந்து செல்லத் தயங்கி வாழும் வாழ்வும் ஒரு வாழ்வோ? நம்மைச் சேர்ந்தவர்க்கு உதவி செய்ய முடியாமல் இப்படி வாழ்வது தகுமோ" (அக. 231) என்று தன் வாழ்வை வெறுத்துக் கொண்டான். உடனே மீண்டும் தலைவியின் பிரிவாற்றாமை நினைவுக்கு வர, "அவளை எவ்வாறு தேற்றுவது?" என்று இருதலைக்கொள்ளி எறும்புபோல் கலங்கினான் (அக 339). தன் துணைவியிடம் பேசும்போது பயணத்தைப் பற்றிக் குறிப்பிடாமல், "பிறர் துன்பத்தைத் தீர்க்கும் நல்ல எண்ணம் நமக்கு இருக்கிறது. இருந்தும் பயன் என்ன? அருள் எவ்வளவு இருந்தும் பயன் இல்லை. பொருள் இல்லாதவர்க்கு அருள் நெஞ்சம் என்ன செய்யும்?" என்றான் (அக. 335). மறுபடியும், "இரத்தல் துன்பமானது என்று சொல்லுவார்கள். இரக்கப்படுதலும் துன்பமானதே. இரந்த வறியவர்க்கு உதவி செய்து அவர்களின் மகிழ்ந்த முகத்தைக் காண முடியாதபோது இரக்கப்படும் நிலைமை துன்பமானதுதான் (குறள். 224). இன்னும் எண்ணிப் பார்த்தால், பொருள் இல்லாதவரின் இல்வாழ்க்கை இரத்தலை விட இழிவானதும் ஆகும்" (குறு. 283) என்று வருந்தினான்.

இதைக் கேட்ட தலைவி அவன் மீண்டும் பொருள்தேடும் முயற்சியை நினைந்து வருந்துவதை உணர்ந்தாள். தன்

தந்தை இளைஞராயிருந்தபோது ஒருமுறை அவ்வாறு வெளி நாட்டுக்குச் சென்று பொருள் தேடி மீண்டதைப் பற்றித் தாய் கூறியதை நினைத்தாள். தன் கணவனின் தந்தையும் அவ்வாறு ஒரு முறை சென்று வந்ததாகக் கேட்டறிந்ததை யும் நினைத்தாள். "வாழ்ந்தால் பிறர்க்குப் பயன்பட வாழ வேண்டும்; பிறர்க்குப் பயன்பட்டுச் சாகவேண்டும் ; கூற்று வனுக்கு ஆளாகிச் சாகக்கூடாது" என்று கணவன் சில திங்களுக்குமுன் சொல்லியதையும் (அக. 61) நினைத்துக் கொண்டாள்.

## தோழி தேற்றுதல்

இவ்வாறு நினைந்திருந்தபோது பக்கத்து வீட்டிலிருந்த தோழி வந்து, அவளுடைய துயர நிலையை அறிந்து காரணம் கேட்டாள். உடனே அவள் தோழியைப் பார்த்து, "இந்த ஆண்களின் பண்பை எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் எவ்வளவோ அன்புடன், ஆர்வத்துடன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட் டிருப்பினும், பொதுநன்மையான செயல் செய்ய வேண்டும் என்ற முயற்சி அவர்களை விடுவ தில்லை. மனத்தில் இந்த நற்செயலின் தூண்டுதல் இருந்தே வருகிறது. அதனால் ஒருநாள் தவறினும் மற்றொருநாள் பொருள் தேடவேண்டும் என்று நம்மைவிட்டுப் பிரிந்து செல்வர்" என்றாள் (நற். 24). கேட்ட தோழி பாலை வழி யின் கொடுமையை அவளுக்கு எடுத்துப் பேசலானாள். தலை வியின் உள்ளத்துயர் மீண்டும் வெளிப்பட்டது. தோழி அவளுடைய கண்ணீரைக்கண்டதும்,தன்பேச்சின்போக்கை மாற்றி, "அழாதே! ஆடவர்க்குக் கடமையே உயிர் என உரைத்த அவரே, மகளிர்க்கு ஆடவரே உயிர் என் பதையும் உணர்ந்துரைத்தார் அல்லரோ? ஆதலின் பிரிந்து செல்லமாட்டார். நீ அழ வேண்டா" என்று தேற்றினாள் (குறு. 135).

## இசைந்திருத்தல்

முன்போல் அவ்வளவு துயரமும் கலக்கமும் தலைவியிடம் இல்லாததைக் கண்ட தலைவன் ஒரு சிறிது ஆறுதல் அடைந்தான். "எல்லா வகையிலும் நம் வாழ்க்கைக்கு உகந்த துணையாய் விளங்கி, நாம் தொடங்கும் முயற்சியில் எல்லாம் ஆர்வம் கொள்ளும் துணைவி இதற்குமட்டும் தடையாக இருப்பாளோ ? இவள் நம் பிரிவிற்கு உடன்படுவாள். சில திங்கள் பிரிந்திருக்கவும் இசைவாள். சிறிது வருந்துவாள் என்றாலும் மனத்தைத் தேற்றிக்கொள்வாள். பெருந்துயர் எய்தி அழியாமல் தன்னைக் காத்துக்கொள்வாள்" (குறு. 43) என்று ஓரளவு நம்பிக்கையும் கொண்டான். "இப்போது இவள் முன்போல் தனியாகவும் இல்லை. என்னைப் பிரிந்தாலும் குழந்தையோடு இருந்து கவலையை மறப்பாள். இந்த அருமை மகன் இவளுக்குத் துணையாக இருப்பான்" என்று எண்ணிப் பிரியத் துணிந்தான்.

இவ்வாறு பலநாள் தனித்தனியே எண்ணியும் தம்முள் பேசியும் சிலநாள் கலங்கிச் சிலநாள் தேறி இறுதியில் பயண ஏற்பாடு செய்யத் தலைப்பட்டனர். பயணத்திற்கு ஒருநாள் குறிக்கப்பட்டது. அதன் பிறகும் அவர்கள் இருவரும் வருந்தினர். ஆயினும், தன் உள்ளக் குழப்பத்தைத் துணைவிக்குத் தெரிவித்து அவளும் வருந்துமாறு செய்யலாகாது என்று தலைவன் தனக்குள் அடக்கிக்கொண்டான்; "மனமே ! நீ இப்போது துணிந்துவிட்டாய். பாலை வழியைக் கடந்து சென்றபின் நினைந்து நினைந்து வருந்தப் போகிறாய்" (அக-353) என்று மனத்தோடு நொந்துகொண்டான் ; எனினும் தன் உள்ளப் போராட்டத்தைத் தலைவி உணராதவாறு காத்துக்கொண்டான். தலைவியும் ஆற்றொணாத் துயரைத் தன் உள்ளத்தே அடக்கிக்கொண்டு,

"எப்படியும் இது உற்றாரும் மற்றோரும் அறிந்த முயற்சி ஆயிற்று. நாமும் ஒருவாறு உடன்பட்டுத் தொடங்கிய முயற்சிதானே? இனி வருந்திப் பயன் என்ன? இவருடைய கடமை எதுவாயினும் அதற்குத் துணையாக இருப்பதுதான் வாழ்க்கையின் நோக்கமும் பயனும்" என்று தன்னைத் தானே தேற்றிக்கொள்ள முயன்றாள்.

பயணத்திற்குக் குறித்த நாள் வந்தது. அன்று காலையிலும் தலைவனுடைய மனம் போராடியது. இருப்பினும், "துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்ற கொள்கை உடையவனாய் மனத்தைத் தேற்றிக் கொண்டான். பயணத்திற்கு உரியவற்றை எடுத்துவைத்துக் கொண்டான். துணைவியை நோக்கினான். அவள் அவன் எதிரே இல்லை. இங்கும் அங்கும் நோக்கினான். சொல்லி விட்டு விடைபெற வேண்டும் என்று அவளைக் கனிந்த உள்ளத்தோடு அழைத்தான். அவள் குரல் கொடுக்கவில்லை. வருவாள் என்று எதிர்பார்த்தான். சமையலறையிலிருந்து மெல்ல வந்துகொண்டிருந்தாள்.

## 'அமரிய முகத்தள்'

சிறிது தொலைவிலிருந்தபோதே அவளுடைய முகம் மாறியிருந்தது. வழக்கம்போல் மலர்ந்த முகத்தோடு அவள் வரவில்லை. புன்முறுவல் இல்லை. எனினும் கவலை இல்லை. எதைப் பற்றியோ எண்ணும் சிந்தனை இருந்தாலும் குறை இல்லை. ஏதோ மாறுபட்ட குறிப்பு முகத்தில் தெரிந்தது. 'அமரிய முகத்தளாக' வருவதைக் கண்டான்.

ஒன்றும் எண்ணாமல் ஒரு காரணமும் இல்லாமல அழைத்தபோதெல்லாம் அவள் மலர்ந்த முகத்தோடு, புன்முறுவலோடு வந்ததைத் தலைவன் பலமுறை பலநாள் கண்டிருக்கிறான். அன்று அவன் அழைத்தபோது உண்மை

யாகவே கசிந்த உள்ளத்தோடு அழைத்தான்; "நம்மை விட வேறு வாழ்க்கை இல்லாதவளாய் நமக்காகவே வாழும் இவளை விட்டுப் பிரிகிறோமே" என்று அவன் உள்ளம் வருந்திக் கசிந்த உணர்வோடு அழைத்தான்; அவனுடைய குரலில் கனிந்த அன்பு இருந்தது. அத்தகைய அன்பான குரலைக் கேட்டாவது, அவளுடைய உள்ளம் அன்பு கொண்டிருக்கலாம்; ஆனால் அவனுடைய அன்பை, அன்பு செலுத்தும் தன்மையை ஏற்காத குறிப்பே அவளுடைய முகத்தில் இருந்தது. 'நாம் அன்பு செய்யும் நிலையை ஏற்றுக்கொள்ளாமல் மாறுபட்ட முகக் குறிப்போடு வருகிறாளே' (அளி நிலை பொறாஅது அமரிய முகத்தளாய் வருகிறாளே) என்று அவன் எண்ணினான்.

'விளி நிலை கொள்ளாள்'

இத்தனை நாளாகத் தான் வெளியே சென்று வந்து அழைத்ததும், துணைவி குரல் கொடுத்ததை அவன் கேட்டிருக்கிறான். வீட்டிலிருந்தபோதும் எப்போது எந்நிலையில் அழைத்தாலும் உடனுக்குடன் அவள் குரல் கொடுத்ததை யும் அவன் கேட்டிருக்கிறான். சில நாட்களில் தான் எதையோ எண்ணிக்கொண்டு வீட்டுள் நுழைந்தபோதும், அவள் தானாகவே சமையலறையிலோ தோட்டத்திலோ இருந்தபடியே பேசத் தொடங்கியதும் கண்டிருக்கிறான். ஆனால் இன்று, தான் அழைத்தபோது குரல் கொடுக்க வில்லை; அழைத்தது கேளாமல் போகவில்லை; அழைத்த போது சமையலறையிலே இருந்தாள்; அங்கிருந்தே அவள் மெல்ல வருவதும் கண்டான்; வரும்போதும் தன் அழைப்புக்கு மாற்றமாக ஒன்றும் பேசவில்லை; "ஏன்?" என்று ஒரு சொல்லும் கேட்கவில்லை. அந்தச் சொல் இல்லை யானாலும் அதன் குறிப்பாவது அவளுடைய கண்ணில்

இருந்திருக்கலாம். அழைத்தது ஏன் என்று கேட்பதுபோல் கண்ணால் பார்த்துக்கொண்டே வந்திருக்கலாம். இவ்வாறு, அழைத்தபோதும் குரல் கொடாமல், வரும்போதும் குரல் கொடாமல், பார்வைக் குறிப்பும் புலப்படுத்தாமல், தன் அழைப்பை ஏற்றுக் கொள்ளாதவளாய் (விளி நிலை கொள்ளாதவளாய்) வரக்கண்டு, "என்ன காரணம்?" என்று திகைத்தான். பயணத்திற்கு உடன்படாமல் தடுக்க விரும்பினாள் என்று அவன் எண்ணவும் முடியவில்லை. சற்று முன்பும் அவள் தன்னுடன் இருந்து பயண ஏற்பாடுகளை எல்லாம் செய்துவைத்தபோது, நேற்றுவரையில் மட்டும் அல்லாமல் இன்று காலைவரையிலும் தன் முயற்சிக்கு உறுதுணையாக இருந்துவந்தமையால், அவள் இப்போது பயணத்தை எதிர்ப்பதாக எப்படி எண்ணமுடியும்? அதனால்தான் அளிநிலை பொருமைக்கும் அமரிய முகத்திற்கும் விளிநிலை கொள்ளாமைக்கும் காரணம் விளங்காமல் திகைத்தான்.

## கலையுலகில் காலம்

திகைத்தது சில நொடிப்பொழுதே. ஆயினும் அதைப் பெரிதாக்கி நெடுநேரம் உணரச் செய்வதே இலக்கியத்தின் ஆற்றல். வாழ்க்கையில் பல ஆண்டுகளாக நிகழும் ஒன்று இலக்கியத்தின் சிறிது நேரத்தில் நிகழ்ந்து கழிந்துவிடும். வாழ்க்கையில் நொடிப்பொழுதில் நிகழ்ந்துவிட்ட ஒன்று இலக்கியத்தில் நெடுங்காலம் நிகழ்வதாகக் கூறப்படும். காலத்தையும் இடத்தையும் வாழ்க்கையில் உள்ளவாறே இலக்கியம் ஏற்றுக்கொள்வதில்லை. பெரியதைச் சிறியதாக்கும்; சிறியதைப் பெரியதாக்கும்; இது இலக்கியத்தின் பெற்றி. ஏன்? கலைக்குச் சிறப்பியல்பாக உள்ள பெற்றி எனலாம். கலை பூதக்கண்ணாடியாகிச் சிறியதைப் பெரியதாக்கவும் வல்லது; நிழற்படக் கண்ணாடியாகிப் பெரியதைச்

சிறுவடிவில் எடுத்துக் காட்டவும் வல்லது. ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து விளையாடிக் கல்வி கற்று இளைஞனை வரலாற்றை ஒரு சிறுபாட்டு மிகச் சுருங்கச் சொல்லி முடித்து விடும். ஆனால் ஒரு தினைப்புனத்தில் வேங்கைமரத்து நிழலில் கிளியோப்பிக்கொண் டிருந்த ஒருத்தியை ஒருநாள் பிற்பகல் கண்டு அவள் உள்ளத்தைப் பறிகொடுத்த சிறிது நேர உணர்ச்சியைப் பல பாட்டுக்களால் சொல்லியும் அது முடியாததுபோல் நிற்கும்; அப்போது ஒரு நொடிப்பொழுது அவன் உருகி நின்ற நிலையை ஓவியக் கலைஞனே சிற்பக்கலைஞனே கண்டு கல்லிலோ செம்பிலோ அமைப்பானுனல் அந்த நொடிப்பொழுதின் உருக்கம் பல நூற்றுண்டுகள் ஒரேநிலையாக நிற்கும் உருக்கமாக விளங்கி விடுகின்றது. வெளியுலகம், கதிரவனின் தோற்றம் மறைவு கொண்டும் திங்களின் வளர்ச்சி தேய்வுகொண்டும் நாளையும் திங்களையும் அளந்து பார்த்து வாழ்க்கையை அளந்துகாட்டுகிறது. ஆனல் கலையுலகில் வாழ்க்கையை அளக்கும அளவுகோல் ஞாயிறும் அன்று, திங்களும் அன்று. உள்ளத்து உணர்வின் ஆழமே கலையுலகத்தின் அளவுகோல். ஆழ்ந்த உணர்வு கலையுலகில் நெடுங்காலம் நிற்பது. ஆழம் குறைந்த உணர்வு கலையுலகில் நொடிப்பொழுதில் மறைந்துபோவது. வாழ்க்கையை ஞாயிறு திங்கள் உணவு உடை முதலிய பொருள்களைக்கொண்டு அளந்துகாண்பது வெளியுலகம். வாழ்க்கையை உள்ளத்து உணர்வு கொண்டு அளந்து காண்பது கலையுலகம். ஆகவே வெளியுலகின் கால அளவும் கலையுலகின் கால அளவும் ஒன்ருக அமைவதில்லை.

தலைவி சமையலறையி லிருந்து தலைவனை நோக்கிவந்து நின்ற நிகழ்ச்சி சில நொடிப்பொழுதில் நிகழ்ந்து முடிவது. ஆயினும் இந்தப் பாட்டில் நெடுநேரம் நிகழ்ந்ததுபோல் பல அடிகளால் பாடப்படுகிறது.

அளிநிலை பொருமை, அமரிய முகம், விளிநிலை கொள்ளாமை இம்மூன்றனுக்கும் அடிப்படைக் காரணம் தலைவனுடைய பயணத்திற்குத் தலைவி இசையாமையே என்று பொருள் கூறப்படுகிறது. "போக்கிற்கு உடன் படாது ஆற்றுளாய் நின்ற நிலைமை பற்றி" என்று குறிப் புரைகாரர் கூறுகிருர். அது பொருந்தவில்லை என்பதற்கு மேலே காரணங்கள் கூறப்பட்டன.

இனி இப்பொருள் பொருந்துமா என்றுகாணவேண்டும்.

## மகளை அனுப்பும் தாய்

ஒரு தாய் தன் மகளைப் புக்ககத்துக்கு அனுப்புகிருள். அந்த மகள் கல்லூரியை அடுத்த உணவுவிடுதியில் வளர்ந்தவள் அல்லள்; வீட்டிலே தன்னோடு இருந்து வளர்ந் தவள். திருமணமானபின் முதல்முறையாகப் புக்ககம் அனுப்புகிருள். அவளுக்குத் தக்க கணவனைத் தேடித் திரு மணம் செய்துவைக்க வேண்டும் என்று எத்தனையோ நாள் தவம் கிடந்தாள்; தவம் பலித்துத் திருமணமும் நடந்தது. மகளைச் சீரும் சிறப்புமாகப் புக்ககம் அனுப்ப எல்லா ஏற் பாடுகளையும் குறைவில்லாமல் செய்துமுடித்தாள். மகள் புக்ககம் போவதைப் பற்றி ஊரெல்லாம் பெருமையாகப் பேசிப் பலர்க்கும் தெரிவித்திருந்தாள். தன்னைப் போல் மகளை ஒரு குடும்பத் தலைவியாக்க அவள் பலநாள் கண்ட கனவெல்லாம் நனவாகியது. புக்ககம் செல்லும் நாளும் வந்தது. அன்று அவளுக்கு வேண்டும் பொருள்களை எல்லாம் ஒழுங்காக எடுத்துவைக்கிருள். ஆனால் எடுத்து வைக்கும்போது கை நடுங்குகிருள். என்னென்னவோ சொல்லியனுப்ப எண்ணியிருந்தாள். சொல்லத் தொடங்கும் போதே அவை மறந்துபோகின்றன; நினைவில் உள்ளவை களும் வாயைவிட்டு வெளிவரவில்லை; சொல்லாமலே

தடுமாறுகிறாள். வழக்கம்போல் தன் கையாலேயே மகளுக்குத் தலைவாரி அழகுபடுத்த விரும்புகிறாள். விரும்பியவாறு அழகுபடுத்த அவளால் முடியவில்லை. பக்கத்து வீட்டார் செய்யுமாறு விடுகிறாள். அவர்கள் அழகுபடுத்திய பின் மகளைக் கண்ணாரக் காண விரும்புகிறாள்; காணும் போது கண்ணீர் கலங்குவதால் பார்வையை மாற்றிக்கொள்கிறாள்; பிறபொருள்களைக் கண்டு கண்ணீரைத் தடுத்துக் கொள்கிறாள். புறப்படும் நேரமும் வந்தது. அழகிய ஒற்றைமாட்டுவண்டி வீட்டெதிரே வந்துநிற்கிறது. மூட்டைகள் வண்டியில் எடுத்துவைக்கப்படுகின்றன. எல்லோரும் தெருவை நோக்கி நகர்கின்றனர். புக்ககம் செல்லும் பெண்மட்டும் மெல்லப் பின்நிற்கிறாள். அவளுடைய கண்கள் பெற்ற தாயைத் தேடுகின்றன. இந்நேரம் வரையில் அங்கே இருந்து எல்லா ஏற்பாடுகளும் செய்த தாய் இப்போது கண்ணெதிரில் இல்லை. "அம்மா" என்று அன்போடு அழைக்கிறாள் மகள். அதற்கும் பதில் வரவில்லை. மகளின் கண்கள் சமையலறையை நோக்குகின்றன. அங்கிருந்து மெல்ல வரும் தாயைக் காண்கிறாள். தாயின் முகம மாறுபட்ட குறிப்புடன் இருக்கக் காண்கிறாள். தன் அன்பை ஏற்கும் அன்புநிலை தாயின் முகத்தில் இல்லையே என்று திகைக்கிறாள். தன்னை நோக்கி வரும்போது வாய் திறந்து "ஏன்?" என்று கேட்காமல், கண்ணால் கேட்கும் குறிப்பும் காட்டாமல், தன் அழைப்பை ஏற்காதவள்போல் தாய் மெல்ல வருவதைக் காண்கிறாள்.

இந்த நிலையைக் கண்டதும், மகளைப் புக்ககம் அனுப்பத் தாய் உடன்படவில்லை என்று கூறமுடியுமோ? பாட்டில் காணும் தலைவியின் நிலையும் அத்தகையதே ஆகும்.

பெற்ற தாய் மகளைப் புக்ககத்திற்கு அனுப்பத் தானே விரும்பி முயன்று ஏற்பாடு செய்திருந்தும், விடைகொடுக்கும்

நேரத்தில் கலங்குகிருள். முந்தியநாளில் அவ்வளவு துன்ப உணர்வு அவள் உற்றதில்லை. ஆயினும் இன்று தன்நிலை கலங்கித் துன்புறுகிருள். அதுபோன்றே, தலைவனுடைய பொருள்முயற்சி எல்லாம் தலைவி அறிந்திருந்தும், அதற்கு உடன்பட்டு ஏற்பாடு செய்திருந்தும், அவன் புறப்படுவதற்கு முந்திய நாட்களில் அவ்வளவு கலங்காமல் இருந்துவிட்டு, விடைபெறும் நேரத்தில் நிலைகலங்கி நெஞ்சழிந்து நின்ருள்.

புக்ககம் அனுப்பும் தாய் அப்போதும் விடைகொடுத் தனுப்ப எண்ணியே வந்தாள். அவ்வாறே, தலைவியும் தலைவ னுக்கு விடை கொடுத்தனுப்ப வந்தாள். ஆனல் அவளுடைய நெஞ்சம் அவள்வழியில் நிற்காமல் கலங்கியது.

இத்தனைநாள் இருந்ததுபோன்ற அன்புநிலையைத் தலைவியிடம் அப்போது காணமுடியவில்லை. காரணம் அன்பு குறைந்தது என்பது அன்று; தலைவனிடம் அவள் கொண் டிருந்த அன்பு எள்ளளவும் குறையவில்லை; குறைவதற்குக் காரணமும் இல்லை. உண்மைக்காரணம், அவளுடைய நெஞ் சம் இயற்கையான நிலையில் இல்லாமையே; அதனுல் தலைவன் காட்டிய அன்பை ஏற்கவும் தன் அன்பைக் காட்டவும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று. உள்ளத்தில் பிரிவாற்ருமை யின் உணர்ச்சி பெருகிவிட்டது. அதை மறைத்துக்கொள் ளும் முயற்சியில் இருந்தமையால், இயற்கைநிலை இல்லாமல் போயிற்று. அதுவே காரணம் அன்றித் தலைவனிடம் அன்பு குறைந்தது என்பது காரணம் அன்று. அளிநிலை பொருமை இத்தகைய அகப்போரின் விளைவே ஆகும்.

## உள்ளத்தை மறைத்தல்

முகத்தில் கண்ட மாறுபாட்டுக் குறிப்பும் தலைவ னுடைய பொருள்முயற்சியை எதிர்க்கும் குறிப்பு அன்று; அதற்குத் தடையாய் எழுந்த தன் உள்ளத்துயர் புறத்தே

புலப்படாமல் தடுத்து எதிர்க்கும் குறிப்பே ஆகும். 'நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' ஆதலின் அவள் உள்ளத்து நிகழ்ந்த எதிர்ப்பு முகத்தில் புலப்பட்டது; அவ்வளவே. எதிர்ப்பை வேண்டும் என்று முகத்தால் காட்டித் தலைவனைத் தடுக்க அவள் முயலவில்லை. அது முகத்தில் புலப்பட்டதும் அவள்குற்றம் அன்று. உணர்வு மிகுதியால் உள்ளொன்று புறமொன்றாக வாழமுடியாத பளிங்குபோன்ற வாழ்க்கையின் குற்றமே ஆகும். உணர்வு மிக்கவர் வேறுவகையாக நடித்தல் இயலாது. அதிலும், ஒத்த அன்புகொண்டு ஒத்த உரிமையோடு உடன்வாழும் தலைவனிடம் உணர்வை மறைக்க முடியுமோ? உணர்வை மறைத்தல் யாரால் இயலும்? உணர்வு குறைந்து அறிவு பெருகியுள்ளவர்க்கு இயலும்; அவர்களுக்கும் அன்பில்லாத அயலாரிடத்தில் மட்டும் முடியும்; தம்மினும் செல்வாக்கு மிக்கவரிடம் அச்சமோ அவாவோ காரணமாகக் கொண்டு ஒழுகும்போது உள்ளத்தை மறைக்கமுடியும். அடிமைக்கு ஆள்வோனிடம் முடியும்; புறத்தே அடிமையாக இருந்தும், அகத்தே உரிமை உடையவனாயிருப்பின், அவனுக்கும் முடியாது. ஒருவன் தன் பகைவனிடம் உள்ளத்தை மறைக்கமுடியும்; நேர்மையாய் வாள்போல் பகைத்து எதிர்த்து நிற்கும் வீரனாயின் முடியாது; தந்திரத்தால் வெல்லவேண்டும் என்று முயலும் வஞ்சகனாயின் எளிதில் முடியும். ஆயினும், இத்தகையாரும், பெற்ற தாயிடமோ அன்புள்ள மனைவிமக்களிடமோ உற்ற நண்பனிடமோ உள்ளத்தை மறைத்து ஒழுகுவதில் முழு வெற்றி பெறுதல் அரிது. அவ்வாறாயின், அறிவெல்லாம் கொள்ளை கொடுத்து அன்பைப் பெருக்கி வாழும் தலைவி தன் ஆருயிர்த் துணைவனிடம் உள்ளத்து உணர்வை எவ்வாறு மறைக்கமுடியும்? அதனால்தான் அவள் விடை கொடுக்க முயலும் நேரத்தில் தோல்வியுற்றாள். உள்ளத்

துயரை மறைத்துச் செல்ல முயன்றும், மறைக்கமுடியாமல் போயிற்று. அகத்தே நிகழ்ந்த போராட்டம், முகத்தே மாறுபாட்டுக் குறிப்பாய் வெளிப்பட நேர்ந்தது.

தலைவன் தலைவியை விளித்தபோது அவள் குரல் கொடுக்கவில்லை; காரணம் என்ன? அவள்வேண்டுமென்றே அமைதி மேற்கொள்ளவில்லை. உள்ளத்தின் குழப்பம் வாய்ச்சொல்லுக்கு இடம் தரவில்லை. ஏதேனும் கூற முயன்றால், உணர்ச்சி மிகுதியால் குரலிலும் சொல்லிலும் துயரமே வெளிப்படும்போல் இருந்தது. தன் முகக் குறிப்பை அடக்கப் பெருமுயற்சி செய்தும் தோல்வியுற்றதை உணர்ந்த அவள், பேசத் தொடங்கின் துயரமே வெளிப்படும் என்று பேச முடியாமல் வந்தாள்.

உள்ளம் முகத்தில் புலனாவதை அவளால் தடுத்துக் கொள்ள முடியவில்லை ; முகக்குறிப்பைத் தடுத்து மாற்றிக் கொள்ள முடியவில்லை. ஆயின் பேசாமல் இருக்க முடிந்தது. இருந்தும் பயன் இல்லை. வழக்கத்திற்கு மாறான அமைதி ஆகையால், அதனாலும் தலைவன் அவளுடைய உள்ளக் குழப்பத்தை உணர முடிந்தது. ஆகவே பேச்சடங்கியும் பயன் இல்லாமற் போயிற்று.

‘ தமியள் ’

தலைவி கைக்குழந்தையோடு வந்தாள். இருந்தபோதிலும், அவளுடைய தோற்றத்தில் ஒருவகைத் தனிமை - துணையற்ற தன்மை-புலனாகியது. வீட்டில் எவரும் இல்லாமல் திக்கற்றவளாய்த் தனியாய் இருக்க நேர்ந்தால் எவ்வாறு தோன்றுவாளோ அவ்வாறு தோன்றினாள். கையில் ஏந்திய மகனும் எதிரில் நின்ற கணவனும் அப்போது உடனிருந்தும் அவர்களை மறந்தவள்போல் தனிமையுணர்ச்சியோடு தோன்றினாள்.

நிகழ்வதற்கு முன்னமே நிகழ்ந்துவிட்டதுபோல் உணர்வது ஈரநெஞ்சினரின் இயல்பு. மற்றவர்க்கும் இது ஓரளவு உண்மையே. வாழ்க்கையில் வரக்கூடிய துன்பங்கள் வருவதற்கு முன்பே உணர்ந்து வருந்துவது மக்கள் இயற்கை. துன்பங்கள் பொருள்களைத் தாக்குவன அல்ல; மனத்தைத் தாக்குவனவே. ஆதலின், பொருள்களில் மாறுதல்கள் நேர்வதற்கு முன்பே, எண்ணங்கள் மனத்தை மாற்றிவிடுகின்றன. சிறை புகவேண்டிய குற்றத்திற்கு ஆளான ஒருவன், சிறைவாயிலை அணுகுவதற்கு முன்பே சிறைப்பட்ட கைதிபோல் உணர்ந்து வாடுகிறான். வாணிபத்தில் பெருஞ் செல்வம் இழக்க நேரும் என்று அறிந்த ஒருவன், உண்மையாக இழப்பதற்கு முன்பே, எல்லாம் இழந்தவன் போல் பித்துப் பிடித்துத் தெருவில் திரிவதும் உண்டு; அதன்பின் நல்ல காலமாகச் செல்வம் ஒன்றும் இழக்கப்படாமல் எல்லாம் கைகூடியபோது அந்தப் பித்தனுக்குப் பிறர் எவ்வளவோ உணர்த்த முயன்றும் அவன் பித்துத் தெளியாமல் அலைவதும் உண்டு. ஆதலின், துன்பம் என்பது அதை உணரும் மனத்தின் விரைவையும் மென்மையையும் ஒட்டியதே ஆகும். இங்குத் தலைவி உணர்ந்த தனிமைத் துன்பமும் அப்படிப்பட்டதே ஆகும். தலைவனைவிடத் தமக்கென உயிர்வாழ்க்கை வேறு இல்லை என்று ஒன்றுபட்டு வாழ்ந்த அவள், தலைவன் பாலை வழியைக் கடந்து பிரிவதற்குமுன்பே, பிரிந்துவிட்டாற் போல் உணர்ந்துவிட்டாள். தனிமையுணர்ச்சி அவளுடைய நெகிழ்ந்த மனத்தை விரைந்து பற்றியது; உடனே வருத்தத் தொடங்கியது.

"நாண் முதலான குணங்கள் ஒழியத் தானே யாதல்" என்று விளக்கியுள்ளார் பழைய உரையாசிரியர். அது நயம் உள்ளதே எனினும் இங்குப் பொருந்தவில்லை. நாணம்

முதலிய குணங்களைத் தலைவி துறக்கவேண்டிய காரணம் இல்லை. அவள் அவ்வாறு துறந்து வந்ததாகவும் தெரியவில்லை.

உயிரைவிட நாணம் சிறந்தது, நாணத்தைவிடக் கற்புச் சிறந்தது என்பது தமிழ்ச்சான்றோர் கண்ட மரபு:

உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனை...

(தொல். பொருள். கள. 22)

தலைவி பயணத்திற்கு உடம்படாமல் அன்பிற்குரிய கணவனோடு போராடத் துணிந்து, அவனுடைய முயற்சிக்கு இடையூறு செய்யத் தொடங்கியிருப்பின், அது அவளுடைய வாழ்க்கைக்கு முரணானது என்று குறை கூறலாம்; நாணம் முதலான நற்பண்புகளைத் துறந்த ஒழுக்கம் என்று குற்றம் கூறலாம். ஆயின், தலைவனுடைய பயணத்தைத் தடுக்கும் எண்ணம் ஒரு சிறிதும் இல்லாமல், தன் நெஞ்சம் தன் வசம் இன்றித் தன்னைக் கலக்கித் தடை செய்திடுமோ என்று வருந்தி உள்ளக் குழப்பத்தை மறைக்கப் பெருமுயற்சி செய்த தலைவியைக் குறைகூற இடம்இல்லை.

'மென்மெல'

அவளுடைய நடை இயற்கையாக இருப்பதுபோல் இல்லை. மிக மெல்ல வந்தாள். அவளுடைய மனம் பெரும் போராட்டத்திற்கு உள்ளாகியிருந்தமையே அதற்குக் காரணம். மனம் இசைந்தபோது உடல்கருவிகள் இயற்கை நிலையில் நின்று ஒத்துழைக்கும்; மனம் இசையாதபோது கருவிகள் அவ்வாறு ஒத்துழைப்பதில்லை. ஆதலின், மிக மெல்ல நடந்துவந்தாள்; கால்கள் இயல்பாக இயங்கவில்லை. மனத்தின் வலிமையை எதிர்த்து அடக்கிக் கால்களை

இயக்கிவர வேண்டிய நிலைமை இருந்தது. மனத்திற்கும் உடம்பிற்கும் உள்ள உறவு அத்தகையது. அறிவும் மனமும் போராடும்போது, உடல் எளிதில் மனத்தின் பக்கமாக நின்றுவிடுகிறது. உடலை வற்புறுத்தி இயக்கவேண்டிய பொறுப்பு அறிவுக்கு நேர்கிறது.

சில கனவுகளில் நுண்ணுடம்பு விரைவாகச் செல்வது போல் தோன்றும்; விரைந்து ஓடவேண்டிய நிலைமை அந்தக் கனவுலகில் இருக்கும்போது, எவ்வளவோ முயன்று செல்வதுபோல் தோன்றும். ஆனால் என்ன காரணத்தாலோ கால்கள் விரைந்து அடியெடுத்து வைக்காதது போலவும், விரைந்துசென்றாலும் முடியாதது போலவும் தோன்றும். தயங்கியோ அஞ்சியோ பின்நிற்கும் மனத்தின் இயல்பையே அந்தக் கனவுகள் விளக்குகின்றன.

தலைவியின் நடையில் காணப்பட்ட விரைவின்மையும் மனத்தின் தயக்கத்தை ஒட்டியதே. பயணத்தால் நேரும் பிரிவை நினைந்த மனம் அவ்வாறு தயங்கி நடையை மாற்றி விட்டது.

## ‘நிலம் வடுக்கொளல்’

தலைவி இளமைஎழில் மிக்கவள்; அழகு மிகுந்த சிவந்த அடிகள் அந்த எழிலை விளக்கி நின்றன. அவள் நடந்து வந்தபோது அந்த அழகிய அடிகளிலும் மாறுத லான போக்குத் தெரிந்தது. அடிபெயர்த்து வைத்து நடந்தபோது, கால்விரல்கள் இயற்கையாக இயங்கவில்லை; அவளுடைய மென்மைத்தன்மைக்கு மாறாக இயங்கின. மெல்லிய சேவடியின் விரல்கள் நிலத்தில் ஊன்றிப் பதிந் தன. நடந்துவருதல் தெரியாத அவ்வளவு மென்மை போய், நடந்த இடத்தில் சுவடு பதியும்படியான வன்மை இருந்தது.

மனத்தின் போராட்டத்தில் உடல் கலந்துகொண்டதை நடை புலப்படுத்தியது அன்றோ? உடலில் உடனே மாறுதல் புலனாகும் பகுதிகள், கைகால் முதலியவற்றின் முனைகளாகிய விரல்களும் முகத்தின் உணர்வுள்ள முனைகளாகிய இமைகளும் இதழ்களு மாகும். ஆத்திரம் கொண்டவர்க்கும் சினம் கொண்டவர்க்கும் கைகால் விரல்களும் கண்ணிமைகளும் வாயிதழ்களும் பரபரப்புடன் தம் வசமின்றி அசைதல் காணலாம். மகிழ்ச்சி மிக்கவரிடத்தும் இவற்றின் கட்டற்ற அசைவுகளைக் காணலாம். சீற்றத்தின் போது மீசை துடிப்பதற்கும் இதழ்களின் துடிப்பே காரணம். மன அமைதி இல்லாதபோது அடிக்கடி கண் இமைத்தலும், கைவிரல்கள் பொத்தானைத் திருகிக்கொண்டிருத்தலும், கால்விரல்கள் ஊன்றிய இடத்தில் அசைந்து கொண்டிருத்தலும் வேறு பிற பரபரப்பான அசைவுகளில் ஈடுபட்டிருத்தலும் காணலாம். உட்கார்ந்தவாறே கால்கள் ஆடுவதற்கும் மனத்தின் ஆட்டமும் அசைவுமே காரணமாகும். கைகால் உறுப்புக்களைவிட அவற்றின் முனைகளாகிய விரல்கள் மனத்தோடு எளிதில் இயங்குகின்றன; பொதுவாக முகத்தைவிட இமைகளும் இதழ்களும் எளிதில் மனத்தோடு கலந்து இயங்குகின்றன.

தலைவியின் மனக்குழப்பம் முகத்தின் வாயிலாக வெளியாகமுயன்றது. முகம் அறிவின் நிலையமாகிய மூளைக்கு அண்மையில் உள்ள காரணத்தால், தலைவி அதை அங்கே புலப்படாவாறு அடக்கும் முயற்சியில் ஓரளவு வெற்றிபெற்றாள். அவ்வாறு போராடிய முயற்சியும், மனத்தை எதிர்த்து மாறுபட்ட குறிப்பும் முகத்தில் வெளிப்பட்டனவே தவிர, உள்ளத்தின் துயரம் வெளிப்படவில்லை. அடுத்தாற்போல் வாயிதழ்கள் திறந்து பேசித் துயரத்தைப் புலப்படுத்தாவாறும் அடக்கி ஓரளவு வெற்றி பெற்றாள். இதழ்களும்

நாவும் அறிவின் இடத்திற்கு அண்மையில் இருத்தலால் அவ்வாறு உடனே அடக்கிட முடிந்தது. அடுத்தாற் போல், மனத்திற்கு அடிமை ஆகக் கூடியவை கைவிரல்கள்; அவை கால்விரல்களைவிட அண்மையில் அமைந்தவை; பார்த்தறிதற்கு எளியவை; ஆதலின், கால்விரல்களைப்போல் விரைந்து காட்டிக்கொடுக்கக் கூடியவை அல்ல. அன்றியும் தலைவியின் கைக்குக் குழந்தை ஏந்தி வரும் பொறுப்பு இருந்தது. ஒரு கை அந்தக் கடமையின் காரணமாக அடங்கவே மற்றொரு கையும் அதற்கு ஒத்து அடங்கியது. *வசமிழந்து இயங்கும்போது இணை இணையாக உள்ள உறுப்புக்களில் ஒன்று அடங்கின் மற்றொன்றும் அடங்கு தலே இயற்கை. ஆகவே ஒன்றன் அடக்கத்தால் மற்றொன் றும் வாளா இருந்தது.

எஞ்சிய கால்விரல்களே மனத்தின் வசமாய் உட்குழப் பத்தைக் காட்டிவிட்டன. உணர்ச்சி வெளியீட்டுக் கருவி களான மற்றவற்றை அடக்கி ஓரளவு வெற்றிபெற்று வந்த தலைவியின் முதல் தோல்வி இங்குத்தான். அறிவின் நிலையத்திற்குச் சேய்மையில் இருந்த காரணத்தால் அவை எளிதில் கட்டுப்படவில்லை. அதனால் நலம் மிகு சேவடி நிலம் வடுக்கொள நடத்தலாயிற்று.

---

*கையில் குழந்தை இல்லாதிருந்தால் தலைவியின் கைவிரல் களும் கால்விரல்களுடன் சேர்ந்து மனப்போராட்டத்தைக் காட்டி யிருக்கும் என்பதை அகப்பாட்டு - 39 உணர்த்தும். அங்குத் தலைவியின் கைவிரல்கள் வளையல்களைச் செறியத் தள்ளிக்கொண் டிருந்தன ; கால்விரல்கள் நிலத்தைக் கிளறிக்கொண் டிருந்தன :

இலங்குவளை செறியா இகுத்த நோக்கமொடு
நிலம்கிளை கிளைவிரல் நின்ற... (அக. 39)

'வாயல் முறுவல்'

தலைவனை அணுகி வந்தாள்; அணுகி வந்ததும் புன்முறுவல் கொண்டாள். அவளுடைய இளமையைக் காட்டும் கூரிய பற்கள் தோன்றுமாறு சிறிதளவே புன்முறுவல் கொண்டாள். அந்தப் புன்சிரிப்பு வாயினுள்ளேயே தோன்றி நின்றதாக இருந்தது.

அவள் இப்போது புன்முறுவல் கொண்ட காரணம் என்ன? அதில் வெற்றி பெற முடிந்ததா?

தலைவன் அழைத்தது முதல் இதுவரையிலும், அவனுடைய அன்பை ஏற்றுத் தன் அன்பைக் காட்டாமலும், பதில் குரல் கொடுக்காமலும் வந்த தன் குறையை உணர்ந்தே, புன்முறுவல் கொண்டாள். பயணத்தைத் தான் தடுப்பதாக அவன் கருதிவிடலாகாதே என்று அஞ்சியே தன் உடன்பாட்டை எவ்வாறேனும் புலப்படுத்தி விடை கொடுத்தனுப்ப முயன்றாள். அந்த முயற்சிக்கு வாய்ச்சொற்கள் துணையாக இல்லை; நாவும் குரலும் துயரத்தைக் காட்டிக் கொடுக்கும் என்றே பேச முடியாமல் வந்தாள்; எளிதில் கைகூடுவது புன்சிரிப்பு ஆகையால் அதை மேற்கொண்டாள். அதிலும் அவள் முழுவெற்றி பெற முடியவில்லை. நன்கு முறுவல் கொள்ள முடியவில்லை. வாயினுள்ளே தோன்றி நிற்கும் சிறிய அளவிலேயே முறுவல் கொள்ள முடிந்தது. அதுவும் இயல்பாக வரும் புன்சிரிப்புப்போல் தோன்றவில்லை. வலிந்து மேற்கொண்ட பொய்யான புன்சிரிப்பு என்று பார்க்கும்போதே தோன்றிவிட்டது. ஆகவே, இவ்வகையில் தலைவியின் முயற்சி தோல்வியாகவே முடிந்தது.

வாய்ச்சொற்கள் உதவாதபோது புன்முறுவல் உதவ முடியும். சொற்களால் பேசவேண்டுமானால், குரல்வளை, நா, இதழ் முதலிய பல உறுப்புக்களின் ஒத்துழைப்பு வேண்டும். ஆனால் புன்முறுவலுக்கு இதழ்களை ஒட்டிய தசை

னார்கள்மட்டும் ஒத்துழைத்தால் போதும். ஆகவே, உள்ளப் போராட்டம் உடையவர்கள் பிறரிடம் பேச முடியாத போதும் புன்முறுவல் மட்டும் கொள்ள முடியும்; விரும்பாத வரிடத்தில் இன்சொல் பேசமுடியாத போதும் புன்சிரிப்புக் கொள்ள முடியும். ஆயின் அவையெல்லாம் பிறரிடத்தில், விரும்பாதவரிடத்தில்! தன் ஆருயிர்த் துணையான கணவ னிடத்தில் அவ்வாறு புன்சிரிப்புக் கொள்வது எளிதோ? கொள்ளினும் அது இயற்கையான புன்முறுவலாய் விளங் குமோ? அயலாரிடம் நடித்து ஒழுகலாம்; அன்புணர்வு மிக்கவரிடம் நடித்து ஒழுக முடியுமோ? மூளைமட்டும் தனித்து ஆளும் இடம் அன்று அன்புடையாரின் முன்னிலை; இதயம் ஆணை செலுத்தும் இடம் அது. ஆதலின், தலைவி யின் முயற்சி தோற்றது. புன்முறுவல் 'வறிது அகத்து எழுந்த வாய்அல் முறுவல்' ஆயிற்று; போலிப் புன்சிரிப் பாகப் பொய்த்துவிட்டது.

அன்புடையாரிடம் பேசும்போது தன் உள்ளத்தை மறைத்து மேற்கொள்ளும் புன்முறுவல் உண்மையல்லாத முறுவலாக - வாய்அல் முறுவலாக - விளங்கும் என்பதை இளங்கோவடிகளும் தம் காவியத் தலைவியின் வாயிலாகப் புலப்படுத்துகிறார். கோவலன் மாதவியின் வீட்டில் மகிழ்ந் திருக்க, கண்ணகி தனித்திருந்து பல ஆண்டுகள் துன்புற் றாள். அப்போது கோவலனுடைய பெற்றோர் கண்ணகி யின் துயரத்திற்காக வருந்தினர்; அவளுடைய நற்பண்பு களை அறிந்த அவர்கள் அவளுக்கு ஆறுதலாக ஏதேனும் கூற முயன்றபோதெல்லாம், தான் ஒன்றும் வருந்தாதவள் போல் காட்டிக்கொள்ள முயன்றாள். அவர்கள் சொல்வன கேட்டுப் புன்முறுவல் கொண்டாள். அந்தப் புன்முறுவ லும் 'வாயல் முறுவ'லாகத் தோன்றியது. அதைக் கண்ட இருமுதுகுரவரும் தம் மருமகள் கவலையின்றி இருப்பதாக

எண்ணிவிடவில்லை ; அதற்கு மாருக உள்ளத்தே வருந்தினர்கள். மதுரைக்குச் சென்றபின் கண்ணகி இதைக் கோவலனுக்குத் தெரிவித்தபோது, "என் புன்முறுவல், உள்ளத்திலிருந்த வருத்தத்தையும் துன்பத்தையும் எடுத்துச் சொல்வதுபோல் இருந்திருக்கும். அந்தப் பொய் முறுவலைக் கண்ட உன் பெற்ருேர் உள்ளகம் வருந்தினர்கள்" என்ருள் :

பெருமகள் தன்னெடும் பெரும்பெயர்த் தலைத்தாள்
மன்பெருஞ் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவிகந் தனனு
அற்புளம் சிறந்தாங்கு அருள்மொழி அளைஇ
ஏற்பா ராட்ட யான்அகத்து ஒளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலும்என்
வாயல் முறுவற்குஅவர் உள்ளகம் வருந்த

(சிலப்பதிகாரம் – மதுரை. கொலைக். 74 – 80)

கண்ணகி முயன்று மேற்கொண்ட முறுவல் அது. இருமுதுகுரவரை மகிழ்விக்கவேண்டும் என்றும், தான் வருந்தவில்லை என்பதை அவர்களுக்கு உணர்த்தவேண்டும் என்றும் மேற்கொண்ட முறுவல் அது. ஆயினும் இருமுதுகுரவரும் தன்பால் அன்பு மிக்கவர் ஆதலின், உள்ளத்தின் நோயும் துன்பமும் அதில் புலப்பட்டுவிட்டன. உள்ளத்து உணர்ச்சியை மறைத்து அடக்க முடியாமல் கண்ணகி தோல்வியுற்ருள்.

அகநானூற்றுத் தலைவியும் அத்தகைய தோல்வியே உற்ருள். அவளும் புன்முறுவல் கொள்ள முயன்ருள். கணவனுடைய பொருள் முயற்சிக்குத் தான் தடையாக நிற்றல் கூடாது என்றும், பிரிவுக்காகத் தான் கலங்கி அழியவில்லை என்று கணவன் உணரச்செய்யவேண்டும் என்றும் முயன்று மேற்கொண்ட முறுவல் அது. ஆயினும் ஒத்த அன்பு

வாய்ந்த கணவனிடம் தன் உள்ளத்தை மறைக்க முடிய வில்லை. ஆதலின் அந்த முறுவல் வாயல் முறுவலாகத் தோன்றிவிட்டது. தலைவி தோல்வியுற்றாள்.

'கண்ணியது'

இவ்வளவும் கண்ட தலைவன், "இந்த மாறுதலுக்குக் காரணம் என்ன?" என்று எண்ணத் தொடங்கினான். தன் பயணத்தைத் தடுக்கவே வந்தாள் என்று கருதவோ அவனால் முடியவில்லை. பயணத்திற்கு உடன்பட்டு ஏற்பாடு களும் செய்து வழியனுப்ப இருந்தமையால், தடுக்கும் நோக்கம் திடீரெனப் பிறந்திருக்காது என்று உணர்ந்தான். வேறு என்ன காரணம் இருக்கக்கூடும் என்று எண்ணி உணர்வதற்குள், அவள்முகம் மாறிவிடக் கண்டான்; கலக்கமும் குழப்பமும் இல்லாமல் ஓவியம்போல் ஒரே குறிப்புடன் நின்றிடக் கண்டான்.

இந்த மாறுதல் விரைவில் நேர்ந்த மாறுதல். அவள் கருதியதைத் தலைவன் உணர்வதற்கு முன்னமே நேர்ந்த மாறுதல். அதனால், 'கண்ணியது உணரா அளவை.... முன் னம் காட்டி முகத்தின் உரையா, ஓவச் செய்தியின் ஒன்று நினைந் தொற்றி' என்று புலவர் பாடியுள்ளார்.

பழைய உரையில் 'கண்ணியது உணரா அளவை' என் பதற்கு 'நாம் கருதியது தான் அறிவதற்கு முன்பே' என்று பொருள் கூறப்பட்டுள்ளது. அது பொருந்தாமை மேலே காட்டப்பட்டது. தலைவனுடைய கருத்து அவளுக்கு நன்கு தெரியுமாதலின், 'நாம் கருதியதை அவள் அறிவதற்கு முன்பே' என்று கூறுவது பொருள் அன்று. ஆதலின், புதிய பொருளின்படி, 'தான் கருதியதை நாம் அறிவதற்கு முன்பே' என்று கொள்ளல் வேண்டும். இவ்வாறு கொண் டால் கண்ணுதல் என்ற வினைக்கு எழுவாய் வருவித்தலும்

வேண்டா. "அமரிய முகத்தளாய் வாயல் முறுவலளாய்க் கண்ணியது" என அந்த அடியிலேயே உள்ள ஒண்ணுத லின் வினையாகி நேரே அமைகிறது.

பொருள் இயைபையும் பொருந்தக் கொள்ளவேண்டும். 'கண்ணியது உணரா அளவை வினைதலைப்படுதல் செல்லா நினைவு கொண்டாள்' (நாம கருதியதைத் தான் அறிவதற்கு முன்னமே பொருள் முயற்சியில் தலையிட முடியாத நினைவு கொண்டாள்) என்பது பழைய இயைபு. 'கண்ணியது உணரா அளவை முன்னம் காட்டி முகத்தின் உரைத்தாள்' (அவள் கருதியதை நாம் உணருவதற்கு முன்பே ஒரு குறிப்புப் புலப்படுத்தி முகத்தால் பேசினாள்) என்பதே புதிய இயைபு. அந்தக் குறிப்பு என்ன என்பதைத் தெரிவிப் பனவே இடையில் உள்ள அடிகள்.

> வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்...
> பரல்முரம்பு ஆகிய பயமஇல் கானம்
> இறப்ப எண்ணுதிர் ஆயின் அறத்தாறு
> அன்றுஎன மொழிந்த தொன்றுபடு கிளவி
> அன்ன ஆக என்னுநள் போல

என்னும் பகுதியால் தலைவியின் குறிப்பு எதுபோல் புலப்பட்டது என்பது அறியப்படும். இவ்வாறு இயைபு அறுபடாமல் பாட்டுத் தொடர்ந்து செல்கிறது. "கண்ணி யது உணரா அளவை, ஒண்ணுதல்....என்னுநள் போல முன்னம் காட்டி முகத்தின் உரையா ஒன்று நினைந்து ஒற்றி ...மோயினள் உயிர்த்த காலை....கண்டு செலவு கடிந்தனம். நாம் பிரிதும எனின் பிழையலள்" எனப் பாட்டு இரு வாக்கியமாய்த் தொடர்புபட்டுச் செல்கிறது. இவ்வாறு இயையும் தொடர்பும் உணர்ந்து பாட்டைக் கற்கக் கற்க, உண்மைப் பொருள் தானகவே எளிதில் புலப்பட்டுப்

பாட்டினின்றும் புலவரின் கற்பனை எழுந்து விளங்குதல் காணலாம்.

ஆக, இதுவரையில் கண்ட பகுதி, தலைவி அமரிய முகத்தோடு வாயல்முறுவலோடு என்னவோ கருதிக் கொண்டு வந்தாள் என்பது. இனிக் காண்பது, அவள் கருதியதைத் தலைவன் உணரும் முன்பே ஓவியச் செய்தி போல் ஒரு குறிப்பைப் புலப்படுத்தி விடாமல் நினைந்து உயிர்த்தாள் என்பது.

‘ முன்னம் காட்டி ’

அவள் கருதியது என்ன என்று தலைவன் எண்ணி உணர்வதற்கு முன்பே தலைவி ஒரு குறிப்புக் காட்டி முகத்தால் பேசினாள். அவள் வாய்திறந்து பேசாவிடினும் முகத்தில் ஒரு கருத்து விளங்கியது; முகம் பேசுவது போலவே காணப்பட்டது. அந்தக் குறிப்பு என்ன?

முன் ஒருநாள் அவள் தன்னிடம் வந்து சொன்ன சொல்லைத் தலைவன் நினைத்துக்கொண்டான். அன்று அவள் அவனிடம் நெருங்கி, “கொடிய பாலைவழியைக் கடந்து செல்ல எண்ணுவீராயின், அவ்வாறு என்னை விட்டுப் பிரிவது அறநெறி ஆகாது” என்று சொன்ன பழஞ்சொல்லை நினைத்தான். தலைவன் பொருள் முயற்சியில் தலையிடக் கூடாது என்று எண்ணியே அன்று அவள் அவ்வாறு கூறினாள். இன்று அந்தச் சொற்கள் அவ்வாறு பொருள் முயற்சியைத் தடுப்பன ஆகுக என்று சொல்பவள் போல் குறிப்புக் காட்டியது அவளுடைய முகம். அது போன்ற குறிப்பைக் காட்டியதே அன்றி, அந்தக் குறிப்பைக் காட்டவில்லை; பயணத்தைத் தடுக்க எண்ணியது போல் தோன்றினாளே அல்லாமல், பயணத்தைத் தடுக்க எண்ணவில்லை.

தோன்றுபடு கிளவி'

'தொன்றுபடு கிளவி' என்றது 'இயற்கைப் புணர்ச்சிக் காலத்துச் சொன்ன வார்த்தை' என்று கூறுகிறது பழைய உரை. திருமணத்திற்கு முற்பட்ட களவொழுக்கத்தில் 'அறத்தாறு அன்று' என்று குறிப்பிட்டுத் தடுக்க வேண்டிய நெடுங்காலப் பிரிவு இல்லை. 'நான் உன்னைப் பிரியேன்' என்று தலைவன் தன் காதலியின் மனத்தைத் தேற்றுவதற்காக உறுதிமொழி கூறியது உண்டு. அதை 'அறத்தாறு அன்று' என்னும் வாய்பாட்டால் கூறும் மரபு இலக்கியத்தில் இல்லை. ஆதலின் அந்த உரை இத் தொடருக்குப் பொருந்தவில்லை.

'தொன்றுபடு கிளவி' என்பது சில திங்களுக்கு முன்போ அல்லது முந்திய ஆண்டிலோ தலைவி சொன்ன சொற்களைக் குறிக்கும். அப்போது பொருள் தேடுவதற்காகப் பாலைவழியைக் கடந்து செல்லும் எண்ணம் தலைவனுக்கு இருந்துவந்தது. அதை எவ்வாறேனும் தடுக்க வேண்டும் என்பதற்காக, தடுக்கும் எண்ணத்தோடு, தலைவி "அறத்தாறு அன்று" என மொழிந்தாள். அவையே பழைய சொல் - தொன்றுபடு கிளவி எனப்பட்டவை.

"பிரிய எண்ணினல் அது அறம் அன்று" என்பன அந்தச் சொற்கள். வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன் - பொருள்முயற்சியில் தலையிடக் கூடாது என்ற எண்ணத்தோடு - அன்று சொன்ன சொற்கள் அவை. இன்று திரும்பவும அந்தச் சொற்களைத் தலைவி கூறவில்லை; கூறுவதற்கு வேண்டிய மனநிலையும இப்போது அவளுக்கு இல்லை.

ஆயினும் முகத்தில் இருந்த குறிப்பு அந்தச் சொற்களைக் கூறித் தடுப்பது போலவே இருந்தது. "அந்தப் பழஞ்சொற்கள் அத்தகையன ஆகுக, பொருள் முயற்சியில் தலையிடாமல் தடுப்பன ஆகுக. (வினைதலைப்படுதல்

செல்லாதன ஆகுக)" என்று கூறுபவள் போலவே முகத்தின் குறிப்பு இருந்தது.

'போல' என்னும் உவம உருபு இங்குப் பொருட் சிறப்பு உடைய சொல்லாகும். 'அடிப்பது போல வந்த தந்தை அணைத்தார்' என்பது அடிப்பது போல வந்ததாகத் தோன்றினாரே அல்லாமல் அடிக்கும் எண்ணமே இல்லை. அதற்கு மாறாக அணைக்கவே வந்தார் என்று பொருள்படும். அணைக்க எழுந்த கைகள் அடிக்க எழும் கைகளைப் போலவே தோன்றியமையால், 'போல' என்ற உவமஉருபு வழங்குகிறது. ஒப்புமை தோற்றத்தில் மட்டுமே அன்றி, கருத்திலும் செயலிலும் அதற்கு மாறுபட்ட தன்மையே உள்ளது. பாட்டின் தொடரும அவ்வாறே பொருள் கொள்வதற்கு உரியது.

தலைவி பழஞ்சொற்களைக் கூறித் தடுப்பவள் போல முகக் குறிப்புக் காட்டினாள். ஆனால் தடுக்கும் எண்ணம் இல்லை; அதற்கு மாறாக விடை கொடுத்து அனுப்பும் எண்ணமே இருந்தது.

முன்னம் காட்டி முகத்தின் உரைத்தது எதனை? உடன்படாமைக் கருத்தை அன்று. 'என்னுநள்போல முன்னம் காட்டி முகத்தின் உரையா' என்று புலவர் குறிப்பிட்ட காரணம் இதுவே. உடன்படவில்லை என்று முகக் குறிப்புக் காட்டியிருப்பாளானால்,

அன்ன ஆகென முன்னம் காட்டி

என்றாவது,

அன்ன ஆகென முகத்தின் உரையா

என்றாவது புலவர் சொற்களை அமைத்திருப்பார்; கருத்து அதுவாயின், 'என்னுநள் போல' என்ற தொடருக்குமேல் 'முகத்தின் உரையா' என்ற தொடர் அமைப்பது

மிகையாகும்; நுண்ணிய உணர்வைப் பாடும் இடத்தில் இவ்வாறு மிகைபட அமைத்திருக்க மாட்டார். உண்மையில் இங்குத் தலைவிக்குத் தடுக்கும் நோக்கம் இல்லை; உடன்படாமைக் குறிப்பு இல்லை; அது போன்ற குறிப்பை முகத்தால் உரைத்தாளே அல்லாமல், அந்தக் குறிப்பை முகத்தால் உரைக்கவில்லை.

## ஒன்று

இதனைத் தெளிவுபடுத்தவே, புலவர் 'ஒன்று' என மற்றொரு சொல்லும் அமைத்திருக்கிறார். பயணத்திற்கு உடன்படவில்லை என்ற கருத்தைப் புலப்படுத்தி ஓவியம் போல் நின்றிருந்தாள் என்றால், முன்னம் காட்டியது, முகத்தின் உரைத்தது, நினைந்து ஒற்றியது என்னும் மூன்றும் உடன்படாமைக் கருத்தே ஆகும். நினைந்து ஒற்றியதும் அதுவே எனின், 'ஒன்று நினைந்து' என்று ஒன்றைக் குறிப்பிடவேண்டியதில்லை; மேற்போக்காகத் தோன்றியது ஒன்றாகவும், நினைந்து நின்றது வேறொன்றாகவும் இருந்தமையால்தான்,

ஓவச் செய்தியின் அதுநினைந் தொற்றி

என்று சுட்டிக் கூறாமல்

ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தொற்றி

என்று எதையோ ஒன்றைக் குறிப்பிட்டார்.

அந்த 'ஒன்று' என்ன குறிப்பு என்பது புலவர்க்குத் தெரியும். ஆயினும் கற்பவர் உய்த்துணர வேண்டும் என்று அவர் அதை இங்குக் கூறாமல் விட்டார். கூறியிருப்பின், தலைவன் கூறுவதாக இந்தப் பாட்டு அமைந்திருக்க முடியாது. இது புலவர் கூற்று அன்று; தலைவன் கூற்று. ஆகவே, புலவர் உணர்ந்த எல்லாவற்றையும் கூற

இடம் இல்லை; புலவர் படைத்த தலைவன் உணர்ந்தவற்றை மட்டுமே கூறத்தக்க இடம் இது. தலைவி நினைந்து நின்றது எது என்பது புலவர்க்குத் தெரியும். ஆயின் அது தலைவனுக்குத் தெரியாது; அதனால்தான், அவள் எதையோ ஒன்றை நினைந்து நின்றதாகக் கூறி வருந்தினான். அவளுடைய கருத்து அவனுக்கு விளங்கவில்லை என்பதைக் 'கண்ணியது உணரா அளவை' என்ற தொடரால் முன்பு கூறினான். இப்போதும் இன்னது நினைந்தாள் என்று கூற முடியாமல் 'ஒன்று நினைந்து ஒற்றி' என்று கூறியுள்ளான்.

ஆகவே, அவள் பயணத்திற்கு உடன்படவில்லை என்பதைப் புலப்படுத்தினாள் என்றும், அமரிய முகம் முதல் வாயல்முறுவல் வரையில் எல்லாவற்றிற்கும் காரணம் அவனைத் தடுக்கும் எண்ணமே என்றும் உரைகூறியது பொருந்தாமை போலவே, இங்கும் அதே காரணம கூறுவது பொருந்தாது; முன்னம் காட்டி முகத்தின் உரைத்ததும் ஓவச் செய்தியின் நினைந்து ஒற்றியதும் ஆகிய எல்லாம் பயணத்திற்குத் தடைசெய்ய வேண்டும் என்ற கருத்தே என்று கூறுவது பொருந்தாது.

அன்று ஒருநாள் 'அறத்தாறு அன்று' என்று அவள் சொன்ன சொல்லைத் தலைவன் நினைத்துக்கொண்டான். "ஒருகால் அன்றுபோல் இன்றும் பிரிவுக்கு இசையாமல் ஏதேனும் சொல்லித் தடுக்கப்போகிறாளோ?" என்று அவன் எண்ணினான். அன்று அவளுடைய முகத்தில் இருந்த வருத்தக் குறிப்பை அவன் மறக்கவில்லை. இன்று கண்ட முகத்திலும் அதுபோன்ற குறிப்பே இருந்தது. குறிப்பு அதுபோல் தோன்றியதே அல்லாமல், அன்று இருந்த அதே கருத்து இல்லை; வேறொரு வகைத் துயரம் இருந்தது. இன்றும் அதே கருத்து அவளுக்கு இருந்திருப்பின், உரிமை மிகுந்தவளாய் வாய்ச்சொல்லால் வெளிப்

படையாக உடன்படாமை தெரிவித்துத் தடுத்திருப்பாள். அன்று கூறியதைவிட இன்று வற்புறுத்திக் கூறும் உரிமையும் உண்டு; கட்டாயமும் உண்டு. அன்று பயணம் வெறும் பேச்சாக இருந்தது; இன்று செயலாக மாறிவிட்டது. பிரிவு பேச்சாக இருந்தபோதே "அறத்தாறு அன்று" என மறுத்து உடன்படாமையைத் திட்பமாகத் தெரிவித்தவள், இன்று செயலாக மாறியுள்ள நிலையில், பேசவேண்டிய கட்டாயம் ஏற்பட்ட நிலையில், ஓவியம் போல் நினைந்து வாய்ச்சொல் இல்லாதவளாய் நிற்கமாட்டாள். ஆகையால், இன்று கண்ட முகக்குறிப்பு அன்று கண்டது போலவே இருப்பினும், அது வேறு; இது வேறு. இது இன்னது என்று தலைவனுக்குத் தெரியவில்லை; அதனால்தான் 'ஒன்று நினைந்து ஒற்றி' என ஒன்று என்னும் சொல்லால் "ஏதோ ஒன்று, எனக்கு விளங்காத ஒன்று" என்று குறிப்பிட்டான்.

பெற்ற தாய் தன் மகளைப் புக்ககத்திற்கு அனுப்பும் போது மனம் கலங்கிக் கண்ணீர் சொரிந்து நெட்டுயிர்த்து நின்றதைப் போன்றதே இதுவும்: பெற்ற தாயின் கலக்கம், மகளைப் புக்ககத்திற்கு அனுப்ப உடன்படாததுபோல் இருந்தது; ஆனால் அது உண்மை அன்று; புக்ககத்திற்கு அனுப்பும் நோக்கமே அவளுக்கு அப்போதும் இருந்தது. அது போல் தலைவி தலைவனுக்கு விடைகொடுத்து அனுப்பவே முயன்றாள்; ஆயினும் ஏதோ ஒருவகை முகக் குறிப்புடன் ஓவியம் போல் நின்றாள்.

## ஓவச் செய்தி

ஓவியம் ஒருநிலை உற்று நிற்பது; ஒரே உணர்வுக்கு நிலைக்களனாக நிற்பது. முன்பு இருந்த உணர்வுகளைக் காட்ட முடியாமல், இப்போது இருக்கும் உணர்வை மட்டும்

காட்டுவது ஓவியம். அந்த ஓர் உணர்வே - மாருமல் நிலைத்து விட்ட ஓர் உணர்வே - ஓவியத்தின் செய்தி. தலைவியின் உள்ளம் அத்தகைய ஒருமைப்பாடு அடைந்துவிட்டது. அவள் இதற்குமுன் அடைந்திருந்த போராட்டங்கள் அப்போது இல்லை. அளிநிலை பொருதபோதும், அமரிய முகத்தளானபோதும், விளிநிலை கொள்ளாதபோதும, தமியளாய் உணர்ந்தபோதும், நிலம் வடுக்கொள நடந்தபோதும், வாயல் முறுவல் கொண்டபோதும் அவளுடைய அறிவுக்கும் உணர்வுக்கும் இருந்த போராட்டங்கள் பல. அறிவு வெல்ல, உணர்வு தோற்க, அறிவு தோற்க, உணர்வு வெல்ல இவ்வாறு வெற்றி தோல்விகள் நொடிக்கு நொடி எவ்வெவ்வாறோ மாறின என்ருல், அகத்தே நிகழ்ந்த போராட்டங்களின் நுண்மையும் விரைவும் எத்தகையன? திடீரென்று அத்தனை போராட்டங்களும் நின்றன; மனம் ஒருமைப்பாடு உற்றது; ஒரே நினைவு, அதே நினைவு நின்றது; தலைவி ஓவியமானள்; ஓவியச் செய்திபோல் ஒன்றை நினைந்து நின்ருள்.

## கண்ணீர்

இன்பத்திலும் ஒருமைப்பாடு உண்டு; துன்பத்திலும் ஒருமைப்பாடு உண்டு. பாட்டில் காண்பது துன்பத்தில் உற்ற ஒருமைப்பாடு. மனம் ஒருமைப்பட்டு உற்ற துன்பமாதலின், பதைப்பு இல்லை, நடுக்கம இல்லை, அலைவு இல்லை, ஆரவாரம இல்லை; அமைதி இருந்தது; ஓவியம்போல் நிற்கும் அளவிற்கு அமைதி இருந்தது. அடைக்கும் தாழ் இல்லாத அன்பு வாழும் நெஞ்சமாதலின், கண்ணீர் பூசல் தந்தது. ஒருமைப்பட்ட மனத்தின் அமைதியில் பிறந்த கண்ணீராதலின், ஊற்றுப்போல் பெருகவில்லை; அளவாய்த் தோன்றிக் கண்களிலேயே பரவிப் பாவையை மறைத்து நின்றது.

கண்ணீர் அளவோடு நின்றமைக்கு இதுவே காரணம். தலைவனுடைய பயணத்திற்கு ஆகாத தீய சகுனம் என்ற எண்ணத்தால் தலைவி கண்ணீரை அடக்கிக்கொள்ளவில்லை. சங்க காலத்தில் பல்லி சொல்லுதல் முதலியவற்றில் நம்பிக்கை கொண்ட மக்களும் இருந்தனர். அதனால் கண்ணீர் அபசகுனம் என்று கருதும் நம்பிக்கையும் இருந்திருக்கலாம். ஆயின், கண்ணீரை அடக்கிக்கொள்ளத் தலைவியால் முடிந்திருக்குமா என்பது ஆராயத்தக்கது.

மகளைப் புக்ககம் அனுப்பும் தாய் என்ன முயன்றாலும் தன் கண்ணீரைத் தடுத்து அடக்கிக்கொள்ள முடியுமோ? முடியுமாயின், "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? ஆர்வலர் - புன்கணீர் பூசல் தரும" என்று வாழ்க்கையைத் தெளிய உணர்ந்த வள்ளுவர் கூறியது ஏன்?

அன்றியும், தொடக்கத்தில் உள்ளக் குழப்பத்தைப் புலப்படுத்தாமல் எவ்வளவோ முயன்றும், மனமும் குரலும் நாவும் காலும் கால்விரலும் முகமும் தலைவியோடு ஒத்துழைக்காமல்போக, குழப்பமும் போராட்டமும் அடங்கித் துயரம் ஒன்றே ஓர் உணர்வாய் நின்றபோது அடங்காமல் பெருகிய கண்ணீரை அடக்கிக்கொள்ள முடியுமோ?

அன்றியும், ஓவியம் போல் ஒருமைப்பாடு உற்ற துன்ப அமைதியில் எல்லாம் அளவுபட்டு நிற்குமே அன்றி அளவு கடந்து செல்வதில்லை. பரபரப்பான துன்பத்திலோ சீற்றத்திலோ, இமை, இதழ், கை, கால் எல்லாம் ஒழுங்குபடாமல் அலைதலும், ஒருமைப்பட்ட உணர்ச்சியில் இவை எல்லாம் ஒழுங்குபட்டு நிற்றலும் காணலாம். ஆகவே ஓவியச் செய்தி போல் ஒன்று நினைந்து நின்ற நிலையில், கண்ணீர் அடங்காமல் பெருகியதாகவும், தலைவி அறிவாக எண்ணிச் சகுனக் கருத்தோடு அதை அடக்கிக்கொண்டதாகவும் கூறல் பொருந்தாது.

மோயினள் உயிர்த்தல்

கண்களில் நீர் கலங்கியவுடன் தன் முகத்தைத் தலைவன் காணாதவாறு தலை கவிழ்ந்தாள். மார்பில் அணைத்திருந்த மகனை நோக்கினாள்.

கண்ணீரை அவன் கண்டால், தன் முயற்சி எல்லாம் வீணாகுமே, பயணத்தை நிறுத்திவிட எண்ணுவானே என்று அவள் அஞ்சினாள்; அது பற்றியே கண்ணீரை அவன் காணாதவாறு மறைக்கத தலைகவிழ்ந்தாள். ஆயினும் தலைவன் அவளுடைய கண்ணீரைக் கண்டுவிட்டான்; அப்போதே பயண முயற்சியில் தயக்கம் கொண்டான். அடுத்த காட்சி அந்தத் தயக்கத்தை உறுதிப்படுத்தியது.

இவ்வாறு நெருக்கடியான நிலைகளில் தம் கண்ணீரைப் பிறர் காணாதவாறு மறைக்க விரும்புகின்றவர்கள், வாளா முகத்தைத் துடைப்பதுபோலவும் பிற செயல்களைச் செய்வது போலவும் நடிப்பார்கள். அந்தச் செயல்களால் தம கலக்கம் பிறர்க்குத் தெரியாதவாறு மறைக்கவேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். சிறுவர்களிடத்திலும் இத் தகைய திறமை காணப்படுகிறது. இடறி விழுந்த சிறுவன் தான் வீழ்ந்ததைத் தொலைவில் உள்ள பிறர் காணாதவாறு, அல்லது காணினும் வேறுவகையாக எண்ணிடுமாறு, அந்த இடத்திலேயே அப்போதே உருண்டுவிழும் ஆடல் முதலியவற்றை (' பல்டி ' முதலியவற்றை)ச் செய்யத் தொடங்குவான். பள்ளிக்கூட மாணவர்கள் கண்ணீரை மறைக்கும் போது ஏதோ படிப்பது அல்லது எழுதுவதுபோல் முயன்று தலை குனிவார்கள். நெருக்கடியான நிலைகளில் இயல்பாகத் தோன்றும் முயற்சி அது. உடுக்கை இழந்தவன் கை செய்வதுபோல் உடனே இயற்கையாய்ச் செய்யப்படுவது அது.

தலைவியும் அவ்வாறு ஏதேனும் செய்து தன் கலக்கத்தை மறைக்க முயன்றாள். தலைகுனிந்து தன் மகனுடைய சிறிய தலையை நோக்கினாள்; அவனுடைய தலையில் இருந்த பூமாலையை முகர்ந்தாள்.

## மணி உரு இழத்தல்

அந்த மாலை அன்று காலையில் குழந்தைக்கு அவள் சூட்டிய மலர்மாலை. தூய நீர் நிறைந்த பொய்கையில் பூத்த செங்கழுநீர் மலர்களால் இணை இணையாகத் தொடுக்கப்பட்ட மாலை அது. குழந்தையின் தலையை மோந்து கொஞ்சுவதுபோல் தலைவன் உணரவேண்டும் என்றும், தன் கலக்கத்தைக் கண்டு தயங்கி நிற்கக் கூடாது என்றும் எண்ணியே அதனை மோந்தாள்.

இந்த முயற்சி எல்லோர்க்கும் எப்போதும் நெருக்கடியான நிலைகளில் இயல்பாக வருவது ஆதலின் தலைவியும் வெற்றி பெற்றாள். இயல்பான செயல்போல், மகனிடம் அன்பு காட்டும் செயல்போல், அவன் தலையை மோந்தாள்.

ஆயின், இந்த வெற்றியும் மற்றொன்றால் பயனற்றுப் போயிற்று. ஓவியம்போல் ஒருமைப்பட்டுத் துன்பத்தில் அமைதியுற்று நின்ற அவள் கண்ணீரை மறைக்க முயன்றாள்; ஆயினும் பெருமூச்சுக்கு இடம் கொடுத்துவிட்டாள்.

பெருமூச்சு என்பது பரபரப்போடு அலையும்போது வருவது அன்று; கொட்டாவி திமிர்விடல் முதலியனவும் அத்தகையனவே. இவை எல்லாம் அமைதி நிலையின் காற்புள்ளி அரைப்புள்ளி முற்றுப்புள்ளி போன்றவை; தொடர்ந்து அமைதியை வரையறுக்க வருபவை; வாக்கியத்தை வரையறுக்கும் நிறுத்தக்குறிகள் போல் வருபவை. ஓடி ஆடி உழைக்கும்போது விடும் மூச்சு ஆழ்ந்த மூச்சாக

இருக்கும்; அது பெருமூச்சு (நெட்டுயிர்ப்பு) அன்று. அமைதி நிலையில் மூச்சுச் சிறிதளவே உட்சென்றும் வெளி வந்தும் மெல்ல இயங்கும். அந்த அமைதியில் ஒரு வேறு பாடோ, அடுத்த நிலைக்கு மாறுதலோ நேரும்போது இது வரையில் குறைவாக இருந்த காற்றின் தேவைக்கு ஈடு செய்யப்படும். அவ்வாறு நுரையீரலுக்கு ஈடு செய்வதே பெருமூச்சின் காரணம்.

இங்குத் தலைவி விட்ட நெட்டுயிர்ப்பும் அமைதியை அடுத்துப் பிறந்ததே. ஓவியம்போல் நின்றநிலை மாறிக் குனிந்து குழந்தையின் தலையை முகர்ந்தமையால் வந்த நெட்டுயிர்ப்பு இது.

அளிநிலை பொறாமல் அமரிய முகத்தோடு வந்தது முதல் தலைவியின் உள்ளத்தே அடங்கியிருந்த துயரம், நாடி நரம்புகளை வெம்மையுறச் செய்தது. துயரம் அழுது புலம்பி வெளிப்படின் வெப்பம் ஆறுவது இயல்பு; அடங்கி யிருப் பின் வெப்பம் மிகும்; தலைவியின் உடலில் மிகுந்த அந்த வெப்பம் குருதியிலிருந்து நுரையீரல் வழியாக வெளிப்படக் காத்திருந்தது. நெட்டுயிர்ப்பு விடவே, உள்ளக் கொதிப்பின் வெப்பம் அதன் வாயிலாக வெளிப்பட்டது; வெளிப்பட்ட வெப்பம் குழந்தையின் தலையில் இருந்த மெல்லிய மலரிதழ் கள் வாடுமாறு செய்தது.

அந்த இதழ்கள் செங்கழுநீர் மலரின் மெல்லிய இதழ் கள். நீர்ப்பூ ஆதலால் வெப்பம் தாங்கும் தன்மை குறைந் தது செங்கழுநீர்ப்பூ. அதிலும், தூநீர் பயந்த பூ என் றமையால் நீர் நிறைந்த பொய்கையில் மலர்ந்த பூவாகும். வறட்சியுறும் புன்செய் நிலத்து நெற்பயிரைவிட நீர்வளம் குன்றாத நன்செய் நிலத்துக் குழைந்த மண்ணில் விளையும் நெற்பயிர் மென்மை மிக்கிருத்தல் இயல்பு. அதுபோல் இந்தச் செங்கழுநீர்ப் பூவிதழ்களும் வெப்பம் தாங்காத

மென்மை உடையன. ஆதலின் தலைவியின் நெட்டுயிர்ப்புத் தாக்கியதும் ஒரு சிறிது வாடியவை போல் தோன்றின.

## ‘ பிழையலள் மாதோ ’

ஆயின், அந்தக் காட்சியைக் கண்ட தலைவன் உண்மையை உள்ளவாறே கூறும் மனநிலையில் இல்லை. எதிர் பாராத நடையும் குறிப்பும் கண்டு தலைவியின் கருத்து இன்னது என்று உணர முடியாமல் திகைத்தான், இறுதியில் கண்ணீரைக் கண்டதும கலங்கி உணர்ச்சி மிக்க நிலையில் இருந்தான் அவன். ஆதலின் மலரிதழ்கள் ஒரு சிறிது வாடினாற்போல் மாறியதைக் கண்டதும், தன் உணர்ச்சிப் பெருக்கால், நிறமே மாறி வாடிவிட்டதாகக் கூறியுள்ளான். “ அந்தப் பெரிய மலர்கள் பவளம் போன்ற செந்நிறம் இழந்தன, அழகு சிதைந்தன. அதைக் கண்டேன். கண்டதும் பயணத்தைக் கைவிட்டேன். அருகே இருக்கும போதே இவ்வாறு வருந்துகிறவள் பிரிந்து சென்றபின் பிழைத்திருக்க மாட்டாளே ” என்று உயர்வு நவிற்சியாக உணர்ச்சிப் பெருக்கோடு கூறினான்.

## தலைவியின் தோல்வி

தலைவி உள்ளக் குழப்பத்தை அடக்க எவ்வளவோ முயன்று இறுதியில் தோல்வியுற்றாள். மனத்தோடு போராடினாள் ; குரலை அடக்கினாள் ; நாவை அடக்கினாள் ; காலோடு போராடினாள் ; கால்விரல்களோடு போராடினாள் ; வாயிதழ்களோடு போராடினாள் ; வென்றும் தோற்றும ஒரு வாறு ஒருமைப்பாடு உற்றாள் ; அடைக்குந்தாழ் இல்லாத அன்பின் வயப்பட்டாள் ; புன்கண்ணீர் பூசல் தந்தது ; அதையும மறைக்க முயன்றாள் ; குனிந்து மகனுடைய தலையை முகர்ந்தாள் ; இந்த முயற்சியில் வெற்றியும

பெற்றாள். ஆனால் இதுவரையில் போராட வந்தவை எல்லாம் தன்னால் எதிர்க்கக் கூடியவை, அடக்கக் கூடியவை, மாற்றக் கூடியவை; ஓரளவு தன்வயமானவை. இறுதியில் அவள் தோற்றது தன்வயம் நில்லாத ஒன்றனுக்கு; எதிர்க்கவோ அடக்கவோ மறைக்கவோ முடியாமல் இயல்பாக எழும் நெட்டுயிர்ப்பான மூச்சை அடக்கினும் அடக்கியிருக்கலாம; அதன் வெம்மையைப் போக்கித் தண்மை ஊட்டுவது யாரால் இயலும்? ஆகவே தோல்வியுற்றாள் அந்த அன்புருவான தலைவி.

ஒவ்வொருபடியிலும் அவள் கருதியது இன்னது என்று உணராமல் தலைவன் திகைத்தான். இடையில் அவளிடம் அமைதி கண்டபோதும் உள்ளத்தில் உள்ள ஒன்று என்னவோ என்று அறியாமல் திகைத்தான். கண்ணீரைக் கண்டதும் கலங்கினான். நெட்டுயிர்ப்பைக் கண்டதும் பயணத்தைக் கைவிட்டான். திகைப்பே கலக்கமாகி, கலக்கம் துணிவாகியது. பிரிவின் எண்ணமே இவ்வாறு துயரம் தரின், பிரிவு என்ன செய்திடுமோ என்று நொந்து துணிந்து பயணத்தைக் கைவிட்டான்.

மலரின் வாட்டம்மட்டுமே தலைவன் மனத்தைத் திடீரென மாற்றிவிடவில்லை. ஒவ்வொரு குறிப்பும் படிப்படியே அவனுடைய மனத்தை மாற்றிவந்தது. ஒரு நிலையில் அவன் திகைப்பு உற்றான். திகைப்பைக் கலக்கமாக மாற்றியது கண்ணீர். கலக்கத்தைத் துணிந்த செயலாக மாற்றியது நெட்டுயிர்ப்பு. அவனுடைய உணர்ச்சிப் பெருக்கிற்குத் தூண்டுகோலாக இருந்தது மலரின் வாட்டம்.

# 4. ஓவச் செய்தி

## நினைந்த ஒன்று

இனி, தலைவனை விட்டுப் புலவரை நாடுவோம்; தலைவன் கூற்றால் தலைவியின் உள்ளம் விளங்கவில்லை. அவள் ஓவியச் செய்தி போல் நினைந்து நின்ற " ஒன்று " என்ன என்பது விளங்கவில்லை. தலைவனுக்குத் தெரியாத அது புலவர்க்குத் தெரியும். தலைவன் உள்ளத்தையும் தலைவியின் உள்ளத்தையும் தன்னுள் கொண்டது புலவர் உள்ளம். ஆதலின் புலவர்உள்ளம் உண்மையை விளக்க வல்லது.

## உள்ளப் பிரிதல்

திருவள்ளுவர் கல்வியை விளக்கும்போது அதன் பயனாகிய வாழ்க்கையை - புலவர்வாழ்க்கையைப் - பற்றிக் கூறுகிறார். புலவர்வாழ்க்கையில் சிறந்ததொரு பகுதி புலவர் புலவரொடு பழகி வாழும் பகுதியாகும். அதனையே திருவள்ளுவர் 'புலவர்தொழில்' என்கின்றார். கலைவாழ்க்கையினராகிய புலவர் ஒருவரோடு ஒருவர் கூடிப் பழகும்போது உவகை அடைவர்; ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியும்போது கவலை உறுவர்: இதுவே திருவள்ளுவர் கூறுவது:

> உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
> அனைத்தே புலவர் தொழில். (குறள் - 394)

கூடும்போது உவப்பு; பிரியும்போது உள்ளல்; உள்ளல் என்பது, ' இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதும் என நினைந்து கவலையுறுதல் ' என்று விளக்குகிறார் பரிமேலழகர்.

புலவர் அறிவு நிரம்பியவர்; எளிதில் கவலையுறாதவர். ஆயின், ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிய நேர்ந்தால் கவலையுறக் காரணம் என்ன? அற்றம் காக்கும் கருவி (குறள் - 421) என்றும், அழிக்கலகா அரண் (குறள் - 421) என்றும் போற்றப்படும் திண்மை வாய்ந்தது அறிவு. அத்தகைய அறிவு பெற்றவர்கள் கவலையுறக் காரணம் என்ன? புலவர் ஒருவர் மற்றொருவரிடத்து அன்பு கனிந்த உணர்வோடு ஒன்றுபட்டமையே பிரிவில் கவலையுறச் செய்கிறது; தம் உணர்வைக் கொட்டிப் பிறர் உணர்வைக் கொள்ளைகொள்ளும் புலமைவாழ்க்கையே இவ்வாறு கவலையுறச் செய்கிறது; உள்ளச் செய்கிறது. இவ்வாறு பிரிந்து கவலையுறுதலே "புலவர் தொழில்" எனக் கூறப்பட்டுள்ளது.

## பிரிவின் துன்பம்

ஒத்த அன்பு உடையவராய் உணர்ந்து ஒன்றுபட்டு வாழும் தலைவனும் தலைவியும் பிரிவின்போது உள்ளம் நெகிழ்ந்து துன்புறுதல் இயற்கை. "உள்ளப் பிரிதல்" என்று திருவள்ளுவர் கூறுவது இவர்களின் வாழ்வில் மிகுதி. புலவர் அறிவை அரணாகக் கொண்டு வாழ்வது போல் இவர்கள் வாழாமையால், "உள்ளப் பிரிதல் இவர்களின் வாழ்வில் மிகுதியாகும். அறிவு உடையவரே ஆயினும், இல்வாழ்க்கையில் அந்த அறிவைக் கொள்ளை கொடுத்து அன்பையே பெருக்கி வாழ்வதுதான் காதலர் வாழ்வு. இத்தகைய வாழ்வில் பிரிவு நேரும்போது அறிவு அரண் செய்ய வருவதில்லை. பிரிவு என எண்ணவும் நடுக்கம், பேசவும் நடுக்கம், இவ்வாறு நடுங்கிக் கலங்கிப் பிரியும்போது சொல்லொணாத் துயரம், பிரிந்தபின் சாதல் போன்ற துன்பம்: இவ்வாறு இவர்களின் வாழ்வில் உள்ளத்து உணர்வே ஆட்சி செய்கிறது.

யாக்கைக்கு
உயிரியைந் தன்ன நட்பின், அவ்வுயிர்
வாழ்தல் அன்ன காதல்
சாதல் அன்ன பிரிவுஅரி யோளே. (அக. 339)

உடம்பொடு உயிரிடை என்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. (குறள் - 1122)

வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை ; சாதல்
அதற்குஅன்னள் நீங்கும் இடத்து. (குறள் - 1124)

காதல் காதல் காதல்
காதல்போயின் காதல்போயின்
சாதல் சாதல் சாதல் (குயில் பாட்டு)

என்னும் கருத்துக்கள் இந்த உண்மையை விளக்குவன.

## உயிர்த் துயரம்

பிரிந்து வருந்த நேரும்போது தலைவனைவிட மிக நைந்து துயருறுகிறவள் தலைவியே. காரணம்,தலைவனுடைய உள்ளத்தைக் கவர்வதற்கு வெளியுலகம் வந்து துணைசெய் கிறது. வெளிநாட்டி லிருந்தபோதிலும் பொருள்முயற்சி யில் ஈடுபட்டு ஒருவாறு கவலையைக் குறைத்துக்கொள் கிறான் தலைவன். பிரிவாற்றாமை அவனையும் வருத்திய போதிலும் அதற்கு மாற்றும் இருந்துவருகிறது. ஆனால் பழைய இடத்திலே பழைய சூழலிலேயே வாழும் தலைவியின் துயரத்தை மாற்றுவதற்கு மருந்து ஒன்றுமே இல்லை. அதனால், பிரிவு என்பது சாதலுக்கு நிகரான துன்பமாக இருப்பது அவளுடைய வாழ்வில்தான். "யான் என் காதலரைக் காணாமல் பிரிந்து இருக்கும் நிலையில் துன்பம் மிகுந்த நெஞ்சோடு வருந்தி அழிகிறேன். பெரிய நீர்நிலையில் கல்லின்மேல் மோதும் சிறிய நுரை மோதி

மோதி மெல்ல அழிவதுபோல், யானும் துயரத்தால் நைந்து நைந்து மெல்ல மெல்ல அழிந்துபோகிறேன்" என்று தலைவி கூறியதாகப் பாட்டு ஒன்று உள்ளது :

யாம்எம் காதலர்க் காணேம் ஆயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே. (குறு. 290)

மாலைக் காலம் மெல்ல வந்தது. தலைவியின் பிரிவாற்றாமைத் துயரம் வளர்ந்தது. தோழியைப் பார்த்து அவள் கூறினாள் : "பகலை வழிகூட்டி அனுப்பிவிட்ட இந்த மாலைக் காலம் துன்பம் நிறைந்ததாக உள்ளது. காதலரைப் பிரிந்த தனிமைத் துன்பத்தால் வருந்துமாறு செய்கிறது. முன்னமே பெருந்துன்பம் உற்று வருந்துகின்றவரின் மார்பை நோக்கிக் கூரிய வேல் எறிவோரைப் போல விடாமல் வருத்துகிறது. குற்றம் அற்ற கண்ணாடியில் ஊதிய ஆவி மெல்ல மெல்ல நுணுகி மறைவதுபோல் என் வலிமையும் வருந்தி வருந்தி அழிகிறது. தோழி! கொடிய சூறுவளி வீசும்போது ஆடி அசையும் மரங்களை விட்டுப் பறவைகள் வெளியேறுவதுபோல், என் உயிர் உடம்பைத் துறந்து செல்லும் நேரம் இதுதானோ?" என்று கூறி வருந்தினாள் :

பகல்ஆற்றுப் படுத்த பழங்கண் மாலை
காதலர்ப் பிரிந்த புலம்பின் நோதக
ஆரஞர் உறுநர் அருநிறம் சுட்டிக்
கூர்எஃகு எறிஞரின் அலைத்தல் ஆனாது ;
எள்ளற இயற்றிய நிழல்காண் மண்டிலத்து
உள்ளூது ஆவியின் பைப்பய நுணுகி
மதுகை மாய்தல் வேண்டும் பெரிது அழிந்து ;
இதுகொல் வாழி தோழி என்உயிர்

விலங்குவெங் கடுவளி எடுப்பத்
துளங்குமரப் புள்ளின் துறக்கும் பொழுதே (அக. 71)

" நகரத்தில் நள்ளிரவில் எல்லோரும் தூங்குகிறார்கள். விழித்திருப்பவர் ஒருவரும் இல்லை. நகரவாயிலில் 'போற்றோ' என்னும் காவல்ஒலி கேட்கிறது. காவல் காப்பவரின் மணி ஒலி கேட்கிறது. திக்கற்ற என் வாழ்வு முடியும் நாள் - யான் சாகும் நாள் - இன்றுதானோ '' என்று தலைவி ஒருநாள் நள்ளிரவில் உறக்கமின்றி விழித்திருந்து துயருற்றாள் :

பேரூர் துஞ்சும் யாரும் இல்லை .....
காப்புடை வாயில் போற்றோ என்னும் ;
யாமம் கொள்பவர் நெடுநா ஒண்மணி
ஒன்றெறி பாணியின் இரட்டும்
இன்றுகொல் அளியேன் பொன்றும் நாளே. (நற். 132)

## தன்னலமற்ற மனம்

இவ்வாறு மாலையிலும் நள்ளிரவிலும் தனித்து வருந்திச் சாவைப் பற்றி எண்ணக் காரணம் என்ன ? தலைவன் வீட்டில் இல்லாத காரணம்மட்டும் இவ்வளவு துன்பத்தைத் தரக் கூடியது ஆகுமா ? அதுவே காரணம் எனின், அது தன் னலத்தை அன்றோ காட்டுகிறது ? காதலர் கூடிவாழும் வாழ்க்கையில் தன்னலம் இல்லாததுபோலவே, பிரிந்துவருந் தும் துயரத்திலும் தன்னலம் இருக்க இடம் இல்லை. " வெளி நாட்டிற்குப் பிரிந்துசென்ற காதலர் எந்நிலையில் இருக் கிறாரோ ? எங்கே இருக்கிறாரோ ? எவ்வாறு இருக்கிறாரோ? அவர் சென்ற வழி கொடிய பாலைவழி என்று சொல்கிறார் களே ! ஏதேனும் தீங்கு நேர்ந்திருக்குமோ ?" என்று பல வாறு தன் காதலனைப் பற்றி எண்ணும் எண்ணங்களே அவளுடைய நெஞ்சில் கவலையையும் துயரத்தையும் வளர்த் தன. இந்த எண்ணங்களில் தன்னலம் இல்லை ; தலைவ

னுடைய நலத்தையே நாடும் மனப்பான்மை உள்ளது. ஆகவே, தலைவியின் துயரத்தில் தன்னலம் இல்லை என்பது தெளிவு. சங்கப் பாட்டுக்கள் இதற்குச் சான்று கூறுகின்றன :

தலைவன் தொலைவான வெளிநாட்டில் இருப்பதால் தலைவி தனித்துத் துயருற்றாள். அவன் கூறிச் சென்ற காலம் கழிந்ததும் திரும்பிவந்துவிடுவான் என்ற நம்பிக்கையோடு நாட்களை எண்ணி எண்ணிச் சுவரில் குறித்துவைத்திருந்தாள். அந்தக் குறிப்பை நோக்கி நினைந்து கண்ணீர் விட்டாள். அந்தக் கண்ணீர் முத்தாரத்திலிருந்து அறுபட்ட முத்துப் போல் மார்பில் தெறித்து விழுந்தது. அவள் படுக்கையில் சாய்ந்து துன்புற்று மயங்கிச் சோர்ந்திருந்தாள். அந்நிலையில் பல்லி ஒன்று டிக் டிக் டிக் என்று ஒலித்தது. அதைக் கேட்டதும் துன்ப மயக்கத்தில் கிடந்த தலைவி, அதை வழிபட்டு, "நன்மையானவை சொல்லு, பல்லி!" என்று நடுங்கினாள். இது ஒரு மாலைக் காலத்துக் காட்சி :

சேண்உறை புலம்பின் நாள்முறை இழைத்த
திண்சுவர் நோக்கி நினைந்து கண்பனி
நெகிழ்நூல் முத்தின் முகிழ்முலை தெறிப்ப
மையற விரிந்த படைமை சேக்கை
ஐமென் தூவி அணைசேர்பு அசைஇ
மையல் கொண்ட மதன்அழி இருக்கையள்
பகுவாய்ப் பல்லி படுதொறும் பரவி
நல்ல கூறென நடுங்கிப்
புல்லென் மாலையொடு பொருங்கொல் தானே. (அக. 289)

தலைவனுடைய பிரிவை நினைத்து வருந்திச் சோர்ந்து கிடந்த தலைவி பல்லியின் ஒலியைக் கேட்டதும் பரவுவது ஏன்? நடுங்குவது ஏன்? "காதலர் ஒரு தீங்கும் இல்லாமல்

பாலைவழியைக் கடந்து சென்றிருப்பாரோ ? வெளிநாட்டில் நலமாக இருப்பாரோ ? இடையூறு யாதேனும் வழியில் நேர்ந்திருக்குமோ? சென்ற நாட்டில் எப்படி இருக்கிறரோ? ஒரு தீங்கும் நேராமல் இருக்கவேண்டுமே!" என்று எந்நேரமும் தலைவனுடைய வாழ்க்கையைப் பற்றியே ஏங்கிக் கவலையுறுவதால், பல்லியின் ஒலியைக் கேட்டதும் பரவினள். தபாலும் தந்தியும் வேறு செய்திவாயிலும் இல்லாத காரணத்தால் பல்லியை நம்பும் மூடநம்பிக்கை இருந்த காலம் அது. வெளிநாட்டில் ஏதேனும் தீங்கோ இடையூறோ தலைவனுக்கு ஏற்பட்டால் வீட்டில் பல்லி சொல்லிவிடும் என்று நம்பியவள் தலைவி. அதனால், அவருக்கு நன்மையே ஏற்படவேண்டும் என்ற ஏக்கத்தால், " தீங்கு நேர்ந்ததாகச் சொல்லாதே. நன்மையே சொல்லுக " என்று நடுங்கிப் பரவினள். தலைவனுடைய வாழ்க்கையைப் பற்றிய அன்பால் அறிவு மயங்கிய அவள், நன்மை தீமையை மாற்றும் ஆற்றல் பல்லிக்கு இல்லை என்பதையும் மறந்து, " நல்ல கூறு " என்று அதனிடம் வேண்டினள். அந்நிலையிலும் தன்னலமற்ற தூய அன்பு அவளுடைய உள்ளத்தில் விளங்குதலையும் அதுவே துயரத்திற்கு அடிப்படையாக இருத்தலையும் காணலாம்.

பொருள் தேடுவதற்காகத் துணிந்து பாலைவழியில் சென்ற தமிழர் பலர் தாய்நாட்டிற்குத் திரும்பிவராமல் இடைவழியிலோ சென்ற நாட்டிலோ பலியாகி மாண்டு மறைந்த காலம் அது. அதனால்தான் தலைவியின் உள்ளத்தில் இத்தகைய துயரம் பெருகியது. திரும்பி வராமல் மறைந்தவர்களின் செய்திகளைக் கேட்டறிந்திருப்பதால், தலைவியின் உள்ளம் தலைவனுடைய உயிர்வாழ்வைப் பற்றி எண்ணிக் கவலைப்பட்டது. பித்துப் பிடித்தவள் போல் நிறைமதியைப் பார்த்தாள். " மதியமே! உனக்குப்

பெருந்தன்மையும் உண்டு, நடுநிலைமையும் உண்டு. உனக்குத் தெரியாமல் ஒளிந்துள்ள உலகப் பகுதி ஒன்றும் இல்லையே. என் கண்ணிற்குத் தெரியாத நிலையில் பிரிந்து சென்று வாழும் காதலர் எங்கே இருக்கின்றார்? அவர் இருக்குமிடத்தைக் காட்டு" என்றாள் :

நிறையுறு மதியம் !
சால்பும் செம்மையும் உடையை ஆதலின்
நிற்கரந்து உறையும் உலகம் இன்மையின்
எற்கரந்து உறைவோர் உள்வழி காட்டாய். (நற். 196)

கணவனை இழந்த காரணத்தால் பித்துப் பிடித்து வருந்தி அலைந்த ஆதிமருதி என்பவளைத் தலைவி நினைத்துக் கொண்டாள். தன் வாழ்க்கையும் ஆதிமருதியின் வாழ்க்கை போல் முடிந்துவிடுமோ என்று கவலைப்பட்டாள். " ஆதி மருதி போல் யானும் என் காதலனைக் காணமல் இழந்து அதனால் துன்பம் மிகுந்து பைத்தியம் பிடித்து வருந்தி அலைவேனோ?" என்றாள் :

யானே,
காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதிமருதி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ ? (அக. 45)

இவ்வளவு துன்பத்தையும் ஏற்று வருந்தவும் தலைவி இசைந்திருந்தாள்; அவர் மேற்கொண்ட முயற்சியை வெற்றி பெற முடித்துத் திரும்பினால் அதுவே போதும் என்று எண்ணும் நன்மனம் அவளிடம் இருந்தது. " அறம் தவறாத நல்ல வாழ்க்கையும், மற்றவனிடம் சென்று கேட்காத மான வாழ்க்கையும் இரண்டும் பொருளால் கைகூடும் என்று கூந்தலைத் தடவிச் சென்றவர் தம் முயற்சியை முடிப்

பாராக ; தோழி ! நாம் துயரத்தால் வாடி வருந்தினுலும் கவலை இல்லை " என்று சொல்லிய மனத்தின் தன்னலம் அற்ற தூய்மை உணர்ந்து போற்றத் தக்கது :

" அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும் புனையிழை !" என்றநம்
இருள்ஏர் ஐம்பால் நீவி யோரே
நோய்நாம் உழக்குவம் ஆயினும் தாம்தம்
செய்வினை முடிக்க தோழி. (அக - 155)

## அறிந்தால் வருந்தேன்

அவளைத் தேற்றுவதற்காக முயன்ற தோழி, " அவர் நெடுநாள் தங்கியிருக்கமாட்டார் ; விரைந்து திரும்புவார். அவர்பொருட்டாக நீ வருந்த வேண்டா " என்று கூறினுள். அதைக் கேட்ட தலைவி, " அவர் சென்ற வழி கொடிய பாலைவழி. அறிவில்லாத கள்வர் அவ்வழியில் வரும் வழிப் போக்கரைக் கொன்று கழுகுக்கு இடுகிறார்களாம். வழிப் போக்கரிடம் செல்வம் இல்லாதபோதும், தம் அம்புதொடுக்கும் திறமையைக் காண்பதற்காகக் கொல்லும் கல்மனம் படைத்தவர்களாம் அவர்கள். அத்தகைய அஞ்சத்தக்க வழியில் சென்றவர் ஒரு துன்பமும் இல்லாமல் திரும்பி வருவார் என்று அறிந்தால், தோழி! என் கண்கள் இவ்வாறு கண்ணீர் சொரிந்து அழுமாட்டா " என்றாள் :

" சென்று நீடுநர் அல்லர் ; அவர்வயின்
இனைதல் ஆனய் " என்றிசின் இகுளை !
அம்புதொடை அமைதி காண்மார் வம்பலர்
கலன்இலர் ஆயினும் கொன்றுபுள் ஊட்டும்
கல்லா இளையர் கலித்த கவலை......
அஞ்சவரு மரபின் வெஞ்சுரம் இறந்தோர்

*நோயிலர் பெயர்தல் அறியின்*
*ஆழல மன்னோ தோழி !என் கண்ணே.* (அக - 375)

துன்பம் இல்லாமல் திரும்பிவருவார் என்று தோழி ஊட்டும் நம்பிக்கை அவளுக்குப் போதவில்லை. அவள் சொல்வதுபோலவே உண்மையாகத் துன்பம் இல்லாமல் திருமபுவார் என்று அறிந்தால் போதும் என்றாள். "இந்தச் செய்திமட்டும் அறிந்தால் கவலைப்படமாட்டேன், வருந்த மாட்டேன்" என்றாள். ஆனால் தலைவனைப் பற்றிய செய்தியை அறிவது எப்படி? இருபதாம் நூற்றாண்டின் விரைவான போக்குவரவும் தந்தி தபால் முதலியனவும் இல்லாத பழங்காலத்தில் அவள் எவ்வாறு அறிந்திருக்க முடியும்?

தலைவன் நாடுகடந்து பிரிந்து சென்றதும் அவளுக்குத் துயரம் தரவில்லை; அவர் அங்கே நெடுங்காலம் தங்கியிருந்ததும் துயரம் தரவில்லை; தன்னை மறந்து அவர் வெளிநாட்டில் வாழ்ந்ததும் துயரம் தரவில்லை; ஆயின், "அவர் அங்கே துன்பம் இல்லாமல் இருக்கிறார், துன்பம் இல்லாமல் மீள்வார்" என்று அறிவதற்கு முடியாத நிலையே துயரத்தின் உண்மைக் காரணமாகும். இதுவே பாலைத்திணைப் பாட்டுக்களின் உயிர்நாடி ஆகும். இந்த உண்மை விளங்காவிட்டால், அப்பாட்டுக்கள் கலைத்திறன் அற்ற, பயன் அற்ற வெறுஞ் செய்யுட்களாகத் தோன்றும். இந்த உண்மை உணர்ந்தால்தான், தலைவி ஓவியச் செய்திபோல் நினைந்து ஒற்றிய ஒன்று இன்னது என்று விளங்கும். அதன் பொருட்டு இன்னும் சில கருத்துக்கள் அறியத்தக்கன.

**காணும் ஆசை**

இவ்வாறு இரவும் பகலும் வருந்தி அழிகின்ற தலைவிக்கு உயிர் துறக்கவும் மனம் இல்லை. "அவரைக்

காண வேண்டும்; வலிமையை விரும்பி ஊக்கமே துணையாகக் கொடிய வழியில் சென்றவர் திரும்பி வருவதைக் காண வேண்டும். அவர் வருவதைக் காண விரும்பியே இன்னும் உயிரோடு வாழ்கிறேன்" என்றாள் :

உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன். (குறள் - 1263)

உயிர்வாழ்க்கை ஒரு சுமை ஆனது. உயிர் துறப்பதே மேல் என்ற எண்ணமும் எழுந்தது. சாவுக்கு அஞ்சாத திண்மையோடு, "என் உயிர் போகட்டும்", "செலீஇயர் என் உயிர்" (நற். 286), எனக்கு எமன் வரலாகாதா? (நற். 271) என்றெல்லாம் வெறுத்துச் சொன்னாள். அந்த அளவிற்கு உயிர்வாழ்க்கை சுமையாக மாறியபின்னும், காதலனைக் காணும் ஆசை அவள்உள்ளத்தே பெருகியது. காதலனைக் காணும் ஆசையால் பொறையிருந்து ஆற்றித் தன் உயிரையும் போற்றிவருவதாக உணர்ந்தாள். "காதலர் உயிரோடு இருந்தால் தவறாமல் திரும்பி வருவார், சொன்ன சொல் தவறமாட்டார், நிலவுலகம் நிலைபிறழ்வதானாலும் அவர் சொல் தவறமாட்டார்" என்றாள் :

காதலர்
நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய
சொல்புடை பெயர்தலோ அரிதே. (நற் - 289)

இந்த ஒரு நம்பிக்கையே அவளை உயிர்ச்சுமை பொறுத்து வாழுமாறு செய்தது. காதலர் என்ன ஆனார், ஏன் இன்னும் வரவில்லை என்று அறியாமல் உயிர் துறக்கவும் அவளுக்கு மனம் இல்லை. "சாவதற்கு அச்சம் இல்லை. ஆனால் எப்படிச் சாவேன்? அவரைப் பற்றி ஒன்றும் அறியாமல் எப்படிச் சாவேன்" என்று கலங்கினாள். குருந்தமர நிழலில் ஆட்கொண்டவரை மீண்டும் ஒருமுறையேனும் காணமல் சாவது எப்படி என்ற கருத்தால் "இறப்பதனுக்கு

என் கடவேன்"* என்று மாணிக்கவாசகர் உருகியது போன்ற மனநிலையோடு தலைவி வருந்தினாள்.

ஆகத்தை நீக்குமுன்னே ஆவித் துணைவரைநான்
தாகத்தின் வண்ணம் தழுவுவனோ பைங்கிளியே ?

என்று உருகிய தாயுமானவரின் தூய அன்புள்ளம் இங்குக் கருதத்தக்கது. கடவுட் காதலரும் இல்லறக் காதலரும்

*மாணிக்கவாசகர் பிறப்புக்கு அஞ்சவில்லை என்றும், இறப்பதற்கு அஞ்சினார் என்றும், மரண வேதனை அவ்வளவு துன்பமானது என்றும், அதனால்தான் 'யானேதும் பிறப்பு அஞ்சேன், இறப்பதனுக்கு என் கடவேன்' என்று அஞ்சிக் கூறினார் என்றும் கூறுவது உள்ளத்துணர்வு உணர்ந்து கூறும் உண்மைப் பொருள் அன்று. "வரைபுரண்டிடினும் அஞ்சேன், சாதலை முன்னம் அஞ்சேன்" என்று சாவுக்கு அஞ்சாத துணிவுபெற்ற மாணிக்கவாசகர் மேல் இத்தகைய குறையைக் கற்பித்த லாகாது. சாவுக்கு அஞ்சித் தயங்கிய எவரும் எந்தத் துறையிலும் ஒரு நற்செயலும் செய்ய முடியாது என்பதைச் சான்றோர்வரலாறுகள் தெரிவிக்கின்றன. சிறப்பாக, உயரிய வாழ்வைக் கண்டவர்கள் "நமனை அஞ்சோம்" என்று நாவுக்கரசர்போல் அஞ்சாத வீரவாழ்வே வாழ்ந்திருக்கின்றனர். ஆதலின், மாணிக்கவாசகரும் சாவுக்கு அஞ்சியவர் அல்லர். குருந்த நிழலில் ஆட்கொண்ட பெருமானை மீண்டும் காணாமல், அவரருளைப் பெறாமல் எப்படி இந்தப் பிறவியை முடிப்பது என்பதே அவர்கவலை. "எம்பெருமான் ! எம்மானே! உன் அருள் பெறும் நாள் என்று என்றே வருந்துவனே" என்று அவர் முறையிடுவதையும், மேலே கூறிய குறுந்தொகை நற்றிணைப் பாட்டுக்களின் உணர்வுகளையும் ஆராயின் உண்மை விளங்கும். அவர் சாவிற்கு அஞ்சவில்லை என்பதும், பெருமானை மீண்டும் கண்டு அருள் பெறாமல் சாவது எப்படி என்றே தயங்கினார் என்பதும், அதனால்தான் 'இறப்பதனுக்கு அஞ்சுவேன்' என்னாமல் 'இறப்பதனுக்கு என் கடவேன்' என்று முறையிட்டார் என்பதும் அவற்றால் தெளிவாகும்.

மனநிலையால் ஓரளவு ஒத்தவரே. இல்லறக்காதலர் உடம்பி லிருந்து உள்ளத்தின் இன்பத்தை நாடுவோர்; கடவுட் காதலர் உள்ளத்தி லிருந்து உயிரின் இன்பத்தை நாடுவோர். இந்த வேறுபாடு இருப்பினும் மனநிலையால் ஓரளவு ஒத்திருப்பதால்தான், கடவுளன்பர் தம் அன்பைப் புலப் படுத்தும்போ தெல்லாம காதல்வாய்பாட்டுச் சொற்களையே கையாள்கின்றனர். ஆதலின், உயிர்வாழ்க்கையைச் சுமை என்று வெறுப்புற்ற தலைவியின் உள்ளத்திலும் தூயஅன்பு-தன்னலம் அற்ற அன்பு - வாழ்வதை உணரவேண்டும்.

"தோழி! பகலில்மட்டும் அல்ல, ஊரெல்லாம் துஞ்சும் யாமத்திலும் என்நெஞ்சத்தில் காதலர்நினைவே உள்ளது. பொறுக்க முடியாத இந்தத் துயரைப் பொறுத்து வருந்திக் கொண்டிருக்கவும் முடியவில்லை. அதனால் உயிர்துறப்போம என்றால், துணிந்து சாகவும் முடியவில்லை. என் நெஞ்சில் அல்லது கண்ணெதிரே தோன்றாத காதலரைக் காணாமல் சாகவும் அஞ்சுகிறேன். இது தகுமா? சொல்" என்றாள் தலைவி.

உரைத்திசின் தோழிஅது புரைத்தோ அன்றே;
அருந்துயர் உழத்தலும் ஆற்றாம்; அதன்தலைப்
பெரும்பிறி தாகல் அதனினும் அஞ்சுதும்;...
துஞ்சுஊர் யாமத் தானும்என்
நெஞ்சத்து அல்லது வரவுஅறி யோனே. (நறு - 302)

## சாக அஞ்சுதல்

இந்த உணர்வு எல்லாம் தெளிய ஓர் உருக்கொண்டாற் போல் தலைவி கூறும் கூற்று ஒன்று நற்றிணையில் உள்ளது. "என்தோளும் மெலிந்து அழிந்தன. அவர் கூறிய கால வரையறையும் கடந்துவிட்டதே என்று அவர் வரும் வழியை நோக்கி நோக்கிக் கண்களும் பொலிவு இழந்தன;

பார்வையும் மழுங்கியது. என் அறிவும் என்னைக் கைவிட்டுப் பித்து ஆகியது. பழைய துயரம் திரும்பத் திரும்ப வந்து வருத்துகிறது; மாலைப்பொழுதும் வந்துவிட்டது. என் கதி என்ன? இந்நிலையில் சாவதற்கு நான் அஞ்சவில்லை, ஆயினும் அஞ்சுகிறேன். அஞ்சும் காரணம் வேறு. செத்தபிறகு வேறு பிறப்பு ஏற்படுமாயின் என் காதலனை மறந்து விடுவேனோ என்றுதான் அஞ்சுகிறேன்" என்றாள் தலைவி :

தோளும் அழியும் ; நாளும் சென்றென
நீளிடை அத்தம் நோக்கி வாள்அற்றுக்
கண்ணும் காட்சி தவ்வின ; என்நீத்து
அறிவும் மயங்கிப் பிறிதா கின்றே ;
நோயும் பேரும் ; மாலையும் வந்தன்று ;
யாங்குஆ குவென்கொல் யானே ? ஈங்கோ
சாதல் அஞ்சேன் ; அஞ்சுவல் சாவின்
பிறப்புப்பிறிது ஆகுவ தாயின்
மறக்குவேன் கொல்என் காதலன் எனவே. (நற் - 397)

திருநாவுக்கரசர் என்ற சான்றோரின் கடவுட்காதல் இங்கு ஒப்பிட்டு நோக்கத்தக்கது. சாவதற்கு அஞ்சாத பெருவீரர் அவர். "வானம் துளங்கில் என்? மண் கம்ப மாகில் என்?" என்று அஞ்சாமை கொண்டு வாழ்ந்த வீரத் தொண்டர் அவர். அவரும், இறப்பதற்கு அஞ்சாதவராய் விளங்கியும், மறுபிறப்பில் நேரக்கூடிய மறதியை நினைந்தே அஞ்சுவதாகப் பாடியுள்ளார் :

துறக்கப் படாதஉடலைத் துறந்துவெந் தூதுவரோடு
இறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்சகன்பேர்
மறப்பன்கொ லோஎன்றுஎன் உள்ளம் கிடந்து மறுகிடுமே.
(அப்பர்தேவாரம்-தனித் திருவிருத்தம்)

தலைவியின் துயரத்திலும் இத்தகைய அன்பால் விளைந்த அச்சமே விளங்குவதைக் காணலாம்.

இனி, இத்தகைய தலைவியின் உணர்வோடு திருவள்ளுவர் கூறிய உள்ளப்பிரியும் புலவரின் உணர்வை ஒப்பிடுதல் வேண்டும். "இனி இவரை யாம் எங்ஙனம் கூடுதும்?" என்று எண்ணிப் பிரிவதாகப் பரிமேலழகர் கூறிய விளக்கமும் அறிதல்வேண்டும். அந்த உணர்வும், "பிறப்புப் பிறிது ஆகுவதாயின் மறக்குவேன்கொல் என் காதலனை" என்று தலைவி துயருறும் உணர்வும் ஒருதன்மையாகவே உள்ளன. ஆகவே தலைவியின் உணர்வும் புலவரின் உணர்வுபோன்றதே; உள்ளப்பிரிதலே ஆகும். இதையே பாட்டில் "ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றி" என்ற அடியில் உணர வேண்டும். தலைவன் பிரியும்போது, "மீண்டும் இவரை எப்போது காண்போம்?" என்று தலைவி நினைந்து கலங்கினள்; கசிந்துருகினள்; ஓவியச் செய்திபோல் உணர்த்தப் பட்ட அந்த "ஒன்று" இதுவே ஆகும்.

## இலக்கிய மரபுகள்

சங்க இலக்கியத்தில் பொதுவாக உணரத்தக்க மரபுகள் சில உள்ளன. அவற்றிற்கு மாறாக, அக்காலத்துப் புலவர் பாடிய பாட்டு ஒன்றும் இல்லை. தொல்காப்பியத்திலும் அத்தகைய மரபுகள் சில எடுத்துரைக்கப்பட் டுள்ளன. எடுத்துக்காட்டாக: அரசனுடைய அழைப்பை ஏற்றுப் போர்க்களத்திற்குச் செல்லும் வீரர் எவரும் கண்ணீரும் கம்பலையுமாய் மனைவியரிடமோ தாயரிடமோ விடை பெற்றுச் சென்றதாகவோ, மனைவியரும் தாயரும் கலங்கி அழுது விடைகொடுத்து அனுப்பியதாகவோ பாட்டு எழுதும் மரபு இல்லை. அவ்வாறு சில குடும்பங்களில் நிகழ்ந்திருத்தல் கூடும் எனினும், அவற்றைப் பாடுதல்

கூடாது என்றே ஒதுக்கியுள்ளனர். அவ்வாறு பாடுதலால் குடும்பத்தார்க்கு உள்ள உள்ளன்பும் பிரிவாற்றுமையும் விளங்கும் என்பது புலவர்க்குத் தெரியும்; எனினும் அந்த நற்பண்புகளை விளக்க எழுந்த பாட்டுக்களால், நாட்டுப் பற்றுக் குறைந்த தன்மையும் வீர உணர்ச்சி குறைந்த தன்மையும் புலப்படுமே என்று அஞ்சினர். அதனால் அந்தப் பாட்டுக்கள் உயர்ந்த குறிக்கோள் கொண்ட வாழ்க்கைக்கு ஒவ்வாத பாட்டுக்களாய் மாசுறும் என்று பாடாமல் விடுத்தனர். கண்ணீர் சொரிந்து கலங்கிப் பிரிவதாகமட்டும் அல்லாமல் சிறிதளவு தயங்கிநிற்பதாகவும் பாடாமல் ஒதுக்கினர். கட்டாயப் படைத் தொண்டு (கட்டாய ராணுவ சேவை) அமைந்துள்ள நாடுகளில் போர்க்காலத்தில் ஆடவரும் மகளிரும் அழுதுவடிக்கும் கண்ணீரை மேற்குநாட்டு அறிஞர்கள் பல கதைகளில் எழுதி இலக்கியமாக்கி யுள்ளனர் பண்டைத் தமிழ்ப் புலவர் அதற்கு இடம் தரவேஇல்லை. காரணம், கட்டாயப் படைவீரராக ஆவோர் கட்டாயப்படுத்தி ஏவப்படும் கூலியாட்களாக உணர்ந்து அஞ்சி அடங்கிப் போர்க்களத்திற்குச் செல்கின்றனரே அல்லாமல், நாட்டுப் பற்று நிரம்பிய உள்ளத்தோடு செல்வதில்லை. பண்டைத்தமிழகத்துச் சிறந்த வீரரோ, வீட்டுக் கடமையைவிடச் சிறந்தது நாட்டுக்கடமை என்று உணர்ந்து மகிழ்ச்சியோடு கூடிச் சென்றனர்; பொன்னும் பொருளும் எதிர்பாராமல், புகழும் அரசன்மதிப்புமே எதிர்பார்த்துச் சென்றனர்; ஆதலின் அஞ்சி அடங்கிக் கண்ணீர் விட்டுக் கலங்கும் நிலைமை அந்த வீரர்க்கு இல்லை; அக்காலத்துப் புலவர்க்கும் வீரர்களின் கண்ணீரைக் கலையாக்கும் வாய்ப்பும் இல்லை; விருப்பமும் இல்லை.

போருக்கு வருமாறு அரசன் ஆணையிட்டதும் தயங்காமல் மகிழ்ச்சியோடு புறப்படும் வீரம் எங்கோ ஒரு வீரக்

குடும்பத்தில் காணக்கூடிய சிறந்த பண்பே ஆகும்; மக்கள் எல்லோர்க்கும் பொதுவான பண்பு என்று இதனைக் கூற முடியாது. ஆயினும், இந்தப் பண்பு பாராட்டப்பெற்றால், அதனால் பலரும் தாம் இருக்கும் நிலைக்கு அடுத்த நிலையை அடைந்து உயரவும் திருந்தவும் வழி உளதாகும் என்று நம்பியே புலவர் இதைப் போற்றிப் பாடினர். கலை, கலைக்காகவே என்று கனவிலும் கருதாமல் கலை வாழ்க்கைக்காகவே என்ற உயர்ந்த நோக்குடன் வாழ்ந்த பெருமக்களாதலின், இந்த நோக்கம் தவறாமல் இலக்கியம் இயற்றினர். " இஃது இல்லதெனப்படாது, உலகியலேயாம். உலகியலின்றேல், ஆகாயப் பூ நாறிற்று என்றவழி அது சூடக் கருதுவாரும் இன்றி மயங்கக் கூறினான் என்று உலகம் இழித்திடப்படுதலின் இதுவும் இழித்திடப்படும்" என்றும், " உலகத்தோர்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்கு உள்ளனவற்றை, ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறம் எனக் கருதி அந் நல்லோர்க்கு உள்ளவற்றில் சிறிது இல்லனவும் கூறுதலன்றி யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார்" என்றும் நச்சினார்க்கினியர் உணர்த்தியுள்ள உண்மை மீண்டும் இங்குக் கருதத் தக்கது (தொல். பொருள். அகத். 3, 53-உரை).

### பாசறையில் துயநறல்

போர்க்கடமையை மேற்கொண்டு பாசறையில் இருக்கும்போதும், போரில் வெற்றிபெற்ற பிறகே தலைவன் தலைவியை நினைந்து வருந்துவான். அதுவரையில் அவன் கண்ணீர்விட்டுக் கலங்கிச் சோர்வுறுவது இல்லை; அவ்வாறு சோர்ந்து துன்புறுவது வீரனுக்கு இழுக்கு ஆதலின், புலவர்கள் அதனையும் கடிந்துள்ளனர் :

> கிழவி நிலையே வினையிடத்து உரையார்;
> வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்
>
> (தொல். பொருள். கற்பு. 45)

(போர் முயற்சியில் ஈடுபட்டுள்ள இடத்தில் தலைவியின் நிலைமையைத் தலைவன் நினைந்து கூறுவதாகச் செய்யுள் செய்யார்; வெற்றி நிகழுமிடத்திலும் குறித்த பருவம் வந்தபோதும் தூது கண்டபோதும் வருத்தம் விளங்குவதாகச் செய்யுள் செய்க) என்று தொல்காப்பியனார் விதித்துள்ளார். " 'உரையார்' எனவே நினைத்தல் உளது என்பதூஉம் அது போர்த்திறம் புரியும் உள்ளத்தால் கதுமென மாயும் என்பதூஉம் கொள்க " என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ள குறிப்பும் இதனை விளக்குகிறது.

பனியிருங் கங்குலும் தமியள் நீந்தித்
தம்மூ ரோளே நன்னுதல் ; யாமே...
இரவுத்துயில் மடிந்த தானை
உரவுச்சின வேந்தன் பாசறை யேமே. (அக. 24)
சீறூ ரோளே ஒண்ணுதல் ; யாமே...
புனைதார் வேந்தன் பாசறை யேமே. (அக. 84)

என்று முறையே குறித்த பருவம் வந்தபோதும் தூது கண்டபோதும்மட்டுமே நினைந்துருகுவதாகத் தலைவன் கூறப்படுகிறான். இத்தகைய பாட்டுக்களைப் பிரிந்து வருந்தும் பாலைத்திணைப் பாடல்களாகவும் முன்னோர் வகுக்கவில்லை; இந்த நுண்ணிய வேறுபாட்டைப் போற்றி முல்லைத்திணைப் பாட்டுக்களாகவே வகுத்துள்ளனர்.

## போரும் மகளிரும்

இனி, பிரிந்து போர்க்களத்தை எய்திய ஆடவர்க்கு இவ்வாறு இலக்கியமரபு இருப்பதுபோல், போர் காரணமாகக் கணவரைப் பிரிந்து வீட்டிலிருக்கும் மகளிர்க்கு அமைந்துள்ள இலக்கியமரபும் ஆராயத் தக்கது.

தலைவன் போர்க்கடமை மேற்கொண்டு வீட்டைவிட்டுப் பிரியும்போது, துணைவி கலங்கா உள்ளத்தோடு வீரநங்கை

யாய் வழியனுப்பல் வேண்டும். வீடுதோறும் ஊர்தோறும் தலைமுறை தலைமுறையாக இந்த வழக்கம் இருந்த காரணத் தால் கலங்கி அனுப்புவதோ கண்ணீர்விடுவதோ குடும்பப் பெயர்க்கு இழுக்கு என்று அக்காலத்து மகளிர் அனைவரும் கருதினர். அக்காலத்து இலக்கியம் அவ்வாறு இருந்த பண்டைய அமைப்பை விளக்குவ தாகும் :

கெடுக சிந்தை ! கடிதுஇவள் துணிவே !
மூதில் மகளிர் ஆதல் தகுமே ;
மேனாள் உற்ற செருவிற்கு இவள்தன்னை
யானை எறிந்து களத்தொழிந் தனனே ;
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலங்கி ஆண்டுப்பட் டனனே ;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே. (புற. 279

தந்தையும் கணவனும் போர்க்களத்தில் இரையான பிறகும், குலக்கொழுந்தாய் எஞ்சியிருந்த ஒருமகனை அனுப் பிய துணிவு - அவனைச் சிறுவன் என்று எண்ணித் தயங்கா மல் வேல்கொடுத்துப் போர்க்களத்திற்கு அனுப்பியதுணிவு- இந்தப் பாட்டில் விளங்குகிறது. "உன் மகன் எங்கே?" என்ற வினாவிற்கு விடையாக,

ஈன்ற வயிறோ இதுவே ;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே (புற. 86)

என்று போர்க்களத்தைச் சுட்டிக்காட்டும் வன்னெஞ்சம் மகளிரின் நாட்டுணர்ச்சியோடு கலந்திருந்த காலம் அது. மகனை வீரனாக்குதலே தந்தைக்குக் கடமை என்றும்,

போரின் பொருட்டு வேல்வடித்துக் கொடுத்தலே கொல்ல னுக்குக் கடமை என்றும், பரிசு கொடுத்தலே அரசனுக்குக் கடமை என்றும், போரில்வென்று திரும்புதலே மகனுடைய கடமை என்றும் பொன்முடியார் பாடியுள்ளார் :

*ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே ;*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே ;*
*வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே ;*
*நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே ;*
*ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்*
*களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.* (புற. 312)

அக்காலத்தில் தமிழ்நாட்டில் தன் மகனைப் போர்வீர னாகக் காண்பதில் பெற்ற தாய்க்குப் பெருமிதம் இருந்த நிலைமை இவற்றால் தெரிகிறது.

## தகை சான்ற சொல்

இவ்வாறு தொன்றுதொட்டு வந்த குடும்பத்தின் புகழைப் போற்றிக் காத்தல் - தகை சான்ற சொல் காத்தல் (குறள் - 56) தலைவியின் கடமைகளுள் சிறந்த ஒன்றாக இருந்த காலம் அது. ஆதலின் தலைவன் பிரிந்து போர்க் களத்தை அடைந்து பாசறையில் சில திங்கள் கழிக்க நேர்ந்தாலும், வீட்டின்கண் கடமையைச் செய்துகொண்டு கலங்காமல் இருப்பதே தலைவியின் இயல்பாக இருந்தது. இதனையே ஆற்றியிருக்கும் முல்லைத்திணை என்று வகுத்து, ஆற்றாமை உள்ள பிரிவாகிய பாலைத்திணையி லிருந்து வேறு படுத்தினர் முன்னோர். நாட்டுக் கடமைக்காகத் தலைவன் சென்றபோது கலங்காமல் வாழும் பண்பே முல்லைத் திணைக்கு உரிய கற்பு என்றும், சொல் திறம்பாமையே அது என்றும் விளக்கினர். இத்தகைய நல்ல வரம்பு

கொண்டே, போர்க்கடமைக்காகப் பிரிந்தகணவனை நினைந்து தலைவி வருந்துவதாகப் பாடாமல் விட்டனர். ஒருகால் அவ்வாறு வருந்துவதாகப் பாடின், தூய குறிக்கோள் அமைந்த, எல்லோர்க்கும் பொதுவான வாழ்க்கையைக் கூறுவதாகிய அகப்பாட்டு எனக் கொள்ளாமல், நெடுநல் வாடைபோல் குறிப்பிட்ட யாரோ ஒருவரது வாழ்க்கைக் குறிப்பைக் கூறுவதாகிய புறப்பாட்டு எனப் பிரித்துவிட்டனர். இவ்வாறு பண்டைத் தமிழிலக்கியம் கொண்டுள்ள மரபுகள், இலக்கணத்தின் கண்மூடிக் கட்டுப்பாடுகள் ஆகாமல், விழுமிய வாழ்க்கையை ஒட்டி அமைந்த சிறப்பியல்புகளாக விளங்குகின்றன.

## போர் முயற்சி : பொருள் முயற்சி

ஆகவே, முல்லைத் திணைக்கும் பாலைத் திணைக்கும் உள்ள வேறுபாடுகள் புலவர்கள் வகுத்து வற்புறுத்தியவை அல்ல ; அவை, அக்காலத்து வாழ்க்கை, புலவர்க்கு உணர்த்திய உண்மைகள் ஆகும்.

முல்லைத்திணையில் போர்க்கடமை நேர்ந்தபோது தலைவன் தயங்குவது இல்லை ; செலவழுங்குவது இல்லை ; பிரிந்தபின்பும் நினைத்தலே அன்றிக் கலங்கிக் கண்ணீர் விடுவது இல்லை. பாலைத்திணையில் பொருள் முயற்சியை மேற்கொண்ட தலைவன் தயங்குகிறான். செலவழுங்குகிறான்; பிரிந்த பின்பும் தலைவியை நினைந்து நினைந்து வருந்துகிறான் ; செல்லும் வழியிலும் துயருறுகிறான் ; சென்ற நாட்டிலும் துயருறுகிறான்.

முல்லைத்திணையில் போர்க்களத்திற்குத் தலைவனை அனுப்பும் தலைவி அஞ்சாமல் அனுப்புகிறாள் ; பிரிந்த பின்பும் குடும்பப் பெயரைக் காக்க வேண்டும் என்று ஆற்றியிருக்கிறாள். பாலைத்திணையில் பொருள்முயற்சி மேற்

கொள்ளாதவாறு தலைவனைத் தடுக்க முயல்கிறாள் ; உடன் பட்டுப் பயணம் அமைத்த பின்பும் தன்னையும் மீறிக் கலங்குகிறாள் ; பிரிந்து சென்றபின் வருந்தி நைகிறாள் சாவுக்கு நிகரான துயரத்திற்கு ஆளாகிறாள்.

இவ்வளவு வேறுபாட்டிற்கும் காரணம் என்ன ? ஒன்று : போர்க்கடமை குடும்பத்தாரின் முயற்சியைக் கடந்த நாட்டுத் தொண்டு என்றும், அரசனது அழைப்பு என்றும் தலைமுறை தலைமுறையாக வீடு வீடாக உணர்ந்து பண்பட்ட உணர்வு. ஆனால் பொருள்முயற்சி தலைவன் உள்ளத்தின் தூண்டுதலால் தானே மேற்கொள்வது ; தவிர்க்கவும் கூடியது.

இரண்டாவது காரணம் : போர்க்கடமை, வீடுதோறும் ஆண்மக்கள் அனைவரும் சேர்ந்து திரண்டு, ஊர்தோறும் புறப்பட்டு, நாட்டின் பெரும்படையாய்க் கூடிச் செய்வது; ஆதலின் புகழை நாடி, பிறருடைய ஊக்கத்தையும் பெருங் கூட்டத்தையும் கண்டு கலக்கத்திற்கும் சோர்விற்கும் இடம் இல்லாமல் செய்வது. ஆயின், பொருள்முயற்சி, ஓர் ஊரில் ஒருசிலர்மட்டும் மேற்கொள்வது ; பொருள் தேடித் திரும்பி வந்து சேரும் வரையில் கவலையும் இடரும் துன்பமுமே தருவது.

மூன்றாவது காரணம் : போர்க்கடமை மேற்கொள் வோர் பெரும்பாலும் நாட்டின் எல்லையில் பாசறை வகுத் துத் தம்ஊராருடன் தம்நாட்டவருடன் ஒருங்கே தங்கி யிருப்பர் ; அரசனுடைய முயற்சி ஆதலின், பாசறையி லிருந்து நாள்தோறும் வாரந்தோறும் நாட்டிற்குள் செய்தி சென்று வர வாய்ப்பு உண்டு ; அதனால் கணவ ரைப் பிரிந்த மனைவியர் அடிக்கடி செய்தி அறிந்து ஒருவர்க்கு ஒருவர் ஆறுதலாய்த் துன்பத்தையும் பகிர்ந்து வாழ இடம் உண்டு. ஆயின் பொருள் முயற்சியை மேற்

கொள்வோர் ஒரு நாட்டைமட்டும் அல்லாமல் பாலை வழியையும் கடந்து பல நாட்டையும் கடந்து சென்று வேற்றுநாட்டு மக்களிடையில் அயலாராய் வாழ்வர் ; தனிப் பட்டவரின் முயற்சி ஆதலின் பல திங்கள் கழிந்தும் செய்தி அனுப்ப வழியின்றித் திகைப்பர் ; அதனால் தலைவனைப் பிரிந்த தலைவி தனியே துயருறுவாளே அல்லாமல், அதி லிருந்து உய்யும் வழி இல்லை.

## தயங்கிய காரணம்

இவ்வளவு வேறுபாடு இருந்தும், பொருள் காரணமான பிரிவில் தலைவனும் தலைவியும் கலங்குவதற்கு உரிய காரணங்கள் இருந்தும், இங்கும் சில நல்ல வரையறைகள் உள்ளன. தலைவன் தயங்குவதாக, செலவழுங்குவதாக, தலைவியை நினைந்து வருந்துவதாகப் பாடியுள்ள புலவர்கள், ஒரு பாட்டிலாவது பாலைவழியின் கொடுமையை நினைந்து தலைவன் அஞ்சியதாகவோ, தயங்கியதாகவோ, வருந்தியதாகவோ பாடவில்லை ; சுற்றத்தார்க்கு உதவும் குறிக்கோளைக் கைவிட்டதாகப் பாடவில்லை. தலைவன் பாலைவழியின் கொடுமையை நினைந்து அதனால் அஞ்சித் தயங்கியதே அதற்குக் காரணம் என்றால் அது அவனுடைய ஆண்மைக்கு இழுக்கு ஆகும். "நம் வரையில் நாம் வாழ்ந்து வீட்டோடு காலம் கழிக்கலாம். சுற்றத்தாரைப் பற்றிய கவலை ஏன் ?" என்று எண்ணினால், அது அவனுடைய அன்புக்கும் அருளுக்கும் இழுக்கு ஆகும். ஆகவே இருவகையிலும் தலைவனுக்கு இழுக்கு நேராமல் அகப்பாட்டை அமைத்தனர் புலவர். அதனால் தான் தலைவியின் துயரைக் காணும் தலைவன் பயணத்தைக் கைவிடுவதாகக் கூறாமல், அப்போதைக்குப் பயணத்தை நிறுத்திவைப்பதாகவே கூறவேண்டும் என்கிறார் தொல்

காப்பியனார். அவ்வாறு நிறுத்திவைப்பதும், சுற்றத்தாரின் வாழ்வைவிடத் துணைவியின் கண்ணீர் பெரிது என்ற காரணத்தால் செய்வது அன்று; துணைவியின் மனத்தைத் தேற்றிய பிறகு கடமையை மேற்கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் செய்வது என்று விளக்கமும் தருகிறார்:

செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும்.
(தொல். பொருள். கற்பு. 44)

## தலைவியின் குறையோ?

இவ்வளவு நுட்பமாக எண்ணி வாழ்க்கையை விளக்கி இலக்கியத்தை வகுத்த முன்னோர் தலைவியிடம் மட்டும் குறை காண விட்டுச் சென்றிருப்பரோ? தலைமக்களின் பண்புகளுக்கு இழுக்கானவற்றை அறவே கடிந்து இலக்கியம் வளர்த்த புலவர்பெருமக்கள், தலைவியைக் குறை உடையவளாக்கி யிருப்பரோ? அவள் அறியாக் குழந்தை போல் பிடிவாதம் கொண்டு தலைவனுடைய முயற்சியைத் தடுப்பதாகக் குறை அமைத்திருப்பரோ?

ஆராய்ச்சிக்குப் பொருளாக உள்ள இந்தப் பாட்டில் தலைவன் அழைத்தது கேட்டும் அளிநிலை பொறாமல் அமரிய முகத்தோடு விளிநிலை கொள்ளாமைக்குக் கூறப்படும் காரணம், அத்தகைய குறையையே காட்டுகிறது. "போக்கிற்கு உடன்படாது ஆற்றாளாய் நின்ற நிலைமை பற்றி" என்கிறார் குறிப்புரைகாரர். முன்னம் காட்டி முகத்தின் உரைத்ததும் உடன்படாமைக் கருத்தே என்று கூறப்படுகிறது. தலைவி இவ்வாறு உடன்படாமல் பிடிவாதம் செய்தது எந்த நிலையில்? சுற்றத்தார் வழியனுப்பக் கூடியிருந்த நிலைமை, தலைவன் புறப்பட ஆயத்தமாக இருந்த நிலைமை, அப்போது கண்ணீர் விடுவது ஆகாத சகுனம் என்று அவளும் அறிந்த நிலைமை - இந்த நிலையில் 'போக்கிற்கு

உடன்படாது, மாறுபட்ட குறிப்போடு தலைவனை நோக்கி வருவதும் அவன் எதிரே நிற்பதும் ஆகிய இவை உயர்ந்த பண்புகள் வாய்ந்த, ஒத்த அன்பும் அறிவும் உரிமையும் வாய்ந்த தலைவிக்கு இழுக்கான செயல்கள் அல்லவோ? ஆகவே, மகள் புக்ககம் செல்வதற்காகப் பலநாள் தவம் கிடந்து, கனவுகள் பல கண்டு, ஏற்பாடுகள் அனைத்தும் செய்த தாய், மகளுக்கு விடை கூறவேண்டிய நேரத்தில் கண்கலங்கி நெகிழ்ந்துருகும் உணர்வுநிலையைக் கொண்டே இப்பாட்டிற்குப் பொருள் கூறவேண்டும். இந்தத் தாயிடம் ஏதேனும் குறைகூற முடியுமோ? குறை இருப்பின் அது 'அடைக்கும் தாழ்' இல்லாத அன்பின் குறையே. அவ்வாறே தலைவியின்மீதும் குறைகூறல் பொருந்தாது; போக்கிற்கு உடன்படாது வந்தாள், நின்றாள், முன்னம் காட்டினாள் என்று பொருள்கூறல் பொருந்தாது; அன்பிற் சிறந்த காதல் இத்தகையது என்று தலைவியின் உணர்வுநிலையை உணர்ந்தே பொருள் காணல் வேண்டும்; அவளுடைய உயர் பண்புகளுக்கு இழுக்கு நேராவகையில் அறிவுக்கும் உணர்வுக்கும் நிகழ்ந்த போராட்டத்தை விளக்கி, முடிவில் அறிவு தோல்வியுற உணர்வு வென்றது என்றே தெளிய வேண்டும்.

## தலைவியின் பெருமை

தலைவனைப் பிரிந்தபின் ஆழி இழைத்தும் நாள் எண்ணியும் பல்லி பரவியும் அழுது நைந்திடும் துயர நிலையிலும் தலைவியின் உயர்பண்புகளுக்கு இழுக்கு நேராவண்ணம் புலவர் பெருமக்கள் விழிப்பாகப் பாடியுள்ளனர். ஒருமுறை தலைவியின் துயரம் ஊரார் அறியும் அளவிற்கு வளர்ந்து விட்டது. "இவ்வளவு துயரத்தில் இவளை விட்டுவிட்டுப் பிரிந்த அவனுடைய கல்மனம் எத்தகையது?" என்று தலைவனை ஊரார் குறைகூறுவரோ என்று தோழி எண்ணி

னாள். இந்தக் காரணத்தை எடுத்துரைத்தால், தலைவி துயருறுவதைக் குறைத்து ஆறிநிற்பாள் என நம்பினாள். அவ்வாறாயின், அவளுக்கும் பெரிய நன்மையே என்று கருதி, அவளிடம் சென்று, “ அம்மா ! தலைவரை நினைந்து மிகமிக வருந்தி, அதனால் உயிரே நீங்குவதானாலும், அந்தப் பெருந் துயரத்தை வெளியார்க்குத் தெரியாமல் மறைத்திட வேண்டும். ஏன்எனின், இதை அறிந்தால், சென்ற காதலரை வன்னெஞ்சர் என்று நம் பகைவர் தூற்றுவர் அல்லரோ ? காதலர் திரும்பிவந்தபின் இதைக் கேள்வியுற்றால் நாணி நிற்கும்படியாக நேருமே ” என்றாள். இதைக் கேட்ட பிறகு தலைவி தன் நெஞ்சத்தை ஒருவாறு தன்வயப்படுத்த முயன்று ஆறியிருந்தாள் :

துறந்தோர் தேஎத்து இருந்துநனி வருந்தி
ஆருயிர் கழிவ தாயினும், நேரிழை !
கரத்தல் வேண்டுமால் மற்றே ; பரப்புநீர்த்
தண்ணந் துறைவன் நாண
நண்ணார் தூற்றும் பழிதான் உண்டே. (நற் - 382)

சாவதுபோல் வருந்தும் நிலையிலும், இவ்வாறு காதலனுடைய புகழைக் காக்கும் எண்ணம் தலைவிக்கு உள்ளது. அதனால் கலங்கித் துயருறுவதைக் குறைத்துக்கொண்டு அடங்கியிருக்கவல்ல உயர்ந்த பண்பு உடையவள் அவள். இத்தகைய மனைத்தக்க மாண்புடையாள், தலைவன் பயணம் மேற்கொண்டு துணிந்து புறப்படும் நேரத்தில் உடன்படாமைக் குறிப்பை ஒருகாலும் தெரிவித்திருக்க மாட்டாள். ஆதலின் அவள் ஓவியச் செய்திபோல் நினைந்துநின்ற ‘ ஒன்று ’ உடன்படாமைக் குறிப்பு அன்று ; “ மீண்டும் என்று காண்போம் இவரை ” என்று ஏங்கிய கருத்தே அந்த ‘ ஒன்று.’ ‘உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரியும்’ கலைஞரின் வாழ்க்கையைப் போன்றதே காதலரின் வாழ்க்கையும்.

## அளக்கும் கருவி

காதலர்வாழ்க்கையின் தூய்மையை அளந்தறிய ஒரே ஒரு சிறந்த கருவி உண்டு ; அதுதான் தன்னலத்துறவு-தியாகம். சாவது போன்ற துயரநிலையிலும் தன்துயரை அடக்கிக் காதலனுடைய புகழைக் காக்கும் ஆர்வம் தலைவியிடம் உண்டு. வாழ்நாள் முழுதும் தன்னலத்துறவு இருந்து வந்தால்தான், உயிரோடு போராடும் நிலையிலும் அந்த உயர்ந்த பண்பு ஒளிவீசும். இந்தப் பாட்டில் காணும் தலைவியின் வாழ்க்கை அத்தகைய ஒளிமிக்க வாழ்க்கை.

தன்னலம் உடையவரின் வாழ்க்கை எளியது; திரும்பத் திரும்பத் தன்னையே சுற்றிவருவது ; ஆதலின் போராட்டம் குறைந்தது. ஆயின் தன்னலம் அற்றவரின் வாழ்க்கை அரியது; தன்னை மறந்து வீட்டையோ நாட்டையோ உலகத்தையோ சுற்றி இயங்குவது; ஆதலின் போராட்டம் மிக்கது. தன்னலம் உடையவர் எண்ணுவர் ; உடனே துணிவர் ; துணிந்து செய்வர் ; வரும் பயன் காண்பர் ; ஆதலின் போராட்டம் வரின் ஒதுங்குவர், ஓடுவர் அல்லது இரையாவர். தன்னலம் அற்றவர் எண்ணுவர் ; தயங்குவர் ; அரிதில் துணிவர்; அமைந்து செய்வர்; வரும் பயன் நோக்கார்; ஆதலின் போராட்டம் வரின் ஏற்பர், எதிர்ப்பர், அல்லது மாற்றுவர்.

போரராட்டத்தில் நிற்கும் இருவரும் தன்னலம் துறந்தவராயின், அவர்களின் போக்கே புதியதாகும். இருவரில் ஒருவரும் வெற்றியை நாடுவதில்லை; இருவரும் தோல்வியை வரவேற்பர். இப்பாட்டில் காணும் தலைவன் தலைவி இருவரும் அத்தகையார். அதனுல் தலைவன் எண்ணியவாறு சென்று வருக என்று நெகிழ்ந்தாள் தலைவி; அவள் வருந்துமாறு பிரிந்து செல்லமாட்டேன் என்று நெகிழ்ந்தான்

தலைவன். சாவை வரவேற்கும் துணிவு உடையது தலைவியின் நெஞ்சம்; அத்தகைய உரம்பெற்ற நெஞ்சம் தலைவனுடைய முன்னிலையில் நெகிழ்ந்து உருகியது. பாலைவழியில் கள்வரின் கொடுமைக்கு அஞ்சாத வீரமுடையவன் தலைவன்; அவனுடைய வீரநெஞ்சமும் தலைவியின் கண்ணீரைக் கண்டு நெகிழ்ந்து உருகியது.

## வன்மை மேன்மை

வன்மைக்கு வன்மை; மென்மைக்கு மென்மை; இதுதான் அருளாளர் பண்பு. வள்ளல் அதியமான் அன்பர்க்கு இனியவன்; சிறுவர் தன் வெண்கொம்பைக் கழுவுமாறு நீர்த்துறையில் படியும் களிறுபோல் இனியவன்; பகைவர்க்கு இன்னாதவன்; மதம் கொண்ட களிறுபோல் இன்னாதவன்:

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே; மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெருமநின் ஒன்னா தோர்க்கே. (புற - 94)

பாரி வள்ளல் மூவேந்தர்க்கு இன்னாதவன்; முல்லைக் கொடிக்கு இனியவன்; இரவலர்க்கும் இனியவன்:

அண்ணல் யானை வேந்தர்க்கு
இன்னான் ஆகிய இனியேன்... (புற - 115)

வன்மைக்கு வன்மையும் மென்மைக்கு மென்மையும் மேற்கொள்ளும் அருளாளர், அதிகாரத்தை எதிர்ப்பர், அழிப்பர். அன்பிற்கு இசைவர், கட்டுப்படுவர். பாரி, அதியமான் முதலான பெருமக்களின் வாழ்க்கைகளே தக்க எடுத்துக்காட்டுக்கள்.

காதலரின் வாழ்க்கையும் அத்தகையதே. காரணம் அன்பு ஈன்ற குழவியே அருள்; அன்பிற் சிறந்ததே காதல். புத்தர் பெருமானின் வாழ்க்கை காதலில் மலர்ந்து கமழ்ந்த அருள் வாழ்க்கையே. இலக்கியத்தில் காணும் காதலரும் அருள்நெஞ்சம் உடையவரே. பிரிந்த துணைவியைக் காண விரைந்து தேர் செலுத்திச் செல்லும் தலைவன் வழியோரத்தே புதர்ப்பூக்களில் துணையோடு இருக்கும் வண்டுகளின் வாழ்க்கையைக் கண்டு உருகினன்; அவை அஞ்சிக் கலைந்திடுமே என்று தான் அஞ்சினன்; தேரிலிருந்து இறங்கி, ஒலிக்கும் மணியின் நாவைக் கட்டியபின் மெல்லச் செலுத்தினன்.

> பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
> தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
> மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன். (அக. 4)

தன்னலம் துறந்த காதலரின் நெஞ்சத்தில் அருள் வாழ்வது உண்மை என்பதற்கு இது ஒரு சான்று.

## காதலர் : அருளாளர்

காதலரும் அருளாளரைப் போன்றவர்; வன்மைக்கு வன்மையும் மென்மைக்கு மென்மையும் உடையவர்; அதிகாரத்தை எதிர்த்து அழிப்பவர்; அன்புக்கு இசைந்து கட்டுப் படுபவர். ஆதலின், இப்பாட்டில், தலைவி தலைவனை அனுப்ப உடன்பட்டு வந்தும், தலைவன் செல்லாமல் நெகிழ்ந்து நின்றான்; 'கடிந்தனம் செலவே' என்றான். அதற்கு மாறாக, தலைவி தடுத்தோ மறுத்தோ பிடிவாதம் செய்திருந்தால், அவனுடைய மனம் அந்த உறுதியை எதிர்த்திருக்கும். அன்றுமட்டும் அல்ல, அதற்குமுன்பும் தலைவி பயணத்திற்கு உடன்பட்டிருந்தாள் என்றே கொள்ள வேண்டும்.

தொடக்கத்தில் சிலநாள் வேறுகாரணம் பற்றி இசைய முடியாமல் இருந்தாள், தயங்கினாள், தடுப்பதுபோலவும் பேசினாள். தலைவனுடைய ஆர்வத்தை உணர்ந்த பிறகு அவனுடைய முயற்சியைத் தடுக்கவில்லை; துணைநின்றாள். முந்திய நாட்களில் தடுத்திருந்தால், அவனுடைய மனம் அப்போதெல்லாம் எதிர்த்து எதிர்த்துப் பழகி உரம்பெற்றிருக்கும்; புறப்படும்போது கண்ட கண்ணீர் காரணமாக இவ்வாறு நெகிழ்ந்திருக்காது; வன்மைக்கு வன்மை காட்டும் வாழ்க்கையா யிருக்கும். இது மென்மைக்கு மென்மை காட்டி உருகும் நிகழ்ச்சி; ஆகவே தலைவியின் நெஞ்சம் தலைவனுக்காக உடன்பட்டு நெகிழ்ந்தது; அந்தக் காரணத்தாலேயே, தலைவனுடைய நெஞ்சமும் அவளுக்காக நெகிழ்ந்து நெக்குருகுவ தாயிற்று; பயணமும் அப்போதைக்கு நிறுத்தப்படுவ தாயிற்று.

இத்தகைய போராட்டம் ஒவ்வொரு நாட்டிலும் உண்டு. ஒவ்வொரு குடும்பத்திலும் உண்டு. வீட்டு வாழ்க்கைக்கும் உலக வாழ்க்கைக்கும் இடையே நடக்கும் போராட்டம் இது. போராட்டம் எங்கும் என்றும் நடந்து வருகிறது. நல்ல வழியிலும் கெட்ட வழியிலும் உயர்ந்த வகையாகவும் இழிந்த வகையாகவும் பலரிடையே பலவாறு இந்தப் போராட்டம் நடைபெறுகிறது. போராட்டத்தின் அடிப்படையான ஆழ்ந்த உணர்விற்கு ஒரு தூய வடிவம் கொடுத்துள்ளது இந்தப் பாட்டு.

புத்தர்பெருமான் அன்புவாழ்க்கையி லிருந்து அருள் வாழ்க்கைக்குத் தாவிய பெரியார். அவர் அவ்வாறு தாவுவதற்குமுன் எவ்வளவு போராடினார்! தாவிச்சென்ற அன்று இரவு காதலியின் அன்புமுகத்தையும் குழந்தையின் இன்ப முகத்தையும் உறங்கும் நிலையில் கண்டு கண்டு அவர் எவ்வளவு உருகினார்! எவ்வளவு கலங்கினார்! உலகத்தின்

நல்ல காலம், அவருடைய போராட்டம் ஒருதலைப் போராட்டமாக இருந்தது; பாவை மாய்க்கும் பனிநீர் நோக்கத்தால் (கண்ணீர் கலங்கி நிற்கும் பார்வையால்) புத்தருடைய நெஞ்சத்தை மேலும் கலக்கவல்ல காதலியின் கண்கள் அப்போது உறங்கிக் கிடந்தமை உலகத்தின் நல்ல காலம் போலும்! ஆயினும் அவர்க்கும் போராட்டம் இருந்தது. உலகத்தை உய்விக்க வாழ்ந்த சான்றோர் பலருடைய வாழ்க்கையிலும் இத்தகைய போராட்டம் ஒவ்வொரு நிலையில் நிகழ்ந்துவந் திருக்கிறது. இந்தப் போராட்டங்களை உணர்ந்து தெளிவதற்கு இப்பாட்டுத் துணைசெய்கிறது.

இப்பாட்டு ஒளிமிக்க ஒரு முழுமணி. இதன் தூய ஒளி கலைத்துறையிலும் வாழ்க்கையிலும் இருளைப் போக்க வல்ல சிறந்த விளக்கம். இத்தகைய மணிகள் பல சங்க இலக்கியப் பேழையுள் காணலாம். ஆயினும் இந்த மணியே என் உள்ளத்தே போராட்டத்தை விளைத்து இறுதியில் இன்பப் பரிசையும் நல்கியது. ஆதலின் இந்த ஒரு மணியைப் பலமுறை எடுத்துக் கூறினேன்; போற்றிப் புகழ்ந்தேன். விடைபெறுகிறேன். வணக்கம்.